அக்டோபர், 1957

ஹேவிளம்பி - ஐப்பசி

40 நயா பைசா

மஞ்சரி

ஸரஸ்வதி பூஜை

கலைமகளே, உன்னைப் பாதுகாப்பாகக் கொண்ட நாங்கள், உன்னிடம் பேரன்பு கொண்டு, குளிர் தருவான உன்னைப் புகல் அடைகிறோம்.

—ரிக் வேதம்

மஞ்சரி

ஆசிரியர், பதிப்பாளர் :
என். ராமரத்தினம்

நிர்வாக ஆசிரியர் :
தி. ஜ. ரங்கநாதன்

பாஷை ஆசிரியர்கள்:

கி. வா. ஜகந்நாதன்
கா. ஸ்ரீ. ஸ்ரீ.
த. நா. ஸேனுபதி
வி. எச். சுப்பிரமணிய சாஸ்திரி
கௌரி அம்மாள்
கி. சாவித்திரி அம்மாள்
சீதா தேவி
'ஆர்வி'
மோ. ஸ்ரீ. செல்லம்
கி. தாமோதரன்

ஓவியர்கள் :
ஸாமி, மகான், சுசி, சுப்பு.

மஞ்சரி, தபாற் பெட்டி நெ. 604, மயிலாப்பூர், சென்னை-4. பிரதி ஆங்கில மாதமும் முதல் தேதி வெளிவரும். தனிப் பிரதி விலை 40 நயா பைசா (6½ அணா). வருஷ சந்தா ரூ. 4/75 (ரூ. 4-12-0). சந்தாத் தொகையை 'ஸர்க்குலேஷன் மானேஜர்' என்ற விலாசமிட்டு அனுப்புங்கள். விலாச மாற்றங்களைத் தங்கள் பழைய விலாசத்துடன் சந்தா எண்ணையும் குறிப்பிட்டுத் தெரிவியுங்கள். 'மஞ்சரி'யிலுள்ள எல்லாக் கட்டுரைகளும் கதைகளும் பதிப்புரிமை பெற்றவை.

ஆண்டு 10] ஸ்தாபிதம்: நவம்பர் '47 :: அக்டோபர் 1957 [இதழ் 10

மஞ்சரி

மாதத்தின் சுவையான மலர்க்கதம்பம்

ஊரும் உலகமும்

★

தமிழ் நாட்டின் துயரம்

கூங்கை வெள்ளத்தையே பாய்ச்சினாலும், சிந்திய ரத்தத்தை அலம்பிச் சுத்தம் செய்யுமோ என்று தமிழ்நாடு கண்ணீர் விடும் காலம் இது. கிழக்கு ராமநாதபுரம் ஜில்லாவில் அத்தகைய பெருந் துன்பம் நேர்ந்திருக்கிறது. குடிசைகள் பற்றி எரிந்தன. கலகமும் கொள்ளையும் நேர்ந்தன. ஏழை மக்கள் ஆடு மாடுகளைப் பறிகொடுத்தனர். போலீஸ் துப்பாக்கி சுட்டது; பல இடங்களில் பல நாட்களில் சுட்டது. பீதியடைந்த மக்கள் வயலிலும் காட்டிலும் வாழ்ந்தார்கள். இந்தக் குறிப்பை எழுதும்போது நிலைமை சற்றுக் கட்டுக் கடங்கி யிருப்பதாகத் தெரிகிறது. ஆயினும், போலீஸ் கண்காணிப்புத் தளரவில்லை; மக்களின் பீதி குன்றவில்லை. 'ராணுவச் சட்டத்தை அமல் செய்' என்று கூடச் சிலர் வெகு சுலபமாய் யோசனை சொல்லுகிறார்கள். தண்டப் போலீஸ் வைப்பதும் ஊரடங்கு உத்தரவு போடுவதும் ராணுவச் சட்டத்தை அமல் செய்வதும் வாய்ப் பேச்சுக்குச் சுலபம். சுதந்தரப் போராட்டக் காலத்திலே இவற்றையெல்லாம் நேருக்கு நேர் அனுபவித்தவர்களுக்குத் தெரியும் இவற்றால் மக்களுக்கு ஏற்படும் அளவிட முடியாத வேதனை. மதுரையில் ஒரு கர்ப்பஸ்திரீ பாதிராத்திரியில் பிரசவ வேதனையுற்றாள். கணவன் அவளை ஆஸ்பத்திரிக்கு அழைத்துச் சென்றான். ஊரடங்கு உத்தரவு அமலில் இருந்ததால், போலீஸ் சுட்டது. கணவன் மாண்டான். கணவனை இழந்து, குழந்தையைப் பெற்றாள் மனைவி. அன்று இது போல் நடந்தன எண்ணற்ற சம்பவங்கள். கடுமையான அடக்குமுறை வரும்போது, அதற்குக் காரணமான குண்டர்கள் பாடு கொண்டாட்டம்; அவர்கள் தப்பித்துக் கொள்வார்கள். நிரபராதிகளே கஷ்டப்படுவார்கள். எனவே, கடுமையான போலீஸ் நடவடிக்கைகளை எண்ணும் போதே, நம் உள்ளம் நடுங்குகிறது. ராமநாதபுரம் கலகத்துக்கு என்ன காரணம்? உடனடியான காரணம் வெறும் நிமித்தமாகும். ஆழ்ந்த காரணம் வேறு இருக்க வேண்டும். அதைத் தேவர்-மறவருக்கும் ஹரிஜனங்களுக்கும் ஏற்பட்ட வகுப்புப் பிணக்கு, அரசியல் சூழ்ச்சி, தலைவர்கள் குரோதம் என்றெல்லாம் சொல்வது முழு உண்மை ஆகாது. தவிர, அந்த விஷயங்களை நாம் இங்கே இன்று ஆராயப் புகவில்லை; பழி யார்மீது என்று எவர் மேலும் இன்று குற்றம் சுமத்தவும் தேவையில்லை. அமைதியான நிலைமையை, இன்று அந்தப் பகுதி மக்களிடையே அந்தரங்க சுத்தியோடு எந்தவித மனக்கசப்பும் இல்லாமல் எல்லாக் கட்சியினரும் எல்லா வகுப்பினரும் சர்க்கார் அதிகாரிகளும் ஒற்றுமையாக ஏற்படுத்துவது அவசியம். சொல்ல வொண்ணாத வேதனைப் படும் ராமநாதபுரம் மக்களுக்குச் சமாதான வாழ்வை மீண்டும் அளிக்க வேண்டும். இதுவே இன்று

அவசரத் தேவையாகும்: வறட்டுத் தத்துவங்கள் பேசுவதோ, ஒருவர்மேல் ஒருவர் குற்றம் சுமத்துவதோ, அந்தப் பகுதி மக்களின் உயிரையும் பொருளையும் பணயம் வைத்து ஆடும் சூதாட்டமாகும். எவரும் எங்கும் இந்தக் காரியத்தைச் செய்யக் கூடாது.

* * *

நயா பைசா

இந்த நயா பைசா வந்தது முதல், பொது மக்கள்தான் பல விதங்களில் திரும்பத் திரும்ப நஷ்டப்படுகிறார்கள். நயா பைசா வந்ததும், அதற்காகவே தபால் கட்டணங்களைச் சர்க்கார்தான் முதல்முதல் சற்று உயர்த்தினர்கள். பிறகு பஸ் கட்டணத்தை உயர்த்தினர்கள். கடைக்காரர்களெல்லாம் விலைகளை உயர்த்தினர்கள். இப்படிப் பல கட்டணங்களையும் விலைகளையும் உயர்த்தியதே ஜனங்களுக்கு நிரந்தரமான நஷ்டமாகும். ஆனால் இவற்றோடு போயிற்று? பழைய சில்லறை நாணயங்களையும் புதிய சில்லறை நாணயங்களையும் சேர்த்தே புழங்க வேண்டியிருப்பதால், அரைக்கால், கால், அரை, முக்கால் நயா பைசாக்களை ஜனங்கள் திரும்பத் திரும்ப இழந்துகொண்டேயிருக்க வேண்டியிருக்கிறது. இந்தத் தொல்லையை நிவர்த்திக்கச் சர்க்கார் ஒரு மாதத் தவணையோ வேறு ஒரு குறுகிய காலத்தவணையோ வைத்து, ஓர் அறிக்கை வெளியிடுவது எவ்வளவோ நல்லதாயிருக்கும்! நாலணுவுக்குக் குறைந்த சில்லறைக் காசுகளுக்கெல்லாம் நூற்றுக்கு நான்கு விகிதம் மதிப்புக் குறைவு என்று அறிவித்து, அப்படியே சட்டம் செய்துவிடலாம். இதன்படி ஒவ்வொரு காலணுவும் ஒன்றரை நயா பைசா, ஒவ்வோர் அரையணுவும் மூன்று நயாபைசா, ஒவ்வோர் அணுவும் ஆறு நயா பைசா, ஒவ்வோர் இரண்டணுவும் பன்னிரண்டு நயா பைசா ஆகும். இப்படிச் செய்துவிடும்போது, எட்டு இரண்டணுவும் நான்கு நயா பைசாவும் சேர்ந்தால்தான் ஒரு ரூபாய் ஆகும். இதனுல் ஜனங்களுக்கு ஒரே ஒரு முறை நஷ்டம் ஏற்படுவதோடு போய்விடும்; ஒவ்வொரு சில்லறை வியாபாரத்தின் போதும் அவர்கள் நஷ்டப்படமாட்டார்கள். காலணுவுக்கு ஒன்றரை நயா பைசா என்பதால், அரை நயாபைசாக் கணக்கையும் வைத்துக் கொள்ளலாம். தனிப்பட்ட ஒவ்வொருவரிடமும் ஏதோ கொஞ்சம் சில்லறைக் காசுகள் மட்டுமே இருக்கும். அவற்றின் மதிப்புக் குறைவால் அவர்களுக்குப் பெரிய நஷ்டம் ஏற்படாது. வியாபாரிகளிடம் அதிகமான சில்லறைக் காசுகள் இருக்கலாம். குறிப்பிட்ட தவணைக்காலத்துக்குள் பாங்கிகளில் அவற்றை அவர்கள் ஒப்படைத்து நாணய மாற்றுச் செய்துகொண்டு விடலாம். இதனுல் சர்க்காருக்குச் சிறிது சிரமம் ஏற்படக்கூடும்; நஷ்டம் சற்றும் ஏற்படாது. சொல்லப்போனுல், வசதிகூட உண்டு. முடிந்த மட்டும் நயா பைசாக்களை வெளியிடலாம்; போதாக்குறைக்குப் பழைய சில்லறை நாணயங்களைத் திரும்பவும் புழக்கத்துக்கு வெளியிட்டு விடலாம். இதனுல் ஏற்படும் சொற்ப மதிப்புக் குறைவுக்கு நோட்டடித்து ஈடு செய்து விடலாம். பிறகு, நயா பைசாக்களும் பழைய காசுகளும் சேர்ந்து புழங்கும் காலத்தை எவ்வளவு நீட்டினுலும் ஜனங்களுக்குக் கஷ்டம் ஏற்படாது.

தீ இன்ஷியூரன்ஸ்

தம் வீட்டைத் தீ விபத்து இன்ஷியூரன்ஸ் செய்தார் ஒரு கனவான். உடனே அந்தக் கம்பெனி ஏஜெண்டிடம் ஒரு சந்தேகம் கேட்டார்: ''இந்த வீடு இன்றிரவே தீக்கிரையானுல் எனக்கு என்ன கிடைக்கும்?"

இன்ஷியூரன்ஸ் ஏஜெண்ட்: ''பத்து வருஷம்.''

—'ஃபார்மர்ஸ் வீக்லி'

ரொட்டி, நெய், மருந்து, தைலம் இந்த எதை எடுத்தாலும் எப்படி எல்லாம் கலப்படம் செய்கிறார்கள்!

உணவுக் கலப்படம்

ஸாஹிப்ஸிங் ஆஹூஜா



சுதந்தரம் வந்தது. பல துறைகளில் நாம் அற்புதமாய் முன்னேறி விட்டோம். ஆனால் ஒழுக்கத்தில் மட்டும் நாம் இது வரைக்கும் இல்லாத அளவு கெட்டுவிட்டோம். சமூகத் துரோகங்களிலெல்லாம் மிக மோசமானது உணவிலே கலப்படம் செய்வது தான். இதுவே மற்ற எல்லாச் சமூகக் கேடுகளையும் விட நமக்குப் பெருந்தொல்லை தந்துகொண்டிருக்கிறது. நாம் சர்வசாதாரணமாய் உணவிலே கலப்படம் செய்து விடுகிறோம். துளிக்கூட இது நம் மனத்தை உறுத்துவதில்லை. பேராசையாலும் பணப்பித்தாலும் மனிதன் கேடு கெட்டுப் போகிறான்; ஒழுக்கத்தைப் பற்றிய கவலையே இல்லாத நீசன் ஆகிவிடுகிறான்.

கடையிலே சுத்தமான சரக்கை வாங்குவோம் என்னும் ஆசை பழங் கனவாகிவிட்டது. ஹைட்ரஜன் ஏற்றிய எண்ணெய்களே வெண்ணெயும் நெய்யுமாக வழங்குகின்றன என்பது உலகறிந்த ரகசியம். டால்டா மட்டரக ஹைட்ரஜனேட்டட் எண்ணெய்கள் கலந்தது. உணவில் சேர்க்கும் நல்லெண்ணெய், கடுகெண்ணெய் இரண்டிலும் ஆளிவிதை எண்ணெயையும் பிற மட்டரக எண்ணெய்களையும் கலந்து விடுகிறார்கள். சுத்தமான பாலிலே நிறையத் தண்ணீரை விட்டுப் பெருக்கி 'ஸிங்காடா' என்ற கிழங்கு மாவைக் கலந்துவிடுகிறார்கள். நம் ஒட்டல்களில் பலவற்றில் கோதுமை மாவோடு சோளமாவைக் கலந்து ரொட்டி தட்டிவிடுகிறார்கள். சர்க்கரையுடன் 'ஸக்கரீன்' பொடியைக் கலந்து, ஸிரப்புக்களையும் கலர்களையும் தயார் செய்துவிடுகிறார்கள். கட்னி கல்லை மாவாகப் பொடித்துப் பிற பொருள்களோடு கலந்து ஸோப் செய்கிறார்கள். கொத்துமல்லியுடன் ரம்பத் தூளையும், மஞ்சள் பொடியுடன் காவிக் கல் மாவையும் மஞ்சள் சாக் தூளையும், மிளகாய்ப் பொடியுடன் பிரப்பம் பழத் தூளையும், மிளகோடு பப்பாளி விதையையும் கலக்கிறார்கள். இன்னும் இப்படியே வேறு பல பொருள்களிலும் கலப்படம் செய்து விடுகிறார்கள். இந்தக் கலப்பட ஜாபிதாவை அடுக்கப் போனால் முடிவே இராது: மருந்து, வாசனைச் சாமான், ஸெண்ட் இவையெல்லாங்கூட இந்தக் கலப்பட விபரீதத்துக்குத் தப்பவில்லை.

சில வியாபாரிகள் அஞ்சாமல் மோசடி செய்யத் துணிவதால், பாண்ட்ஸ் க்ரீம், வுட்வர்ட்ஸ் க்ரைப் வாட்டர், ஆப்கன் ஸ்நோ, கொய்னா, வேறு பல மாத்திரைகள், பல வகை இஞ்செக்ஷன் மருந்துகள் - இந்த மாதிரி பேட்டண்ட் சரக்குகளைக்கூடச் சுத்தமான நிலையில் வாங்க முடிவதில்லை. வாசனைத் தைலங்களில் பெரும்பாலும் 'வொயிட் ஆயில்' என்ற எண்ணெயைக் கலக்கிறார்கள். அந்தத் தைலங்களை உபயோகிப்பவருக்கு வாலிபத்திலேயே தலை

மூலம்: ஹெரால்டு அவ் ஹெல்த் (ஆங்கிலம்: ஆகஸ்ட் '57), புனா:

நரைத்து விடுகிறது. இந்தமாதிரி கலப்பட மோசடி செய்கிறவர்கள், கொலைகாரர்களையும் கொள்ளைக் காரர்களையும் விடப் பெரும் பாவி கள்; தெரிந்து திட்டமிட்டுக் கேடு புரியும் தேசத்துரோகிகள். இவர் களுக்கு எவ்வளவு கடுமையான தண்டனை விதித்தாலும் தகும்.

மனித உணவிலும் மருந்திலும் கலப்படம் செய்யும் பழக்கம் இந்தியா எங்கும் - முக்கியமாகப் பெரிய நகரங்களில் - பரவியிருக் கிறது. இந்தியாவின் தலைநகரமே இதில் முதலிடம் வகிக்கிறது. இந்த நகருக்கு ஒரு பிரயாணி வந்தால், பல பால் பண்ணைகள் எதிர்கொண் டழைப்பதைக் காணலாம். எல்லாம் காளான் மாதிரி முளைத்தவை. நகர எல்லை யில் தங்கு தடை செய்வோர் யாரும் இல்லை. அங்கே இவையெல் லாம் அசுத்தமான பாலையும் நெய் யையும் விற்றுக்கொண் டிருக்கின் றன. சுகாதார அதிகாரிகள் இங்கே கடுமையான கட்டுத் திட்டங்களை அமல் செய்ய வேண்டும். அதில் அவர்கள் சிறிது அசிரத்தை காட்டி னாலும், அது மன்னிக்க முடியாத குற்றமாகும்.

மைசூர் நகரில் ஸெண்ட்ரல் ஃபூட் டெக்னலாஜிக்கல் ரீஸர்ச் இன்ஸ்டிட்யூட் (மத்திய உணவுத் தொழில்நுட்ப ஆராய்ச்சிக் கூடம்) இருக்கிறது. சமீபத்தில் கடைகளில் வாங்கிச் சேகரித்த ஸாம்பிள் நெய்கள் பலவற்றை இங்கே ஆராய்ந்தார்கள். நூற் றுக்கு 23 ஸாம்பிள்களில் நெய்யே துளியும் இல்லை. இன்னும் 53 ஸாம்பிள்களில் பெயருக்குத் துளி நெய் இருந்தது. 23 ஸாம்பிள் களில் படிக்குப் பாதி நெய் இருந் தது. இந்திய சர்க்காரின் உணவு விவசாய மந்திரி இலாகாவைச் சேர்ந்த மார்க்கெட்டிங் பிரிவு டைரெக்டர் காரியாலயத்தினர், இந்தியாவின் 34 நகரங்களில் சில நாளைக்கு முன் ஸாம்பிள் ஸர்வே செய்தார்கள். சில்லறை யாகக் கடைகளில் விற்கும் நெய் யில் கலக்கப் பெரும்பாலும் வனஸ் பதியைத்தான் நகரத்து வியாபாரி கள் உபயோகிக்கிறார்கள் என்று அந்த ஸர்வேயில் புலப்பட்டது. நாட்டின் எந்தப் பகுதியிலும் இந்தப் பழக்கம் பலமாயிருக்கிறது.

மத்திய சர்க்கார், ராஜ்ய சர்க்கார் இரண்டின் மார்க்கட்டிங் இலாகா அதிகாரிகளும் 1953 - ஜூலையிலிருந்து செப்டம்பர் வரைக் கும் 34 ஸாம்பிள்களைத் திரட்டி னார்கள். கான்பூர், ராஜ்கோட் இரண்டிலும் உள்ள மத்திய சோதனைச் சாலைகளில் அவற்றை ரசாயன ரீதியில் சோதித்துப் பார்த்தார்கள். 56 ஸாம்பிள்க ளில் தாவரக் கொழுப்பு (வெஜிட்ட பிள் ஃபாட்) இருந்தது. 20 ஸாம் பிள்களின் தரம் சந்தேகத்துக்கு இடமானதாக இருந்தது. ஒரு ஸாம்பிளில் செம்மறி ஆட்டு நெய்யோ வெள்ளாட்டு நெய்யோ கலந்திருந்தது.

3 ஸாம்பிள்கள் சுத்தமாக இருந் தன; அவற்றில் எந்த விதக் கலப் படமும் இல்லை. ஆனால், அவற்றி லுங்கூடச் சில ஸாம்பிள்களில் போஷாக்குச் சத்து (நுட்ரிட்டிவ் வால்யு) மிக அற்பமாயிருந்தது.

ராஜ்யத்தில் உணவுப் பொருள் களை ரசாயன ரீதியில் ஆராய்ச்சி செய்யும் அதிகாரி (ஸ்டேட் பப்ளிக் அனலிஸ்ட்) ஓர் அறிக்கை செய்துள்ளார்.

1955 - இல் உத்தரப் பிரதேசத் தில் விற்பனையான மருந்துச் சரக்கு (ட்ரக்), நவீன மருந்து (மாடர்ன் மெடிஸின்) இவற்றில் நூற்றுக்கு இருபத்தொன்று தரக் குறைவாகவோ (ஸப் ஸ்டாண் டர்டு), தப்புப் பெயர்ச் சீட்டு ஒட்டி யவை யாகவோ (மிஸ்லேபிள்ட்) இருந்தன என்று அதில் அவர் கூறி யிருக்கிறார். 1007 ஸாம்பிள்களை ரசாயன ரீதியில் ஆராய்ந்து சோதித்ததிலிருந்து இதை அவர் கண்டார்.

மருந்துகளின் தரக் குறைவு விகிதம், உலகத்திலேயே இந்தியா வில்தான் மிக அதிகமாயிருக் கிறது. மருந்துகளைத் தரக் குறை வாகத் தயாரிப்பதோ, அவற்றுக் குத் தப்புப் பெயர்ச் சீட்டு ஒட்டு வதோ ஐக்கிய அமெரிக்காவிலும் பிரிட்டனிலும் நூற்றுக்கு ஒன்று விகிதத்துக்கும் குறைவு.

சில ஆஸ்பிரின் மாத்திரைகளை அந்த அதிகாரி ரசாயன ரீதியில் ஆராய்ந்தார். குறிப்பிட்ட ஒரு சக்தி அம்சம் (கான்ஸ்டிட்யுவன்ட் பவர்), இருக்கவேண்டிய அளவை விட அதிகமாக இருக்கக் கண்டார். இது உடல்நலத்துக்குப் பேரபாய மாகும். கண்ணுக்குப் போடப் பெனிஸிலின் தைலம் (ஆயிண்ட் மெண்ட்) தயாரித்துக் கண்ட கண்டபடி கடைகளில் விற்கிறார் கள். அது சாஸ்திரீயமான தல்ல; உடம்புக்கும் தீங்கானதுதான்.

1940 - ஆம் வருஷத்து மருந்துச் சரக்குக் கண்ட்ரோல் சட்டத்தை இரண்டு வருஷங்களுக்குமுன், முன்னை விடக் கடுமையாக்கி யிருக்கிறார்கள். போலி மருந்துச் சரக்குகளைச் செய்பவருக்கும் விற்பவருக்கும் மூன்று வருஷக் கடுங்காவலும் அபராதமும் விதிக் கலாம் என்று அதில் ஷரத்து இருக்கிறது. அந்தச் சட்டத்தை அமல் செய்வதில் அதிகாரிகள் அசிரத்தை காட்டுவதால், மருந் துச் சரக்குகளில் கலப்படம் அதிகரித்துக்கொண்டே போவ தாய்த் தோன்றுகிறது.

உணவுப் பொருள்களிலே கலப் படம் செய்து மக்களின் உயிருக்கு உலை வைக்கும் வியாபாரிகள்மீது மிகவும் கடுமையாய்ப் போர் தொடுக்க வேண்டும். சமூகத்தின் சத்துருக்களான இந்த வியாபாரி களை அம்பலப்படுத்தி, இவர்களைத் தண்டிக்கவேண்டும். இவர்கள் பாடு திண்டாட்டமாகும்படி செய்வது பொது ஜனங்களின் கடமை. சட்டங்களில் உள்ள பொத்தல்களை இதே சமயம் சீர் செய்வது சர்க்காரின் கடமை. ஏனென்றால், இந்தப் பாவிகள் அந்தப் பொத்தல்களுக்குப் பின் னால் அடைக்கலம் புகுந்து தப்பித் துக் கொள்கிறார்கள்.

இந்தியாவில் எல்லா அம்சங் களும் சீராய்ப் பொருந்திய உணவே (பாலன்ஸ்டு டையெட்), கிடைக்கவில்லை. இப்படிப்பட்ட ஒரு நாட்டில் உணவிலே கலப்படம் செய்வதைவிட மோசமான அக்கிரமம் வேறில்லை. கலப்படப் பொருள்கள்தான் மலிவாயிருக் கின்றன. இதனால் அவற்றைக் கலப்படம் என்று தெரிந்தே சில ஜனங்கள் வாங்குகிறார்கள். இப்படி மனமில்லாமலே அக்கிரமத் துக்கு ஆதரவளிக்கிறார்கள். அவர் களைக் குறை கூறிப் பயனில்லை. அவர்களுடைய தரித்திரத்தால் தான் இப்படிச் செய்கிறார்கள். அவர்களிடம் நாம் அநுதாபமே காட்ட வேண்டும். பொது ஜனங் களும் சர்க்காரும் சேர்ந்து ஒத் துழைத்து இந்த உணவுக் கலப்பட அநியாயத்தை ஒழிக்கவேண்டும்.

மருந்துச் சரக்குகளில் கலப்படம் செய்வோரையும் கடுமையாய்த் தண்டிக்க வேண்டும். அவர்க ளுடைய மோசடிகளை ஒடுக்கவேண் டும். கலப்பட உணவு, மருந்து இவற்றை எதிர்க்கும்படி பொது ஜன அபிப்பிராயத்தை வலுப் படுத்தவேண்டும்; சட்டங்களைக் கடுமையாக்க வேண்டும். இதை எவ்வளவு வற்புறுத்திச் சொன்னா லும் மிகையாகாது. கலப்படம் செய்கிறவருக்கு ஏதோ சொற்ப அபராதம் போட்டு அதோடு விட்டுவிடுகிறார்கள். இது கேலிக் கூத்தா யிருக்கிறது. அவர்க ளுடைய செயல் மக்களுக்குப் பேராபத்தா யிருப்பதால், மேல் நாடுகளி லெல்லாம் விதிப்பது போல், அவர்களுக்குக் கடுமை யான தண்டனை விதித்து அவர் களை அடக்குவது மிக அவசியம்.

காக்க முடியாத ரகசியம்

மனிதனால் காக்கவே முடியாத மிகக் கஷ்டமான ரகசியம் அவன் தன்னைப்பற்றித் தானே கொண் டிருக்கும் அபிப்பிராயந்தான்.

—மார்ஸல் பக்னோல்

சுதந்தர பல்கேரியா

★

இந்தியாவைப் போலவே சமீபத்தில் விடுதலை அடைந்த பல்கேரியா மிக முன்னேறி வருகிறது. அதுபற்றிய இந்தக் கட்டுரைக்கு ஆதாரமான விவரங்களும் படங்களும் பல்கேரிய லிகேஷன் உதவியவை.

கருங்கடலின் மேற்குக் கரையில் ருமேனியா, கிரீஸ் இரண்டு நாடுகளுக்கும் நடுவே இருக்கும் ஒரு சுதந்தர நாடு பல்கேரியா. விஸ்தீர்ணம் 43,000 சதுர மைல். ஜனத்தொகை (1953-இல்) 74, 50,000. அதில் நூற்றுக்குப் பதினாறு பேர் முஸ்லிம்கள். தலை நகரம் ஸோஃபியா.

இரண்டாவது உலகயுத்தத்தின் போது, ஜெர்மன் சேனை பல்கேரியாவை ஆக்கிரமித்துக் கொண்டது. 1944-இல் அந்தச் சேனை வெளியேறியவுடனே, பல்கேரியா சுதந்தரம் அடைந்தது. இன்று அங்கே கம்யூனிஸ்ட் சர்க்கார் ஆட்சி செலுத்துகிறது.

சென்ற மாதம் (அதாவது செப்டம்பர்) 9-ஆம் தேதி பல்கேரிய மக்கள் தங்கள் விடுதலை நாளைப் பதின்மூன்றாவது தடவையாகக் கொண்டாடினார்கள். அரசரும் பாஸிஸ்டுகளும் சேர்ந்து நடத்திய ஆட்சியை, ஸோவியத் செஞ்சேனையின் உதவி கொண்டு, பதின்மூன்று வருஷங்களுக்கு முன்னே இந்த நாளில்தான் பல்கேரிய மக்கள் கவிழ்த்து, நாட்டை விடுவித்தார்கள்.

சென்ற பல நூற்றாண்டுகளாகவே பல்கேரியாவின் சரித்திரம் பல இன்னல்கள் நிறைந்திருந்தது. பல முறை சுதந்தரத்தைப் பறிகொடுத்துப் பல தொல்லைகளுக்கு ஆளாயிற்று அந்த நாடு. எனவே, தங்களுக்கு விடுதலை கிடைத்து மிகச்சில வருஷங்களே ஆகின்றன என்று அந்த நாட்டு மக்கள் மதிக்கிறார்கள். இப்போது 'மக்கள் குடியரசு' என்று தங்கள் ராஜ்யத்தை அவர்கள் குறிப்பிடுகிறார்கள்.

இந்தக் குறுகிய காலத்தில் பல்கேரியா பல துறைகளில் பெரிதும் முன்னேறியிருக்கிறது. அறுபதுக்கு மேற்பட்ட நாடுகளுடன் இப்போது அது வர்த்தகம் நடத்துகிறது. யுத்தத்துக்கு முன் 140-வகைச் சரக்குகளை ஏற்றுமதி செய்த அது, இப்போது 600 வகைச் சரக்குகளை ஏற்றுமதி செய்கிறது. மக்களிடம் அழியும் சரக்குகளும் அதன் கடைகளில் எல்லாம் நிறைந்திருக்கின்றன. சென்ற ஐந்து வருஷங்களில், விலைவாசிகளை ஆறு தடவை குறைத்திருக்கிறார்கள்.

சர்க்கார் இதே சமயத்தில் மக்



ஸோஃபியா யூனிவர்ஸிட்டி

களுக்கு வீட்டு வசதிகளை அதிகப் படுத்தி வருகிறது; கலைகளை அநுபவிக்கும் வசதிகளையும் பெருக்கிவருகிறது. தொழிலாளர்களின் வாழ்க்கைத் தரம் உயர்ந்திருக்கிறது. பல துறைத் தொழிலாளர்களின் சம்பளமும் கூடியிருக்கிறது.

கல்வித் துறையில் மிகச் சிறந்த அபிவிருத்தி ஏற்பட்டிருப்பதை விளக்கி, பல்கேரியாவின் துணைக் கல்வி மந்திரி (டெபுடி மினிஸ்டர்) எம். பி. கெஷ்காவ் ஒரு கட்டுரை எழுதியிருக்கிறார். அதனிடையே அங்குள்ள கல்வித் திட்டத்தைப் பற்றி இப்படிக் கூறுகிறார்: ''பொதுக் கல்விப் பள்ளிக்கூடப் படிப்பு 11 வருஷம் நடக்கிறது. ஆரம்பம், இடை, உயர்தரம் (ப்ரைமரி, இண்டர்மீடியட், ஸெக்கண்டரி) இப்படி மூன்று கட்டங்கள். ஆரம்பப் படிப்பு நாலு வருஷம்; 1, 2, 3, 4-ஆம் படிவங்கள். ஒவ்வொரு வகுப்புக்கும் ஓர் ஆசிரியர் போதிக்கிறார். இடைப்படிப்பு மூன்று வருஷம்; 5, 6, 7-ஆவது படிவங்கள். உயர்தரப் படிப்பு நாலு வருஷம்; 8, 9, 10, 11-ஆவது படிவங்கள். இடை உயர்தரப் படிப்புப் படிவங்களில் அந்த அந்தப் பாடங்களில் தேர்ச்சி பெற்ற ஆசிரியர்கள் வந்து அந்த அந்தப் பாடங்களைப் போதிக்கிறார்கள். ஜிப்ஸி, அர்மீனியன் குழந்தைகளுக்காகவும் பள்ளிக்கூடங்கள் ஏற்படுத்தி, அவர்களுடைய தாய்ப்பாஷைகளில் போதிக்கிறோம். சுரங்கம் தோண்டுவது, யந்திரம் நிர்மாணிப்பது, மின்சார எஞ்சினீரிங், விவசாயம், உணவு, உணவு சம்பந்தப்பட்ட கைத்தொழில்கள் இவற்றைப் போதிக்கப் புதிய தொழிற் கல்விக் கல்லூரிகளைத் திறந்திருக்கிறோம். சகல மாணவர்களிலும் பாதிப்பேர் அரசாங்க உதவிச் சம்பளம் (ஸ்காலர்ஷிப்) பெறுகிறார்கள். ஒவ்வொரு வருஷமும் ஆயிரக் கணக்கானவர் விசேஷப் பயிற்சி பெற்று எஞ்சினீர், அக்ரானமிஸ்ட் (பயிர்த் தொழில் நிபுணர்), டாக்டர், உபாத்தியாயர் இப்படிப் பல உத்தியோகப் பட்டம் பெற்று வருகிறார்கள். சென்ற மூன்று (1953-55) வருஷத்தில் மட்டும் இப்படி 17,772 பேர் பட்டம் பெற்றார்கள். நாட்டின் மொத்த ஜனத்தொகையே 75 லட்சந்தான் என்பதை இங்கே பார்க்க வேண்டும்.''



பல்கேரியாவுக்கு நேரு சென்றபோது அவர் பெற்ற வரவேற்புப் பத்திரம்

சமீபகாலம் வரைக்கும் இந்தியாவைப்பற்றிப் பல்கேரிய மக்களுக்கு ஒன்றும் தெரியாது. 'பிரிட்டிஷ் சாம்ராஜ்ய மகுடத்தில் உள்ள ஒரு மாணிக்கம்' என்று மட்டுமே தெரியும். 'செல்வம் மிக்க அந்த நாட்டை அந்நியர் சுரண்டி வருகிறார்கள்' என்றும் அவர்கள் அறிந்திருந்தார்கள். மகாத்மா காந்தியின் தன்னலமற்ற தீரப் போராட்டத்தை வியந்தார்கள். கவிஞர் டாகுர் நூல்கள் பலவற்றின்

மொழிபெயர்ப்பை ஆர்வத்துடன் ரசித்தார்கள். பஞ்சத்தால் பல லட்சக்கணக்கான இந்தியர் மாண்ட செய்தியைப் படித்தார்கள். இந்தியாவிலிருந்து வேறு ஒன்றும் அவர்களுக்கு எட்டவில்லை.

இந்தியக் கலைகளையும் மக்களையும் பற்றி அறிய அவர்கள் ஆவலுடன் துடித்துக்கொண்டிருந்தார்கள். இன்று இந்தியாவும் பல்கேரியாவும் கலை உறவு கொண்டுவிட்டன. ஸோஃபியா நகரில் இந்தியக் கலைக் கண்காட்சியைத் திறந்தார்கள். அறிவாளிகள், தொழிலாளிகள், குடியானவர் இப்படி எல்லாரும் ஏராளமாய் அதைக் கண்டு ரசித்தார்கள். இந்திய ஸினிமா 'ஆவாரா', 'இரண்டு ஏக்கர் நிலம்', 'புடல்' இந்த மூன்றும் பல்கேரிய மக்களிடம் பெருஞ் செல்வாக்குப் பெற்றன. அவற்றில் வரும் நடிகர், நாட்டியம், பாட்டு, இயற்கைக் காட்சி, பிரச்னைகள் எல்லாமே பல்கேரிய மக்களுக்குப் புதுமையாக இருந்தன. இந்தியக் கலையின் தனிச் சிறப்பைப்பற்றி உற்சாகத்துடன் அவர்கள் சம்பாஷித்தார்கள். இந்திய ஸினிமா ஓடிய தியேட்டர்களில் பல மாத காலம் கொட்டகை கொள்ளாக் கூட்டம். இன்றுங்கூடப் பல்கேரியத் தெருவிலோ ஓட்டலிலோ பூங்காவிலோ சந்திக்கும் வாலிபரும் இளம் பெண்களும் இந்திய ஸினிமா மெட்டுக்களை-முக்கியமாக ராஜ் கபூர் பாடிய 'ஆவாரா'ப் பாட்டுக்களை - முணுமுணுத்துச் சீட்டி யடிப்பதைக் காணலாம். ஜவாஹர்லால் நேருவின் 'இந்தியாவைக் கண்டு கொண்டது' (டிஸ்கவரி அவ் இந்தியா) என்ற நூலின் மொழிபெயர்ப்பு வெளியானதும் பிரதிகளெல்லாம் வெகு விரைவில் செலவழிந்து விட்டன.

சமீபத்தில் அந்த நாட்டுக்கு இந்திய உப ராஷ்டிரபதி ஸர்வபள்ளி ராதாகிருஷ்ணன் சென்று வந்தார். அவருக்கு ஸோஃபியா பல்கலைக் கழகம் தத்துவசாஸ்திரத்தில் கௌரவ டாக்டர் பட்டம் வழங்கியது. அப்போது அவர் குறிப்பிட்டது இது: "இந்தியா மீதும் இந்தியக் கலைகள்மீதும் உங்களுக்கு இருக்கும் ஆர்வத்தைக் கண்டு நான் பிரமித்துப் போனேன். நாம் ஏற்படுத்திக் கொண்டிருக்கும் உறவுகள் வரவர வலுவடையும்; நாம் தொடர்ந்து நல்ல நண்பர்களா யிருந்து வருவோம்-இது நிச்சயம். ஏனென்றால், நம் இரண்டு நாட்டினரும் சமாதானம், ஜனநாயகம், ஸோஷலிஸம் என்ற ஒரே லட்சியங்களையே கொண்டிருக்கிறார்கள்."

காதல் நாடகம்

வேலைக்காரியின் காதல் நாடகத்தில் வீட்டு எஜமானிக்குச் சிரத்தை விழுந்தது. அவளையே அது பற்றி அன்போடு எஜமானி விசாரித்தாள்.

"இல்லை, அம்மா; அவனை இப்போது நான் விட்டுவிட்டேன்" என்றாள் வேலைக்காரப் பெண்.

இரண்டொரு நாள் கழித்து, அதே ஆளுடன் அவள் சல்லாபம் செய்துகொண்டிருப்பதை எஜமானி கண்டாள்.

"என்ன இது! இவனை விட்டுவிட்டதாக என்னிடம் சொன்னாயே?" என்று அவளைக் கேட்டாள்.

"ஆமாம், அம்மா; உண்மை. ஆனால், இதோ பாருங்கள்: அவனுக்கு ஒரு வார நோட்டீஸ் கொடுத்திருக்கிறேன். அப்படிக் கொடுக்காமல் எப்படி விட முடியும்?" என்றாள் வேலைக்காரப் பெண்.

—'ஸ்பாட்லைட்', தென்னாப்பிரிக்கா.



பூமியில் தலையைப் புதைக்கும் தீப்பறவை, மூடத்தனத்தாலா அப்படிச் செய்கிறது? இல்லை. பின்னே—?

ஒட்டகப் பட்சி

மாயவரம் எஸ். மகாலிங்கம்

பட்சிகள் எல்லாவற்றிலும் மிகப் பெரிய உருவமுள்ளது ஒட்டகப் பட்சி. இதற்குத் தீப்பறவை, தீக்கோழி, தீக் குருவி, நெருப்புக் கோழி, ஓடும் பறவை, ஒட்டகப் புள், பாலைவனப் பட்சி, பாலைவனப் பறவை ஆகிய வேறு பெயர்களும் உண்டு. உயரத்தில் ஏறக்குறைய மனிதன் அளவு இருக்கும். ஆறு அடி முதல் 11 அடி வரையில் இது வளரும். அவலட்சணமான பறவை. பெண்ணைவிட ஆண் உயரமாக இருக்கும். சுமார் 300 பவுண்டு எடையுள்ளது. பாலைவனப் பிரதேசங்களில் மந்தை மந்தையாக வாழும். ஆப்பிரிக்காவிலும், தென் மேற்கு ஆசியாவிலும் இவைகள் அதிகம். வனாந்தரங்கள் நெருப்பைப்போல் கொதிக்கும் உஷ்ணமும் கொடிய வெப்பமும் உள்ளவையா யிருக்கின்றன. அந்தப் பிரதேசங்களில் இந்தப் பறவை உஷ்ணத்தையும் வெப்பத்தையும் தாங்கிக்கொண்டு, தாகவிடாய் கொள்ளாமல் வசிக்கிறது. அதனால் இதைப் பாலைவனப் பட்சி, தீக்கோழி, தீக் குருவி என்று கூறுகிறார்கள். மற்ற அவயவங்களுக்கு ஏற்றபடி தலை பெரியதாக இராமல் மிகவும் சிறியதாக இருக்கிறது. இது கோழி இனமாக இருந்தும், இதற்கு உள்ள காலும் கழுத்தும் நீண்டு இருப்பதால், இதை ஒட்டகப் பட்சி என்று சொல்லுகிறார்கள். இதற்கு உடல் பருத்து, இறக்கைகள் அதிகம் குறுகி யிருப்பதாலும், துடையில் இதற்கு இறகோ தூவியோ இல்லாமல் இருப்பதாலும் இதனால் பறக்க முடியாது; வாத்தைப்போல் நீந்தவும் முடியாது. உடலுக்குத் தகுந்த இறக்கைகள் இல்லை. இது தரையில் நடந்தே திரிகிறது. நீண்ட கழுத்தை, தூவி மூடிக்கொண்டிருக்கும். இந்தப் பட்சிக்குக் கழுத்து வரையில் உள்ள பாகமும் காலும் துடையும் அடிவயிறும் சிறகு இல்லாதவை. கால்கள் இரண்டும் நீண்டு அழுத்தமாகவும் அதிகப் பலமுள்ளவையாகவும் இருக்கின்றன. காலில் மெல்லிய செதில்களும் இரண்டு விரல்களும் உண்டு. அவைகள் முன்புறமாகவே திரும்பி இருக்கின்றன. விரல்கள் சிறுத்துத் தடிப்பாக இருக்கும். அவற்றுள் ஒன்று பெரிதாகவும், மற்றொன்று சிறியதாகவும் இருக்கும். நீண்ட விரலில், பெருத்த வலுவான நகம் உண்டு. சிறு விரலில் நகம் கிடையாது. ஒட்டகப்பட்சி தன் காலால் பலமாக ஒரு மனிதனை உதைத்தால், மனிதனுடைய எலும்பு சுக்கு நூறாக உடைந்துவிடும்; சில சமயம் மனிதன் இறந்தும் போவான். இதற்குக் கண்கள் மிகப் பெரியவையாக இருக்கின்றன. அலகு அகன்றும் சப்பட்டையாகவும் குட்டையாகவும் இருக்கும்.

மிக விரைவாக ஓடக்கூடிய பறவையாதலால், பறக்க வேண்டிய அவசியம் இல்லை. அதிக வேகமுள்ள அராபிக் குதிரையும் இதன் ஓட்டத்தை எளிதில் பிடிக்க முடியாது. மணிக்கு 30 மைலிலிருந்து

காப்பிரைட்: சௌபாக்கியம் (தமிழ்: நவம்பர் '56), சென்னை.

60 மைல்வரை ஓடும். கொஞ்ச தூரம் ஓடிக் களைத்து நின்று விடாது. பல நாள் ஆகாரமும் தண்ணீரும் இல்லாமல் தொடர்ச்சியாக அப்படியே விடாமல் ஓடிக்கொண்டிருக்கும். இது நேராக ஓடினால் ஒருவரும் இதைப் பிடிக்க முடியாது. ஆனால் நேராய் ஓடாமல் வளைந்து வளைந்து ஓடுவது தான் இதன் பழக்கம். ஒட்டகப் பட்சியின் சிறகு அதிக அழகாகவும் நேர்த்தியாகவும் மிருதுவாகவும் பளபளப்பாகவும் இருப்பதால், மேல்நாட்டு மாதர்கள் தலையணியாகவும், அரசர்கள் தங்கள் கிரீடத்திலும், பிரபுக்கள் தங்கள் தொப்பிகளிலும் அதை வைத்துக்கொள்ள ஆசைப்படுகிறார்கள். ஆண் பறவையின் சிறகு மிக நேர்த்தியாக இருக்கும்; அது மிகவும் விலை உயர்ந்தது. சாதாரண மனிதர்கள் அவ்வளவு விலை கொடுத்து வாங்க முடியாது. வேட்டைக்காரர்கள் சிறகுக்காக இந்தப் பறவைகளை வேட்டையாடிப் பிடிக்கிறார்கள். அவர்கள் வேட்டையாடுகையில் குறுக்கு வழியாகத் தங்கள் குதிரையை ஓடச் செய்து 8 அல்லது 9 மணி நேரத்தில் இதைப் பிடிப்பார்கள். நாலைந்து நாள் வரையில்கூட ஒருவர் மாறி ஒருவராக இதைத் துரத்தி வேட்டையாடுவார்கள். தான் சத்துருக்களிடமிருந்து இனித் தப்பித்துக்கொள்ள முடியாதென்று தெரிந்துகொண்டுவிட்டாலும், களைத்துவிட்டாலும், இந்தப் பட்சி மணலிலாவது, மரப்பொந்திலாவது, புதர்களிலாவது தலையை மாத்திரம் மறைத்துக்கொண்டு நின்றுவிடுகிறது. அப்போது வேட்டைக்காரர்கள் மெதுவாகப் பின்புறம் சென்று கயிற்றினால் கட்டியாவது, அம்பால் எய்தாவது இதைப் பிடித்துவிடுவார்கள். தான் பிறரைப் பார்க்க முடியாததால், தன்னைப் பிறரும் பார்க்க முடியாது என்று எண்ணி இது மண்ணில் தன் தலையை மறைத்துக்கொள்ளுகிறது என்கிறார்கள். அது குறித்தே இதை விவேகமில்லாத பட்சி என்று எண்ணுகிறார்கள். ஆனால் அது வல்ல காரணம்; விசாலமான வனாந்தரங்களில் 15 அடி, 20 அடி உயரத்துக்குக் கிராமத்தில் காணும் குடிசை வீடுகள்போல் பெரிய கறையான் புற்றுக்கள் இருக்கின்றன. ஆகையால் களைப்படைந்த தீப்பறவை தலையைக் குனிந்து நின்றவுடன் தூரப் பார்வைக்கு அதுவும் ஒரு பெரிய கறையான் புற்றுப்போல அந்தப் பாலைவன உஷ்ணத்தில் தோற்றம் அளிக்கும். இது பகைவர்களிடமிருந்து தப்பித்துக்கொள்ள ஒரு வித யுக்தி. பல லட்சக்கணக்கான வருஷச் சாதனையின் பயனாக இந்தப் பழக்கம் இதற்கு ஏற்பட்டிருக்கிறது. இப்படிப்பட்ட பழக்கத்தை முட்டாள்தனம், அவிவேகம் என்று கூறுவது சரியில்லை. அதிகப் புதர்கள் உள்ள மணல்பாங்கான பாலைவனப் பிரதேசங்களே ஒட்டகப் பட்சிக்குப் பிடித்தம். நீண்ட கழுத்தும் பெரிய கண்களும் எல்லாப் பக்கங்களிலும் வெகு தூரம் பார்க்கப் பயன்படுகின்றன. பழக்காத பட்சி மிகவும் கூச்சம் உள்ளது. பயமுறுத்தினால் வெகு வேகமாய் ஓடும்; ஒரே தாவலில் 20 அடியைக் கடந்துவிடும்!

ஒட்டகப் பட்சியின் ஜீர்ண சக்தி உலகப் பிரசித்தி பெற்றது. எதையும், எந்த இடத்திலேயும் தின்னும். புல், பூண்டு, இலை, விதை, காய் கறி, பழம், இரும்புத் துண்டு, ஆணி, கந்தை, தோல், எலும்பு, பாம்பு, பல்லி, பறவை, பூச்சி புழு, சிறிய பிராணி இந்த எல்லாவற்றையுமே விழுங்கும். இது மட்டும் அல்ல; பிரகாசமான பொருள்களையும், கரடு முரடான பொருள்களையும் தனது மற்ற ஆகாரத்தை ஜீர்ணித்துக்கொள்வதற்காக விழுங்கும் அபூர்வ குணம் இதற்கு உண்டு. ஆகையால் நெருப்புத் தணல், பளிங்கு, கண்ணாடி, வைரக் கல் இவற்றையும் விழுங்கிவிடுகிறது. வேட்டையாடிக் கொன்ற பட்சிகளின் வயிற்றிலிருந்து சில வயிரக் கற்கள் கிடைத்திருப்பதால், வைரம் விளையும் நாடுகளில் சஞ்சரிக்கும் ஒட்டகப் பட்சிகளை அந்த நாட்டார் அதிகமாக வேட்டையாடிப் பிடிக்கிறார்கள். கோழி முட்டைப் பரி

மாணமுள்ள கற்களைக்கூட இந்தப் பட்சி விழுங்கிவிடும்.

ஒட்டகப் பட்சிக்குக் கூடு கட்டத் தெரியாது. பத்து அல்லது இருபது நெருப்புக் கோழிகளாகச் சேர்ந்து நேர்க்கொம்புள்ள மான்கள், வரிக் கழுதைகள் இவைகளோடு கூட்டமாகத் திரியும். அபாயம் வரும் காலங்களில், அதை உணர்ந்து, மற்றப் பிராணிகளுக்கு அறிவிக்கும். இன விருத்தி செய்யும் காலங்களில், ஒவ்வோர் ஆணும் நான்கு அல்லது ஐந்து பெண் பறவைகளுடன் பிரிந்து சென்றுவிடும். பெண் பறவையுடன் கூடும் சமயத்தில், ஆண் தன்னுடைய கழுத்தைச் செங்குத்தாக நீட்டி வைத்துக் கொண்டு நர்த்தனம் புரியும்; இறக்கைகளை விரித்துக்கொண்டு படபடவென்று அடித்துக்கொள்ளும்; திடீரென்று பூமியில் விழும். தன்னுடைய குறுகிய, மென்மையான, வெண்மையான சிறகுகளினால் பெட்டைகளை விசிறும். அது மட்டுமல்லாமல் சிறகுகளினால் ஒரு விதமான பேரிரைச்சலையும் உண்டாக்கும். பெட்டைகள் ஒன்ருகச் சேர்ந்து பூமியில் மண்ணைப் பறித்துக் குழி தோண்டி அதில் 20 முட்டைகளை இடும். ஆண் பறவை இரவு வேளைகளில் நரிகளிடமிருந்தும், மற்ற மிருகங்களிடமிருந்தும் முட்டைகளைப் பாதுகாத்து அடை காக்கும். இதுவும் கடவுள் சிருஷ்டியில் ஓர் அற்புதமே. பகல் வேளைகளில் பெண்கள் ஒன்று மாறி ஒன்று அடை காக்கும். அப்படி இல்லாவிட்டால், சூரிய உஷ்ணத்தில் வெடித்துக் குஞ்சு வெளிவரும் படியாகக் கொதிக்கும் மணலைப் போட்டு முட்டைகளை நன்ருக மூடிவிடும். முட்டையிலிருந்து வெளி வந்த குஞ்சு உடனே உண்பதற்காகப் பெண் பறவை சில சிறிய முட்டைகளையும் சுற்றிலும் இட்டு வைக்கும். வெளிவந்த குஞ்சு அந்த முட்டைகளைக் கொத்திச் சத்தை உண்டு சில நாட்களில் பெரியதாகி, வெளியே இரை தேட ஓடும். ஒட்டகப் பட்சிக்கு மோபத்தினுல் எதையும் அறிந்துகொள்ளக்கூடிய சக்தி உண்டு; யாராவது முட்டைகளைத் தொட்டுவிட்டால் மோபத்தினுல் அதை அறிந்துகொள்வதுடன், உடனே முட்டைகளை எல்லாம் மிதித்து உடைத்துத் துவைத்து அழித்துவிடும்.

முட்டைகள் மிகப் பெரியவையாகவும் அழுத்தமாகவும் உறுதியான ஓடுள்ளவையாகவும் வெண்மையாகவும் இருக்கின்றன. ஒவ்வொரு முட்டைக்கூட்டிலும் 8 சேர் ஜலம் பிடிக்கும்; முட்டை மூன்று ராத்தல் எடை இருக்கும். ஒவ்வொரு முட்டையும் மட்டையோடுகூடிய பெரிய தேங்காய் அளவு இருக்கும். முட்டை வேக 40 நிமிஷம் ஆகும். ஜனங்கள் சிறகுகளுக்காக மாத்திரமன்றி, மாமிசத்துக்காகவும் முட்டைகளுக்காகவும், பல வேலை செய்ய உதவும் தோலுக்காகவும் ஒட்டகப் பட்சிகளை வேட்டையாடிப் பிடிக்கிருர்கள். அவர்கள் முட்டைகளை மணலிலிருந்து தோண்டி யெடுத்து ஒரு சிறு துவாரம் செய்து, உணவுச் சத்தை எடுத்து உட்கொண்டுவிட்டு, குடுக்கைகள்போல் சுத்தமாக்கி ஜல பாத்திரமாக உபயோகிக்கிருர்கள். ஒரு பெரிய ஒட்டகப் பட்சி இரண்டு மனிதர்களைத் தன் முதுகில் சுமந்துகொண்டு வெகு சுலபமாகக் குதிரையைவிட அதிக வேகமாய் ஓடும். இப்போது அமெரிக்கா தேசத்தில் உள்ள சில வெள்ளையர்கள் இதற்கென்று சிறு வண்டி ஒன்று தயார் செய்து அந்த வண்டியில் இந்தப் பட்சியைப் பூட்டி ஓட்டுகிருர்கள்.

ஒட்டகப் பட்சிகளில் நான்கு வகைகள் இருக்கின்றன. ஒரு வகை வடக்கு ஆப்பிரிக்கா, ஸிரியா, மெசபடோமியா, அரேபியா இந்த இடங்களில் தென்படுகிறது. மற்ற மூன்று வகைகளும் மத்திய ஆப்பிரிக்காவிலும், தென் ஆப்பிரிக்காவிலும் தென்படுகின்றன. ஒட்டகப் பட்சி இந்தியாவில் இல்லை. இதன் சிறகுகளுக்காக ஆப்பிரிக்கா, அமெரிக்கா, ஆஸ்திரேலியா போன்ற இடங்களில் ஜனங்கள் இதை வளர்க்கிருர்கள். சிறகுகள் அதிக விலை போவதனுல், இந்தப் பறவையை முரட்டுத்தனமாக வேட்டையாடியோ காயப்

படுத்தியோ பிடிப்பதில்லை. குதிரைகளின்மீது ஏறிச் சவாரி செய்து துரத்திப் பிடிப்பார்கள். குதிரைகள் இல்லாவிட்டால் ஒட்டகப் பட்சி மாதிரியே வேஷம் போட்டுக் கொண்டு, அதன் பக்கத்தில் மெதுவாகச் சென்று, சுருக்குக் கயிறு ஒன்றைப் பட்சியின் கழுத்தில் விட்டெறிந்து, பூமியின்மீது மல்லாத்துவார்கள். அப்படிப் பிடித்த பட்சியை மிகவும் உறுதியானதும் ஆங்கில எழுத்து 'V' போன்றதுமான மரக் கூட்டில் அடைத்து வைப்பார்கள். பிறகு நாளாவட்டத்தில் அதைப் பழக்குவார்கள். கேப் காலனியில்தான் முதல் முதலில் இந்தப் பட்சியைப் பழக்க முயன்று வெற்றி கண்டார்கள். கேப் காலனியில் பூமியின் சூழ்நிலை, சீதோஷ்ண ஸ்திதி, தாவர வகைகள் இவை எல்லாம் ஒட்டகப் பட்சியை வளர்த்துப் பழக்கத் தகுந்தவையாக இருக்கின்றன. கேப் காலனிதான் ஒட்டகப் பட்சியின் சிறகுகளை விற்பதில் முதன்மையாக நிற்கிறது.

ஒட்டகப் பட்சிப் பண்ணை ஏற்படுத்துவதாயிருந்தால், ஒவ்வொரு கோழிக்கும் சுமார் 10 ஏக்கர் நிலம் வேண்டும். ஒட்டகப் பட்சிக்கு மூன்று வயசு ஆன பிறகுதான் சிறகுகள் பூர்ண வளர்ச்சி அடைகின்றன. ஒன்பது மாதத்துக்கு ஒரு தரம் மிகவும் ஜாக்கிரதையாகப் பட்சிக்கு ஒரு தீங்கும் நேராமல், இறக்கைப் பாகம், வால் பாகம் இவைகளிலிருந்து சிறகுகளைக் கத்தரிக்கிறார்கள். முரட்டுத்தனமாகச் சிறகுகளைப் பிடுங்கினால் பட்சியின் உடல்நிலை பாதகம் அடையும்.

இவ்வளவு உபயோகமுள்ளதும் பறவை இனத்திலேயே மிகப் பெரியதுமான இந்த ஒட்டகப் பட்சிக்குப் பறக்க முடியவில்லை என்றால், ஆச்சரியமாக இருக்கிறதல்லவா? இதைக் குறித்து ஒரு விஞ்ஞானி கூறுகிறார்: ''பெரிய பாலூட்டிகள் (Mammals) இருக்கின்றன; அவைகளால் நடக்க முடியாது. பெரிய பறவைகள் இருக்கின்றன; அவைகளால் பறக்க முடியாது. பெரிய பாலூட்டியான திமிங்கிலத்துக்கு நடக்கும் சக்தியையும், பெரிய பறவையான ஒட்டகப் பட்சிக்குப் பறக்கும் சக்தியையும் கடவுள் காரணம் தெரிந்துதான் அளிக்கவில்லை. அப்படி அளித்திருந்தால், அவைகள் உலகத்தையே வென்றுவிடும். மனிதர்கள் உயிர் வாழ முடியாது.''

இந்தக் கூற்றில் எவ்வளவு உண்மை பொதிந்திருக்கிறது! சிறிய பழங்கள் குலை குலையாகப் பெரிய மரத்திலிருந்து தொங்குவதும், பரங்கி, பூசணி போன்ற மிகப் பெரிய பழங்கள் பூமியில் படரும் மெல்லிய கொடிகளில் காய்ப்பதும் கடவுள் வேண்டுமென்றே செய்த காருண்ணியச் செயல் என்றே தோன்றுகிறது.

பால் குற்றம்

மனைவி, ''எனக்குத் தூக்கமே வரவில்லை'' என்றாள்.

கணவன், ''படுக்குமுன் என்ன அருந்தினாய்?'' என்று கேட்டான்.

''ஒரு கப் பால்'' என்றாள் மனைவி.

கணவன் உடனே, ''சரிதான். பால் தயிராகிறது. தயிர் கொழுப்பாகிறது. கொழுப்புச் சர்க்கரையாகிறது. சர்க்கரை மதுவாகிறது. இதெல்லாம் நடந்த பிறகல்லவா தூக்கம் வரும்?'' என்றான்.

—'மிஸ் ஸ்பெக்டேட்டர்'

இதைப் படிக்கும்போது, புஷ்பக விமானங்கூட உண்மையாக இருக்கலாம் என்றே தோன்றுகிறது!

புராதன இந்திய விமானம்

பள்ள அகல்யா தேவி

இந்த நாகரிக யுகத்தில் நடக்கும் ஆராய்ச்சிகளெல்லாம் நம் நாட்டில் பல்லாயிரம் ஆண்டுகளுக்கு முன்பே ஆராய்ந்து முடிவுக்கு வந்தவை. அப்படி ஆராய்ந்து முடிவு கண்டவற்றில் விமானச் சிற்ப சாஸ்திரம் ஒன்று. நாம் இன்று அந்நிய நாட்டினர் கண்டு பிடிக்கும் யந்திரங்களைக் கண்டு அதிசயிப்பதும் மகிழ்வதும் வழக்கம் ஆகிவிட்டது. ஆனால், இவற்றின் மூல சாதனங்களை நம்மவரே கண்டு பிடித்தார்கள் என்பதை அறிவதற்கு இதுவரை ஆதாரம் கிடைக்காமல் இருந்தது. அதற்குக் காரணம் பல சாஸ்திர நுணுக்கங்கள் நிறைந்த ஓலைச் சுவடிகள் மறைந்துவிட்டதுதான். இப்பொழுது அரசாங்கம் அவற்றைத் தேடிக் கண்டு பிடிப்பதில் முனைந்திருக்கிறது. அதன் பலனாகச் சில ஓலைச் சுவடிகள் கிடைத்திருக்கின்றன. அவற்றுள் பரத்துவாஜ மகரிஷி எழுதிய 'வைமானிக சாஸ்திரம்' ஒன்று.

இந்த நூல் ஏழு பிரகரணங்கள் (அத்தியாயங்கள்) அடங்கியது. ஐந்நூறு சூத்திரங்களைக் கொண்டது. அவற்றை ஆராய்ந்தால், இப்பொழுது இருக்கும் விமானங்களை நிருமிக்கும் சாஸ்திர முறைகள் எல்லாம் விளக்கமாகக் காணப்படுகின்றன. விமானம் அமைப்பதில் பற்பல வகைகள் அதில் காணப்பெறுகின்றன.

அவற்றுள் அபேத்யங்கள் (உடையாதவை), அதாஹ்யங்கள் (எரிக்க முடியாதவை), அசேத்யங்கள் (உடைக்க முடியாதவை) என்பவைகளைக் குறித்திருப்பதைக் காணலாம். அதில் உள்ள சூத்திரங்கள், விமானத்துக்கு முப்பத்திரண்டு பாகங்கள் இருக்கவேண்டும் என்றும், சூட்டையும் ஒளியையும் தணிக்கும் சக்தி அமைந்திருக்கும் உலோகங்களாலேயே விமானத்தை நிருமிக்க வேண்டுமென்றும் சொல்லுகின்றன. இப்படித்தக்க உலோகங்களைக் கொண்டு அமைத்த விமானங்கள் பதினாறு வகைப்படும்.

சித்திரித்திருக்கும் விமானங்களின் உருவத்தைக் கொண்டு பார்த்தால் ஐந்து வகையாக வகுக்கலாம்: 1. சுந்தர விமானம். 2. ஷுகாணம். 3. ருக்மகம். 4. புஷ்பகம். 5. மருத்ஸகம். இந்தப் பெயர்களை நாம் புராணத்தில் படித்திருக்கிறோம். விவரங்களை இந்த நூலில் கண்டு ஊகத்தால் மனசில் பதிய வைத்து அந்தக் காலத்து விஞ்ஞானச் செல்வத்தை மெச்சாமல் இருக்க முடியவில்லை.

விமான சாஸ்திர நூல்கள் நமக்கு இப்பொழுதுதான் கிடைத்திருக்கின்றன. ஆனால் சுமார் முப்பது வருஷங்களுக்கு முன்பே இந்தியச் சிற்ப ஞானி ஒருவர் வேத காலத்து நூல்களை ஆராய்ந்து தொகுத்து, 'பாரதீய சில்ப சாஸ்திரம்' ஒன்று எழுதியிருக்கிறார். அவர் தம் நாற்பது வருஷ ஆராய்ச்சியின் பயனாகவே அந்த நூலை எழுதினார். அதில் விமானச் சிற்பத்துக்கென்று ஓர் அத்தியாயம் ஒதுக்கியிருக்கிறார். அகஸ்தியரும் பரத்துவாஜருமே இந்தச் சாஸ்திரத்தை முதலில் கண்டு பிடித்தார்கள் என்று சொல்லியிருக்கிறார். ஆனால் அப்பொழுது பரத்துவாஜருடைய சிற்ப நூலை எவரும் கண்டு பிடிக்கவில்லை என்று தெரிகிறது. அவர், தம் நூலில் அகஸ்தியருடைய 'அகஸ்திய ஸம்ஹிதை'யில் இருந்த சூத்திரங்

காப்பிரைட்: பிரஜாமத (தெலுங்கு: 10-3-'57), பங்களூர்.

களைத்தான் எடுத்தாண்டிருக்கிருர். பரத்துவாஜருடைய சூத்திரங்களேயோ, அவருடைய பற்பல வகை விமானங்களைப்பற்றியோ குறிப்பிடவில்லை.

'அகஸ்திய ஸம்ஹிதை'ச் சூத்திரங்களில் 'அக்கினியானம்' என்னும் விமானம் அமைக்கும் முறையில் இரு வகைகளைக் குறிப்பிட்டிருப்பதைக் காணலாம். பிரெஞ்சுக்காரர்கள் தயாரித்த பலூனையும் பாரஷூட்டையும் போன்றவை இவை. அகஸ்திய சூத்திரங்களில் காணும் பலூனைப் போன்ற 'அக்கினியானம்' அமைக்கும் முறையைப் பார்ப்போம்.

''பட்டுத் துணியால் ஒரு பை தயாரிக்க வேண்டும். சில ரசாயனங்களை அதன்மேல் பூசிப் பையைக் காற்றைத் தடுக்கும் சக்தியுள்ளதாகச் செய்ய வேண்டும். நீராவியால் பையை நிரப்ப வேண்டும். பையை இறுகக் கட்டி லேசான மரத்தால் செய்த ஆசனத்தைப் பையின் கீழ்ப்புறத்தில் ஒட்டிவிட வேண்டும்'' என்று எழுதியிருக்கிருர். நீராவி காற்றினும் லேசானதாகையால் ஆகாயத்தில் பறக்கும். கோட்டை, கொத்தளங்களைப் பகைவர் சூழ்ந்த சமயங்களிலும், தீப் பற்றி விட்டபோதும் தற்காப்புக்கு இந்த அக்கினியானம் உதவும். பரத்துவாஜ மகரிஷி சொல்லும் விமான நிர்மாண முறைகள் எல்லாமே நம்மை மூக்கின்மேல் விரலை வைக்கச் செய்யும்.

அவர் விமானம் செய்யும் முறையில் முப்பத்திரண்டு ரகசிய முறைகள் உள்ளன என்று எழுதியிருக்கிருர். சில அதிசயிக்கத் தக்கவையாகவும், சில இப்பொழுதுகூடக் கண்டுபிடிக்கப்படாதவையாகவும் இருக்கின்றன. இந்தக் காலத்து விமானங்களில் இருக்கும் 'சவுண்ட் ரிஸீவர்' போன்றதையே தம் ரகசியச் சூத்திரத்தில் சொல்லியிருக்கிருர் பரத்துவாஜர். இதற்குப் 'பர சப்த க்ராஹம்' என்று பெயர். மற்ருென்று 'டெலிவிஷன்' போன்றது. இவைகளை உபயோகிக்க அமைத்த யந்திர சாதனங்கள் இந்தக் காலத்து 'மெஷினரி' முறைகளைப் போலவே அமைந்திருக்கின்றன என்று இந்தக் கால நிபுணர்கள் ஒப்புக்கொண்டிருக்கிருர்கள்.

எதிரி விமானங்களை அழிக்கவோ தாக்கும் எதிரி விமானங்களிலிருந்து தற்காப்புச் செய்துகொள்ளவோ உதவும் முறைக்குப் 'பிரதிக்ரியா' என்று பெயர். இதற்கென்றே தனி அறை ஒன்று உண்டு. விமான ஓட்டி தற்காப்புக்காக அணிந்துகொள்ளும் உடைகள் விமானங்களுக்குத் தகுந்தபடி பல வகையில் இருக்குமாம்.

பரத்துவாஜருடைய நூலில் 'சத்துரு விமான நாசனக்கிரியா' என்னும் சூத்திரம் எதிரி விமானத்தை அழிப்பதில் எடுத்துக் கொள்ளவேண்டிய ஜாக்கிரதையைப்பற்றிச் சொல்லுகிறது. எதிரி விமானங்கள் சூழ்ந்து கொண்ட சந்தர்ப்பத்தில் 'லகுப் பிரதிக்கிரியா' என்ற சூத்திரம் ஒரு நொடியில் வேகத்தை அதிகமாக்கித் தப்பித்துக்கொண்டு ஆகாய வீதியில் உலாவும் முறையை விவரிக்கிறது. இதனுல் அந்தக் காலத்தவர்களின் போர்த் திறமை வெளியாகிறது.

''விமானம் நிருமிப்பதில் 1200 வருஷங்களுக்கு முன்பே இந்தியர் கை தேர்ந்தவர்கள்'' என்று வெர்னன் யூனிவர்ஸிட்டி பிரின்சிபாலான சர்ச்வுட், கல்கத்தாவில் அறிஞர் கூட்டம் ஒன்றில் ஒரு சமயம் சொன்னுர். அசோகன் காலத்தில் கலிங்கதேசத்தார், ஆகாய மார்க்கமாகச் சிங்களத்துக்குப் போய் வந்தார்கள் என்று சொல்வதுண்டு.

அறுபது வருஷங்களுக்குமுன் பம்பாய்க்கருகே வேத சாஸ்திரங்களில் தேர்ந்த ஒரு விஞ்ஞானி, வேதத்தைப் பரத்துவாஜருடைய 'வைமானிக சூத்திர'த்துக்கு ஒட்டியபடி ஆராய்ந்தார். பாதரசம், நட்ச ரஸம் என்ற ரஸங்கள், சூரிய கிரணங்கள் இவற்றின் கலப்பிலிருந்து மின்சாரத்தைத் தயாரித்து, அந்தச் சக்தியால் விமானத்தை ஓட்டத் திட்டமிட்டார். அவருடைய முயற்சியில் மகா

மேதையான அவருடைய மனைவி யும் ஒத்துழைத்தாள். அவருடைய இந்த முயற்சியால் ஒரு விமானம் உருவாயிற்று. அது பம்பாய் சௌபாத்திக் கடற்கரையில் 150 அடி உயரம் வரையில் பறந்து பத்திரமாக இறங்கியும் வந்தது. இந்தக் காட்சியைக் கண்டு மகிழ்ந்தவர்களுள் மகாதேவ கோவிந்த ரானடேயும் ஒருவர்.

நம்மவரின் துரதிருஷ்ட வசத்தால் வெண்ணெய் திரண்டு வரும் போது தாழி உடைந்த கதையாக அந்த விமான ஆராய்ச்சி அதோடு முடிந்தது. அந்த விஞ்ஞானி, எல்லா முயற்சியிலும் தமக்கு வலக்கையாய் இருந்த மனைவி இறந்ததால் ஊக்கத்தை இழந்தார். விமானத்தைப்பற்றிய ஆராய்ச்சியை விட்டுவிட்டார். சில நாட்களில் அந்த ஏக்கத்திலேயே இறந்தும் விட்டார். பிறகு அவருடைய உறவினர்கள் அவர் உருவாக்கிய விமானத்தை அந்தக் காலத்தில் பெயர் பெற்ற பிரிட்டிஷ் கம்பெனி ஒன்றுக்கு விற்றுவிட்டார்கள். அன்ருேடு இந்த நாட்டில் விமான ஆராய்ச்சி வேருடன் அழிந்தது. இப்படி அறுபது ஆண்டுகளுக்கு முன் நம் நாட்டில் புனர்ஜன்மம் எடுத்து, அயல் நாட்டில் வளர்ந்து உலகப் புகழ் பெற்றன, பரத்வாஜ சூத்திரத்தை ஆதாரமாகக் கொண்டு தோன்றிய ஆகாய விமானங்கள். காலக் கிரமத்தில் பல மாறுதலை அடைந்தாலும் அவற்றை முதலில் கண்டு பிடித்தவர்கள் இந்தியர்களே!

சுங்கச் சாவடியில்

ஒரு கனவான் கொஞ்சம் சாராயத்தைக் கப்பலிலிருந்து கள்ளத்தனமாக ஊருக்குள்ளே கொண்டுவர எண்ணிஞர். சுங்க அதிகாரியை எப்படி ஏமாற்றுவது என்று யோசித்தார். கப்பலில் இருந்த ஒரு பூனைக் குட்டியைப் பிடித்தார். ஒரு சிறு கைப் பெட்டிக்குள் வைத்துப் பூட்டி எடுத்துக்கொண்டு, சுங்க அதிகாரியிடம் வந்தார்.

பெட்டியை ஒரு தட்டுத் தட்டினுர். ''இதற்குள் இருக்கும் பூனைக் குட்டியை வெட்டரினரி டாக்டரிடம் எடுத்துச் செல்கிறேன். போகலாமா?'' என்ருர்.

சுங்க அதிகாரி, ''அதெல்லாம் இல்லை! திறந்து காட்டுங்கள்'' என்ருர்.

கனவான் பெட்டியைத் திறந்தார். 'டபக்' என்று பூனைக் குட்டி தாவி வந்து, ஒரே பாய்ச்சலாகக் கப்பலை நோக்கி ஓடியது. கனவானும் அதைத் தொடர்ந்து பெட்டியும் கையுமாக ஓடிக் கப்பலுக்குள் புகுந்தார்.

சற்று நேரத்துக்கெல்லாம் பெட்டியை மூடி இறுகக் கயிற்ருல் கட்டிக் கையிலே தாங்கி மீண்டும் வந்தார். புன்சிரிப்போடு, ''இப்போது இந்தப் போக்கிரிக் குட்டி அப்படி ஓட முடியாது, பாருங்கள்'' என்று சுங்க அதிகாரியிடம் சொல்லி உல்லாச நடை போட்டுக்கொண்டு போய்விட்டார்.

'—அமெரிக்கன் வீக்லி'

மலேயாளிகளைப்போலவே தமிழரும் போற்றும் சரித்திரப் பிரசித்தியான கேரளக் கோயில் -

பேரூர் ஆலயம்

கே. எஸ். ரங்கநாதன்

பேரூர் என்பது ஆயிரக்கணக்கில் மலேயாளிகள் தரிசனம் செய்துவரும் புண்ணிய க்ஷேத்திரங்களில் ஒன்று. இது கோயம்புத்தூரிலிருந்து நாலு மைல் தூரத்தில் இருக்கிறது. இறந்தவருக்குரிய சடங்குகளை இங்கே செய்தால் அவை அழிவற்ற பயனை அளிக்கும் என்பது மக்களின் நம்பிக்கை. நொய்யல் ஆற்றங்கரையில் இந்த க்ஷேத்திரம் இருக்கிறது. இந்த ஆற்றருகில்தான் அந்தச் சடங்குகளைச் செய்வார்கள். மகாத்மா காந்தியின் சாம்பலில் ஒரு பகுதியை இங்கேயும் கரைத்தது மக்களின் நம்பிக்கையைத் தெளிவுபடுத்துகிறது.

இதிகாசங்கள் 'கொங்கு நாடு' என்று குறிக்கும் ராஜ்யத்துக்குப் பேரூர் உப தலைநகராக இருந்தது. சுமார் கி. பி. ஏழாவது நூற்றாண்டில் கோயம்புத்தூர்ச் சிறு கிராமமாகவும் பேரூர் பட்டணமாகவும் இருந்ததாக ஸ்தல புராணம் கூறுகிறது. சேரமான் பெருமாள் யாத்திரை செய்த புண்ணிய க்ஷேத்திரங்களில் இதுவும் ஒன்று. கி. பி. ஏழாவது நூற்றாண்டில் சேரமான் பெருமாள் ஒரு சோழ மன்னனோடு சேர்ந்து இங்கே வந்தார் என்பது சிலர் கருத்து. கோயம்புத்தூரில் இருக்கும் 'கோனி அம்மன்' கோயிலுக்கும் பேரூர்ச் சிவாலயத்துக்கும் ஏராளமான தனத்தையும் நிலத்தையும் சேரமான் கொடுத்ததாகப் பல அத்தாட்சிகள் கிடைத்திருக்கின்றன. கி. பி. 11-ஆம் நூற்றாண்டில் தமிழ் நாட்டுக்கும் கேரளத்துக்கும் உள்ள உறவு பலப்பட்டது. சிற்றூரில் இன்றும் நடக்கும் 'கொங்கன் படை' என்ற உற்சவம், சோழராஜா அந்த ஊர்வரையில் படையெடுத்து வந்து தோல்வியுற்றதன் அறிகுறியாகும். பிறகு 'வீர கேரளன்' என்ற சேரமன்னன் கொங்கு நாடு முழுவதையும் கொஞ்ச காலம் அடக்கி ஆண்டு வந்தான். அப்போது கோயம்புத்தூருக்கு 'வீரகேரள நல்லூர்' என்ற பெயர் ஏற்பட்டதாகச் சிலாசாஸனம் கூறுகிறது. ஆனால் தற்காலம் 'வீரகேரளம்' என்று ஒரு கிராமம் மட்டுந்தான் சேர மன்னன் ஆண்ட கொங்கு நாட்டின் பகுதியில் மிகுந்து இருக்கிறது. எப்படியானாலும் பேரூருடன் மலையாள நாட்டின் தொடர்பு வெகு நாளாக இருந்து வருகிறது என்பது தெளிவு.

பேரூர்ச் சிவாலயத்தின் உற்பத்தியைப்பற்றிப் பல கதைகள் வழங்கு



காப்பிரைட்: மாத்ருபூமி (மலையாளம்: 13-1-'57), கோழிக்கோடு.

கின்றன. அவற்றில் ஒன்று இது: ஒரு சிறிய காட்டில் ஆடுமாடுகள் மேய்ந்துகொண் டிருந்தன. அங்கே ஒரு லிங்கம் இருந்தது. ஒரு மாடு அந்த லிங்கத்தின் அருகே வந்து தானே பால் சுரந்து அந்த லிங்கத் துக்கு அபிஷேகம் செய்துவந்தது. அந்த ஆச்சரியத்தைக் கண்ட மக்கள், லிங்கத்தின் பெருமையை ஊகித்துப் பூஜை செய்யத் தொடங் கினார்கள். அன்று ஆரம்பித்த பூஜை இன்றும் நடந்து வருகிறது.

பேரூர்ச் சிவபெருமானுக்குப் 'பட்டீசுவரன்' என்று ஒரு பெயர் உண்டு. தமிழில் 'பட்டி' என்றால் ஆடுமாடுகள் கட்டும் இடம் என்று பொருள். ஆகவே, 'பட்டீசுவரன்' என்ற பெயர் இந்தக் கதையை அடிப்படையாகக் கொண்டுதான் ஏற்பட் டிருக்கவேண்டும். ஜீவராசி கள் அனைத்தையும் பசுக்களாகக் கொண்டுதானே பகவானுக்குப் பசுபதி என்ற பெயரைப் பெரி யோர்கள் சூட்டியிருக்கிறார்கள்.

தமிழ் இலக்கியத்தில் புகழ்பெற்ற தேவாரத்தில் சுந்தரமூர்த்தி நாய னார் இயற்றிய பாடலில் இந்தக் கோயிலைப்பற்றிக் கூறியிருப்ப தால், இதன் பழமையை நாம் ஓரளவு ஊகம் செய்யலாம். தேவா ரத்தின் காலம் கி. பி. 7-9-ஆம் நூற்றாண்டு ஆனதால், அதற்கு முன்பே இந்த ஆலயம் புகழ் பெற்றிருக்க வேண்டும்.

பின் நாளில் சேர சோழ பாண் டிய அரச குடும்பங்களின் பக்திக் கும் பயத்துக்கும் மானியங்களுக் கும் இந்த க்ஷேத்திரம் பாத்திரமாக இருந்தது. இந்த க்ஷேத்திரத்தின் சரித்திரத்தில் மைசூர் ராஜகுடும் பத்துக்கும் தொடர்பு உண்டு. திப்பு சுல்தான் இந்த க்ஷேத்திரத்துக்கு எந்தவிதத் தீங்கும் செய்ததாகச் சரித்திரத்தில் காணவில்லை. இது வும் நாம் கவனிக்க வேண்டிய விஷயம்.

வெவ்வேறு காலத்தில் வாழ்ந்த பல பிரபுக்கள், அரசர்கள் இவர் களுடைய மேல்பார்வையில் இந்தக் கோயிலின் பற்பல பகுதிகள் உருவாகியிருக்கின்றன என்பது அவற்றைப் பார்க்கும்போதே நமக்கு விளங்குகிறது.



பேரூர்க் கற்சிலைகளில் கலை ஞனுடைய கற்பனா சக்தியும் கைத் திறமையும் முழுவதும் வெளிப் பட்டிருப்பதுடன், அவற்றில் உவகை, வீரம் போன்ற நவரசங் களும் அலை மோதிக்கொண் டிருக் கின்றன. தமிழ் நாட்டுச் சிற்பி கள் 'பேரூர், பெரியபாளையம், தாரமங்கலம், தாடிக்கொம்பு' என்ற வாசகத்தை ஒரு பழமொழி யாக வழங்கி வருகிறார்கள். இந்த நான்கு க்ஷேத்திரங்களையும் தவிர மற்ற இடங்களில் காண்பதற்கரிய சிற்பங்களைத் தாங்கள் படைக்கப் போவதாகக் கூறும்போது, சிற்பி கள் இதை வழங்குகிறார்கள். பேரூர்ச் சிற்பங்களின் பெருமையை இதுவே புலப்படுத்தும்.

பேரூர்க் கனகசபையில் அழகே உருவான சிற்பங்களின் மேன்மை குடிகொண் டிருக்கிறது. இது மதுரையைச் சேர்ந்த திருமலை நாயக்கனின் உத்தரவுப்படி அளகாத்ரி நாயக்கன் என்ற மகான் கட்டியது. சுமார் 50 அடி நீளமும் 30 அடி அகலமும் உள்ள ஒரு மேல் தளத்தை நான்கு வரிசையான

தூண்கள் தாங்குகின்றன. நடுவே இருக்கும் தூண்களைப் பல சிற்ப வேலைகள் அலங்கரிக்கின்றன.

ஒவ்வொரு தூணும் எட்டு அல்லது ஒன்பது அடி உயரம் உடையது. ஒவ்வொன்றும் ஒரே கல்லில் செதுக்கியது. ஒவ்வொன்றையும் ஒட்டி ஐந்து அல்லது ஆறு அடி உயரமும் இரண்டு அல்லது மூன்றடி அகலமும் உள்ள வழவழப்பான - உயிர்க்களையுடன் கூடிய - தெய்வ உருவங்கள் இருக்கின்றன. கால் நகம் முதல் தலைமயிர் வரையில் அந்தப் பிரதிமைகளைக் கலைஞன் கவனித்து உருவாக்கி இருப்பது ஓர் அற்புதம். முக பாவங்கள், அலங்காரங்கள், நிற்கும் ரீதி இவைகள் அனைத்தும் பார்ப்பவர் உள்ளம் பூரிக்கச் செய்து அவரைச் சொப்பன உலகுக்கே கொண்டு செல்லும். ஊர்த்துவ தாண்டவமூர்த்தி, அகோர வீரபத்திர மூர்த்தி, ஆறுமுக மூர்த்தி, பிக்ஷாடன மூர்த்தி, விநாயக மூர்த்தி, யானையுரி போர்த்த மூர்த்தி, ஆலங்காட்டுக் காளியம்மன் இப்படி எல்லா மூர்த்திகளும், பார்த்த மாத்திரத்திலேயே ரசிகரின் உள்ளத்தைக் கவர்ந்து விடும். இந்த எல்லாவற்றுக்கும் மேல் கனகசபையில் ஒரே கல்லில் செதுக்கியிருக்கும் சங்கிலிகளும் கிளிகளும் கலைஞர்களின் திறமைக்குச் சிறந்த அத்தாட்சியாகத் துலங்குகின்றன.

கனகசபையில் ஒரு பக்கமாக நடராஜ விக்கிரகம் சிவகாமசுந்தரியோடு இருக்கும் நிலையைப் பார்க்கும்போது, அங்கே உள்ள கலைக் காட்சியிலும் நடக்கும் பக்திச் சடங்குகளிலும் நடராஜப் பெருமானே பங்கெடுத்துக்கொண்டு சபைக்குத் தலைமை தாங்கி நிற்பது போல் தோன்றும். சிதம்பரத்தில் தாண்டவ மூர்த்திபோல்தான் இந்த நடராஜ மூர்த்தி நமக்குக் காட்சி அளிக்கிறார். பேரூருக்கு மேலைச் சிதம்பரம் என்றும் ஒரு பெயர் உண்டு என்பதைக் கனக சபையும் நடராஜ விக்கிரகமும் நினைவூட்டுகின்றன.

ஆலயத்தில் முக்கியமான பூஜை முதலியவற்றை மேலே குறித்த சிவலிங்கத்துக்குத்தான் செய்கிறார்கள். சில ஆண்டுகளுக்குமுன் இந்த லிங்கத்துக்குக் கும்பாபிஷேகம் நடந்தது. அப்போது இந்த லிங்கத்துக்கு அடியில் மூன்று அல்லது நான்கு லிங்கங்கள் தென்பட்டன என்றும், இன்றும் அடியில் தோண்டத் தோண்டக் கணக்கற்ற லிங்கங்கள் முளைத்து வருவதைக் காணலாம் என்றும் அங்கே வேலை செய்பவர் ஒருவர் என்னிடம் கூறினார்.

நொய்யல் ஆற்றில் அநேகமாகத் தண்ணீர் இராது. ஆயினும் ஜனங்கள் அங்கே ஊற்றுத் தோண்டியாவது அந்த நீரில் குளிக்காமல் விடுவதில்லை. அதன் ஒரு துறைக்குச் சோழன் துறை என்று பெயர். முன் காலத்தில் சோழ மன்னன் ஒருவன் குஷ்டரோகத்தினால் துன்புற்று இங்கே பக்தியுடன் குளித்துப் பகவானை வழிபட்டதால், ரோகம் நீங்கி இன்புற்றான் என்று கூறுகிறார்கள்.

தமிழ் நாடு - கேரளம், தமிழன் - மலையாளி என்றெல்லாம் வேற்றுமை பாராட்டாமல் வாழ முடியும் என்பதற்கு, மலையாளிகளும் தமிழரும் விசேஷ நாட்களில் பழனி, பேரூர் முதலிய புண்ணிய க்ஷேத்திரங்களில் ஆயிரக்கணக்கில் கூடுவதே அத்தாட்சியாகும்.

துஷ்டர்களின் அன்பு

துஷ்டர்களின் குரோதத்தை விட அவர்களுடைய அன்பு அதிக அபாயமானது.

—'கஹானியா'

வந்தபின் காப்பதைவிட வருமுன்
காப்பதே புத்திசாலித்தனம்.

தற்செயல் விபத்து

ஸி. எஸ். ஸ்ரீநிவாஸன்

விபத்து எல்லாமே அநேகமாக அஜாக்கிரதை காரணமாக ஏற்படுகிறவையே. அவற்றை எவரும் எதிர்கொண்டழைப்பதில்லை; விரும்புவதுமில்லை.

விபத்துக்கள் தொழிற்சாலையில் மட்டும் அல்ல; வீட்டிலும், சாலையிலும் மற்றும் எல்லா இடங்களிலும் நேரக்கூடும். 'அபாயமான நிகழ்ச்சி மூலையில் பதுங்கிக் காத்திருக்கிறது' என்று ஆங்கிலத்தில் ஒரு பழமொழி உண்டு.

வீட்டில் தாய் காய்கறிகளை அரிந்த பின் அரிவாள் மணையை அதே இடத்தில் படுக்கப் போட்டுவிட்டுச் சமையலறைக்குள் சென்று திரும்பி வருவதற்குள் - அந்த இரண்டு நிமிஷங்களில் - விளையாட்டுச் சிறுவன் ஓடிவந்து காலை வெட்டிக்கொள்வது சகஜமான அநுபவம். காய் கறி அரிந்தவுடனே அரிவாள் மணையைத் தாய் அப்புறப்படுத்தி யிருந்தால் விபத்து நேருமா?

எதிர் வீட்டிலிருந்து ஏதோ ஒரு சாமானை வாங்கி வரும்படி தாய் சொன்னதைக் கேட்ட மகன் வெகு உற்சாகத்துடன் அந்த வீட்டுக்கு வேகமாக ஓடுகிருன். ஆனல் சாலையில் வந்து கொண்டிருக்கும் காரை அவன் கவனிக்கவில்லை. அந்தக் காரின் டிரைவரும் குறுக்கே திடீரென்று ஒரு பையன் ஓடுவான் என்று எதிர்பார்க்கவில்லை. விளைவு என்ன? சொல்லவா வேண்டும்?

ரெயில்வே ஜங்ஷனில் மேம் பாலத்தின்மேல் ஏறி வருவது சிரமம் என்று எண்ணி, வண்டி வரும் சமயத்திலேயே சாமர்த்தியமாகத் தண்டவாளத்தைத் தாண்ட முயலும் நபர் அல்லது போர்ட்டர், கீழிருக்கும் ஆணி, கம்பி, கல் இவற்றில் தாம் இடறி விழக்கூடும் என்று சற்ருவது நினைத்திருப்பாரா?

இன்னெரு சாதாரண நிகழ்ச்சியையும் கவனிப்போம். செருப்பு இல்லாமல் நடக்கும் ஒருவருடைய காலை, சாலையில் கிடக்கும் துருப்பிடித்த ஓர் ஆணி குத்திவிடுகிறது. அவர் அதைப்பற்றி அலட்சியமாக இருந்துவிடுகிருர். ஆனல் மூன்று நாளில் ரத்தம் 'ஸெப்டிக்' ஆகி அவருடைய உயிருக்கே ஆபத்து ஏற்படுகிறது.

இந்த உதாரணங்களிலிருந்து கிடைக்கும் படிப்பினை இதுதான்; அஜாக்கிரதையின் காரணமாக விபத்துக்கள் நேரலாம்; அவற்றைத் தவிர்க்க ஒவ்வொருவரும் சிறிய விஷயங்களிலும் எப்போதும் கவனத்துடன் இருக்க வேண்டும். செய்யும் காரியத்தில் கண்ணுங் கருத்துமாக இருக்கவேண்டும். ஆபத்து நேராமல் இருக்க ஏற்பட்டிருக்கும் சாதனங்களையும் அவசியமான உபகரணங்களையும் தவருமல் உபயோகிக்க வேண்டும். தவருன குறுக்கு வழிகளில் செல்லக்கூடாது.

தொழிற்சாலைகளில் விபத்துக்கள் நேர்வதற்குப் பல சந்தர்ப்பங்கள் இருக்கின்றன. அவை நேராமல் இருப்பதற்காகத் தொழிற்சாலை நிர்வாகிகளும் அதிகாரிகளும் ஏற்பாடு செய்திருக்கும் அல்லது கொடுத்திருக்கும் பாதுகாப்புச் சாதனங்கள் நிறைய இருக்கின்றன. அந்தச் சாதனங்களைத் தொழிலாளிகள் சரியானபடி பயன்படுத்திக்கொண்டு வேலையில் கவனமாக இருந்தால், தொழிற்சாலைகளில் விபத்தே நேரிடாது என்று உறுதியாகக் கூறலாம்.

மூலம்: மெட்கெம் பத்திரிகை (தமிழ்: ஆகஸ்ட் '57), மேட்டூர்.

வேலையில் கவனக் குறைவினால் ஏற்படும் விபத்துக்களில் சிலவற்றைக் கவனிப்போம். சாணை பிடிக்கும் யந்திரத்தில் ஆயுதத்தைத் தீட்டிக்கொண்டிருக்கும் ஒரு தொழிலாளி, தம்முடன் ஏதோ சமாசாரம் பேச வந்த மற்றொரு தொழிலாளியிடம் பேச ஆரம்பிக்கிறார். ஆனால் கைகள் வேலையைத் தொடர்ந்து செய்து கொண்டே இருக்கின்றன. இந்தச் சந்தர்ப்பத்தில் கை சற்று நகர்ந்து சுழன்றுகொண்டிருக்கும் சாணைக் கல்லின்மேல் உராய்ந்து காயம் அடைகிறது.

துவாரம் போடும் யந்திரத்துக்கு அடியில் இரும்புத் தகட்டை வைத்து அதில் ஓட்டை போட்டுக் கொண்டிருக்கும் ஒரு தொழிலாளி அந்தத் தகட்டின் ஓரங்களைக் கிளாம்புகளில் பொருத்தாமல் வேலையை ஆரம்பிக்கிறார். சிறிது நேரத்தில் அந்தத் தகடு விலகி விடுகிறது; நடுமத்தியில் சுழலும் விசை தள்ளியதால் வெளியே வந்து தொழிலாளியின் காலில் விழுந்து காயம் உண்டாக்குகிறது.

இந்த விபத்துக்கள் நேரிடாமல் இருக்கத் தொழிலாளி என்ன செய்திருக்க வேண்டும்?

யந்திரத்தில் வேலை செய்து கொண்டிருக்கும்போது முதல் தொழிலாளி பேச முற்பட்டிருக்கக் கூடாது; அல்லது வேலையைச் சற்று நிறுத்திக்கொண்டு பேசி விட்டு, பிறகு வேலையில் கவனம் செலுத்தியிருக்க வேண்டும்.

சுழலும் விசைகளுக்கு அருகில் வேலை செய்த இரண்டாவது தொழிலாளி அதனுடன் இணைந்திருக்கும் சாமான்களும் உபகரணங்களும் சரியாகப் பொருத்தப் பெற்றிருக்கின்றனவா என்று கவனித்திருக்க வேண்டும். இதில் சிறிதும் கவனக் குறைவாக இருந்திருக்கக் கூடாது.

செய்யும் தொழிலுக்குச் சரியான ஆயுதத்தைத்தான் உபயோகிக்கவேண்டும். தவறான ஆயுதத்தை உபயோகிப்பது துஷ்பிரயோகம்; அது ஆபத்தில் முடியும். உதாரணமாக, துருப் பிடித்ததால் கழற்றுவதற்குக் கஷ்டமாக இருக்கும் ஒரு குழாயைக் கழற்ற ஒரு தொழிலாளி 'பைப் ரெஞ்ச்' ஒன்றை உபயோகிக்கிறார். அப்படியும் அதைக் கழற்றச் சிரமமாக இருக்கவே, அவர் ஒரு குழாய்த் துண்டை 'பைப் ரெஞ்சின்' தண்டுக்குள் செருகி நெம்புகோலின் நீளத்தை அதிகப்படுத்திக் கழற்ற முனைகிறார். ஆனால், இந்தப் 'பைப் ரெஞ்ச்' இவ்வளவு அதிகமான சக்தியைப் பிரயோகிப்பதற்காகத் தயாரானது அல்ல. எனவே, 'படார்' என்று தண்டின் மத்தியில் முறிந்து விடுகிறது. குழாய்த் துண்டை அமுக்கிக் கொண்டிருக்கும் தொழிலாளியின் முகத்தில், இரும்புத் துண்டும் குழாயும் மோதிக் காயப்படுத்துகின்றன.

குழாயைக் கழற்றுவதில் சிரமம் இருந்தால், குழாயைத் தட்டி, துருவைச் சற்று அகற்றிச் சிறிது மண்ணெண்ணெய் விட்டு மரைகளைச் சுத்தம் செய்யவேண்டும். பின்பு சிறிது நேரம் தரையைச் சுற்றித் தட்டிவிட்டுக் கழற்றினால் குழாயைச் சரியான 'ரெஞ்சி'னால் சுலபமாகக் கழற்ற முடியும்.

மேலும், விபத்துக்கள் நேராமல் இருக்க வேண்டுமானால், ஒவ்வொரு தொழிலாளிக்கும் தான் வேலை செய்யும் இடங்களைப்பற்றியும், அங்கே உபயோகப்படும் அல்லது தயாராகும் ஒவ்வொரு பொருளைப்பற்றியும் நன்றாகத் தெரிந்திருக்க வேண்டும். உதாரணமாக, க்ளோரின், திராவகம் முதலியவை தயாரிக்கும் அல்லது உபயோகிக்கும் தொழிற்சாலைகளில் வேலை செய்பவர்களுக்கு இந்த விஷயங்கள் தெரியவேண்டும்: 'க்ளோரின் ஒரு விஷக் காற்று. அது தற்செயலாக வெளியே காற்றில் பரவினால் சுவாசிப்பது கஷ்டம்; மூச்சுத் திணறி மயக்கம் அடையக்கூடும். அது பரவும் இடங்களில் முகமூடி போட்டுக்கொண்டு வேலை செய்ய வேண்டும். கந்தகத் திராவகம் வீரியம் உள்ளது. அது முகத்தின் மேலே பட்டால் மிக எரிச்சலுடன் சதையை அரித்துத்

தீவிரமான புண்ணுக்கும்; கண்ணில் பட்டால், பார்வையைக் கெடுக்கும். இந்தத் திராவகத்துடன் தண்ணீர் சேர்ந்தால் அதிகச் சூடு உண்டாகும். ஆகவே, இது பட்ட இடங்களைத் தண்ணீரால் கழுவக் கூடாது; ஸ்பிரிட்டை உபயோகித்துத்தான் கழுவவேண்டும். இந்தத் தொழிற்சாலைகளில் உள்ள அதிகாரிகள் இவை போன்ற விஷயங்களைத் தொழிலாளிகளுக்கு நன்ருக அறிவுறுத்த வேண்டும்.

ஓடும் யந்திரங்கள், சுற்றும் சக்கரங்கள் இவற்றைச் சுற்றிப் பாதுகாப்புக்கள் போட்டிருக்கும். அவற்றை அப்புறப்படுத்தி விட்டு ரிப்பேர் வேலை செய்யும் தொழிலாளிகள், வேலை முடிந்ததும் இந்தப் பாதுகாப்புக்களைத் திருப்பிப் பொருத்திய பின்பே, இவற்றை இயங்க வைக்க வேண்டும். இவற்றைத் திருப்பிப் போடாமல் சோதனை செய்வது அபாயம்.

விஷ வாயு, திராவகம், காஸ்டிக் திரவங்கள் முதலியவை தயாராகும் அல்லது உபயோகப்படும் இடங்களில் வேலை செய்பவர்கள் தங்களுடைய முகமூடி, மூக்குக் கண்ணுடி, நீண்ட பாதரட்சை போன்ற பாதுகாப்புச் சாதனங்களை அவசியம் அணிந்துகொண்டு வேலை செய்யவேண்டும். இவற்றை அணிவது தொந்தரவாக இருக்கிறது என்ற மனப்பான்மையை அறவே அகற்ற வேண்டும். இவற்றை அணியாமலே தாங்கள் சாமர்த்தியமாக வேலை செய்ய முடியும் என்ற அசட்டுத் துணிச்சலும் கூடாது. அபாயம் எந்த நிமிஷமும் நேரலாம். இத்தனை நாளாக அபாயம் நேராமல் சமாளித்துக் கொண்டதால், இன்னமும் இதே மாதிரி அஜாக்கிரதையாக இருக்கலாம் என்று ஒரு போதும் எண்ணக்கூடாது. ஒரு கணத்தில் கவனக்குறைவினுலோ, அஜாக்கிரதையினுலோ நேரக்கூடிய விபத்தினுல் எஞ்சிய ஆயுள் காலம் முழுவதும் சங்கடப்படக்கூடும் என்பது நினைவில் இருக்க வேண்டும்.

தொழிற்சாலையில் ஒவ்வொருவரும் தாம் வேலை செய்யும் இடத்தையும் சுற்றுப்புறத்தையும் சுத்தமாக வைத்திருக்க வேண்டும். அநாவசியமான சாமான்களை அப்போதைக் கப்போது அப்புறப்படுத்த வேண்டும். இல்லாவிட்டால், விபத்துக்கள் நேரக்கூடும். கீழே கிடக்கும் ஒரு மரக்கட்டை, அவசரமாக நீங்கள் செல்லும்போது தடுக்கி விழ ஏதுவாகும். எண்ணெய் சிந்தியிருக்கும் தரை ஒருவரை வழுக்கி விழவைக்கலாம்.

தொழிற்சாலையில் ஒவ்வொருவருக்கும் தங்கள் பகுதியில் என்ன என்ன விபத்துக்கள் நேரக்கூடும் என்ற விஷயத்தையும், அப்படி விபத்துக்கள் ஏற்பட்டால் உடனே செய்ய வேண்டிய முதல் உதவி என்ன என்பதையும் நன்ருக அறிவுறுத்த வேண்டும். தேவையான முதல் உதவி அளிப்பதுடன் விபத்துக்குள்ளானவரைக் கூடிய சீக்கிரம் சிகிச்சைக்கு அழைத்துப் போக அல்லது எடுத்துப் போக வேண்டும். இந்த விஷயங்களில் காலதாமதம் சிறிதும் கூடாது.

வந்தபின் காப்போனைவிட வருமுன் காப்போனே சமர்த்தன். பாதுகாப்பு விதிகளை மீறியோ, பாதுகாப்புச் சாதனங்களை உபயோகப்படுத்தாமலோ, கவனக் குறைவாலோ தன்னை விபத்துக்குப் பாத்திரமான நிலையில் வைத்துக் கொள்ளும் தொழிலாளி சற்று ஆராய்ந்தால், தன் செய்கையின் காரணமாகச் சிறிது காலம் கஷ்டமான உடல் நிலை, ஊதியக் குறைவு இவற்றுடன் சிரமப்படுவதோடு, பிற்கால வாழ்க்கையிலும் துயரப்பட நேரும் என்பது தெளிவாகத் தெரியும். ஆகவே, சரியான முறையில் ஜாக்கிரதையாக நடந்து கொண்டு ஒவ்வொருவரும் தம் பணியைச் செவ்வையாய் ஆற்ற வேண்டும்.

வாத விவாதங்களால் ஆண்டவனை அறிய இயலாது. உள்ளூற அவனை உணர வேண்டும். —விநோபா பாவே

கதவைத் திறந்தால் ...?

ஒரு முறை மௌலானா ரூமி அவர்களின் அன்பு மகள் தந்தையிடம் வந்து நெஞ்சிலே வெறுப்பும் வேதனையும் மேலிட, தன் கணவர் மிகவும் கருமியாய் இருப்பதாகக் கூறி முறையிட்டாள். அது கேட்ட மௌலானா ரூமி தம் புதல்விக்குச் சிறு கதை ஒன்றைக் கூறினார்:

''உலோபி ஒருவன் தன் அறையில் விளக்கேற்றி வைத்துக்கொண்டு ஏதோ எழுதிக்கொண் டிருந்தான். சிறிது நேரங் கழித்துத் தொழுகை ஒலி கேட்டு எழுந்து பள்ளிவாசலுக்கு விரைந்தான். பள்ளிவாசலின் அருகில் சென்றவுடன் விளக்கை அணைக்காமல் வந்துவிட்ட நினைவு எழுந்தது. வீணாக அறையில் விளக்கு எரிந்து எண்ணெயும் வற்றிவிடுமே என்று தோன்றியது அவனுக்கு. பள்ளி வாசலுக்குச் செல்ல வேண்டிய அவன் உடனே வீட்டை நோக்கி நடந்தான். வீட்டின் கதவைத் தட்டும் ஒலி கேட்டு ஓடி வந்தாள், அவனுடைய மனைவி. 'கதவைத் திறக்க வேண்டாம். அறையில் எரிந்துகொண் டிருக்கும் விளக்கை அணைத்துவிடு. அதற்காகத்தான் இப்போது திரும்பி வந்தேன்' என்றான் உலோபி. 'கதவை ஏன் திறக்க வேண்டாம் என்கிறீர்கள்?' என்று கேட்டாள் மனைவி. 'அடிக்கடி கதவைத் திறந்தால் தாழ்ப்பாளும் கதவும் தேய்ந்துவிடுமே; அதனால்தான் வேண்டாம் என்றேன்' என்றான் உலோபி. 'அப்படியானால் பள்ளி வாசலிலிருந்து இங்கே வந்தீர்களே; உங்கள் செருப்புத் தேய்ந்துவிடாதோ?' என்று கேட்டாள் மனைவி. 'அதைப் பற்றிக் கவலைப்படாதே. செருப்பு என் கட்கத்தில் பத்திர மாக இருக்கிறது!' என்று பெருமையோடு கூறினான் உலோபி.

அறிஞர் மௌலானா ரூமி அவர்கள் இந்தக் கதை யைக் கூறி முடித்தவுடன், அவருடைய மகள் தன் மனத்தி லிருந்த வெறுப்பு, வருத்தமெல்லாவற்றையும் மறந்து வாய் விட்டுச் சிரித்துவிட்டாள்.

—காதரப்துல்லாஹ், 'முஸ்லிம் முரசு'.

தாயைக் கண்டுகொள்கிறது குழந்தை;
கடவுளைக் கண்டுகொள்கிறான் அறிவாளி.

முன்னேற ஒரே வழி

ராஜாஜி

'தெய்வ நம்பிக்கையில் உள்ள உறுதி போய்விட்டால் சைத்தானுக்குத்தான் நிச்சயமாக வெற்றி கிட்டும்; அப்புறம் தீய சக்திகள்தான் மனித சமூகத்தை அடக்கி ஆட்டி வைக்கும்' என்று ஜேகப் ஸ்லோவான் என்பவர், சமீபத்தில் வெளியான ஒரு புத்தகத்தின் முகவுரையில் குறிப்பிட்டிருக்கிறார். ஐஸக் ஸிங்கர் என்ற ஆசிரியர் எழுதியது இந்தப் புத்தகம். ஸ்லோவான் சொல்வது இன்று எவ்வளவு உண்மையாகவும் பொருத்தமாகவும் இருக்கிறது! நம்முடைய நாட்டில் - சமுதாயத்தில் - நடப்பதையே பாருங்கள்! மாந்தர்களின் உள்ளத்தில் ஆண்டவன் இடம் பெறாவிட்டால் நாம் சுதந்தரம் அடைந்துதான் என்ன பயன்?

தெய்விக புருஷர் ஒருவருடைய மேதையாலும் முயற்சியாலும் நாம் சுதந்தரம் அடைந்தோம். உலகத்திலேயே மிகவும் சக்தி வாய்ந்த சாம்ராஜ்யம் - வல்லரசு - திகைக்கும்படி ஓர் உபாயம் கண்டுபிடித்தார் அவர். வாழ்நாளில் ஒவ்வொரு கணமும் அவர் ஆண்டவனையே நம்பியிருந்தார். ஆனால் அவருக்குப் பின், அவர் பெற்றுத் தந்த சுதந்தரத்துக்கு வாரிசாக இருக்கும் நாமோ ஆண்டவன், இறைவன் என்பதெல்லாம் வீண் தொல்லை என்று எண்ணி, அவனை அலட்சியம் செய்து வருகிறோம். அதன் விளைவாக ஒற்றுமை குன்றி, ஊழல், தன்னலமே நிறைந்த பதவிப் பித்து, பேராசை, நேர்மையின்மை என்னும் சகதியில் உழலுகிறோம்; இவை யாவும் சேர்ந்து நாம் முன்னேற வகுத்த சட்டதிட்டங்கள் எல்லாவற்றையும் பாழ்படுத்தி விட்டன.

முன்னேற்றம் என்ற கட்டிடத்துக்கு அஸ்திவாரம் போன்றது தெய்வ நம்பிக்கை. ஆராய்ச்சியினாலோ, பரிசோதனையினாலோ, விவாதங்களினாலோ ஆண்டவனை அடைந்து விட முடியாது. புலன் உணர்ச்சிக்கு அப்பாற்பட்ட ஒரு ரகசியமாக விளங்குகிறான் ஆண்டவன். காற்றைக் கண்ணால் பார்க்க முடியாது; அது மனிதனுக்குத் தேவையாக இருப்பது போல் ஆண்டவனும் தேவை; அத்தாட்சி காட்டுவது சிரமமாக இருந்தாலும் அவன் நமக்குத் தேவையே! அவன் தேவை என்ற ஒரு காரணமே அத்தாட்சி. தான் வந்தது எப்படி என்றோ, தாய் ஒருத்தி எப்படி ஏற்பட்டாள் என்றோ எந்தக் குழந்தைக்காவது தெரியுமா? ஆனாலும் அதற்குத் தாய் தேவையாக இருக்கிறாள். அவளோடு அது ஒன்றிக்கொள்கிறது. தாய் என்பவள் இவள்தான் என்பதை நிரூபிக்கக் குழந்தைக்கு யாராவது அத்தாட்சி காட்ட முடியுமா? ஆனாலும் குழந்தைக்குத் தாயை விட அன்பான பொருள், அவளை விட வேறு அத்தாட்சி, அதற்குப் போஷணை தருபவள் உண்டோ?

மூலம்: ஸ்வராஜ்யா (ஆங்கிலம்: 31-8-'57), சென்னை-14.

ஆண்டவனிடம் நம்பிக்கை இல்லாவிட்டால் நம் சொந்த வாழ்விலும் சரி, நம் சமுதாய வாழ்விலும் சரி, முன்னேற மாட்டோம்; தோல்வியே நமக்குக் கிட்டும். நாகரிகமே அந்த ஆண்டவனை அடிப்படையாகக் கொண்டுதான் நிற்கிறது. அவனை ஒதுக்கித் தள்ளினுல நாகரிகததையும் உதறி எறிய வேண்டியதுதான். நாகரிகம் என்பது லோகாயத ரீதியான முன்னேற்றத்தை அடிப்படையாகக் கொண்டதன்று; ஆத்மிக முயற்சியும், தன்னடக்கமும், நேர்மையான ஒத்துழைப்புமே அதற்கு ஆதாரம். பரம்பொருளின் மேல் நம்பிக்கை இருந்தால்தான் இவை யாவும் கைகூடும். இப்போதோ நாம் வழி தவறிவிட்டோம்; அதனுல்தான் பல சிக்கல்களும், தொல்லைகளும், இருளும் நம்மைச் சூழ்ந்து கிடக்கின்றன. இனி மேலாவது அந்தப் பழைய நெறிக்குத் திரும்பிச் செல்வோம். முன்னேற்றம் என்ற பெயரில் உலக இச்சைகள் கொள்ளிவாய்ப் பேய் போல் நம்மைச் சகதிக்கு இழுத்துச் செல்லப் பார்க்கின்றன; இனியேனும் அவற்றை நம்பி வீண் போகாமல் இருப்போம். தர்மம் என்ற நந்தா விளக்கைக் கையில் ஏந்திப் பழைய நெறியைக் கடைப் பிடிப்போம். விஞ்ஞானிகள் பிளந்து காட்டிய அணு ஆண்டவன ஆகுமோ? அது நம்மை நாசத்துக்குத்தான் இட்டுச் செல்லும். விஞ்ஞானம் எல்லாவற்றுக்கும் அப்பால் கரந்து நிற்கும் ஆண்டவனை - அணுவைவிட நுண்மையான, கண்ணுல் காணும் பிரபஞ்சத்தைவிடப பெரிய அந்தப பரம்பொருளை - உள்ளத்தில் கொண்டிருந்தால்தான் விஞ்ஞானம் நமக்குத் துணை புரியும்.

வைக்கோல் குறி

இங்கிலாந்தில் வெகு காலத்துக்கு முன்னே, பொய்ச் சாட்சி சொல்வதையே தொழிலாகக் கொண்ட ஒரு கூட்டத்தார் இருந்தார்கள். தங்கள் பாதரட்சையில் ஒரு வைக்கோல் துரும்பைச் செருகி வெளியே தெரியும்படி நீட்டி வைப்பார்கள்.

வட அயர்லாந்தில் ஒரு பண்ணை வீட்டு வாசல் படியில் வைக்கோல் துரும்பு செருகியிருந்தால், உள்ளே பொல்லாத பேய் இருப்பதற்கு எச்சரிக்கை.

மேற்கு இங்கிலாந்தில் எந்த வீட்டிலாவது பெண்டாட்டியை அடிப்பவன் இருந்தால், மற்றவர் கேலியாக அந்த வீட்டு வாசற்படியில் வைக்கோல் துரும்பைச் செருகிவிடுவார்கள்.

சுரங்கப் பிரதேசம், டன்னல் இவற்றில் அபாயமான படுகுழிகள் இருக்குமானுல், அருகே தரையில் அவற்றைப்பற்றிய எச்சரிக்கையாக வைக்கோல் துரும்புகளை இறைத்திருப்பார்கள்.

காக்கைகள் வராமல் பயமுறுத்துவதற்காக வைக்கோல் பொம்மை செய்து வயல்களில் வைப்பது எங்கும் வழக்கம். அயர்லாந்திலோ வீட்டுக் கூரை மீது இப்படி வைக்கோல் பொம்மை வைப்பார்கள். யாரும் உள்ளே வந்து குடித்துப் புதுமணத் தம்பதிகளை வாழ்த்திச் செல்லலாம் என்ற அழைப்பு இது.

—'காரவான்'

இன்ப மடம்

ரபலேயின் சித்திரம்

கட்டுக் காவல் நிறைந்திருப்பதே மடங்களின் லட்சணம். இதை மாற்றிவிடுகிறார் ரபலே. இந்த விநோதத்தை இங்கே விளக்குகிறார் அன்பர் ரா. ஸ்ரீ. தேசிகன்.

ஐரோப்பாக் கண்டத்தில் திகழ்ந்த மறுமலர்ச்சிக் காலம் என்னும் விரிந்த தொட்டிலிலே கண் வளர்ந்த ஒரு சேய்தான் ரபலே (1494-1553). இவருடைய பலதுறைப் படிப்பு, கிரேக்க இலக்கியத்தில் இவருக்கு இருந்த ஆர்வம், வியப்பு, மோகம், புலன் இன்பத்தில் இவர் காட்டிய கலப்பற்ற பெருஞ்சுவை, மத்திய காலத்தில் ஆட்சி புரிந்த மடத்து வாழ்க்கையின் மீதுள்ள இவருடைய வெறுப்பு, சுதந்தரத்திலும் எழிற்கலையிலும் இவருக்குள்ள பசி தாகம் இவை யாவும் இவர் மறுமலர்ச்சிக் காலத்தில் தோன்றிய மகன் என்று முரசடிக்கின்றன.

இவருடைய 'ரபலே' என்ற நூலைப் படிப்போருக்குக் கடல் போலப் பரந்த இவரது பல திறப்பட்ட புலமை புலனாகும். வரிக்கு வரி அதில் கிரேக்க இலக்கியத்தின் நறுமணம் கமழப் பார்க்கிறோம். ஜான் கூப்பர் பௌவிஸ் 'இலக்கிய இன்பங்கள்' என்ற தம் புத்தகத்தில் இவரைப்பற்றிக் கூறும் இடத்தில், ''பிளேட்டோ, மொண்டேன் இவர்களைக் காட்டிலும் இவர் பெரியவர்; இவரை ஹோமர், ஷேக்ஸ்பியர் இவர்களோடுதான் ஒப்பிடலாம்'' என்கிறார். இத்தகைய கருத்து ரபலே பால் வைத்த அளவிலா அன்பின் நறவில் பிறந்திருக்கலாம். ஆனால் ரபலே அறிவில் சிறந்த சான்றோர் என்பதை ஒருவராலும் மறுக்க முடியாது.

இந்த நகைச்சுவை வேந்தர் - வசை நூலை மிகக் கவின்பெற நெய்வதில் வல்லவர். புகழ் பெற்ற இந்த மருத்துவர், துரோன் என்ற வட்டத்திலுள்ள சினேன் என்ற ஊரில் பிறந்தவர். சில காலம் இவர் ஒரு பாதிரியாக இருந்தார். கிரேக்க இலக்கியங்களில் திளைத்த காரணத்தால், இவரை மடத்து அதிகாரிகள் வெறுக்கத் தொடங்கினார்கள். வைத்திய நூல் பட்டம் பெற்று லயன்ஸ் என்ற ஊரில் மருத்துவத் தொழிலை மிகச் சிறப்பாக நடத்தினார். 1532-ஆம் ஆண்டு 'பாண்டா குருயல்' (Pantagruel) என்ற நூலை வெளியிட்டார். 1534-ஆம் ஆண்டில் 'கர்காண்டுவா' (Gargantua) என்ற நூல் பிறந்தது.

இவர் ஒரு பெரிய மருத்துவரென்றும், அறிவுச் சுடருக்காகவும் மனிதனின் இன்பம், முற்போக்கு இவைகளுக்காகவும் முயன்ற சான்றோர் என்றும் இவர் காலத்திலேயே இவருக்குப் புகழ் மாலை சூட்டினார்கள் என்றால், இவர் பெருமையை என்னவென்று இயம்புவது!

ரபலே படைத்த 'கர்காண்டுவா' பிறந்தவுடனே குடங்குடமாகப் பால் குடித்தானாம். அவன் தலை மயிரை வாரும் சீப்பு 900 அடி நீளம் என்றால், அவனுடைய மற்றைய அங்கங்களைக் கற்பனைக் கண்கள் கொண்டு பார்க்க வேண்டியது தான். அவனுடைய சிறுநீர் வெள்ளத்தில் மாநகரம் மிதந்தது என்று ரபலே சித்திரிக்கிறார். ஸ்விஃப்ட் வரைந்த 'பிராப்டிங்நாக்'கில் நடமாடுகிற விண்ணை முட்டும் மக்களைக் 'கர்காண்டுவா' நினைவூட்டுகிறான். கூர்ந்து நோக்கினால் ரபலேதான்

ஸ்விஃப்டுக்கு ஒரு விடிவெள்ளியாய்த் திகழ்கிறார் என்ற முடிவுக்கு வருவோம்.

கர்காண்டுவா படிக்காத நூல்கள் இல்லை; கற்காத மொழிகள் இல்லை. கர்காண்டுவாவின் விரிந்த படிப்பு ரபலேயின் அளப்பரும் கல்வியறிவைத்தான் நமக்கு உணர்த்துகிறது. நம் நாட்டு இலக்கியங்களிலும் குண்டோதரன், பீமசேனன் போன்ற பேருருவங்களைக் காண்கிறோம். குண்டோதரன் வைகையாற்றைத் தடுத்தே தண்ணீர் பருகிய கதையைப் படித்திருக்கிறோம்.

இத்தகைய பெரிய உருவங்களின் உள்ளங்களில் அன்பு பெருக்கெடுத்தோடப் பார்க்கிறோம். உதாரணமாக, கர்காண்டுவா தன் பகைவரை வெல்லுகிறான். வெறும் வெற்றிச் சின்னங்களில் உண்மையான வெற்றி தோன்றாது. பகைவர்கள் மனத்தில் அன்புக் கோயில்களை அமைப்பதே தக்க வெற்றிச் சின்னமாகும் என்று கர்காண்டுவா மொழிகிறான். இதில் எத்தனை பேருண்மை ஒளிவிடுகிறது, பாருங்கள்! போர்க்களத்தில் தனக்கு உதவியாயிருந்த ஒரு பாதிரிக்காக ஒரு மடத்தைக் கர்காண்டுவா கட்டித் தருகிறான். இந்த மடத்தில் ஒரு லட்சிய வாழ்வு திகழ்கிறது. அதன் சிறப்பை நோக்குவோம்.

'தெல்மா மடம்' ஒரு லட்சிய ராஜ சபை அன்று; ஒரு லட்சியக் கல்லூரியும் அன்று; மம்ஃபோர்ட் (Mumford) சித்திரிப்பதுபோல ஆயர் பாடியில் தோன்றும் ஒரு லட்சிய இல்லமும் இல்லை அது. பிறப்பு, செல்வம் என்ற இரண்டு அஸ்திவாரங்களின்மேலும் எழும்பாமல் படிப்பு, அறிவு என்ற இரண்டின்மேலேயே வளர்கிற ஒரு லட்சிய வாழ்வு அது. எப்படி அறிவுச் செல்வத்தைப் பெற்ற அழகு வாய்ந்த ஆடவர்களும் பெண்களும் வாழ்க்கையை நடத்த வேண்டும் என்பதைப்பற்றி அவர் நீண்ட காலம் சிந்தித்து நமக்கு உயர்ந்த கருத்துக்களை நல்குகிறார்.

அந்த மடத்தில் சட்டங்களுக்கோ, வழக்கறிஞர்களுக்கோ இடம் இல்லை. அரசியல்வாதிகள், மத போதகர்கள், செல்வத்தைப் பேணுவோர், வட்டிக்குக் கொடுக்கும் மாந்தர்கள், உலகத்தை துறந்தவர்கள் இவர்களை அதில் புகவிடமாட்டார்கள். நல்ல ஆடைகளை அணிவார்கள்; வாழ்க்கை மரத்தில் பூத்த மலர்களைப் போன்ற உயர்ந்த நிலையை எய்திய மாந்தர்கள் விரும்பும் வாழ்வு அங்கே மிளிர்கிறது. அவர்களை ஆதரிக்கும் ஒரு பெருந்தகை அங்கே வீற்றிருக்கிறான். அவன் கொள்ளக் குறைவிலன்; வேண்டிய எல்லாம் தருவான். ஒரு படைபோலச் சேவகர்கள் அவனைக் காத்துக்கொண்டிருக்கிறார்கள். அவர்களுடைய தேவைகளை நிறைவேற்றப் பல பணியாட்கள் அந்த மடத்தில் உறைகிறார்கள்.

அவர்கள் ஒழுங்காக இருப்பதற்குச் சட்ட திட்டங்கள் புறத்திலிருந்து பிறக்க வேண்டிய அவசியமில்லை. இயல்பாகவே அவர்கள் உண்மை நெறியில் நடப்பவர்கள். சான்றாண்மை அவர்களோடுகூடப் பிறந்தது. ஆடவர்களிடத்திலும், பெண்களிடத்திலும் சரிசமமான உணர்ச்சி ஓங்கி வளர்ந்துகொண்டே இருக்கிறது. மடத்தில் திகழும் படிப்பைப்பற்றிச் சற்று ஆராய்வது நலமாகும். ஓடுதல், தாண்டுதல், நீந்துதல், மல்யுத்தம் செய்தல் முதலிய பயிற்சிகளில் அவர்கள் ஈடுபடவேண்டும். நடனக் கலையில் வல்லவர்களாகத் திகழ வேண்டும் என்பதும் ஒரு நோக்கமாகும். குதிரை சவாரி செய்வதில் தம் ஆற்றலைக் காட்டுவதும் ஒரு கலையாகக் கருதப்படும். பற்பல மொழிகளின்மீது ஆணை செலுத்தும் ஆற்றல் அவர்களிடத்தில் தோன்றுவது மிகச் சிறப்பாகும். நுண் கலைகளைப்பற்றிய ஞானம் அவர்களிடத்தில் மலர்கிறது. அந்த மடத்தில் லத்தீன், இத்தாலியன் இந்த மொழிகளைக் கசடறக் கற்கவேண்டும். எல்லா மடங்களிலும் காலத்தின் ஆட்சியைப் பார்க்கிறோம். இந்த மடத்திலோ கடிகாரம் இல்லை; காலத்தைக் குறிக்க அடிக்கும் மணி இங்கே இல்லை. மணியை எண்ணுவதே காலத்தை வீணாகக் கழிப்பதாகும்.

காலத்தை எண்ணுவதால் என்ன லாபம் பெறுகிருர்கள் என்ற கேள்வியை ரபலே எழுப்புகிருர். அவரவர்கள் மனமுவந்து எந்த எந்த அலுவல்களைப் புரிய வேண்டு மென்று நினைக்கிருர்களோ, அந்த அந்த அலுவல்களைக் கால வரம் பின்றிச் செய்யலாம்.

கன்னியா மடங்களில் மனிதர்கள் வெளிப்படையாக நுழைய முடியாது என்ற கட்டுப்பாடு உண்டு. ஆனுல் தெல்மா மடத்தில் மனிதர்கள் இல்லாமல் பெண்கள் உறைவது முடியாது. இவர்கள் சேர்ந்தே வாழ்கிருர்கள். மற்ற மடங்களில் சாதாரணமாக ஆடவர்களும் பெண்களும் தம்தம் வாழ் நாட்கள் முழுவதையும் தனியே கழிக்கும்படி சட்டம் நிறுவுகிருர்கள். ஆனுல் இந்தத் தெல்மா மடத்தில் அத்தகைய கடுந்திட்டங்கள் இல்லை. எப்பொழுது போகவேண்டு மென்று அவர்கள் விரும்பினுலும் அப்பொழுதே தெல்மா மடத்தை விட்டு அகன்றுவிடலாம். எந்த வித மான தடையும் அங்கே விதிப்ப தில்லை.

இந்திரிய உணர்ச்சி வெள்ளத்துக்கு அணைபோடுதல், கடுமையான வறுமையையே அணிகலமாகக் கொள்ளுதல், பிறருக்கு மிகப் பணிந்து நடத்தல் இவைகளைப் பொதுவாக மடங்களில் அறங்களாகப் போற்றுகிருர்கள். ஆனுல் தெல்மா மடத்தில் ஆடவர்களும் பெண்களும் மணந்துகொள்ளலாம்; செழுஞ் செல்வத்தில் திளைத்த இன்பச் சுதந்தர வாழ்வு நடத்தலாம். அவர்களுடைய செம்மையுற்ற உள்ளமே அவர்களுக்கு ஓர் அணையா விளக்காகக் காட்சி அளிக்கிறது. அகத்தில் ஒளி விடுகிற மாசற்ற அறிவுச் சுடரே அவர்களுக்கு நன்னெறியைக் காட்டுகிறது.

சட்ட திட்டங்களைப் படிப்பது, விதிமுறைகளை ஆராய்ச்சி செய்வது இவை போன்ற அலுவல்களில் அவர்கள் காலத்தைக் கழிப்ப தில்லை.

எப்பொழுது படுக்கையை விட்டு எழுந்தால் நலமென்று கருதுகிருர்களோ அப்பொழுது அவர்கள் நித்திரா தேவியிடமிருந்து விடை பெற்றுக்கொள்ளுவார்கள்; உண்பது, குடிப்பது, வேலை செய்வது இந்தச் செயல்கள் அவர்கள் மனம் போல் திகழும். ஒருவரும் அவர்களைக் கட்டுப்படுத்த மாட்டார்கள். 'உன் இச்சைப்படி நடந்துகொள்' என்ற கொள்கைதான் அந்த மடத்தின் சட்டமாகும். அந்தச் சட்டத்தைப் பின்பற்றியே அவர்கள் வாழ்க்கை நடத்துகிருர்கள். மாந்தர் உள்ளமே ஓர் உரைகல்லாகவும், நல்லறிவுச் சுடராகவும் திகழுமானுல் நீதி மன்றங்கள் தேவையில்லை என்பது உண்மையே.

ரபலே எழுதிய புத்தகம் மத்திய காலத்தில் தோன்றிய கட்டுப்பாடுகளைத் தகர்த்தெறிந்த புத்தம் புதிய உவகை நறவில் பிறந்தது என்பதை மறக்க முடியாது. சுதந்தரச் சூழ்நிலையான நாற்றங்காலில் முளைத்த பயிர்தான் இந்த நூல். முடிவில், ''மனம் போகிற போக்கில் புலன் இன்பப் பொய்கையில் எவ்வளவு காலம் திளைக்க முடியும் மாந்தர்கள்? அதிலும் ஓர் அயர்வு வராதா?'' என்ற வினு நம் மனத்தகத்தே எழுகிறது.

நகர விஜயம்

நாட்டுப் புறத்து ஆசாமி ஒருவர் முதல் முதலாக நகரத்துக்கு விஜயம் செய்து ஓர் ஓட்டலில் தங்கினுர்.

வாசலிலே நடைப் பாதையில் ஒரு கார் நிற்பதைக் கண்டு ஓட்டலிலிருந்து வெளியே வந்தார்.

''இது டாக்ஸியா?'' என்று கேட்டார்.

''ஆமாம், ஸார்'' என்ருன் டிரைவர்.

''அப்படித்தான் இருக்கும் என்று நினைத்தேன்'' என்று சொல்லிக்கொண்டே ஆசாமி மீண்டும் உள்ளே போய் விட்டார்.

—'அவாண்டேல் ஸன்'

என்னைக் கேளுங்கள்

காப்டன் என். சேஷாத்திரிநாதன்

வைத்தியம், சுகாதாரம், ஆரோக்கியம் இவைபற்றி 'மஞ்சரி' வாசகர்கள் கேட்கும் கேள்விகளுக்கு இயன்றமட்டும் பதிலளிக்க இந்த டாக்டர் இசைந்திருக்கிருர். இவர் வைத்தியத் துறையில் கல்வியும் அநுபவமும் நிறைந்தவர்; ரத்த பரிசோதனை நிபுணர்; கிண்டி இன்ஸ்டிட்யூட் அதிகாரியாக இருந்தவர். நோயுள்ளவரின் தனித்தனி நிலையை நேரில் கவனித்தே டாக்டர் வைத்தியம் செய்ய வேண்டும். ஆகவே, இதில் வரும் பதில்களைப் பொதுவாகக் கொள்ளலாமே தவிர, வைத்தியமே இவற்றைக் கொண்டு செய்துகொள்ளலாம் என்று நண்பர்கள் நினைக்கக் கூடாது.

வ. அந்து, கடலூர்.

கேள்வி-1 : ஆகஸ்ட் 1957-'மஞ்சரி'யில் 20-ஆம் பக்கத்தில் 'பெண்ணே உயர்ந்தவள்' என்ற கட்டுரையில் புரொபஸர் கே. ஸீ. பீட்டர் என்பவர், ''பெண்ணிடம் இருக்கும் அண்டத்தில் உள்ள அத்தனையும் 'ஒய்' க்ரோமொஸோம்'' என்று கூறியிருக்கிருர். ஆனுல் அதே மஞ்சரியில், 'உடலுக்குள்ளே' என்ற புத்தகப் பகுதியில் மாயவரம் எஸ். மகாலிங்கம் என்பவர் 84-ஆம் பக்கத்தில், இரண்டாவது பிரிவு மூன்ருவது பத்தியில், 'தாயின் உடலில் உள்ள ஓவம் (Ovum) என்ற அண்டத்தில் எக்ஸ் (X) என்ற கணுக்கோல் இருக்கிறது'' என்று கூறியுள்ளார். இவை இரண்டிலும் எது சரி? ஏன்?

விடை: புரொபஸர் பீட்டர் எழுதிய கட்டுரையில் நண்பர் குறிப்பிட்ட இடத்தில் 'ஒய்' (Y) என்ற எழுத்து அச்சுப்பிழையால் வந்திருக்க வேண்டுமென்று பின் வரும் விவரங்களைப் படிக்கும் போது தெரிய வருகிறது. பேராசிரியர் எழுதியுள்ளதில் தவறு ஏற்பட்டிராது. பெண் என்று குறிப்பது 'X X' க்ரோமொஸோமே. ஆண் என்று குறிப்பது 'XY' க்ரோமொஸோம் ஆகும். பூர்த்தியாகாத பெண்ணே ஆண் என்று பேராசிரியர் பீட்டர் சொல்வது தான் உண்மை. பெண்ணின் தாய்மையால் ஆணுக்கு உடலில் அதிகாரம் கிடைத்திருக்கிறது என்பதை மறக்கலாகாது.

கே-2: வயது 27; மணமாகவில்லை. உயரம் 5 அடி 2 அங்குலம்; எடை 104 பவுண்டு. வயதுக்குத் தகுந்த உடல்நிலை இல்லை. என் உடல் எப்பொழுதும் அதிக உஷ்ணமாகவே இருக்கிறது. கண் எரிச்சலும் இருக்கிறது. இரவில் படுத்து எழுந்தால் தரை தணலாகத் தகிக்கிறது. இதைத் தணிப்பதற்கு மீன் எண்ணெய், முட்டை, பால், விளக்கெண்ணெய் யாவும் தனித்தனியே சாப்பிட்டு விட்டேன். ஆனுல் பலன் தான் இல்லை. உடல் உஷ்ணத்தைப் போக்கிக் குணம் காண வழி சொல்லும்படி கேட்டுக்கொள்கிறேன்.

வி: உடல் உஷ்ணமாயிருக்கிறது என்று சொல்வதற்கு எவ்வளவோ கருத்து இருக்கிறது. உடலில் உஷ்ணம் உண்டாகிக்கொண்டேதான் இருக்கும். எனினும், உஷ்ணமானியைக் கொண்டு பார்த்தால் பாரன்ஹீட் 98.6 டிகிரிக்கு மேல் இராது. படுத்து எழுந்த இடத்தில், வாலிபராக இருந்தால் உஷ்ணம் அதிகம் தோன்றும். ஆக்கம் குறைவு என்ற நிகழ்ச்சி இருதரப்பிலும் நடைபெற்றுக் கொண்டுதான் இருக்கிறது. வாலி

பர்கள் விஷயத்திலும் குழந்தைகள் விஷயத்திலும் ஆக்குதல் அதிகம்; ஆகவே, இவர்களுடைய உடம்பில் மொத்த உஷ்ணம் அதிகமாகவே இருக்கும். இந்த உஷ்ணம் வெளியாகாமல் உள்ளடங்கிவிட்டால் உஷ்ணமானி இதைக் காட்டிவிடும். இது நோயின் குறியாகும். ஆனால் இந்த உஷ்ணம் அவ்வப்போது வெளியாகிக்கொண்டே இருந்துவிட்டால் உஷ்ணமானி அதிக உஷ்ணத்தைக் காட்டாது. இதனால் நோயும் உண்டாகவில்லை என்று அறிந்துகொள்ளலாம்.

நல்லம்மாள், கொழுமம்.

கே: மணமாகி மூன்று வருஷ காலம் ஆகிறது. அதற்கு முன்னாலிருந்தே என் இடது கையில்



குடைச்சல் எடுப்பதுண்டு. நாள் செல்லச் செல்லத் தோள்பட்டையிலும் குடைச்சல் எடுக்கத் தொடங்கியிருக்கிறது. குடும்பத்தில் அதிகம் வேலை இல்லாதவள்.. ஏதாவது ஒரு நாள் கைக்கு வேலை கொடுத்தால், அதாவது மாவு அரைத்தால், அன்று இரவு குடைச்சல் அதிகம்; தூக்கம் வருவதில்லை.

வி: எலும்புகளால் நரம்பு ஒருவேளை அழுத்தப்பெற்று இப்படிக் குடைச்சல் ஏற்படலாம். இதை அறியச் சோதனைகள் பல செய்தாக வேண்டும். காரணம் தெரிந்து தக்க சிகிச்சை செய்துகொள்ள வேண்டும். வேறு விதமான வைத்தியம் பலிக்குமென்று சொல்வதற்கில்லை.

ராஜு பெர்னாண்டோ, சண்டிகட் (பஞ்சாப்).

கே: நண்பர் ஒருவருக்கு விரை வீக்கம். ஆபரேஷன் செய்துகொள்ளும்படி சொல்கிறார் டாக்டர். இதனால் ஏதாவது தொல்லை உண்டா? உறவினர்கள் திருநெல்வேலி ஜில்லாவில் இருப்பதால் ஊருக்குச் சென்று செய்துகொள்வது நலமா?

வி: விரைவாதம் எவ்விதமானது? உடல்நலம் நண்பருக்கு எப்படி இருக்கிறது? நண்பர் அங்கே ஆபரேஷன் செய்துகொள்ளப் பயப்படுகிறாரா?-இந்த விஷயங்களையும் அங்கிருக்கும் வைத்திய வசதியையும் ஆராய்ந்து தக்கபடி செய்ய வேண்டும். உறவினர்கள் அருகில் இருக்க வேண்டுமானால் சென்னைப் பக்கம் வந்து ஆபரேஷன் செய்துகொள்வதுதான் சரி என்று நான் சொல்வேன்.

அழகரசு, மன்னார்குடி.

கே: வாழ்நாள் முழுதும் கல்யாணம் ஆகாமல் இருந்தால் அறுபது வயதுக்குப்பின் சந்ததி உற்பத்தி செய்யும் தன்மையை இழந்துவிடுவார்களா?

வி: இந்த வினாவில் குறிக்கும் நபர் ஆண்தான் என்று சொல்லவில்லை; எனினும், அப்படியே ஏற்றுக்கொள்ள வேண்டியிருக்கிறது. அறுபது வயதுவரையில் கல்யாணம் செய்துகொள்ளாமல் இருந்து, பின்பு கல்யாணம் செய்துகொண்டு சந்ததி உற்பத்தி செய்த ஒருவரைப் பற்றி எனக்குத் தெரியும்; அவர் ஆணே.

கே.வி. முனிரத்தினம், வந்தவாசி.

கே: நான் 4 அடி 10 அங்குலம் உயரம். 104 பவுண்டு எடை. சதை அதிகம். இது கேடயச் சுரப்புச் சரிவர இல்லாததன் விளைவு என்கிறார்கள். தைராயிட் மாத்திரை சாப்பிடுவதால் பயன் ஏற்படுமா? என் வாழ்க்கையைச் செப்பனிடுங்கள். என் மனம் அமைதியற்றிருக்கிறது.

வி: இந்த உயரத்துக்கு எடை அப்படி ஒன்றும் அதிகமில்லை. உடல் பயிற்சிக்கும் விளையாட்டுக்கும் விருப்பமும் வசதியும் இருந்தால் அவற்றில் ஈடுபட்டுச்

சதையை உறுதிப்படுத்திக்கொள்ள லாம். உணவில் சர்க்கரையையும் நெய்யையும் அரிசியையும் சற்றுக் குறைத்துக்கொள்ளலாம். கடிதத்திலிருந்து நான் தெரிந்து கொள்வது நண்பர் முனிரத்தினம் புத்திக் கூர்மை உள்ளவர் என்பது. இதனால் தைராயிட் குறைக்கு வசமாகாதவர் என்றும் தெரிகிறது: தைராயிட் உட்கொள்வதால் கேடு நேரும்.

கே. எஸ். வெங்கடேசன், போதக்குடி:

கே: எனக்கும் எங்கள் ஊரிலுள்ள சிறு குழந்தைகளுக்கும் சீதமும் ரத்தமுமாக மலம் கழிகிறது. இதற்குப் பரிகாரம் வேண்டும்.

வி: சென்ற ஆகஸ்ட் முதல் இன்றுவரை ஈ உபத்திரவம் அதிகமாக இருப்பதால், பிற குடல் நோய்களோடு சீதபேதிக்கும் கொண்டாட்டம். நம் வீடுகளைச் சூழ்ந்து குப்பைகளைக் குவிக்கிறோம்.

குழந்தைகள் தெருவிலேயே மலம் கழிப்பார்கள்; ஈ உற்பத்திக்கு இவையெல்லாம் மிகவும் வசதியாக இருக்கின்றன. ஈ செழித்தால் சீதபேதியும் செழிக்கும். இந்தக் காலத்தில் சல்பானமைட் மருந்துகள் இருப்பதால் சீதபேதியை விரைவில் குணப்படுத்திக் கொள்ளலாம். உணவு விஷயத்தில் பத்தியம் வேண்டும். ஜவ்வரிசிக் கஞ்சி குடல் புண்ணை ஆற்றும். மருந்துக்கு வைத்தியரைக் கேட்க வேண்டும்.

பி. வேலு, திருச்சி.

கே: என் நண்பருடைய மனைவிக்குக் கர்ப்பம் ஏற்பட்டால் 2, 3 மாதங்களில் அழிந்துவிடுகிறது; காரணம் என்ன?

வி: கர்ப்பம் கலைவது சாதாரணமாய் 3, 4-ஆம் மாதந்தான். இது கருப்பையின் கோளாறு காரணமாக இருக்கலாம். உடலில் சில வைட்டமின் சத்துக் குறையாலே இருக்கலாம்; ரத்தத்தில் கேடு ஏற்பட்டு அதனாலேயும் இருக்கலாம்; கருப்பை மிகவும் பின் நோக்கித் திரும்பியிருக்கலாம். பெண் வைத்திய நிபுணர் இதைத் திருத்த உபாயம் கூறுவார். வைட்டமின் சத்துக்கள் எப்படி இருக்கலாம் என்று டாக்டரே நேரில் கண்டு ஆராய்வதுதான் சரியான வைத்தியமாகும்.

எம். பாலன்.

கே: என் 14 வயதுத் தம்பிக்கு மலத்தில் ஓர் அங்குல நீளமுள்ள கிருமி விழுந்துகொண் டிருக்கிறது. மூன்று வருஷ காலமாய் இப்படி விழுகிறது: மலம் கழிக்கும்போது இவை நாலு, ஐந்து வரும்.

வி: இந்தக் கிருமிகள் மலத்தில் தோன்றுவது குடலிலிருந்தே வந்தவையா? வெகு நேரத்துக்குப் பிறகு பார்த்தவையா? வெகு நேரத்துக்குப் பிறகு பார்த்திருந்தால் குடலிலிருந்து வந்திருக்க முடியாது; வெளியிலிருந்து பூச்சி முட்டை வந்து சேர்ந்து கிருமியாக வளர்ந்திருக்கலாம். குடலுக்குள்ளேயிருந்து வந்தது நிச்சயமானால் 'டேப் வர்ம்' என்னும் நாடாப் பூச்சி வகையாக இருக்கும். இந்த ஒரு கிருமிதான் வெகு நாள் துண்டு துண்டாக ஓர் அங்குல நீளமாய்க் குடலிலிருந்தே வந்து கொண் டிருக்கும். வைத்தியரிடம் கிருமியைக் காட்டித் தக்க பரிகாரம் தேடிக்கொள்ளலாம்.

எக்ஸ்.

கே: எலி கடித்து ஒரு வாரம் ஆகிறது. அதனால் ஏதாவது தீங்கு நேருமா?

வி: எலி கடித்து ஒரு வாரம் ஆகிவிட்டதால் அதற்கு இப்பொழுது பரிகாரம் தேடவேண்டாம். கடித்த

இடத்தில் இன்னும் சில நாளைக்குள் தடிப்பும், அருகில் நெரியும், ஜுரமும் ஏற்பட்டால் சிகிச்சை தேட வேண்டும்.

கே. வி. சங்கன், புத்தூர்.

கே: பஸ்ஸில் போகும்போது தலைப்பாரம் ஏற்படுகிறது. இப்படிப் பத்து மைல் தூரம் போனதும் வாந்தி வருகிறது. பஸ்ஸில் உள்ளவர்களுக்கும் மற்ற நண்பர்களுக்கும் இது பிடிப்பதில்லை. தயை செய்து பரிகாரம் கூறும்படி கேட்டுக்கொள்கிறேன்.

வி: கப்பல் யாத்திரை செய்கிறவர்கள் பலர் இந்த வகை நோய்க்கு ஆளாவார்கள். தலைப்பாரம், தலை சுற்றல், அடக்க முடியாத வாந்தி இவை தோன்றும். ஆகாரமே ஏற்காமல் மயக்கங்கூட ஏற்படலாம். ஆனால் யாத்திரை முடிந்தாலும் சரி, கடலில் அலை குறைந்தாலும் சரி, உடம்பு சீர்பட்டுவிடும்.

காதின் உட்புறம் 'லேபிரிந்து' என்ற ஓர் உறுப்பு இருக்கிறது. திசையுணர்ச்சிகளை அநுசரித்து நம்மை நிலையாக நிறுத்துவது இந்த உறுப்பே. கப்பல் யாத்திரை செய்யும்போது இந்த உறுப்பு உறுதியாக இல்லாவிட்டால் தலை சுற்றல் ஏற்படும். இதற்குப் பரிகாரங்கள் எவ்வளவோ சொல்வார்கள். ஆனால் எப்பொழுதும் பரிகாரம் பலிப்பதில்லை. பஸ்ஸில் ஒரு மைல் இரண்டு மைலுக்கு அதிகம் போகாமல் இருப்பதே இந்த நோயைத் தவிர்க்கும் உபாயம். அப்படியே போகவேண்டியிருந்தாலும் இடையிடையே இறங்கி ஓய்வெடுத்துக்கொள்வது நலம்.

எல்லாருக்கும் தொண்டு

ஒரு வேலியிலே நோட்டீஸ் போர்டு இருந்தது. அதிலே ஒவ்வொருவராக வந்து இப்படி எழுதினார்கள்:

பாதிரி: நான் எல்லாருக்குமாகப் பிரார்த்திக்கிறேன்.

லாயர்: நான் எல்லாருக்குமாக வாதிக்கிறேன்.

டாக்டர்: நான் எல்லாருக்கும் மருந்து கொடுக்கிறேன்.

சாதாரண மனிதன்: நான் எல்லாருக்கும் பணம் செலுத்துகிறேன்.

தண்டல்காரன்: நான் எல்லாரிடமும் வசூல் செய்கிறேன்.

—'அமெரிக்கன் மெர்க்யுரி'

கனவிலே வந்த அரசகுமாரன்

இளம் பெண் ஒருத்தி கனவு கண்டாள். குதிரைமீது சவாரி செய்துகொண்டு ஓர் அரசகுமாரன் வந்தான். அவளை அலாக்காகத் தூக்கித் தன் பக்கத்தில் வைத்துக்கொண்டான். குதிரையைத் தட்டிவிட்டான்.

பெண் பயந்து போய், ''ஐயோ! என்னை எங்கே தூக்கிச் செல்கிறீர்கள்?'' என்று கேட்டாள்.

''அதை நீதான் சொல்லவேண்டும். கனவு உன்னுடையதில்லையா?'' என்றான் அரசகுமாரன்.

—'தி எக்ஸ் - சேஞ்சு'

ஆப்பிரிக்கர் வழிபாடு

இ. ஜி. பாரிண்டர்

ரெவரண்ட் இ. ஜி. பாரிண்டர் ஆப்பிரிக்காவில் பல வருஷங்களாகப் பணி புரிந்து வருகிறவர். சமீபத்தில் இந்தியாவுக்கு வந்து, பல வகுப்பு மத குருக்களையும் சந்தித்தார். இது கல்கத்தா ராமகிருஷ்ணா இன்ஸ்டிட்யூட்டில் ஜனவரி 19-ஆம் தேதி அவர் இப்படிச் சந்தித்துச் செய்த ஒரு பிரசங்கத்தின் சாரம்.

ஆப்பிரிக்க உஷ்ணப் பிரதேசத்தில் வாழும் மக்களின் மத நம்பிக்கைகளைப்பற்றி வெகு காலமாக யாருமே அக்கறை எடுத்துக் கொள்ளவில்லை; புரிந்து கொண்டதாகவோ ஆராய்ச்சி செய்ததாகவோகூடத் தெரியவில்லை. இந்த நூற்றாண்டில்தான் ஆராய்ச்சியாளர் சிலர் இதைப் பற்றித் தீவிரமாகக் கவனிக்கலானார்கள். இருந்தாலும் மொத்தத்தில் ஆப்பிரிக்கர்களை 'மதத்தில் பெரும் பித்து உள்ளவர்கள்' என்று சொல்வதுதான் சரி. ஆப்பிரிக்காவைப்பற்றி அறிய வேண்டும் என்று வர வர எல்லாருக்கும் ஆவல் மிகுதியாகி வருகிறது. ஆப்பிரிக்கர்களின் வாழ்விலேயே முக்கியமாக விளங்கும் மத நம்பிக்கைகளைப்பற்றி அறிந்து கொள்ள வேண்டியது மிகவும் அவசியம்.

முன்னெல்லாம் ஆப்பிரிக்கர்களையே ஏதோ மட்டமானவர்கள் என்று கருதி வந்தார்கள். 'அவர்கள் பழமையான கொள்கைகளைக் கடைப்பிடிப்பவர்கள். கல், மண் போன்ற ஜடப் பொருள்களை வழிபடுபவர்கள். அவைகளுக்குக்கூட உயிர் இருப்பதாக நம்புபவர்கள்' என்றெல்லாம் பிறர் அவர்களை வெறுத்து ஒதுக்கி வந்தார்கள். காடுகளிலும் பாலை நிலங்களிலும் ஆப்பிரிக்க மக்கள் சிரமப்பட்டு வாழ்கிறார்கள், அதுவும் எளிய வாழ்வு வாழ்கிறார்கள் என்பதால், அவர்கள் கொள்கைகள் வெறும் பண்டைக் கோட்பாடுகள் என்று சொல்லிவிடுவதற்கில்லை. அவர்களுடைய சில மதக் கொள்கைகள் மிகவும் சூட்சுமமானவை; எளிதில் ஆராய்ந்தறிய இயலாத தத்துவம் அடங்கியவை. சகாரா பாலைவனத்துக்குத் தெற்கேயுள்ள உஷ்ணப் பிரதேசத்தில் பழங்கோயில்களோ புனித நூல்களோ முன் காலத்தில் இல்லை. சென்ற நூற்றாண்டில் ஐரோப்பியர் வந்து குடியேறும் வரையில் அங்கிருந்த மக்களுக்கு எழுத்தென்றாலே இன்னதென்று தெரியாது. கல்கட்டிடம் எப்படி இருக்கும் என்றும் தெரியாது. இவைகளைப்பற்றிய பழந்தகவல்களும் அத்தாட்சிகளும் அபூர்வமே. இருந்தாலும், இவர்களின் மதநம்பிக்கைகள் தெளிவாக இருக்கின்றன; ஆப்பிரிக்காவின் பிற பகுதிகளில் வாழும் மற்றப் பழங்குடிகளின் மதக் கொள்கைகளும் இவர்களுடைய கோட்பாடுகளும் ஒத்திருக்கின்றன.

மொத்தத்தில் ஆப்பிரிக்க மக்களின் மத நம்பிக்கைகளை நாலு வகையாகப் பிரிக்கலாம்: (1) பரம்பொருள் ஒன்று உண்டு என்று நம்புவது; (2) இயற்கைப் பொருள்களை உப தேவதைகளாகக் கருதுவது; (3) பிதுருக்கள் இருப்பதில்

புல்லட்டின் அவ் தி ராமகிருஷ்ணா மிஷன் இன்ஸ்டிட்யூட் அவ் கல்ச்சர் (ஆங்கிலம்: ஜூன் '57), 111, ரஸ்ஸா ரோடு, கல்கத்தா-26.

நம்பிக்கை; (4) மந்திரம், மாயம், பில்லி, ஏவல், சூனியம் இவைகளில் நம்பிக்கை. ஆகவே, ஆப்பிரிக்க வாசிகள் எல்லாரும் ஒரு பரம் பொருள் இருப்பதை நம்புகிருர்கள் என்று தெளிவாகத் தெரிகிறது. 'எல்லாவற்றையும் படைத்தவர் அவரே. மக்கள், தேவர் எல்லாருக்குமே அவர் தந்தை' என்றும் கருதுகிருர்கள். அந்தக் கடவுளை வழிபடும் விதத்தில் வேறுபாடுகள் இருக்கின்றன. சில பழங்குடிகள் - உதாரணமாக, கானுவில் வாழும் அஷாந்திகளும் கென்யாவிலுள்ள கிகியூக்களும் - முறையாகக் கடவுளை வழிபடுகிருர்கள்; கோயில்களும் பூஜாரிகளும் அங்கே உண்டு. வேறு பல பகுதிகளில் கோயிலோ பூஜாரியோ இராவிட்டாலும் மக்கள் தெய்வ வழிபாடு செய்துகொண்டுதான் வருகிருர்கள்.

ஆப்பிரிக்க மக்கள் தங்கள் பழைய வீரர்களையும் இயற்கைச் சக்திகளையும் ஜடப்பொருள்களையும் தெய்வங்களாக வழிபடுகிருர்கள். மேற்கு ஆப்பிரிக்காவில் இந்தத் தெய்வங்களுக்குக் கணக்கற்ற கோயில்களும் பூஜாரிகளும் உண்டு. நைஜீரியாவிலுள்ள யரூஹா என்ற இனத்தார் 601 தெய்வங்கள் இருப்பதாக நம்புகிருர்கள். இவைகளில் பெரும்பான்மை இயற்கையில் தோன்றியவை: இடி, பூமி, மலை, மரம், கல், ஆறு, கடல் வைசூரி இவை போன்றவைதான். இவைகளில் சில ஆதி காலத்தில் வீரர்களாக விளங்கியதாக ஐதிகம். இடித் தெய்வமான ஷங்கோ ஆதியில் நைஜீரியாவிலுள்ள ஓயோ பகுதியின் அரசனுக இருந்ததாகச் சொல்கிருர்கள். குறி சொல்லும் என்று பிரசித்தி பெற்ற ஐஃபா என்ற தெய்வம், ஆதி காலத்தில் பூமிக்கடியில் நீரும் உலோகங்களும் இன்ன இடத்தில் கிடைக்கும் என்று ஒரு விதமாகக் கண்டு பிடித்து ஆரூடம்போல் சொல்லும் எவரோ ஒரு மேதையாகத்தான் இருந்திருக்கவேண்டும். பின்னுல் அவரைத் தெய்வமாகக் கொண்டாடத் தொடங்கியிருக்கிருர்கள். இந்த மாதிரி தெய்வங்களுக்குக் கோயில்கள், முறையான பூஜை, மிருக பலி எல்லாம் உண்டு.

ஆப்பிரிக்க மக்கள் பிதுருக்கள் அல்லது இறந்த மூதாதையர்களிடம் பக்தி சிரத்தை செலுத்துகிருர்கள். இந்த மூதாதையர்கள் பூலோகத்தில் உள்ள தங்கள் குடும்பங்களையும் இங்கே நடப்பவற்றையும் எங்கிருந்தோ சாட்சிபூதமாக இருந்து கவனிப்பதாக அவர்கள் நம்புகிருர்கள். குடும்பத்தில் விவாகம், சொத்து விற்பனை இப்படி ஏதாவது விசேஷம் நிகழும்போது மூதாதையர்களான பிதுருக்களை வழிபட்டுக் குறி கேட்பார்கள். இறந்தவர்கள் எங்கே பேயாகித் தங்களுக்குத் தொல்லை கொடுப்பார்களோ என்று அஞ்சி, சவச் சடங்குகளுக்காக ஏராளமாய்ச் செலவு செய்கிருர்கள் இந்த மக்கள்.

மந்திரம், மாயம், பில்லி, ஏவல், சூனியம் இவைகளையும் ஆப்பிரிக்கர்கள் நம்புகிருர்கள். நோய், நொடி, துன்பம் இவை நேராதபடி காத்துக்கொள்ள ரட்சா மந்திரம் ஜபித்து, பரிகாரமாகச் சில சடங்குகளைச் செய்கிருர்கள். பல பேர் இந்த மாதிரி அதிருஷ்ட கவசங்களும், மோதிரம், வளையல், வங்கி முதலியவைகளும் அணிந்துகொள்கிருர்கள். பாம்புக்கடி, சூனியம், கண் திருஷ்டி இவை நேராமல் காத்துக்கொள்வதற் கென்றே தயாரித்த ரட்சைகள் இவை. பில்லி ஏவல், சூனியம் இவைகளைப் பொதுவாக எல்லாருமே இங்கே நம்புகிருர்கள். 'சூனியக்காரிகள் இரவு நேரங்களில் யார் கண்ணுக்கும் தெரியாமல் திரிந்து ரத்தத்தை உறிஞ்சுவார்கள்; மக்களுடைய பலம் குன்றிப் போகும்படி செய்வார்கள். ஆகவே நோய், நொடியினுல் மக்கள் மடிந்துவிடுகிருர்கள்' என்று ஆப்பிரிக்க மக்கள் உள்ளூற நம்புகிருர்கள்.

இன்னும் இந்த மாதிரி நம்பிக்கைகளில் மிகவும் முக்கியமானது மறு பிறவிதான். ஐரோப்பியர்களுக்கு இதில் நம்பிக்கை இராவிட்டாலும் பெரும்பாலான ஆசியாக்காரர்கள் மறு பிறவி உண்டு என்று உறுதியாக நம்பு

கிறார்கள். இந்த விஷயத்தில் ஆசியாக்காரர்களைப் போலவே தான் ஆப்பிரிக்கர்களும். இறந்து போன மூதாதை அதே குடும்பத்தில் மறுபடியும் குழந்தையாகப் பிறப்பதாக அவர்கள் கருதுகிறார்கள். கர்ப்பந் தரிக்காதபடி செய்துவிடுவார்கள் என்றுதான் சூனியக்காரிகளைக் கண்டால் அஞ்சுகிறார்கள் இந்த மக்கள். ஆசிய நாட்டினரைப் போலவே மறு பிறவி உண்டு என்று நம்பினாலும், இவர்கள் கொள்கைக்கும் ஆசியர்களின் கொள்கைக்கும் முக்கியமான சில வித்தியாசங்கள் உண்டு. இந்தியருடைய கருத்துக்கும் இவர்கள் கருத்துக்கும் சம்பந்தம் இல்லை; இது தனியாக வளர்ந்தது என்றுதான் சொல்ல வேண்டும். ஆப்பிரிக்க மக்கள் மறு பிறவியை நல்லது என்றே கருதுகிறார்கள். இறந்தவன் பிறந்தே தீரவேண்டும், உலகத்தை விட்டு மீளவே முடியாது என்று உறுதியாக நம்புகிறார்கள். இருண்டு சில்லிட்ட மரண நிலையிலிருந்து வெயில் ஒளி வீசும் இந்தப் பூலோகத்தில் பிறப்பது எவ்வளவு நல்லது என்பதுதான் இவர்கள் எண்ணம்.

இன்னும் ஒன்று: உலக வாழ்வை விடச் சிறந்ததோ உயர்வானதோ வேறு எதுவும் இருப்பதாக இவர்கள் எண்ணவில்லை. ஆண்டவன் தீர்ப்புக் கூறுவான் என்றுதான் அநேகம் ஆப்பிரிக்கர்கள் நம்புகிறார்கள். பிளாட்டோ என்ற கிரேக்கத் தத்துவஞானி சொல்வதைப்போல், இந்தத் தீர்ப்புக்குப் பின்னால்தான் மறு பிறவி உண்டாகிறது என்றும் இவர்கள் எண்ணுகிறார்கள். மனிதர்கள் தாங்கள் செய்த பாவச் செயல்களால் விலங்குகளாகப் பிறப்பார்கள் என்பதை இவர்கள் நம்புவதில்லை. சூனியக்காரிகளும் மந்திரவாதிகளும் பூமியில் வாழும்போதே அப்படி விலங்குகளாக மாறுவார்கள் என்ற நம்பிக்கை மட்டும் இங்கே உண்டு. ஆனாலும், அவர்கள்கூடச் செத்த பின் விலங்காகப் பிறப்பார்கள் என்பதை இந்த மக்கள் ஏற்கவில்லை.

குடும்பம் வலுத்தும், வீரியம் குன்றாமலும் இருக்கவேண்டும் என்பதைத்தான் அவர்கள் முக்கியமாகக் கவனிக்கிறார்கள். மறு பிறவி உண்டு என்று அவர்கள் நம்புவதால் இந்த விஷயத்தில் அவர்களுக்கு ஊக்கம் மிகுதியாக ஏற்படுகிறது. ஆருடம் சொல்லுகிறவன், ஒரு குழந்தை பிறந்ததும் அதன் தாத்தாதான் இப்படி இந்தப் பிறவியில் பேரனைப் பிறந்திருப்பதாகச் சொல்வான். இந்த மாதிரி குழந்தையைப் 'பாபா துண்டே', அதாவது 'திரும்பி வந்த தாத்தா' என்று அவன் குறிப்பிடுவது வழக்கம்.

ஆப்பிரிக்க மக்களின் வாழ்க்கைத் தத்துவம் வீரியமும் வலிமையுந்தான். உலகம் மாயை என்று சொல்லும் வேதாந்திகளின் கொள்கைக்கு மாறான தத்துவம் இது. உலகம், வாழ்வு எல்லாம் உண்மை என்பதுதான் இவர்கள் கொள்கை. மீண்டும் மீண்டும் உயிர் வாழ வகை செய்வது, குடும்பம் வலுக்கச் சந்ததியைப் பெருக்குவது இவைதான் இவர்களுடைய அடிப்படை லட்சியங்கள்; நோய், வறுமை, அடிமைத்தனம் இப்படிப் பல இன்னல்களையும் மீறி ஆப்பிரிக்க மக்கள் வாழப் பேருக்கம் தருபவை இந்த லட்சியங்களே.

இப்போது புதிய மதக் கொள்கை, பொருளாதாரம் இவை காரணமாக ஆப்பிரிக்காவில் பெரிய மாறுதல் ஏற்பட்டிருக்கிறது. ஆப்பிரிக்க மக்களுக்கென்று தனியாகப் பூர்விக சரித்திரம், சமய நூல் ஏதும் இராததால் ஆசியாவைவிட மேற்கத்தி நாகரிகம் இங்கே அதிகமாகப் படிந்துவிட்டது. ஆப்பிரிக்காவில் அரசியல், பொருளாதாரம், கல்வி இந்தத் துறைகளில் மேற்கத்திப் பண்பும் சமயத்துறையில் இஸ்லாமும், கிறிஸ்துவமும் ஓங்கி யிருக்கின்றன. கிறிஸ்துவ மதத்தைச் சேர்ந்த ஆப்பிரிக்கர்கள் சுமார் 2 கோடி பேர் என்று கணக்கிட்டிருக்கிறார்கள்; அதாவது, ஆசியாவில் இருக்கும் கிறிஸ்துவர்களின் தொகையை விட இங்கே இருக்கும் கிறிஸ்துவர்களின் தொகை அதிகம். இங்கே

லட்சக்கணக்கான பேர் இஸ்லாமியர்கள்.

மொத்தத்தில் பார்த்தால் இந்த இரண்டு மதங்களும் பரவிவிட்டதால் பழைய நம்பிக்கைகளுக்கு இடம் இல்லை என்றுதான் தோன்றும். ஆனால் ஆப்பிரிக்க நகரங்களிலும் கிராமங்களிலும் இன்னும் அநேகம் பேர் பழைய மதக் கோட்பாடுகளையே கடைப்பிடித்து வருகிறார்கள். இறந்த மூதாதையர்கள் பிதுருக்களாக இருந்து மக்களைக் கவனித்து வருவதாக இன்னும் மக்கள் நம்பித்தான் வருகிறார்கள்.

கிறிஸ்துவர்களாகவும் முஸ்லிம்களாகவும் மாறி இந்தக் காலத்துச் சூழ்நிலையில் பழகியும், இன்னும் பழைய நம்பிக்கைகள் போகவில்லை என்றால் பாருங்கள்! சூனியம், ஏவல் இவைகளையெல்லாம் இன்னும் ஆப்பிரிக்கர்கள் பலர் நம்புகிறார்கள்; பரீட்சையில் தேறாதிருப்பதற்கும் ஆபீஸில் உத்தியோக உயர்வு இல்லாததற்கும் இவைதான் காரணம் என்று குறை கூறுகிறார்கள். பரம்பொருள் ஒன்றே என்ற கருத்து இஸ்லாம், கிறிஸ்துவம் இரண்டிலும் உண்டு. அதோடு ஆப்பிரிக்கர்கள் சொல்வது போல் தாயாகவும் தந்தையாகவும் அந்தப் பரம்பொருள் திகழ்கிறது என்று கொள்வது பின்னும் சிறப்புத்தானே?

இன்னுங்கூட ஆப்பிரிக்கர்களுக்கு மதக்கோட்பாடுகளில் உள்ளூறப் பற்றுதல் உண்டு: அவர்களோடு பழகும்போது இதை உணர்ந்து செயலாற்றுவது அவசியம்.

இதே காரணந்தான்

ஸ்டாலின் செய்த அக்கிரமங்களை க்ருஷேவ் அடுக்கிக் கொண்டிருந்தார். அப்போது யாரோ ஒருவர், ''அந்த அக்கிரமங்களெல்லாம் நடக்கும்போது, நீங்கள் என்ன செய்துகொண்டிருந்தீர்கள்?'' என்று ஒரு சீட்டெழுதி அனுப்பினார்.

க்ருஷேவ் அசட்டையாக, ''இந்தச் சீட்டை எழுதியவர் யார்? அவர் எழுந்து பேசலாம்'' என்று கூறினார்.

எவரும் எழுந்திருக்கவில்லை. ஒரே மௌனம்.

க்ருஷேவ் பெரிய புன்சிரிப்புடன், ''இதேதான் காரணம், நான் வாய் திறவாமல் மௌனம் சாதித்ததற்கும்'' என்றார்.

—சுதாகர் ராஜி, 'ஸ்வதந்த்ரா.'

அம்மாவைப் போல—

மனைவி செய்வது எதுவும் அவனுக்குப் பிடிக்கவில்லை. அம்மாவைப் போல் சமைக்கவில்லை; அம்மாவைப்போல் தட்டை அலம்புவதில்லை; அம்மாவைப் போல் ஸ்டாக்கிங் போட்டு விடுவதில்லை: இப்படியெல்லாம் அடுக்கி அடுக்கி மனைவியைத் திட்டுவான்.

அவளும் பொறுத்துப் பொறுத்துப் பார்த்தாள். சகிக்க முடியாமல் போய்விட்டது. ஒரு நாள் அவன் இப்படி அடுக்கித் திட்டியபோது, விடு விடு என்று அவனுக்கு அருகே வந்தாள். ''அம்மா மாதிரி ஒன்று மட்டும் செய்ய எனக்குத் தெரியும்'' என்று சொல்லி, சட்டென்று அவன் காதைப் பிடித்து ஒரு திருகு திருகிவிட்டாள்.

—'டீ டேபிள் காஸிப்'

பாஞ்சாலி திருமணம்

★

ஏகசக்கர நகரத்திலிருந்து பாண்டவர் துருபத நகரத்துக்குப் பாஞ்சாலியின் சுயம்வரத்துக்காகப் போய்க்கொண் டிருந்தார்கள். வழியில் அங்கார வர்ணன் என்ற கந்தர்வனைக் கண்டார்கள்: அவனுடைய யோசனையின் பேரில் உத்கச தீர்த்தத்தில் வாழ்ந்திருந்த தௌம்ய முனிவரைத் தமக்குப் புரோகிதராக ஏற்றுக்கொண்டார்கள். பாண்டவர் முனிவருடனும் குந்தியுடனும் துருபத நகரத்தை நோக்கிச் சென்றார்கள்.

போகும் வழியில் வியாச முனிவரைக் கண்டு வணங்கி அவருடைய ஆசியைப் பாண்டவர்கள் பெற்றார்கள். வழியில் அழகிய காடுகளையும் குளங்களையும் பார்த்துக்கொண்டும் இனிமையாகப் பேசிக்கொண்டும் அவர்கள் மெதுவாகத் துருபத நகரை அடைந்தார்கள். அங்கே பாண்டவர்கள் துருபதனின் சேனையையும் நகரக் காட்சிகளையும் பார்த்தார்கள். பிறகு ஒரு மண் வினைஞனின் வீட்டில் தங்கினார்கள். பிக்ஷை எடுத்துக்கொண்டு பிராம்மணர்களைப் போல் காலங் கழிக்கலானார்கள். ஜடை தரித்துப் பிராம்மணர்களைப்போல் இருக்கும் அவர்களை மற்றவர்கள் அறிந்துகொள்ள முடியவில்லை.

பாஞ்சாலியை அர்ஜுனனுக்குக் கொடுக்க வேண்டும். மருமகனின் பலத்தால் பகைவரை வெல்லலாம் என்று துருபதன் எண்ணியிருந்தான். பாண்டவர்கள் இருக்கும் இடத்தைத் தேடிக்கொண்டும் இருந்தான். அதனால் பிறரால் நாண் ஏற்ற முடியாத பெரிய வில்லையும் ஆகாயத்தில் சுழலும் ஒரு யந்திரத்தையும் செய்வித்தான். ''இந்த வில்லை நாண் ஏற்றி மேலே இருக்கும் யந்திரத்தை அதன் துவாரம் வழியாக அடிப்பவனே என் மகளை மணம் செய்துகொள்வதற்கு உரியவன்''

ராமாயணத்தைப்போல் பிரசித்தமானது பாரதம். பாண்டவர், கௌரவர் வரலாற்றை மட்டும் அல்ல; கீதை மொழிந்த கண்ணனின் கருணைச் செயல்களையும் இதில் காணலாம்.

என்று பறைசாற்றினான். இதைக் கேட்டுப் பாண்டவர்கள் அங்கே வந்து சேர்ந்தார்கள். மகாத்மாக்களாகிய முனிவர்களும் சுயம்வரத்தைப் பார்க்க ஆவலுடன் அங்கே கூடியிருந்தார்கள். துரியோதனனை முன்னிட்டுக் கொண்டு கௌரவர்களும் கர்ணனும் வந்து சேர்ந்தார்கள். பல தேசங்களிலிருந்து பிராம்மணர்களும் அரசர்களும் அங்கு வந்துகொண்டே இருந்தார்கள். துருபதன் அனைவரையும் தக்கபடி வரவேற்று உபசரித்தான்.

பட்டணத்துக்கு வடக்கிருக்கும் திசையில் சமமான இடத்தில் சுயம்வர சபை கட்டியிருந்தது. அதன் நான்கு புறமும் வாத்தியங்கள் முழங்கின. அதன் நடுவே இருந்த தெருக்கள் முழுவதும் சந்தன நீர் தெளித்திருந்தது; தோரணங்கள் அமைந்து விசேஷமாக ஒளிர்ந்தன. ஆகாயத்தை அளாவிக் கைலாசம் போல் துலங்கும் வீடுகளும், அவற்றில் ரத்தினம் இழைத்துத் தங்கத்தால் கட்டிய விசாலமான மாடிப் படிகளும், உட்பக்கம் இருக்கும் விலை உயர்ந்த ஆசனங்களும் பார்ப்பவருக்கு மகிழ்ச்சியாயிருந்தன. வாயிலில் தோரணம், மேலே விதானம், எங்கும் பரவும் சிறந்த வாசனையுடன் கூடிய புகை இவை யாவும் பார்ப்பவரைப் பரவசமாக்கின. வாயில்களும் நடைப் பாதைகளும் நெருக்கம் ஏற்படாதபடி அமைத்தார்கள். அந்தச் சபையில் இருக்கும் அழகிய விமானங்களில் அரசர்கள் சிறந்த அலங்காரங்களுடன் ஒருவருக்கொருவர் போட்டியிடும் மனப்பான்மையில் உட்கார்ந்தார்கள். அங்கே அமர்ந்திருக்கும் ராஜசிங்கங்களை மக்கள் ஆச்சரியத்துடன் பார்த்து நின்றார்கள்.

அரசர்களின் சிம்மாசனங்களுக்கு அப்பால் கட்டியிருந்த வரிசையான விமானங்களில் பட்டணத்திலிருந்தும் நாட்டுப் புறத்திலிருந்

தும் வந்த மக்கள் பலர் திரௌபதியைப் பார்க்க ஆவலுடன் ஏறி உட்கார்ந்து கொண்டார்கள். பாண்டவர்களும் அந்தணர்களுக்கு நடுவிலே உட்கார்ந்துகொண்டார்கள்.

அப்பொழுது திரௌபதி குளித்துத் தூய உடை உடுத்து, அணிகள் அணிந்து வீரருக்கு அணிவிக்கும் மங்கள மாலையைக் கையில் ஏந்தி மேடையில் தோன்றினாள். துருபதனுடைய புரோகிதர் அக்கினியில் முறைப்படி ஹோமம் செய்தார். பிராம்மணர்களைக் கொண்டு ஆசீர்வாதம் செய்வித்தார். மங்கள வாத்தியங்கள் முழங்கச் செய்தார்.

பிறகு சபையில் நிச்சப்தம் நிலவியது; அப்போது திருஷ்டத்தியும்னன் கூறுவான்: "இதோ வில்; இதோ இலக்கு; இதோ பாணங்கள். க்ஷத்திரியர்களே, கேளுங்கள்: இந்தத் துவாரத்தின் வழியாக ஐந்து பாணங்களை விட்டு இலக்கை அடிக்க வேண்டும். இந்தக் காரியம் செய்பவனுக்கு என் சகோதரி மனைவியாவாள், இது சத்தியம்."

பிறகு அங்கே கூடியிருக்கும் ஒவ்வோர் அரசனுடைய பெயர், வம்சம் முதலியவற்றைத் திரௌபதிக்குக் கூறினான்.

துரியோதனன் முதல் சேதி தேசத்து மன்னர்கள் வரையில் உள்ள நூற்றுக்கணக்கான அரசர்களின் பெயரைக் கூறினான். "உலகத்தில் புகழ் பெற்ற இந்த அரசர்கள் உனக்காக இங்கு வந்திருக்கிறார்கள். இவர்கள் உனக்காக இந்த இலக்கை அடிக்க முயல்வார்கள். இலக்கை அடிப்பவரை நீ மணந்துகொள்" என்று திருஷ்டத்தியும்னன் திரௌபதியைப் பார்த்துச் சொன்னான்.

உடனே அரசர்கள் அனைவரும் தங்களிடம் அஸ்திரமும் பலமும் இருப்பதாகக் கருதி, கர்வத்துடன் மதங்கொண்ட யானை போல் எழுந்தார்கள். ஒருவருக்கொருவர் நண்பர்களாக இருந்தபோதிலும் பகைவரைப் போல் பார்த்துக் கொண்டார்கள். தேவர்கள் யட்சர்கள் கிம்புருஷர்கள் முதலியோர் ஆகாயத்தில் கூடியிருந்தார்கள். விருஷ்ணி, அந்தகர் இவர்களுடன் கிருஷ்ணரை முன்னிட்டுக்கொண்டு சுயம்வரத்தைப் பார்க்க பலராமர் வந்திருந்தார். சாம்பல் மூடிய நெருப்புப்போல் துலங்கும் பாண்டவர்களைப் பலராமருக்குக் காட்டினார் கிருஷ்ணர்.

அரசர்கள் அனைவரும் திரௌபதியைக் கண்டு காம வசமுற்றார்கள். அதே போல் பாண்டவர்களும் மன்மத பாணத்துக்கு இலக்கானார்கள். பிறகு அரசர்கள் ஒவ்வொருவராக வில்லை எடுக்க வந்தார்கள். ஒருவரால்கூட அதை எடுத்து நாண் ஏற்ற முடியவில்லை. சிரமப்பட்டு வில்லைத் தூக்க முயன்றபொழுது கீழே விழுந்து வில்லால் நசுக்குண்டார்கள். இப்படி அரசர்களில் பலர் கர்வம் இழந்து திரௌபதியின் மேல் வைத்த ஆசையைக் கைவிட்டார்கள். இப்படி மற்ற அரசர்களும் தோற்றுப் பேசாமல் இருந்தவுடன் சேதி மன்னனான சிசுபாலன் வில்லை எடுத்து நாண் ஏற்றினான். அப்பொழுது வில்லின் நுனி பட்டு அவன் வெகு தூரத்தில் போய் விழுந்தான். இதைக் கண்டு மற்ற அரசர்கள் பயந்தார்கள்.

பிறகு ஜராசந்தன் முன் வந்து வில்லைத் தூக்கி நாண் ஏற்றினான். அப்பொழுது வில்லின் பாரம் தாங்காமல் கைகளை ஊன்றிக் கொண்டு தரையில் விழுந்தான்: பிறகு மெதுவாக எழுந்து தன் நாட்டை நோக்கிச் சென்றான். இப்படியே சல்லியனும் முயன்று பார்த்து, சிசுபாலனை விடத் தொலைவில் போய் விழுந்தான். உடனே துரியோதனன் திரௌபதியிடம் ஆசை கொண்டு தம்பிகளுக்கு நடுவிலிருந்து எழுந்து வில்லைத் தூக்கி நாண் ஏற்றினான். அப்பொழுது வில் பட்டு மல்லாக்கத் தரையில் விழுந்தான். அதனால் வெட்கமுற்று அங்கிருந்து போய் விட்டான். பின்பு கர்ணன் வந்து வில்லைத் தூக்கினான். அவனாலும் குறியை அடிக்க முடியவில்லை. மூவுலகிலும் புகழ் பெற்ற கர்ணன் கூடத் தோல்வியுற்றுத் திரும்பிய

வுடன் மற்ற அரசர்கள் தலை குனிந்தவண்ணம் இருந்தார்கள். வில்லைத் தூக்கவோ திரௌபதியை மணக்கவோ அவர்கள் எண்ணவே இல்லை. சபையோர் அனைவரும் பரபரப்புற்றிருந்தார்கள்.

அப்பொழுது அந்தணருக்கு நடுவே இருந்த அர்ஜுனன் வில்லைத் தூக்கி நாண் ஏற்றிப் பாணத்தைத் தொடுக்க எண்ணி எழுந்தான். திரௌபதி பாண்டவர்களின் கைக்கு வந்து விட்டாள் என்றே கிருஷ்ணர் எண்ணிப் பலராமரோடு கைதட்டி மகிழ்ந்தார். பீஷ்மர், பலராமர், கிருஷ்ணர் இவர்களைத் தவிர மற்றவர்கள் பாண்டவர்களைத் தெரிந்துகொள்ள வில்லை.

மேடைக்கு அர்ஜுனன் வந்ததைப் பார்த்து அந்தணர்கள் அனைவரும் ஆரவாரம் செய்தார்கள்; மான் தோலை உயர வீசினார்கள். அந்தணர்களில் சிலர், "கர்ணனும் சல்லியனும் வளைக்க முடியாத இந்த வில்லை இந்தப் பிராம்மண குமாரன்-வில்லில் பயிற்சி இல்லாதவன்-எப்படித் தூக்குவான்? இவனுடைய அற்ப புத்தியைக் கண்டு க்ஷத்திரியர்கள், பிராம்மணர்களனைவரையும் பார்த்து நகைப்பார்களே! இவனை இப்பொழுதே தடுத்து விடவேண்டும்" என்று கூறிக்கொண்டார்கள்.

வேறு சிலர், "உற்சாகத்தைப் பார்த்தாலே இவன் இந்தக் காரியத்தை முடிப்பான் என்று தோன்றுகிறது. உண்மையான திறமை இல்லாவிட்டால் முன் வருவானா? பிராம்மணர்களால் முடியாத காரியம் என்ன இருக்கிறது! நீரையும் காற்றையும் கொண்டு தவம் செய்பவர்களாயிற்றே நாம்! மந்திர பலம், யோக பலம் எல்லாம் நமக்கு உண்டு" என்று பேசிக்கொண்டார்கள்.

இதற்குள் அர்ஜுனன் வில்லின் அருகில் வந்து மலைபோல் அசையாமல் நின்றான். திருஷ்டத்தியும்னனைப் பார்த்து அர்ஜுனன், "இந்த வில்லில் அந்தணர் நாண் ஏற்றலாமா?" என்று கேட்டான். அதற்குத் திருஷ்டத்தியும்னன் "பிராம்மணரோ க்ஷத்திரியரோ, வைசியரோ வேறு எந்த வகுப்பைச் சேர்ந்தவரோ எவராக இருந்தாலும் சரி இதில் நாண் ஏற்றுபவருக்கு என் சகோதரியைக் கொடுக்கிறேன் என்றுதான் முதலிலேயே சத்தியம் செய்தேனே" என்றான். உடனே அர்ஜுனன் அந்த வில்லை வலம் வந்து தலையால் வணங்கினான். நிமிஷ நேரத்தில் வில்லைத் தூக்கி வளைத்து நாண் ஏற்றி ஐந்து பாணங்களையும் கையில் எடுத்தான். குறி பார்த்து இலக்கை அடித்தான். இலக்கு உடனே தரையில் விழுந்தது. ஆகாயத்திலிருந்து பூமாரி அர்ஜுனன் மேல் பொழிந்தது. சபை நடுவே பெரிய கூச்சல் கிளம்பியது. அந்தணர் தங்கள் ஆடைகளை ஆகாயத்தில் வீசிக்கொண்டு மகிழ்ந்தார்கள்; குதித்தார்கள். சிலர் விசிறியை வீசினார்கள். நான்கு திசைகளிலும் வாத்தியங்கள் முழங்கின. தர்மபுத்திரர் நகுல சகதேவர்களுடன் தம் தாய் இருக்கும் இடத்துக்கு விரைவில் சென்று, அவள் சௌக்கியமாக இருப்பதை அறிந்து திரும்பி வந்தார்.

அர்ஜுனன் இலக்கை அடித்ததைப் பார்த்தாள் திரௌபதி. தேவேந்திரனுக்கு நிகராகத் துலங்கும் அவனையும் பார்த்தாள். கையில் வெண்மையான மாலையை எடுத்துக்கொண்டு, முகத்தில் புன்னகை தவழ எல்லா அரசர்களின் முன்னிலையிலும் வந்து அர்ஜுனனுடைய கழுத்தில் அவள் அணிவித்தாள். தன் மகளுக்கு ஏற்ற கணவன் கிடைத்ததைப் பார்த்துத் துருபத மன்னன் மகிழ்ந்தான். சேனைகளுடன் அர்ஜுனனுக்கு உதவி செய்ய எண்ணினான்.

இதைக் கண்டு அரசர்கள் சீறி எழுந்தார்கள். "துருபதன் நம்மை வரவழைத்து அவமானப்படுத்துகிறான். இத்தனை அரசர்களில் ஒருவன்கூட இவன் மகளுக்கு ஏற்றவன் இல்லையோ? இவன் மகனுடன் இவனைக் கொன்று விடுவோம். சுயம்வரம் என்பது க்ஷத்திரியர்களுக்குத்தான் ஏற்பட்டது. அதில் பிராம்மணர்களுக்குப் பங்கு ஏது? நாம் இப்பொழுது

பேசாமல் விட்டால், வரும் சுய வரங்களிலும் பிராம்மணர்கள் முன் வரத் தொடங்கி விடுவார்கள். அதனால் நாம் துருபதனைக் கொல்வதே நியாயம்'' என்று கூறிக் கொண்டு ஆயுதங்களுடன் துருபதனை நோக்கி ஓடினார்கள். துருபதன் பயந்து பிராம்மணர்களைச் சரணம் அடைந்தான். அர்ஜுனனும் பீமனும் அந்த அரசர்களை எதிர்த்தார்கள்.

அர்ஜுனன் கர்ணனோடு போர் செய்தான். இருவரும் தம் திறமைக்கு ஏற்றபடி ஒருவர்மேல் ஒருவர் பல விதமாகப் பாணங்களைத் தொடுத்துக் கொண்டார்கள். முடிவில் அர்ஜுனன் கர்ணனைக் கொல்வதற்காகப் பாணத்தைத் தொடுத்தான். கர்ணன், ''நான் தோல்வி அடைந்தேன்'' என்று கூறியதால், அர்ஜுனன் அவனை விட்டு விட்டான். பீமன் சல்லியனோடு சண்டை செய்தான். பெரிய மரத்தைப் பிடுங்கி ஆயுதமாகக் கொண்டு போரிடும் அவனை எதிர்க்கச் சல்லியனால் முடியவில்லை. அவன் கீழே விழுந்தான்.

அதோடு அவனைச் சும்மா விட்டான். துரியோதனனைத் தர்ம புத்திரர் முறியடித்தார். சகதேவன் துச்சாசனனையும் நகுலன் துச்சஹனையும் வென்றார்கள். உடனே கௌரவர்கள், ''நமக்குப் பிராம்மணர்களுடன் சண்டை என்ன? நாம் அவர்களை வழிபடுவதுதான் முறை'' என்று கூறிக்கொண்டு வெளிச் சென்றார்கள். அந்தணர்கள் அனைவரும் கௌரவரைப் பார்த்து நகைத்தார்கள்.

மற்ற அரசர்கள், ''இவர்கள் யார் என்பதை அறிய வேண்டும். கர்ணனை எதிர்க்க யாருக்குத் திறமை உண்டு? மீண்டும் இவர்களோடு போரிடுவோம்'' என்று கூறிக்கொண்டு போருக்குத் தயார் செய்துகொண்டார்கள். ஆனால் கிருஷ்ணர் அவர்களிடம் சமயோசிதமாகப் பேசி அவர்களை ஒரு விதமாகச் சமாதானப்படுத்தினர்.

பிறகு பாண்டவர்கள் திரௌபதியை அழைத்துக் கொண்டு மண்வினைஞன் வீட்டுக்கு வந்தார்கள். தாயிடம் பிக்ஷை கொண்டு வந்திருப்பதாகக் கூறினார்கள். குந்தி விஷயத்தை உணரவில்லை. ''பிக்ஷையை ஐந்து பேரும் பகிர்ந்துகொள்ளுங்கள்'' என்று சொன்னார்கள்.

பாண்டவர்களுக்குத் தெரியாமல் அவர்களைப் பின்தொடர்ந்து உண்மையை அறிந்து வரத் திருஷ்டத்தியும்னனைத் துருபதன் அனுப்பினன். பிறகு வியாசர் முதலிய பெரியோர்களின் சம்மதத்தைப் பெற்றுக்கொண்டு பாண்டவர்களுக்குத் திரௌபதியை மணம் செய்து கொடுத்தான்.

போலீஸுக்கு மரியாதை!

போர்ச்சுகல் நாட்டுத் தலைநகரான லிஸ்பன் நகரத்தில், ஒரு வழக்கம் பல நூற்றாண்டுகளாக இருந்து வருகிறது. மீன் கூடைக்காரிகள் வெறுங்காலோடுதான் நடக்கவேண்டும். ஆனால், இதைச் சட்ட விரோதமான குற்றம் என்று இப்போது சட்டம் செய்திருக்கிறார்கள். சட்டம் வந்த பிறகும் மீன் கூடைக்காரிகள் வெறுங் காலோடுதான் நடக்கிறார்கள். என்றாலும், ஒரு ஜதை பாதரட்சையையும் தங்கள் கூடையிலே வைத்துக் கொண்டுவருகிறார்கள். போலீஸ்காரனைக் கண்டார்களோ, இல்லையோ, உடனே அந்த ஜதையை வெளியே எடுத்து விடுகிறார்கள்!

—'நேஷனல் ஜியாகிராஃபிக் ந்யூஸ் புல்லட்டின்'

சிவாஜிக்கே ஆசி அளித்தாள் ஒருத்தி;
1857-க்கு முன்பே ஆங்கிலேயருடன் போரிட்டு
உயிர் துறந்தாள் இன்னொருத்தி.

இரண்டு வீரப் பெண்கள்

கே. என். பட் நீலகந்தர்

1857-ஆம் ஆண்டு சுதந்தரப் போரில் தைரியமும் வீரமும் சிறக்கப் போரிட்டுச் சரித்திரத்தில் துருவ நட்சத்திரத்தைப் போல் ஒளிரும் தியாகிகளில் பெண்களும் இருந்தார்கள். நாட்டின் எல்லாப் பகுதிகளிலும் வீரப் பெண்கள் இருந்தார்கள். உயிரைத் திருணமாக மதித்துப் போரிட்டு வீரசுவர்க்கம் அடைந்த ஜான்ஸி ராணி லட்சுமிபாயின் சரிதம் அறியாதவர்கள் இல்லை. இந்த அம்மையைப் போலவே சுதந்தர வேட்கை, நாட்டைக் காப்பதில் தீவிர முயற்சி, பகைவரையும் வணங்கச் செய்யும் தீரம் முதலிய நற்குணங்களைப் பெற்ற வீரமங்கை மற்றொருத்தி மலயா பாய்.

பல்லாரி துர்க்கம் மிக்க உறுதி வாய்ந்த கோட்டை கொத்தளங்களைக் கொண்டது. துர்க்கத்தின் தலைவனை இழந்த குடிகள் துக்கத்தில் ஆழ்ந்துவிட்ட சமயம். கணவனுடைய சாவினால் இடிந்துவிட்ட வீரப்பெண் தன் கடமை இன்னது என்று உணர்ந்தாள். தன் கணவனுக்குப் பதிலாகத் துர்க்கத்தைக் காக்கும் பொறுப்பைத் தானே ஏற்றுக் கொண்டாள். நாடு சுதந்தரம் பெற்றுவிட வேண்டும் என்ற பேராவலினால் தன் முழு முயற்சியையும் அதற்காகவே செலுத்தினாள். அவளுக்குச் சத்திரபதி சிவாஜியின் மின்னல் போர்முறை மிகப் பிடித்திருந்தது.

மொகலாயர்களின் கணக்கற்ற சேனைகளை லட்சியம் செய்யாமல் அற்புதமான திறமையால் சிவாஜி வெற்றி மேல் வெற்றி பெற்று முன்னேறினார். கடைசியில் ஒரு நாள் அந்த வீரர் பல்லாரி துர்க்கத்தையும் முற்றுகை இட்டுவிட்டார். நாட்டின் சுதந்தரத்தைக் காக்க மலயா பாய் எந்த நிமிஷத்திலும் தயாராகவேதான் இருந்தாள். ஆனாலும், எதிர்பாராத சமயத்தில் எதிர்பாராத பகைவன்-சிவாஜியே-முற்றுகையிட்டது அவளுக்கு ஆத்திரத்தை மூட்டியது. எதிர்த்து வந்தவனுடைய உத்தேசம் எதுவாயிருந்தாலும் அவனை எதிர்த்துத் தன் சுதந்தரத்தைக் காப்பதே க்ஷத்திரிய தருமம் என்று தீர்மானித்த அந்த வீரப் பெண்மணி சிவாஜியை எதிர்த்துப் போரிட்டாள். மிகவும் பராக்கிரமசாலிகளான சிவாஜியின் ஆயிரக்கணக்கான வீரர்களோடு, தன்னுடைய சிறிய படைப்பலத்தைக் கொண்டு மலயா பாய் சண்டை தொடர்ந்தாள். அவள் சாட்சாத் பத்திரகாளியாகவே மாறிவிட்டாள். இப்படிப் பயங்கரமாகத் தொடங்கிய பெரும் போர், ஓயாமல் இருபத்தேழு நாட்கள் நீடித்தது. சிறு படையோடு பெருந்திறமை காட்டிப் போரிட்ட மலயா பாய், கடைசியில் சிவாஜியின் படைப் பலத்தின் முன் தோல்வி அடையும்படி நேர்ந்தது. சிவாஜியின் ஆட்கள் அவளைச் சிறைப்படுத்தினார்கள்.

தோல்வியாலும் அவமானத்தாலும் கொதித்தெழுந்து, சீறும் பெண் சிங்கத்தைப்போல் உறுமிக் கொண்டிருந்தாள் மலயா பாய். 'பரநாரீ சகோதரர்' என்று புகழ் பெற்ற சிவாஜி மன்னர், தர்பார் கூட்டினார். பெரிய கூட்டம் கூடியது. சிறையில் இருந்த ராணி மலயா பாயை விடுவித்து, மிகக் கௌரவத்துடன் தர்பாருக்கு அழைத்துவரச் செய்தார். அவள் சபைக்கு வந்ததும் மரியாதையோடு

மூலம்: ஜனப்ரகதி (கன்னடம்: 18-8-'57), பங்களூர்.

வரவேற்றார். அவளுடைய சுதந்தர வேட்கை, தைரியம், போர்த் திறமை இவைகளுக்காக அவளை மனமாரப் புகழ்ந்தார். தாம் கைப்பற்றிய பல்லாரி துர்க்கத்தை மறுபடியும் அந்த வீரப் பெண்மணியின் கையில் ஒப்படைத்தார்.

சுத்த வீரரும், நற்குணங்கள் நிறைந்தவருமான சிவாஜி மன்னரின் இந்த உதாரச் செயல் அந்த வீரப் பெண்மணிக்கு மிகுந்த மகிழ்ச்சியைக் கொடுத்தது. அதனால் அவள் தன்னை மறந்து செயலற்று நின்றபோது, சிவாஜி ஆசனத்திலிருந்து எழுந்திருந்து, "சுயராஜ்யத்தைப் பெறுவதற்காக நான் ஈடுபடும் முயற்சியில் எனக்கு ஆசி தரவேண்டும்" என்று கேட்டுக் கொண்டார். மனப்பூர்வமான ஆசி தந்தாள் மலயா பாய். இப்படி வீரமும், சுதந்தரத்தில் பற்றும் கொண்ட மற்றொரு பெண் கித்தூரு சன்னம்மா.

கித்தூர்ச் சம்ஸ்தானத்தில் வரிசையாக ஆண்டவர்கள் பன்னிரண்டு ஜமீன்தார்கள். இவர்களுடைய ஆட்சிக்காலம் 239 ஆண்டுகள் நீடித்தன.

மைசூரைச் சேர்ந்த பெரிய மல்லப்ப செட்டி, சின்ன மல்லப்ப செட்டி என்னும் சகோதரர்கள் இருவர் வியாபார நிமித்தமாகப் பெல்காம் ஜில்லாவுக்குப் போனார்கள். இவர்கள் பிஜாபுர் அடில் ஷாவிடம் பொன், வெள்ளி வியாபாரம் செய்தார்கள்.

பிறகு வியாபாரத்தை விட்டு விட்டு, பிஜாபுர் அரசாங்கப் படையில் சேர்ந்து தங்கள் வீரதீரச் செயல்களால் 'சம்ஷேர் ஜங் பகதூர்' என்ற விருது பெற்று ஹூப்ளியைப் பரிசாகப் பெற்று அரசாண்டார்கள். இந்த வமிசத்து ஜமீன்தார் ஒருவர், கொடிய மிருகங்களும் முட்புதர்களும் செடி கொடிகளும் நிறைந்த காட்டை அழித்து நாடாக்கினர். அழித்து உருவாக்கிய ஊர் 'கித்தூர்' ஆயிற்று.

இந்த வமிசத்தார் பல விருதுடன் புகழ் பெற்று வாழ்ந்தார்கள். 'சிவலிங்க ருத்திர ஸர்ஜ தேசாய்' என்பவர் இறந்தபின் தத்துக் கொள்ளும் யோசனையில் கிளர்ச்சி உண்டாயிற்று. ஆங்கிலேயர் அதைக் காரணமாகக் கொண்டு ராஜ்யத்தைப் பிடுங்க முயன்றார்கள்.

அரசனுடைய இளைய ராணியான சன்னம்மா வெகுண்டெழுந்தாள். "என்னுடைய சம்ஸ்தானத்தில் அந்நியர் ஏன் தலையிட வேண்டும்? அவர்களுக்கு என்ன அதிகாரம் இருக்கிறது? என் உடலில் உயிர் உள்ள அளவும் ஒரு சொட்டு ரத்தம் உள்ள வரையிலும் சம்ஸ்தானத்தில் யாரையும் நுழைய விடமாட்டேன். அவர்கள் நுழையவும் முடியாது!" என்று கர்ஜித்தாள். இப்படி இடியை முழக்கிப் புரட்சி முரசு கொட்டிய முதல் கன்னடப் பெண்மணி இவளே.

கி. பி. 1857-ஆம் ஆண்டு நடந்த சுதந்தர யுத்தத்துக்கு முன்னதாகவே கி. பி. 1824-ஆம் ஆண்டில் பிரிட்டிஷாரை எதிர்த்துக் கத்தியை உருவிப் போராடியவள் கித்தூரு சன்னம்ம ராணி.

அந்தக் காலத்துப் போர்த் தயாரிப்பையும் போரைப்பற்றிய செய்திகளையும் அந்த ஊரார் சிந்துகளாகவும், நாட்டுப் பாடல்களாகவும், லாவணிகளாகவும் இலக்கியத்தில் அமைத்து இன்றும் பாடிப் பாடி மகிழ்கிறார்கள். இந்தப் பாடல்களினால் அவளுடைய நெஞ்சுரமும் வீரதீரச் செயல்களும் புலனாகின்றன:

"சண்டியோ, காளியோ, மாரியோ, நீலியோ அன்றி, உண்மையில் இவள் மனிதப் பெண்ணல்ல...."

"ஆண்பிள்ளைச் சிங்கங்களையும் மீறித் தலை மாலையணியும் இவள் மகாமாயையேதான்....."

"குண்டர் அரக்கரைக் கூட்டங் கூட்டமாய் அழித்த சாமுண்டியே இவள்; பொய்யல்ல....."

"வீரதீரம் மிகுந்த பகைவர் கூட்டம் சிதறிய தென்னும் ஓசைதான் இது; யுத்தம் அன்று.."

இப்படி வீரங்காட்டிப் போரிட்ட பெண்மணி, பிறருக்கு இச்சகம் பாடிய கோழைகளின் சூழ்ச்சி

யாலும் பொறுமைக்காரரின் வஞ்சத்தாலுமே பகைவர் கையில் சிறைப்பட்டாள்.

உயிர் போகும்போதும், ''கித்தூர்......என்னுடைய கித்தூர்'' என்ற ஏக்கத்தோடே இறந்தாள், நாட்டுப் பற்று மிகுந்த ராணி. சண்டை நடந்த 'சன்னம்மாவின் கித்தூர்' என்ற பகுதியிலும் 'சன்னம்ம ராணியின் ஞாபகார்த்த மண்டலம்' என்ற இடத்திலும் அழிவுச் சின்னங்களை இன்றும் காணலாம்.

தார்வாடிலிருந்து பெல்காம் செல்லும் பஸ் மார்க்கத்தில் தார்வாடிலிருந்து வடக்கே இருபது மைலில் சன்னம்மாவின் கித்தூர் இருக்கிறது.

ஒன்றே குறை

பெருஞ் செலவுள்ள ஓர் ஓட்டலுக்கு வந்து சேர்ந்தார் ஒரு கனவான். தடபுடலாய் உடுத்திருந்தார். கம்பீரமாய்ப் பேசினார்.

''ஓர் அறை உங்களுக்குத் தயாரா யிருக்கிறது'' என்றார் குமாஸ்தா.

''ஓர் அறையா? ஒரு மாடி முழுவதும் எனக்குத் தேவை.''

அப்படியே காலி செய்து கொடுத்தார்கள்.

''எனக்கு மிகவும் பசியா யிருக்கிறது. சாப்பாட்டுக் கூடம் எங்கே?''

சாப்பாட்டுக் கூடத்துக்கு அழைத்துச் சென்றார்கள்.

''இதென்ன ஒரே சந்தையிரைச்சலாக இருக்கிறதே! இந்தக் கும்பலெல்லாம் கலையாதோ?''

கும்பலைக் கலைத்துக் கனவானுக்கு ஏகாந்தமாகச் சாப்பாடு போட்டார்கள். பிறகு அவரை மிகவும் சொகுசான அறைக்கு அழைத்துச் சென்றார்கள். கடல் பஞ்சுபோல் மிருதுவான பஞ்சணைமீது, ''அப்பாடா!'' என்று அவர் சாய்ந்தார். பிறகு, ''அடடா! இது அல்லவா வாழ்க்கையிலே சுகம் என்பது! ஆனால், இதற்கெல்லாம் செலவழிக்க என்னிடம் பணம் மட்டும் இருந்தால்...!'' என்று துக்கப்பட்டார்.

—'விட் பரேட்'

ஒரே தொல்லை

வாலிபன் தன் நண்பனிடம் சொன்னான்: ''அவளுக்கும் எனக்கும் ஒரே படம் பிடிக்கிறது; ஒரே உணவு பிடிக்கிறது; ஒரே இசைத்தட்டுப் பிடிக்கிறது. எங்களுக்குள் ஒருவரை ஒருவருக்கு மட்டுந்தான் பிடிக்கவில்லை.''

—பி. எல்.

திருமணத்திலே நெல்லுக் குத்தும் பரீட்சை நடப்பதை எங்கேயாவது கண்டிருக்கிறீர்களா? இல்லையே. அதை இவர்களிடம் காணலாம்!

மாறிவரும் ஏனாதியர்

பிலோ இருதயநாத்



காதலர் நெல்லுக் குத்தும் பரீட்சை கொடுக்கிறார்கள்

உலகில் இருக்கும் எல்லா மக்களுக்கும் பண்டைக் காலத்தில் நெருங்கிய தொடர்பு இருந்திருக்க வேண்டும். தென்னிந்தியாவில் இருக்கும் சில புராதனப் பொருள்கள், வட இந்தியாவில் இருக்கும் மலைஜாதியாரிடம் இருப்பதைக் கண்டேன். மேலும், ஒரியா, தெலுங்கு பேசும் மக்களிடம் இருக்கும் பழக்க வழக்கங்களும் பொருள்களும் செங்கல்பட்டு வில்லியரிடமும், நீலகிரிக் குறும்பர், ஊராளியர், இருளரிடமும் இருப்பதைக் காணும்போது, இவைகள் எப்படி அங்கே போயின, இவர்களுக்கும் அவர்களுக்கும் எந்த வகையில் தொடர்பு ஏற்பட்டது என்றெல்லாம் ஆராயத் தோன்றுகிறது. புல் பூண்டு மிருகம் தண்ணீர் இவற்றைத் தேடிக்கொண்டு மக்கள் விலங்குகளைப்போல் நிர்வாணமாகவோ, பல ஆயிரம் மைல் நடந்தோ, குதிரை யானைகளின் மேல் சவாரி செய்தோ, பல இடங்களுக்குப் பிரயாணம் செய்வார்கள். சிலர் சென்ற இடங்களிலேயே தங்கினார்கள். நாளடைவில் அவர்களின் பழக்கம் பலவிதமாக மாறியது. சுமார் கி.மு.7000, 8000 ஆண்டுகளுக்கு முன் மக்களிடம் பழகியது நாய். மனிதன் முதலில் பிடித்துத் தின்னப் பழகியது மீனே. படிப்படியாக மனிதன் இந்த விதம் முன்னேற்றம் அடைந்தான். இந்தமாதிரி முன்னேறிய மக்களில் சிலர் இன்னும் சிதறி மறைந்து, காடுகளில் வாழ்கிறார்கள். இவர்கள் தொகை உலகில் இன்று பல கோடி. இவர்களில் இந்தியாவில் சுமார் சில லட்சம் பேராவது இருப்பார்கள். இவர்களுள் ஏனாதியர் ஒரு வகையார்.

இவர்கள் இன்று வாயில்பட்டி, சித்தூர் மாவட்டம், கர்நூல், கடப்பை, கூடூர், நெல்லூர், செங்கல்பட்டு, சூளூர்ப்பேட்டை, கஸ்பா (காசப்ப ரெட்டிபாளையம்) வட, தென் ஆர்க்காடு, காளஹஸ்தி முதலிய இடங்களில் வாழ்ந்தாலும், இவர்கள் பண்டைக் காலத்தில் பயங்கரமான

காப்பிரைட்: சுதேசமித்திரன் (தமிழ்: 18-5-'57), சென்னை-2;

காடுகளில் விலங்குகளுடன் கலந்து மாக்களாக வாழ்ந்தார்கள். சில ஆராய்ச்சியாளர்கள் இவர்களையே தமிழகத்தில் வில்லியர், இருளர் என்று அழைப்பதாகச் சொல்கிறார்கள். ஏனுதியர்கள் எங்கே வாழ்ந்தாலும், கூட்டமாகவே வாழ்வார்கள்.

குடிசைகளின் அமைப்பும், சாமான்களும்: இவர்களுடைய குடிசைகள் மண் சுவர்கள் எழுப்பி, காட்டுக்கொம்பும் ஓலையும் கொண்டு அமைந்தவை. சிலர் சிறு சிறு தகரத் துண்டுகளைக் கொண்டு, ஆணிகளினால், வாரைக் கொம்புகளுடன் சேர்த்து அடித்திருக்கிறார்கள். அதிலேயே சமைக்கும் அறையைத் தனியாகத் தடுத்திருக்கிறார்கள். இன்னும் சில இடங்களில் இருக்கும் ஏனுதியர்கள் குளிருக்கும் வெயிலுக்கும் தக்கபடி தங்கள் குடிசைகளை அமைத்துக் கொள்ளுகிறார்கள். சாதாரணமாய் இவர்கள் குடிசை ஒரு பெரிய அறை அளவுதான் இருக்கிறது.

இவர்கள் வீட்டில் புழங்கும் சாமான்களில் அலுமினியமும் மண் பாண்டங்களுந்தான் அதிகம்.

ஒவ்வொரு குடிசையிலும் மூன்று நான்கு அகலமான உறிகள் தொங்குவதைக் கண்டேன். தரையில் இருக்க வேண்டிய கோழிகளை உறியில் வைத்து அடை காக்கப் பழக்குகிறார்கள். சாதாரணமாக எல்லாச் சாமான்களும் உறியிலேதான் இருக்கின்றன. ஓசையின்றியும் சிந்தனை செய்யாமலும், நினைத்த மாத்திரத்தில் ஓரிடத்திலிருந்து மற்றோர் இடத்துக்குத் தங்கள் குடிசைகளை மாற்றும் பழக்கம் பண்டையில் இருந்ததாம். ஆனால் அந்தப் பழக்கம் இன்று முற்றும் மறையவில்லை.

ஆண்களின் தோற்றமும், ஆடையும்: ஆண்கள் நல்ல உயரமும், நல்ல உடல் கட்டும் உள்ளவர்கள். பரட்டைத் தலைமயிர் கொண்டவர்கள். கருத்த மேனியர். பண்டையில் இவர்கள் கோவணத்துடன்தான் இருந்தார்களாம். முன்பு திருமணத்துக்கும் கோவணமேதான் உடை. ஆனால், இன்று இவர்கள் சாதாரணமாய் நம்மைப்போல் ஆடை அணிந்திருக்கிறார்கள். நீலகிரி இருளரும், நெல்லூர், சூளூர்ப்பேட்டை ஏனுதியரும் உருவத்திலும், நிறத்திலும், தோற்றத்திலும் ஒத்திருக்கிறார்கள்.



தப்பட்டை அடித்து ஆண்கள் நடனம் ஆடுகிறார்கள்

பெண்களின் தோற்றமும், ஆடையும்: ஏனுதி மங்கையர்கள் மானமும், அன்பும், பரந்த முகமலர்ச்சியும் உடையவர்கள். பண்டைக் காலத்தில் தலைமயிரைச் சும்மா ஒதுக்கி விடுவார்களாம். அதற்குப் பின் கொண்டை போட்டுக்கொண்டார்கள். பண்டைக் காலத்தில் சேலையைச் சற்றுத் தூக்கியே கட்டி, அதன் முன்தானையை வளைத்துப் போர்த்துக்கொள்வார்கள். ஆனால் இந்தக் காலத்தில் சிலர் ஜாக்கட் அணிந்துகொள்ளுகிறார்கள். சிலர் சேலையை மராட்டியரைப்போல் கீழ்ப்பாய்ச்சியாகக் கட்டிக்கொள்ளுகிறார்கள். திருமணத்திலும் கோடித் துணியைச் சக்திக்குத் தகுந்தாற்போல் வாங்கி உடுத்துகிறார்கள். ஆண்களும் பெண்களும் நெற்றியில் நாமம் இடுகிறார்கள்.

குடும்பச் சம்பிரதாயங்கள்: இவர்களுக்குள் பொதுவான குடும்பப் பழக்க வழக்கங்கள் சில இருக்கின்றன. 'செல்லா ஏனுதி', 'மிஞ்சி

ஏனாதி' என்று இரு பிரிவினர் உண்டு. இவர்கள் இயற்கையிலேயே பயந்த சுபாவம் உடையவர்கள். பண்டைக்காலத்தில் நாகரிகமான மக்களைக் கண்டால் ஓடி ஒளிந்து கொள்ளும் சுபாவம் உள்ளவர்கள். ஏனாதியர்களில் ஆண்களும், பெண்களும் சிறு வயதிலேயே நீந்தப் பழகிக்கொள்கிறார்கள். ஒவ்வொரு பழக்கத்தையும் இவர்கள், 'எங்கள் குலப் பழக்கம்' என்பார்கள். இவர்கள் குடும்பத்தில் 'மொட்டை அடித்தல்' என்று ஒரு சடங்கு உண்டு. இந்தச் சடங்கில் சுமார் பத்து, பதினைந்து பையன்களையும் பெண்களையும் உட்காரவைத்து (இவர்கள் பத்து வயதுக்குக் கீழுள்ளவர்கள்) அவரவர் மாமன்மார்கள் மொட்டை அடிப்பார்கள். இதனால் மொத்தத்தில் செலவும் குறையும். ஒவ்வொரு மாமனும் தன் சகோதரி மகன், சகோதரி மகள் இவர்களுடைய தலை மயிரில் ஒரு கொத்தை முதலில் கத்தியால் அறுத்துப் பச்சை மரத்தில் கட்டுவான். இந்த மாமன் சடங்குக்குப் பிறகுதான் அவர்களுக்கு க்ஷவரம் செய்து, பிரியம் இருக்கும் பெற்றோர்கள் காதையும் குத்தி முடிப்பார்கள்.

குடும்பப் பழக்கத்தின்படி பெண்கள் ருதுவானதும், எட்டு நாள் வரையில் அதற்கென்று கட்டிய தனிக் குடிசையில் இருக்கச் செய்து, அங்கே சில பச்சிலைகளையும், காட்டு மூலிகைகளையும் கட்டி வைப்பார்கள். இதற்குக் காரணம், காற்றுக் கறுப்பு அணுகாமல் இருக்கவேண்டும் என்பதே. தீட்டானவளைத் தீட்டுக் கழியும் வரையில் காரியங்கள் செய்ய விடுவதில்லை. வயசு வந்தவளை ஒன்பதாம் நாள் மஞ்சள் நீரால் குளிக்கச் செய்து, சக்திக்குத் தகுந்தபடியும், அந்த அந்த ஊர்களின் வழக்கப்படியும் சடங்குகள் செய்து, பிட்டுச் சுற்றி வீட்டுக்கு அழைக்கிறார்கள். ருதுவான பெண் நீராடும்போதே, அவள் உட்கார்ந்திருந்த குடிசைக்குத் தீ மூட்டி, அது சாம்பலானதும் தூரத்திலே கொண்டுபோய்க் கொட்டி விடுகிறார்கள்.

இந்தவிதமான சடங்குகள் செய்யும்போது, அவரவர்களுக்குப் பிரியமான எல்லா இறைச்சிகளையும் விசேஷமாக அரிசி உணவையும் சமைப்பார்கள்.

இந்த மாதிரி நாளில் பெண்களும் ஆண்களும் சேர்ந்து தம்பட்டம், பறை முதலியவைகளை அடித்து, வட்டமாகக் கூடி நடனம் ஆடுவார்கள். அப்போது வாத்தியம் வாசிக்கும் கோஷ்டியை 'மொலாளு' என்பார்கள். ஆண்கள் வாத்தியம் வாசிக்க, மங்கையர்கள் மட்டும் கைகொட்டி நடனமாடுவார்கள்.

இவர்கள் விவசாயம், பரியாரித் தொழில், செருப்புத் தைப்பது, மேளம் அடித்தல், குருபூஜை செய்தல் இப்படி எந்தப் பணி செய்தாலும் ஒருவருக்கொருவர் பெண் கொடுக்கல் வாங்கல் செய்துகொள்வது உண்டு. பித்தளை நகைகளைத் தான் அதிகமாக அணிகிறார்கள்.

திருமண விதிகள்: ஏனாதிப் பெண்களுக்கு ருதுவான பிறகுதான் திருமணம் நடக்கும். திருமணத்துக்கு மணமகனும் மணமகளும் மஞ்சள் தோய்த்த கோடித் துணியை அணிவார்கள்.

காதல் திருமணங்கள்: முன் காலத்தில் ஓர் ஏனாதிப் பெண் தனக்கு வேண்டிய கணவனைத் தானே தேர்ந்தெடுப்பாளாம். பிறகு அவனுடன் தனித்து வாழ்வாளாம். மலையின் அடிவாரத்தில் இருக்கும் ஏனாதியர்களில் ஆண்கள், தாம் வேட்டையாடிய கொடிய விலங்குகளின் நகங்களையும் பற்களையும் கொண்டுவந்து தங்களை விரும்பக்கூடிய வாலிப மங்கையர்களிடம் கொடுப்பது வழக்கம். அப்படிக் கொடுக்கும்போது ஆணின் வீரத்தைக் கண்டு அவள் உள்ளம் பூரித்து அதைத் தன் கழுத்தில் அணிந்துகொள்ளுவாள். இப்படிப் பல பற்களை அணிந்த பிறகு இருவரும் காதலால் கட்டுண்டு ஒன்று சேர்ந்து வாழ விரும்புவார்களாம்.

இன்னும் சிலர் நன்றாகப் பாடக் கூடியவனாகவும், பலசாலியாகவும், நடனம் ஆடும்போது இடுப்பை நன்றாக வளைத்து ஆடக்கூடியவனாகவும் கவனித்து அவனை மணந்து

கொள்வார்கள். வயதையும் அழகையும் கவனிப்பதில்லே யாம்.

திருமணச் சடங்குகள்: இவர்களுடைய திருமணச் சடங்குகளில் ஆடம்பரமோ, இப்படித்தான் செய்ய வேண்டுமென்ற கட்டுத் திட்டமோ இல்லே. ஒருவருக்கே இரண்டு மூன்று மனேவிமாரும் உண்டு. ஆனுல், மங்கையர்களோ ஒரே ஆடவனேத்தான் மணக்கவேண்டும். பெண் வீட்டாரும் பிள்ளே வீட்டாரும், தாம்பூலம் மாற்றிக் கொண்டு, திருமணம் நிச்சயம் செய்த பின் தங்கள் பெண்ணிடமும் பிள்ளேயிடமும் ஒவ்வோர் உலக்கையைக் கொடுத்து நவதானியங்களில் ஒன்றை உரலில் இட்டுக் குத்தச் சொல்லுவார்கள். சிலர் இந்தச் சடங்கைத் திருமணத்துக்குப் பின்னும் செய்யச் சொல்லுகிருர்கள். இதற்கு 'மாற்று உலக்கை' என்று பெயர். இதன் கருத்து, 'இருவருமே வாழ்க்கையில் இன்பம், துன்பம் இரண்டையும் ஒன்று சேர்ந்து அநுபவிக்க வேண்டும்' என்பதுதான்.

இப்படி உலக்கை போடும் போது, இருவர் சார்பிலும் யார் ஜயிப்பார்கள் என்று பந்தயம் கட்டிக்கொள்வதும் உண்டு. இதில் சாதாரணமாய்ப் பிள்ளேதான் தோற்றுப் போவானும்.

விதவா விவாகம்: கணவன் இறந்த பின் ஒரு பெண் மறுபடியும் மணம் செய்து கொள்ளலாம். விதவை தன் கணவனுக்குச் செய்ய வேண்டிய மரணச் சடங்குகள் யாவும் செய்த பின், குறைந்தது மூன்று அமாவாசையோ அல்லது பௌர்ணமியோ கடந்த பிறகு மறுமணம் செய்துகொள்வாள். விதவைகளின் மணச் சடங்கும்

பெண்கள் நடனம் ஆடுகிருர்கள்



இந்த நாள் மாணவ மாணவிகள்

நாகரிகமாய் உடுத்தும் பெண்கள்

சாதாரண மணச் சடங்குபோலவே தான் நடைபெறும். திருமணத்துக்காகச் சக்திக்குத் தகுந்தாற்போல் 'செங்காலம்மா'வுக்கு உயிர்ப் பலி கொடுப்பது உண்டு. பொதுவாக, விதவைகளை இளம் வாலிபர்கள் தான் மறுமணம் செய்துகொள்கிறார்கள். எந்தத் திருமணமாக இருந்தாலும், ஒரு நல்ல நாளில், தங்கள் இல்லத்தில் குடும்பத்தில் பெரியவர்களைக் கொண்டு திருமணச் சடங்கை முடிக்கிறார்கள். திருமணத்தன்று எந்த உணவு வேண்டுமானாலும் அவரவர் விருப்பம்போல் சமைப்பார்கள்.

வியாதியும், மருத்துவப் பணியும்: ஏனாதி மங்கையர்களுக்குத் திருமணமானதும் குடும்பக் கலையாகிய மருத்துவக் கலையைப் பாட்டிமார்கள் தங்கள் பேத்திகளுக்குக் கற்பிப்பார்கள். ஆபத்தான பிரசவமாக இருந்தாலும் சரி, வைத்திய சாலைக்குப் போகாமல் தாங்களே பார்த்துவிடுகிறார்கள். குழந்தை பிறந்து மூன்று நாட்கள் வரையில் ஈச்சங்குருத்தை ஆகாரமாகச் சாப்பிடுகிறாள் தாய். நான்காம் நாள் அரிசி உணவு சாப்பிடுகிறாள்.

பிரசவமானதும் குழந்தையின் தொப்புள் கொடியை மருத்துவச்சி கத்தியால் அறுத்து, வேப்ப இலையை அரைத்து அறுத்த தொப்புளில் வைத்துக் கட்டி விடுவாள். தொப்புள் கொடியை வேப்ப இலையில் சுற்றிக் குழந்தையின் தலைக்குக் கீழ் ஆறு நாட்கள் வரையில் சிலர் வைக்கிறார்கள். பிரசவமானவளுடைய குடிசையின் வாசற்படியில் ஒரு பையில் சில பச்சிலைகளைப் போட்டு, மந்திரம் சொல்லிக் கட்டி வைக்கிறார்கள். இதற்குக் காரணம் கேட்டதற்கு, தாயும் குழந்தையும் தீட்டாக இருப்பதால் அப்போது அவர்களைப் பேய் அண்டக்கூடுமே என்று அவைகளுக்குத் தடையாக இப்படிப் பத்து நாட்கள் கட்டி வைப்பதாகச் சொன்னார்கள். பிரசவித்தவள் பத்தாம் நாள் தன் உடலெல்லாம் மஞ்சள் பூசிச் சில பச்சிலைகளைத் தேய்த்துக் குளிக்கிறாள். பிறகுதான் அவள் எல்லாரிடமும் சகஜமாகப் பழகுகிறாள்.

குழந்தை பிறந்த மூன்றும் மாதம் அதற்கு ஏணை போடுகிறார்கள். நோய் வந்தால் நாட்டு மருந்தையே கொடுக்கிறார்கள். ஏனாதியர்களுக்கு 'யானைக்கால்' என்ற நோயே வருவதில்லையாம். அந்த நோய் கண்டால் உடனே அவர்கள் சில வேர்களைச் சாப்பிடுகிறார்கள்.

ஆகாரம்: ஏனாதியர்களில் கிராமங்களின் அருகில் இருப்பவர்கள் நம்மைப் போலவே அரிசி உணவை உட்கொள்ளுகிறார்கள். மலை அடிவாரத்திலும், காடுகளிலும் இருப்பவர்கள் காட்டில் கிடைக்கும் எல்லா இறைச்சிகளையும் தின்பார்கள். வெள்ளிக்கிழமை மட்டும் பூஜை நாள் என்று எந்தவிதமான இறைச்சியையும் சாப்பிடுவதில்லை. வயல் எலியை இவர்களில் சிலர் மிகவும் விருப்பத்தோடு உண்ணுகிறார்களாம். ஆறு, குளம் இவைகளின் அருகில் இருக்கும் ஏனாதியர்கள் மீன், நண்டு முதலியவைகளைப் பிடித்துச் சாப்பிடுகிறார்கள்.

உழைப்பும் பிழைப்பும்: இவர்கள் மற்றவர்களிடம் கூலிக்கு நன்றாக உழைத்தாலும் இவர்கள் பிழைப்பதற்கு வேண்டிய கூலி கிட்டுவதில்லை.

பெண்களில் சிலர் இந்துக்களின் வீடுகளில் பணிப் பெண்களாக இருக்கிறார்கள். உழவுத் தொழிலிலும் ஏனாதி மக்கள் ஈடுபடுகிறார்கள். மலை அடிவாரத்தில் இருக்கும் ஏனாதியர்களோ அண்டையிலுள்ள காடுகளிலும் மலைகளின் மேலும் சென்று தேன் சேகரிப்பார்கள்.

தேன் எடுத்தல்: எவ்வளவு பெரிய மரமாக இருந்தாலும் சரி, பாறையாக இருந்தாலும் சரி, ஒரு மூங்கில் கொம்பைக் கொண்டு ஏறித் தேனை எடுத்துவிடுவார்கள். பாறையின் அடிவாரத்தில் இருக்கும் தேனை எடுக்க வேண்டியதாக இருந்தால், பாறையின் மேலிருந்து நூலேணியின் மூலம் இறங்குவார்கள். அப்படி இறங்கும்போது, பாறையின்மேல் தம் மச்சான்மாரையோ மனைவிமாரையோ நூலேணிக் கயிற்றைப் பிடித்துக்கொண்டிருக்கச் சொல்வார்கள். மற்றவர்களை நம்பி

இந்தப் பொறுப்பை விடுவதில்லே. பாறையின் மேல் இருப்பவர்கள், கயிற்றைத் தவறி விட்டுவிட்டால் நூலேணி வழியாக இறங்கும் ஆள் சாக வேண்டியதுதான்!

இப்படிக் காட்டில் கிடைக்கும் தேன், மூலிகைகள், காட்டுப் பொருள்கள் முதலியவைகளேக் கிராமங்களுக்குக் கொண்டுவந்து விற்பார்கள். கிராமங்களிலும், வயல்களின் அருகிலும் இருக்கும் ஏனுதியர்களோ வயல் நண்டுகளேத் தங்கள் கைகளாலேயே பிடிப்பார்கள். இந்தப் பழக்கத்தையெல்லாம் குழந்தைகளுக்குச் சிறு வயது முதல் தகப்பனே கற்றுக் கொடுப்பான்.

வயல் நண்டுகளேப் பிடிப்பது: வயல் ஈரமானதாக இருக்க வேண்டும். நண்டு வளேகளேத் தங்கள் கை முட்டியால் பெரியதாகச் செய்து, அந்த வளேக்குள்ளேயே பக்க வாட்டில் நண்டு வளேகள் இருக்கின்றனவா என்று கவனிப்பார்கள். பிறகு நண்டுகளின் எண்ணிக்கை எத்தனே என்று தெரிந்து கொண்டு, பெரிய நண்டுகளே முதலில் பிடிப்பார்கள். இப்படி உழைத்துப் பாடுபட்டுப் பிடித்துக் கொண்டு வந்து விற்ருலும் உழைப்புக்கு ஏற்ற ஊதியம் கிடைப்பதில்லே.

சில இடங்களில் 'அடவி ஏனுதிகள்' என்ற ஒரு வகை ஏனுதியர்கள் தோப்புகளேயும் வயல்களேயும் பாது காத்துக்கொண்டு அங்கேயே குடிசை கட்டி வாழ்கிருர்கள். சிலர் நீலகிரிக் குறும்பரைப் போல் திறமையாகக் குறி சொல்லிப் பிழைக்கிருர்கள். தங்கள் குலத்தில் குறி சொல்வதில் தேர்ந்தவனிடம் சீடர்களாக இருந்து கற்றுக் கொள்கிருர்கள். குறி சொல்லும் போது அதை நம்பவேண்டும் என்பதற்கு அறிகுறியாகக் காய்ந்து சிவந்த இரும்பைக் கையில் எடுத்துத் தேவதையை வணங்குவார்கள். இன்று கொஞ்சங் கொஞ்சமாக இந்தப் பழக்கங்கள் மறைந்து வருகின்றன.

சிலர் செங்கல்பட்டு வில்லியர்களேப் போல் நாகப்பாம்புகளேப் பிடித்து, தோலுரித்து அதைப் பதம் செய்து, விற்பனேயும் செய்கிருர்கள். காடுகளிலும் மலேச் சாரலிலும் இருப்பவர்கள், தாங்கள் உண்ணக் கூடிய மிருகமாக வேட்டையாடி, அதன் இறைச்சியைக் கம்பியிலோ நாரிலோ கோத்துக் காய வைப்பார்கள்; மழைக் காலத்துக்கென்று பானேயில் பத்திரப்படுத்திக் கொள்வார்கள். பழங்காலத்தில் இவர்கள் கையில் ஆயுதம் இராததால், மலேகளின் மேல் காத்திருந்து, தங்களுக்கு வேண்டிய விலங்குகள் மலேயடிவாரத்தில் வந்ததும், பெரிய பாறைகளேக் குறி பார்த்து அந்த விலங்குகளின்மேல் உருட்டுவார்கள். விலங்குகளின்மேல் பாறை விழுந்து அவை நசுங்கிச் சாகும். உடனே கூட்டமாக ஓடிச் சென்று அதைப் பிடித்து, அதன் இறைச்சியைப் பங்கிட்டுக்கொள்ளுவார்கள்.

முன்னே யதேச்சையாக வாழ்ந்த இவர்கள் இன்று காட்டு இலாகாவின் மேற்பார்வையில் வாழ வழி அறியாமல் மரங்களேயும், காட்டுப் பொருள்களேயும் இலாகாவினரிடமிருந்து வாங்கி விற்றும் கூலி வேலேயில் அமர்ந்தும் பிழைக்கிருர்கள். இவர்களுடைய நேர்மையைக் கண்ட சில முதலாளிகள், தங்கள் தோப்புகளேயும், ஆடுமாடுகளேயும் இவர்களின் மேற்பார்வையில் விட்டிருக்கிருர்கள்.

பஞ்சாயத்து முறை: இவர்கள் வாழும் இடத்திலே சுமார் பத்து, பதினேந்து பெரியவர்கள் கூடிப் பஞ்சாயத்தாராக இருக்கிருர்கள். தங்கள் குற்றங் குறைகளே இவர்களேக் கொண்டே தீர்த்துக்கொள்கிருர்கள். ஆனல் கிராமங்களின் அருகில் இருப்பவர்கள், இவர்களின் கட்டுப்பாடுகளுக்கும், பஞ்சாயத்துக்கும் கீழ்ப்படிவதில்லே. இன்று ஏதாவது குற்றங்கள் செய்தால் கிராமத் தலேவனிடம் போகிருர்கள்.

தெய்வ வழிபாடுகளும் திருவிழாக்களும்: ஏனுதிப் பிரிவினர் எல்லாரும் செஞ்சு தேவதை, கொண்டம்மா தேவதை, நரசிம்மஸ்வாமி, கன்னியம்மா, சப்த கன்னிகை முதலிய தெய்வங்களே

வணங்குகிறார்கள். 'செஞ்சு நாடகம்' என்பதைத் தெருக்கூத்தாக ஆடுவதில் இவர்களுக்குப் பெருமை அதிகம்.

ஆண்களும் பெண்களும் கோவிலுக்குள் போகலாம்; தேவதைகளை வணங்கலாம்; திருவிழாக்கள் செய்வதற்கோ, பூஜைகள் செய்வதற்கோ வெள்ளிக்கிழமைகளைத் தான் விசேஷமான நாட்களாகக் கருதுகிறார்கள்.

சங்கிராந்தி, போகி, காணும் பொங்கல், யுகாதி, மாட்டுப் பொங்கல் முதலியவைகள் இவர்களுக்குப் பெரிய திருவிழாக்கள். அன்று பலகாரங்கள் செய்து புத்தாடை அணிந்து, ஐந்து நாள் பொங்கலென்று கொண்டாடுவார்கள். பேய், பிசாசு, மந்திரம், சூனியம் முதலியவைகளில் இவர்களுக்கு நம்பிக்கை அதிகம்.

கல்வியும் மொழியும்: ஏனாதியர்களுக்குத் தனிப்பட்ட ஒரு தாய் மொழி என்பது இல்லை. தமிழகத்தில் வாழும் ஏனாதியர்கள் கொச்சைத் தமிழும், தெலுங்கு ஜில்லாவில் வாழ்பவர்கள் கொச்சைத் தெலுங்கும், முஸ்லிம்கள் நிறைந்த சூழ்நிலையில் வாழ்வோர் கொச்சை உர்தூவும் தங்கள் தாய் மொழியாகப் பேசியும் எழுதியும், சூழ்நிலைக்குத் தக்கப்படி தங்கள் பழக்க வழக்கங்களை மாற்றி வாழ்கிறார்கள்.

காரும் தொழிலாளியும்

கல்கத்தாவில் கார் செய்யும் தொழிற்சாலை ஒன்றில் அமெரிக்க ஆட்டோ வொர்க்கர்ஸ் யூனியன் தலைவர் வால்டர் ரூத்தர் என்பவர் ஒரு பிரசங்கம் செய்தார். அப்போது அவர் சொன்ன வாக்கியம் பெரிய கரகோஷம் வாங்கியது. அது இதுதான்: ''அமெரிக்காவில் தொழிற்சாலைகள் முதலாளிகளுக்குச் சொந்தமா யிருக்கின்றன; கார்கள் தொழிலாளிகளுக்குச் சொந்தமா யிருக்கின்றன; ருஷியாவில் தொழிற்சாலைகள் தொழிலாளிகளுக்குச் சொந்தமா யிருக்கின்றன; கார்கள் பெரிய அதிகாரிகளுக்குச் சொந்தமா யிருக்கின்றன.''

—'டைம்'

பைத்தியத்துக்கு வைத்தியம்

ஒரு பைத்தியத்துக்குத் தான் செத்துவிட்டதாக ஒரு பிரமை. இந்தப் பிரமையைத் தீர்க்க வந்தார் ஒரு வைத்தியர்.

''செத்தவன் உடலில் ரத்தம் வராது; செத்தவன் உடலில் ரத்தம் வராது'' என்று பைத்தியத்தைப் பல முறை உருப் போடச் சொன்னார்.

பைத்தியமும் அப்படியே உருப் போட்டது.

கடைசியில் வைத்தியர் ஓர் ஊசியை எடுத்துப் பைத்தியத்தின் கட்டை விரலில் குத்தி, ரத்தம் வரச் செய்தார். ''பார்த்தாயா? இப்போது தெரிகிறதா? என்ன தெரிகிறது?'' என்று கேட்டார்.

''ஊம், தெரிகிறது; செத்தவன் உடலில் ரத்தம் வரும்'' என்றது பைத்தியம்!

—'பென்ரோஸ் கோயெட்'

கேசரிப் பருப்பு அபாயம்

ஆர். வீராசாமி வி. கே. குஞ்சம்மாள்

அபாயமான இந்தப் பருப்பைப் பற்றித்தான் அரசாங்கத்தார் சமீபத்தில் எச்சரிக்கை செய்து, தடையும் விதித்தார்கள். கட்டுரையை எழுதியவர்கள் கோயம்புத்தூர்ச் சிறுதானிய ஆராய்ச்சிப் பண்ணையில் ஆராய்ச்சியாளர்கள்.

பல ஆண்டுகளுக்கு முன்பு நடந்த சம்பவம். சிந்து மாகாணத்தில் ஒரு கிராமம். சோகமே உருவான ஒரு குடியானவன் தன் இளம் மனைவியை வண்டியில் கிடத்தி ஆஸ்பத்திரிக்கு அழைத்து வந்தான். டாக்டர் கின்லாச் கிர்க் என்ற ஆங்கிலேய வைத்தியர் அந்தப் பெண்ணைப் பரிசோதித்தார். அவளால் எழுந்து நிற்கவும் முடியவில்லை. இரண்டு கால்களும் தங்கள் சக்தியை அடியோடு இழந்து, சோர்ந்து போய்த் தொய்ந்து கிடந்தன. பயங்கரமான பாரிசவாதம்! டாக்டர் உதட்டைப் பிதுக்கினார். என்ன பரிதாபம்! தன் பொன்னான வாழ் நாளை அந்த இளம்பெண் இனிமேல் படுத்த படுக்கையாகவே, பூமிக்குப் பாரமாக, பிணத்தைப் போல் கழிக்க வேண்டியதுதான்.

டாக்டர், ''என்னப்பா, இந்த இளம் பெண்ணுக்குப் பாரிசவாதம் எப்படி வந்தது?'' என்று கேட்டார்.

வாலிபன், ''எல்லாம் அந்தப் பாழாய்ப் போன கேசரிப் பருப்பினால் வந்த விபரீதந்தான். நாங்கள் ஏழைகள். எங்களுக்கு மலிவாகக் கிடைக்கக்கூடிய பருப்பு வகை, கேசரிப் பருப்பு ஒன்றுதான். கடந்த ஆறு மாதங்களாக என் மனைவி அதையே உபயோகித்து வந்தாள். அதன் பயங்கர விளைவுதான் இந்தப் பாரிசவாதம்!'' என்றான்.

டாக்டர் சிந்தனையில் ஆழ்ந்தார். கிராமம் கிராமமாகச் சென்று விசாரித்தார்; ஆராய்ச்சிகள் செய்தார். வாலிபன் சொன்னது உண்மை என்று கண்டார்.

நச்சுப் பருப்பு: கேசரிப் பருப்பைத் தமிழில் வட்டுப் பருப்பு என்பார்கள். நச்சுப் பருப்பு என்று காரணப்பெயர் இட்டிருந்தால் மிகப் பொருத்தமாயிருக்கும். இது துவரையைப்போல் பயறு ஜாதியைச் சேர்ந்தது. தாவர இயலின் படி இதன் பெயர் 'லத்தயரஸ் சட்டைவஸ்'. வட இந்தியாவில் மத்தியப் பிரதேசம், உத்தரப் பிரதேசம், பம்பாய் முதலிய பிரதேசங்களில் இதைப் பெருவாரியாகக் குளிர் காலப் பயிராகச் சாகுபடி செய்கிறார்கள். வளமற்ற வறண்ட நிலத்திலும் இது எளிதில் பயிராகி ஆறு மாதத்தில் அறுவடைக்குத் தயாராகிறது. நல்ல காலமாக, நம் தமிழ் நாட்டில் இதை அதிகமாகப் பயிரிடுவதில்லை; யாரும் பயிரிடவும் வேண்டாம்.

பயங்கர விளைவுகள்: கேசரிப் பருப்பில், குடலையும் நரம்புகளையும் பயங்கரமாகத் தாக்கும் தன்மை பெற்ற ஒரு கொடிய விஷப்பொருள் (Alkaloid) அடங்கியிருக்கிறது. இதைக் குறைந்த அளவில் எப்பொழுதோ ஒரு முறை உபயோகித்தாலே வயிற்று வலியும் ஜீரணக் கோளாறுகளும் ஏற்படும். இதையே முக்கிய உணவாக நீண்ட

மூலம்: மேழிச் செல்வம் (தமிழ்: ஜூன் '57), சென்னை-2.

காலம் உட்கொண்டால் பயங்கர மான பாரிசவாதம் உண்டாகிறது. இருந்தாற்போலிருந்து இரண்டு கால்களும் திடீரென்று பலம் இழந்து சோர்ந்து போய்த் துவண்டு விடும். நிற்கவும் முடியாது; நடக்க வும் முடியாது. இந்த நோயை, ஆங்கிலத்தில் 'லத்தைரிசம்' என் பார்கள். இந்தப் பயங்கர வியாதி யைக் குணப்படுத்த இதுவரையி லும் எந்தச் சிகிச்சையும் பயன்பட வில்லை. ஆகவே, எஞ்சியுள்ள வாழ்நாள் முழுவதும், படுத்த படுக்கையாகக் கிடந்து நரக வேத னையை அநுபவிக்க வேண்டியது தான்.

இந்தக் கொடிய நோயைப்பற்றி ஆராய்ச்சி செய்த டாக்டர் இர்விங் என்பவர் கீழ்க்கண்ட முடிவுகளை வெளியிட்டார்:

(1) மழைக் காலத்தில்தான் இந்த நோய் அதிகமாகத் தாக்கு கிறது.

(2) பெண்களைவிட ஆண்களே இந்த நோய்க்கு அதிகமாகப் பலியாகிறார்கள்.

(3) முப்பது வயதுக்கு உட்பட்ட வாலிபப் பிராயமுள்ளவர்களே 'லத்தைரிசம்' என்ற நோய்க்கு ஆளாகிறார்கள்.

கேசரிப் பருப்பை உண்ணும் கால்நடைகளுக்கும், மனிதர்களைப் போலவே பாரிசவாதம் உண் டாகிறது.

பாதகச் செயல்கள்: இவ்வளவு பயங்கர விளைவுகளுக்குக் காரண மான இந்தக் கேசரிப் பருப்பு, மேலே அகன்று கீழே உட்குவிந்து தடித்த துவரம் பருப்புப் போல இருக்கும். இதைத் துவரம் பருப்பு, கடலைப் பருப்பு முதலிய மற்றப் பருப்பு வகைகளோடு கலந்துவிட்டால் கலப்படத்தை அவ்வளவு எளிதில் கண்டுகொள்ள முடியாது. நஞ்சையும்விடக் கொடிய இந்த நச்சுப் பருப்பை நம் பிரதேசத்தில் அவ்வளவு அதிகமாகப் பயிர் செய்வதில்லை; என்றாலும், வியாபாரிகள் பலர் இதைப் பிற பிரதேசங்களி லிருந்து தருவித்து, பல புதுப் பெயர்களைச் சூட்டி மலிவான விலைக்கு விற்பனை செய்கிறார்கள்; அல்லது பாலில் விஷத்தைக் கலப் பது போல, துவரம் பருப்பு, கட லைப் பருப்பு முதலியவற்றோடு கலந்து விற்றுக் கொள்ளை லாபத் தோடு பழியையும் பாவத்தையும் தேடிக்கொள்கிறார்கள். பொது மக் களும் ஏமாறுகிறார்கள்.

தண்டனை உண்டு: நாட்டு மக் களின் உடல்நலத்தைப் பணயமாக வைத்துச் சூதாடும் இந்த ஈனச் செயல்கள் மன்னிக்க முடியாத பெருங்குற்றங்கள் என்பதில் எள் ளளவும் சந்தேகம் இல்லை. ஆகவே கேசரிப் பயறு, பருப்பு, மாவு முத லியவற்றை நம் பிரதேசத்துக்குள் கொண்டுவரக் கூடாது, விற்கக் கூடாது, கலப்படம் செய்யக் கூடாது என்று அரசாங்கம், கலப் படத் தடைச் சட்டங்களின் மூலம் தடை விதித்திருக்கிறது. தடையை மீறுபவர்கள் கடுந்தண்டனைக்கு உள்ளாக நேரிடும்.

எப்படிக் கண்டுபிடிப்பது? கேசரிப் பருப்பு, தோற்றத்திலும் வாசனையி லும் கடலைப் பருப்பு, துவரம் பருப்பு முதலியவற்றை ஒத்திருந் தாலும், இதை வாயில் இட்டு மென் றால், ஒரு விதக் கசப்பு வாயைப் பிடித்துக் கொள்ளும். இதன் மூலம் கேசரிப் பருப்பை இனம் கண்டு கொள்ளலாம். கேசரிப் பருப்பை மற்றப் பருப்பு வகைகளிலிருந்து பிரித்துத் தெரிந்துகொள்ள ஒரு ரசாயன முறையும் உண்டு. கேசரிப் பருப்பை மாவு செய்து அதோடு 10 சத ஹைட்ரோகுளோரிக் திரா வகம் (ஒரு கிராம் மாவுக்கு 20 சி. சி. திராவகம்) சேர்த்துக் கொதிக்க வைத்தால் ரோஜா நிறம் வரும். மற்றப் பருப்புகளின் மாவு இந்தமாதிரி ரோஜா நிறம் கொடுப்பதில்லை. இந்த ரசாயன முறையைக் கையாண்டு கேசரிப் பருப்பை எளிதில் பிரித்து அறிந்து கொள்ளலாம்.

நம் கடமை: கேசரிப் பருப்புச் சம்பந்தமாக நம் எல்லாருக்கும் ஒரு புனிதமான கடமை உண்டு. விவ சாயப் பெருமக்கள் இந்த நச்சுப் பருப்பைப் பயிர் இடக்கூடாது; தெரியாமல் பயிரிட்டு வருபவர்கள் உடனடியாக அதை நிறுத்திவிட

வேண்டும். வியாபாரிகளின் பொறுப்பு இந்த விஷயத்தில் மிக மிக முக்கியமானது. சுயநலத்தைக் கொஞ்சம் மூட்டை கட்டித் தூர வைத்துவிட வேண்டும்; கேசரிப் பருப்பை அதன் சுயரூபத்திலோ மாறுவேஷத்திலோ விற்பதில்லை என்று உறுதி கொள்ளவேண்டும். பொதுமக்கள், எந்தக் காரணத்தை முன்னிட்டும் கேசரிப் பருப்பை உணவுப் பொருளாக உபயோகிக்கக்கூடாது. உபயோகித்தால் பயங்கரமான பாரிசவாதத்துக்குப் பலியாக நேரிடும். வியாபார நிலையங்களில் கேசரிப் பருப்பை எந்த முறையிலேனும் விற்பனை செய்வதாகச் சந்தேகம் ஏற்பட்டால், பொதுமக்கள் அது சம்பந்தமாக உள்ளூர்ச் சுகாதார அதிகாரிகடம் உடனே புகார் செய்யவேண்டும். நாட்டு மக்களின் உடல்நலச் செல்வத்தைப் பறிபோகாமல் பாதுகாக்கும் இந்த ஒப்பற்ற தொண்டில், நாம் எல்லாரும் பெரும் பங்கு பெற்றுப் பெருமைப் படுவோமாக.

ஆப்பிளும் டாக்டரும்

'தினம் ஆப்பிள் சாப்பிடு; டாக்டர் தேவையே இல்லை' என்பார்கள். இந்தக் காலத்தில் ஆப்பிள் மிகவும் கிராக்கியாயிருக்கிறது; டாக்டரிடம் போவதே சிக்கனம்.

—பி. எச்.

கணவனின் அதிருஷ்டம்!

மனைவியின் ஊதாரித்தனத்தைக் கண்டு எரிச்சல் மூண்ட கணவன், ''எதற்கு உனக்கு ஒன்பது தொப்பி? ஒரு சமயத்தில் ஒன்றுதானே நீ அணிந்துகொள்ள முடியும்?'' என்று முணுமுணுத்தான்.

''இதை உங்கள் அதிருஷ்டம் என்று நீங்கள் சந்தோஷப்பட வேண்டும். ஒரே சமயத்தில் நான் இரண்டு தொப்பி வைத்துக்கொள்ள முடிந்திருந்தால், எனக்குப் பதினெட்டுத் தொப்பி அல்லவா வேண்டியிருக்கும்?''

—'க்விக்', மூனிக்.

வேண்டாத விருந்தாளி

விருந்தாளி வெகு நேரம் பேசிக்கொண்டிருந்துவிட்டார். பொழுது சாய்ந்து மிக நாழிகை ஆகிவிட்டது. வீட்டுக்காரரர் தம் காரிலே ஏற்றி அவரை ஸ்டேஷனுக்கு அனுப்பினர்.

போகிற வழியிலே டிரைவரை நோக்கி, ''கடைசி வண்டி கிடைக்குமோ? தப்பிவிடுமோ?'' என்று விருந்தாளி கேட்டார்.

''அதைப்பற்றி நீங்கள் கவலையே படவேண்டாம், ஸார்; எனக்கல்லவா கவலை? உங்களைத் திருப்பி வீட்டுக்கு அழைத்துக்கொண்டு போனல் என்னை வேலையை விட்டே தொலைத்து விடுவதாக எஜமான் எச்சரித்திருக்கிருர்'' என்றுன் டிரைவர்.

—'சாட்ஸ்வொர்த் சாட்டர்'

காட்சிச்சாலேயிலே பல பிராணிகளும் வாழும் விதம் ஓர் அதிசயம்.

விலங்கின் குடும்ப வாழ்க்கை

பி. என். ஸாக்ஸேஞு

நாவலேக் குஞ்சாக இருந்தாலும் சரி, யானேக்குட்டியாக இருந்தாலும் சரி, மொத்தத்தில் இளம் பிராணிகள் என்ருல் அவைகளேப் பற்றி அறிய வேண்டும் என்று எல்லாருக்கும் ஆவல் மூள்வதுண்டு. ஆகவே, மிருக காட்சிச் சாலேயில் இந்த மாதிரி இளம்பிராணிகள் இருக்கும் இடத்தருகில் எப்போதும் கும்பல் அதிகமாக இருக்கும்.

'விலங்குகள் தம் வாழ்நாளில் எத்தனே குட்டி போடும்? அவைகளின் குடும்பம் எப்படிப் பெருகுகிறது?' என்பதை அவைகளின் உருவ அமைப்பைக் கொண்டுதான் பெரும்பாலும் தீர்மானிப்பார்கள். சுண்டெலி பிறந்த ஆரும் வாரமே குட்டி போடும். 25 வருஷமாஞல்தான் யானே தக்க பருவம் அடைந்துவிட்டது என்று சொல்ல முடியும்.

நாய், ஆடு, வரிக்குதிரை, காட்டுக் கழுதை, மான், கலேமான் இந்த விலங்குகளெல்லாம், மிருகக் காட்சிச்சாலேயில் குறிப்பிட்ட காலத்துக்கு ஒரு தரம் தவருமல் குட்டி போட்டு இனத்தைப் பெருக்குவது வழக்கம். புல் பூண்டுகள் மேய்ந்து வாழும் ஒட்டைச் சிவிங்கி, ஹிப்போபாடமஸ் என்ற நீர் யானே இவைகளெல்லாம் மிருகக் காட்சிச்சாலேயில் அடைபட்டிருந்தாலும் கவலே இல்லாமல் குட்டி போட்டு இனத்தைப் பெருக்கும்.

நீர் யானேகுட்டி, போடுவதற்கு முன், அதற்கு வைக்கோல் காட்டிஞல் போதும்; வைக்கோலே ஏராளமாக வாயில் வாங்கிக்கொள்ளும்; தண்ணீர்த் தொட்டி இருக்கும் இடத்துக்குப் போய், அதில் வைக்கோலே அழுத்தும்; பிறகு, தான் நீரிலிருந்து வெளிவரும்போது தங்கும் மேட்டில் வைக்கோலேப் பரப்பி வைக்கும்.



நீர் யானேயும் குட்டியும்

அந்த மேட்டில்தான் நீர்யானே பிரசவிக்கும். காட்டில், ஆறு குளங் குட்டையருகே நாணல் புதர் அடர்ந்த இடத்தில் நீர் யானே குட்டி போடும். அதே மாதிரி சூழ்நிலே இங்கேயும் இருக்க வேண்டும் என்றுதான் இப்படி வைக்கோலேப் பரப்பி வைக்கிறது.

பிறந்தவுடன் நீர்யானேக் குட்டியின் நிறையைக் கவனித்தால் சுமார் நூறு சேர் அல்லது 300 ராத்தலுக்கு இருக்கும்; அப்போது நடக்கத் தெரியாவிட்டாலும் நீந்தும்; இரண்டொரு மணி நேரத்துக்கெல்லாம் தாயுடன் நீரில் இறங்கத் தவழ்ந்து செல்லும், நீரில்தான் தாய் அதற்குப் பால்

மூலம்: இண்டியன் நேஷன் (ஆங்கிலம்), பாட்ஞ.

கொடுக்கும். நீரின் ஆழத்திலிருந்து குட்டி வெளி வரப் பார்க்கும். அப்போது தாய் தன் தலையைக் குட்டியின் கீழே கொடுத்து அதை மேலே தூக்கும். நடுவே நீரில் நீந்தும்போது குட்டி தத்தளிப்பதைக் கண்டால் தாய் உடனே குட்டிக்குக் கீழே நீந்தி, அப்படியே குட்டியைத் தன் முதுகின் மேல் சுமந்துகொண்டு கரைக்கு வந்து சேரும்.



குரங்குக் குட்டியும் காவலாளும்

மிருகக் காட்சிச்சாலையில் அடைபட்டிருக்கும்போது சீதோஷ்ண நிலை காரணமாகச் சில விலங்குகள் கருத்தரிப்பதில்லை. தம் குட்டிகளை எடுத்துக்கொண்டு காவல்காரர்கள் விளையாடுவதைப் பெரிய குரங்குகள் சில சமயம் பார்த்து ரசிக்கும். இருந்தாலும், பெரும்பாலான குரங்குகள், யாராவது சற்று நெருங்கி வந்து தங்கள் குட்டிகளைக் கவனித்தாலும் சீறும்.

ஆண் நெருப்புக் கோழிகள் குஞ்சுகளை நன்றாகக் கவனித்துக் கொள்ளும். கூட்டைத் தயாரித்ததும், எப்போது தன் பெட்டை முட்டையிடும் என்று காத்திருக்கும். பெட்டை முதல் முட்டை இட்டதும், ஆண் பறவை கப்பென்று முட்டையைக் கவ்வித் தன் இறக்கையின் கீழ் வைத்துக்கொண்டு அடைகாக்கும். பெட்டை கடைசி முட்டை இடுகிற வரைக்கும் இப்படியே ஆண் பறவை ஒவ்வொரு தரமும் முட்டையைக் கவ்வி எடுத்து இறக்கையின்கீழ் வைத்துக்கொள்ளும். குஞ்சு பொரித்து அவை தாங்களே சமாளிக்கிற வரை எல்லாப் பொறுப்பையும் ஆணே கவனித்துக் கொள்ளும். பெங்குவின் என்ற பறவை வகையில் ஆண் பெண்கள் முட்டையை மாறி மாறி அடை காக்கும். தாய்ப் பறவை இல்லாத போது இப்படி ஆண் அடை காப்பது சகஜம்.

பச்சைக் கிளிகள் இந்த விஷயத்தில் மிகவும் சூட்சுமமாக இருக்கின்றன. பகலில் பொழுது விடிந்து பொழுது சாய்கிறவரை முட்டைகளை ஆண் அடை காக்கும். இரை தேடச் சென்ற பெண்கள் திரும்பி வந்து இரவு முழுவதும் முட்டைகளைக் கவனித்துக் கொள்ளும்.

வளைந்த கொம்பு போன்ற பெரிய மூக்குள்ள ஹார்ன்பில் என்ற பறவை குஞ்சுகளை நன்றாகக் கவனித்து வளர்க்கும்: பின்னால் பேடையையும் குஞ்சுகளையும் மரமேறும் விலங்குகள் தூக்கிச் சென்றுவிடாதபடி, பேடை முட்டையிடும் சமயத்திலேயே அதை மரப்பொந்தில் ஆண் பறவை பத்திரமாக ஒளித்துவைக்கும்; தன் பெரிய அலகால் பொந்தின் வாயை மண்ணும் சருகும் போட்டு மூடிவிடும்; சின்னத் துவாரம் ஒன்றைமட்டும் விட்டுவைக்கும். அதன் வழியாகப் பேடைக்கு இரை கொண்டு வந்து கொடுக்கும். இப்படி ஆண் தேடிக் கொடுக்கும் இரையை நம்பி அந்தப் பொந்துக்குள் பேடை முட்டையிட்டுக் குஞ்சு பொரிக்கும்.

மிருகக் காட்சிச்சாலையிலுள்ள குளங்களில் சில ஆண் மீன்களும் இப்படியே வெகு அக்கறையாகத் தம் குஞ்சுகளைப் பாதுகாக்கும். காட்-ஃபிஷ் என்ற மீன் வகையில் ஆண், தன் பேடை முட்டையிடும் சமயம் பக்கத்திலேயே காத்திருந்து, அது முட்டைகள் இட்ட

தும் அவைகளைத் தன் வாயில் அடக்கிக் கொள்ளும். அப்போது அதன் வாய் மிகவும் உப்பிப் பருத்திருக்கும். முட்டைகள் வெடித்துக் குஞ்சுகள் வெளியே வருகிற வரை இப்படியே வாயில் வைத்திருக்கும்; அதுவரை ஆகாரமே உட்கொள்ளாது.

விலங்குகள் மொத்தத்தில் தம் குடும்பப் பொறுப்பை உணர்ந்து சில காலம் ஒன்றி வாழும். ஆனால் இனத்துக்கு இனம் இந்தக் கால எல்லை மாறுபடும். யானைகள் பிறந்து 25 ஆண்டுகள் வரைக் குங்கூடத் தாயின் பின்னாலேயே திரிவது வழக்கம்.

குரங்குகளுக்குப் பருவ வயசு வர ஆறேழு ஆண்டுகள் பிடிக்கும். பருவ வயசு வந்த பிறகும் சிங்கக் குட்டி, ஓநாய் இவை தம் பெற்றோர்களுடனேயே இருந்து வரும்.

எலி, மூஞ்சூறு போன்ற சிறு பிராணிகள் தம் குட்டிகளைச் சில வார காலத்துக்குள்ளேயே வெளியே விரட்டி அனுப்பிவிடும். அதற்குள் இந்தக் குட்டிகளும் தாங்களே உணவைத் திருடித் தின்னத் தெரிந்துகொண்டு விடும்; தாமே வேறு குடும்பம் நடத்தவும் தொடங்கிவிடும். ஏதோ தற்செயலாகவோ இயல்பாகவோ குட்டிகள் பல விஷயங்களைத் தெரிந்துகொள்கின்றன என்று சிலர் எண்ணுகிறார்கள். ஆனால் பெரும்பாலான விலங்குகள் மிகவும் அக்கறையோடு தம் குட்டிகளை இந்த மாதிரி பழக்குகின்றன.

கனவு நனவாக

உன் கனவு நனவாக மிகச் சிறந்த வழி நீ விழித்துக்கொள்வதுதான்.

—ஜே. எம். பவர்

வெற்றியின் சூட்சுமம்

புகழைப்போல் வெற்றி தருவது வேறில்லை.

—ஜான் ஹஸ்டன்

இன்பம் அநுபவிக்கும் வயசு

அமெரிக்க ஸெனேட்டரான தியொடோர் க்ரீன் என்பவர் தமது 87-ஆம் பிறந்ததினக் கொண்டாட்டத்தில் கூறியது இது: "கிழவனாகக் கிழவனாக வாழ்க்கை இன்பங்களையெல்லாம் கைவிட வேண்டும் என்றே பலரும் சொல்கிறார்கள். வாழ்க்கை இன்பங்களையெல்லாம் கைவிடக் கைவிடத்தான் கிழத்தனம் வருகிறது என்பது என் அபிப்பிராயம்."

அறிவு உண்மையில் வளருகிறதா?

அந்த நாளில் அச்சு இல்லை; ஒரே பிடி அன்னம்; இதற்காக ஞானி இன்று ஒரு சுலோகம் சொல்லிவிட்டுப் போவார்; நாளை ஒன்று சொல்லிப் போவார். இம்மாதிரி ஞானம் பரவிக் கொண்டிருந்தது. இப்பொழுதோ எவ்வளவு அச்சகம் வெளியிடுவோர் இருக்கிறார்கள்! அப்படியிருந்தும் முன்னாளில் நடந்த அறிவுப் பிரசாரத்தின் அளவு இப்பொழுது நடக்கவில்லை. காரணம்: அறிவை விற்கத் தொடங்கிவிட்டோம்!

—விநோபா பாவே

விவாக மோதிரம்

மோதிரம் வட்டவடிமானது. முதலும் முடிவும் இல்லாதது. இதனுல் சாசுவதமாய்த் தொடர்ந்த உண்மைக் காதலின் சின்னமாக முன் காலத்தில் அதை மதித்தார்கள்.

யூதர்களிடமிருந்துதான் இந்த வழக்கம் வந்திருக்க வேண்டும் என்று நினைக்கிறுர்கள். வியாபார ஒப்பந்தங்களைப் பரஸ்பரம் அங்கீகரித்து ஊர்ஜிதம் செய்யும்போது, யூதர்கள் மோதிரம் மாற்றிக் கொள்வது பழைய வழக்கம்.

புராதன எகிப்தியர் விவாகத்தில் மாத்திரமே மோதிரம் உபயோகித்தார்கள். அந்தக் காலத்தில் காசு கிடையாது. 'மோதிரப் பணம்' என்று சொல்லி வட்டமான நகையை மணப் பெண்ணின் விரலிலே மணமகன் அணிவிப்பான். தன் சொத்தையெல்லாம் அவளுக்குப் பாத்தியம் ஆக்கினுன் என்று இதற்குப் பொருள்.

ரோம் நாட்டினரிடமிருந்துதான் சாவி வளையம் புழக்கத்துக்கு வந்தது. தங்கம், வெள்ளி, தந்தம், இரும்பு இவற்றிலெல்லாம் 'சாவி மோதிரம்' செய்து அதில் ஒரு சாவியை மாட்டி மணப் பெண்ணுக்கு மணமகன் கொடுப்பான். ''என் வீடு, மானம் இவற்றின் சாவியை எல்லாம் உன்னிடம் அளிக்கிறேன்'' என்ற வசனம் அதில் பொறித்திருக்கும்.

ஸாக்ஸன் என்ற பூர்விக ஜெர்மன் இனத்தினர் சிலரும் இதே மாதிரி சாவி வளையம் செய்வார்கள். அதில் மாமனுர் வாக்காக, ''உன் மானங் காப்பவளும் மனைவியும் சாவிகளை வைத்துக்கொள்பவளுமாக என் பெண்ணை உனக்கு அளிக்கிறேன்'' என்று செதுக்கியிருக்கும்.

விவாக மோதிரங்களை எந்தப் பொருளிலும் செய்வார்கள். ஆயினும், தங்கத்தில்தான் முக்கியமாய்ச் செய்வார்கள். அதை வளைக்கலாம்; முறிக்க முடியாது. அது உண்மைக் காதலைப் போன்றது. உருக்க உருக்க மாற்றுயரும்; ஆனுல் அழியாது.

நான்காவது விரலே மோதிர விரல். அதில் உள்ள கறுப்பு ரத்தக் குழாய் நேரே இருதயத்துக்குப் போய்ச் சேர்வதாகப் பழங் காலத்திலே ஒரு நம்பிக்கை!

—'எக்ஸ்பிரஸ் அண்ட் ஸ்டார்'

யுத்தகாலத்தில் நிகழ்ந்து, இதுவரையில் வெளிவராத ஒரு விபத்துப்பற்றிய ரகசியம்.

கப்பல் வெடித்தது

ராபர்ட் ஜே. எட்வர்ட்ஸ்

பம்பாய் நகரத்தில் அன்று பருவக் காற்று மெதுவாக வீசிக்கொண்டிருந்தது. துறைமுகத்தில் சாமான்களை இறக்கும் இடத்துக்கு ஒரு மைல் தொலைவில் தன் குடிசைக்குள்ளே முதிய ஹிந்து ஒருவன் உட்கார்ந்திருந்தான்.

அப்போது எங்கிருந்தோ குப்பென்று ஓர் அனல்காற்று அவன் முகத்தில் வீசியது. கண்ணைப் பறிக்கும்படி ஒரு வெளிச்சம் அந்தக் குடிசையின் இருண்ட மூலை முடுக்கெல்லாம் பாய்ந்து பரவியது. பயங்கரமான வெடியோசையினால் தரை அதிர்ந்தது. ஒரு நிமிஷ நேரங் கழித்து 28 ராத்தல் நிறையுள்ள தங்கக் கட்டி ஒன்று அந்தக் குடிசையின் தகரக் கூரையைத் துளைத்துக்கொண்டு உள்ளே போய்த் தொப்பென்று அவன் காலருகில் விழுந்தது.

அப்போது மணி பிற்பகல் நாலு இருக்கும்; இது நடந்தது 1944 ஏப்ரல் 14-ஆம் தேதியில். மகா யுத்த காலத்திலே நேர்ந்த பெரிய விபத்துக்களில் ஒன்று அது. இது வரை அதைப்பற்றி ஏதோ சிறு சிறு தகவல்கள்தான் வெளியாகியிருக்கின்றன. யுத்தகாலமானதால் இந்தக் கோரக் காட்சியைப் பற்றிய விவரம் பொதுமக்களுக்கும் எதிரிக்கும் தெரியாதபடி தணிக்கை செய்து அடக்கிவிட்டார்கள் அதிகாரிகள்.

சமீபத்தில் அமெரிக்கக் கப்பற் படைப் பிரசுரம் ஒன்றை அந்த இலாகாவினர் தங்களுக்குத் தெரிந்த சிலரிடம் வழங்கினார்கள். அதிலிருந்தும் இன்னும் பிறர் மூலமாகவும் வெடிவிபத்துப் பற்றிய முழுத் தகவலும் கிடைத்திருக்கிறது.

1943-வாக்கில் கட்டிய 'எஸ். எஸ். ஃபோர்ட் ஸ்டிகினி' என்ற பிரிட்டிஷ் சாமான் கப்பல் (7000 டன் எடை உள்ளது) அன்று மற்றும் பல கப்பல்களோடு விக்டோரியா டாக், பிரின்ஸ் டாக் என்ற பகுதிக்கு அருகில் தங்கியிருந்தது. ஹல், கிரிம்ஸ்பி என்ற ஊர்களிலிருந்து உலர்ந்த மீன் அதில் வந்திருந்தது. அதோடு 3000 டன் பருத்தி, 20 லட்சம் பவுன் மதிப்புள்ள 155 தங்கக் கட்டிகள், 1700 டன் வெடிகுண்டுகளும் வெடிமருந்துச் சாமான்களும் அதில் இருந்தன. துறைமுக விதிகளின்படி வெடிமருந்துச் சாமான், வெடிகுண்டு இவைகளைத் தான் முதலில் இறக்க வேண்டும். ஆனால் நாள்பட்டு விடுவதால் மீன்கள் அதற்குள் அழுகிவிடும். ஆகவே, மீன்களை முதலில் இறக்குவதென்று ஏற்பாடாயிற்று.

துறைமுகத்தில் வேலை செய்யும் ஆள் ஒருவன் இரண்டாவது அடுக்கில் இருந்த பருத்தி 'பேல்' ஒன்றின்மேல் சாய்ந்துகொண்டிருந்தான். விபத்து நேரப்போகிறது என்பதை முதலில் தெரிந்து கொண்டவன் அவன்தான். மெதுவாகப் பருத்தி 'பேல்'களிலிருந்து புகை கிளம்பியது தெரிந்ததும், அந்த ஆள் நேராகக் கப்பலின் மேல் தளத்துக்கு ஓடிப் போய் விஷயத்தைச் சொன்னான்.

பிற்பகல் 2-18-க்கு 'ஃபோர்ட் ஸ்டிகினி'யிலிருந்து விட்டு விட்டுக் கீச்சென்று 'நீராவி விசில்' ஊதுவது கேட்டது. உடனே துறைமுகத்தில் இருந்த கப்பல்களிலிருந்தும் அப்படியே பதில் 'விசில்' கேட்டது. யாராவது பெரியவர்கள் - நாட்டின் தலைவர்கள் - விஜயம் செய்யும்போதும் புதிய கப்பல்களை முதல் முதலாக மிதக்க

மூலம்: ஈவினிங் ஸ்டாண்டர்ட் (ஆங்கிலம்), லண்டன்.

விடும்போதும் இப்படி அபஸ்வர மாகக் கப்பல்களில் 'நீராவி விசில்' ஊதுவது கேட்கும். ஆனால் இப் போது எல்லார் உள்ளத்திலும் ஒரே திகில் குடிகொண் டிருந்ததே யொழிய மகிழ்ச்சிக்கே அங்கே இடம் இல்லை. 'ஃபோர்ட் ஸ்டிகினி' யில் சிவப்புக் கொடி ஆடியதி லிருந்தே 'வெடிமருந்துக் கப்பலில் தீப் பற்றிவிட்டது' என்ற விஷயம் தெரிந்துவிட்டது.

துறைமுகத்தை நோக்கி நெருப்பு அணைக்கும் எஞ்சின்கள் இரண்டு விரைந்து சென்றன. பருத்தி 'பேல்'கள் இருந்த அடுக்கின் மேல் தண்ணீர் விட்டு அணைக் கப் பார்த்தார்கள். அப்படியும் தீ பரவிக்கொண்டுதான் இருந்தது.

துறைமுக மேலதிகாரி கர்னல் ஜே. ஆர். ஸாட்லர்தான் நெருப் பணைக்கும் வேலையில் முக்கியமாக ஈடுபட்டிருந்தார். அவருக்கு, பாவம், தர்ம சங்கடமான நிலை!

பருத்தி 'பேல்'களுக்குக் கீழ் 1700 டன் வெடிமருந்துச் சாமான் கள் இருந்தன. நகரத்திலுள்ள நெருப்பணைக்கும் சாதனங்களை இங்கே கொண்டு வந்தாலும் இந் தத் தீயை அணைக்க முடியுமா? அந்தக் கப்பல் தலைவனுக்கு, 'தங்கக் கட்டிகள் எக்கேடு வேண்டு மானாலும் கெடட்டும்! உடனே தட்டித் தடுமாறிக் கொண்டாவது துறைமுகத்தின் வெளிப்பகுதியில் கப்பலைச் செலுத்திக்கொண்டு போய் விடுங்கள்' என்று உத்தர விடுவதா?

ஆனால் கப்பலை அப்புறப் படுத் தினால் துறைமுகத்தில் வரிசையாக நிறுத்தியிருக்கும் நெருப்பு அணைக் கும் எஞ்சின்கள் அதை நெருங்க முடியாதே! துறைமுகத்துக்கு வெளியே கப்பலில் இருக்கும் இரண்டொரு 'ஹோஸ்'களையும் நீராவிச் சாதனங்களையுந்தான் பயன்படுத்த முடியும். துறைமுகத் தின் வெளிப் பகுதிக்குப் போய்ச் சேருவதற்குள் கப்பலே வெடித்து விடலாம்.

கர்னல் ஸாட்லர் ஒரு முடி வுக்கு வந்தார். 'ஃபோர்ட் ஸ்டி கினி' இருக்கும் இடத்திலேயே இருக்கவேண்டும் என்று உத்தரவு இட்டு விட்டார். டன் கணக்கில் தண்ணீரை அந்தக் கப்பலின்மேல் பொழிந்து தள்ளினார்கள். அந்தக் கனம் தாங்காமல் அது ஒரு பக்கம் சாய்ந்து கொடுத்தது. ஆனாலும் புகை பின்னும் கவிந்துகொண்டு தான் வந்தது. கப்பலின் வெளிப் பகுதி உஷ்ணத்தால் சிவந்து கிடந் தது.

சற்று நேரத்துக்கெல்லாம் பேரிரைச்சலோடு கப்பலே வெடித் துச் சிதறியது. புகையும் தூளும் ஆயிரக்கணக்கான அடிகளுக்குமேல் மஞ்சள் மப்பைப்போல் கிளம்பின. கப்பலின் 'பாயிலர்' ஒன்றுமட்டும் தூள் ஆகாமல் அப்படியே அங் கிருந்து அரை மைல் தொலைவில் டிராம் செல்லும் பாட்டையில் வந்து விழுந்தது.

கப்பலின் எஃகுச் சட்டம் முத லிய மற்றப் பகுதிகள் எல்லாம் துறைமுகத்திலும் நகரத்தின் சில பாகங்களிலும் சிதறி விழுந்தன. நெருப்பணைக்கும் எஞ்சின்கள் பதி னெட்டும் அவைகளில் இருந்த ஆட்களும் மறைந்த சுவடே தெரியவில்லை. தொலைவில் இருந்த கட்டிடமெல்லாம் வெடித்து நாசம் ஆகிவிட்டன. ஐம்பது கிடங்கு கள் தரைமட்டம் ஆயின.

துறைமுகத்தில்தான் சேதம் படு மோசமாக இருந்தது. கடலில் அலை கொந்தளித்து எழும்பி நீர் மட்டத்துக்குமேல் பாய்ந்தது. கப் பல்களைக் கட்டியிருந்த வடங்கள், எஃகுக் கம்பிகள் எல்லாம் அறுந்து போயின; கப்பல்கள் துறைமுக அடிக்கட்டிடத்தில் மோதிச் சித றுண்டன. மொத்தம் 50,000 டன் எடை உள்ள பதினொரு கப் பல்கள் கோணியும், எரிந்து கரி யாகியும், ஒன்றுக்கும் லாயக்கில் லாமல் போயின. கரையோரம் சுற்றும் 5000 டன் எடை உள்ள ஒரு கப்பலை அப்படியே அலை அடிக்கட்டிடத்தின்மேல் தூக்கிப் போட்டதால் அது அப்படியே முறிந்துவிட்டது. இவை தவிர ஒன்பது கப்பல்கள் கடுமையாகச் சேதம் அடைந்தன.

'ஃபோர்ட் ஸ்டிகினி' வெடித்த தால் சுமார் 900 பேர் மாண்டார் கள். இவர்களில் நூற்றுக்கணக்கான

வர்கள் துறைமுகத்தில் வேலை செய்பவர்கள். இவர்கள் தப்பி ஓடத்தான் பார்த்தார்கள். ஆனால் அங்கே மிகவும் கண்டிப்பான ஒரு போலீஸ்காரன் இவர்களுடைய அனுமதிச் சீட்டுகளைக் காட்டிவிட்டுத்தான் போகவேண்டுமென்று சொல்லிவிட்டான்! இவர்களைத் தவிர நூற்றுக்கணக்கான ஸோல்ஜர்கள், மாலுமிகள், சாதாரண மக்கள் ஆகியோரும், இருந்த இடம் தெரியாமல் நசுங்கிக் கூழாகிவிட்டார்கள். 3000 பேருக்குக் காயம்.

இதோடு விட்டதா? கப்பல் வெடித்தபோது மேலே நெருப்புத் துண்டங்கள் சிதறி விழுந்ததால் எத்தனையோ கட்டிடங்களிலும் தீப்பற்றிக்கொண்டது. இப்படியே எல்லாம் சேர்ந்து பெருந்தீயாகக் கொழுந்து விட்டு எரியத் தொடங்கியது; வடக்கு நோக்கியும் பரவலாயிற்று. மறு நாளைக்குள் பம்பாயில் பெரும் பகுதியே நாசமாகி விடும்போல் இருந்தது. நெருப்பு அணைக்கும் படையோ அழிந்து விட்டது. ஊரைக் காக்க ஒரே வழிதான் இருந்தது. இன்னும் தீப்பற்றாத பகுதிகளுக்கும் பற்றிய இடத்துக்கும் நடுவே தீ எட்டாதபடி இடைவெளிபோல் ஒரு பாட்டை வகுத்தாக வேண்டும்.

ஸோல்ஜர்கள் அந்த இடத்துக்குப் போய்ச் சேர்ந்தார்கள்; அங்கே இருந்தவர்களையெல்லாம் உடனே வெளியேறி விடும்படி உத்தரவிட்டார்கள். ஸாப்பர்களும் கட்டிடம் இடிப்பவர்களும் சேர்ந்து அங்கிருந்த வீடுகளுக்கு வெடி வைத்துத் தகர்த்தார்கள். ஒரு நாள் இரவு பகல் இந்த வேலை நடந்தது. கடைசியில் அந்த இடைவெளியில் வெறும் கற்குவியல்கள்தான் மிஞ்சின. அவைகளைத் தாண்டித் தீ பரவாமல், அதுவரையில் பரவியிருந்த இடத்தோடு கனிந்து அகப்பட்டதையெல்லாம் எரித்துப் பொசுக்கியது. இரண்டு வாரங் கழித்து அந்தத் தணலின் மேல் நீர் விட்டு அவித்தார்கள். அமெரிக்க நிபுணர்கள் மொத்தம் 1 பில்லியன் டாலருக்கு (10,000,00×10,000,00) நஷ்டம் ஏற்பட்டிருக்கும் என்று நிர்ணயித்தார்கள்.

தங்கக் கட்டியில் எவ்வளவு கிடைத்தது என்ற தகவல் வெளியாகவில்லை. நெருப்பு அணைக்கும் எஞ்சின்களை நம்பியிராமல் துறைமுகத்தின் வெளிப் பகுதியில் ஆழ்ந்த கடல்நீரில் 'ஸ்டிகினி'யை மூழ்கடிக்கும்படி கர்னல் ஸாட்லர் உத்தரவிட்டிருந்தால் நகரம் ஒரு வேளை பழுதடையாமல் இருந்திருக்கலாமே என்றால், அதையுந்தான் எப்படி நிச்சயமாகச் சொல்ல முடியும்?

பின்னால் அதிகாரிகள் விசாரணை செய்தபோது, ஸாட்லர் கடலில் 'ஸ்டிகினி'யை மூழ்கடிக்கும்படி உத்தரவிட்டிருக்கவேண்டும் என்றுதான் அபிப்பிராயம் தெரிவித்தார்கள்.

இடியும் சிறுவனும்

இரவிலே பெரிய இடி இடித்தது. அடுத்த அறையிலே தங்கள் ஐந்து வயசுக் குழந்தை படுத்திருக்கிறானே, அவன் விழித்துக்கொண்டு ஏதாவது பயப்படப் போகிறானே என்று பெற்றோர் எண்ணினார்கள். மெதுவாக அந்த அறைக் கதவைச் சிறிது திறந்து இடுக்கால் பார்த்தார்கள். சிறுவன் பாதி மூடிய கண்களுடன், ''இந்த நேரத்திலே அப்பா ரேடியோவை வைத்துக்கொண்டு என்ன செய்கிறார்?'' என்று கேட்டான்.

—'எக்ஸ்பாண்டிங் ஸர்க்கிள்'

பல்கேரியச் சிறுகதை:

படிக்கட்டு

ஹ்ரிஸ்டோ ஸ்மிர்னென்ஸ்கி

உட்பொருள் செறிந்த இந்த உவமைக் கதையை எழுதிய ஆசிரியர் 1898-இல் பிறந்து 1923 வரை வாழ்ந்தவர். இதை நமக்கு உதவியவர் டில்லியில் உள்ள பல்கேரியன் லிகேஷன் காரியாலயத்தார்.

[“எனக்கும் இதற்கும் சம்பந்தமில்லை” என்று சொல்கிறவர்களுக்கெல்லாம் அர்ப்பணம்.]

“நீ யார்?” என்று அவனைக் கேட்டான் சைத்தான்.

“பிறப்பால் நான் ஒரு பாட்டாளி; கந்தல் உடுத்த சகல ஏழைகளும் என் சகோதரர்கள். உலகம் எவ்வளவு விகாரமா யிருக்கிறது! மக்களெல்லாம் எவ்வளவு துர்ப்பாக்கியசாலிகளா யிருக்கிறார்கள்!”

வணங்காமுடியனாய், முஷ்டியை நீட்டிக்கொண்டு, இப்படிச் சொன்னான் வாலிபன். படிக்கட்டில் அவன் நின்றுகொண் டிருந்தான். ரோஜாப் பூக் கோலம் போட்ட வெள்ளைச் சலவைக் கல் படிக்கட்டு. அவன் பார்வை எங்கேயோ வெகு தூரத்தில் பதிந்திருந்தது. அங்கே சேறுங் கலங்கலுமாய் வெள்ளப் பெருக்கெடுத்த ஆற்றின் அலைகளைப்போல், துன்பத்தில் உழலும் பழுப்பு நிற ஜனக்கும்பல் ஒன்று முணுமுணுத்து நெளிந்துகொண் டிருந்தது. அதில் இருந்தவர்கள் நிம்மதியின்றி ஆடிக்கொண் டிருந்தார்கள். சில சமயம் பேராத்திரம் கொள்வார்கள். சூம்பி அழுக்குப் படிந்த கைகளை மரங்கள் அடர்ந்த காடுபோல் உயரத் தூக்குவார்கள். இடி முழக்கம்போல் கோப வார்த்தைகளைச் சொரிவார்கள். அவர்கள் போட்ட கூச்சல் காற்றைக் கிழித்துக்கொண்டு சென்றது. தூரத்திலே முழங்கும் பீரங்கி ஒலிபோல், அது எங்கோ போய் மெல்ல மெல்ல மடிந்தது. மக்கள் கூட்டம் வரவரப் பெருகியது. மேகம்போல் மஞ்சள் நிறத் தூசிப் படலம் எழுந்தது. பழுப்பு வர்ணத்திரைக்கு முன்னே கரிய நிழலுருவங்கள்போல் பலர் எழுந்து நின்றார்கள். வரவர அவர்களுடைய உருவங்கள் தெளிவாகத் தெரிந்தன. ஒரு கிழவன் முன்னே வந்து தலைகுனிந்து பூமியை நோக்கினான். தான் இழந்த இளமையை மீண்டும் பெற அவன் ஆசை கொண்டானோ என்று தோன்றியது. கிழவனின் கந்தல் சட்டை நுனியைப் பிடித்துக்கொண் டிருந்தாள் ஒரு சின்னஞ் சிறு பெண். அவள் காலிலே பாதரட்சை இல்லை. மிருதுவான கண்கள்; சோளப் பூப் போன்ற நீலநிறக் கண்கள். உயர்ந் தோங்கிய படிக்கட்டை அந்தக் கண்களால் பார்த்தாள்; புன் சிரிப்புப் பூத்தாள். அவர்களுக்குப் பின்னே கந்தலுடுத்துச் சூம்பிய பழுப்பு நிற உருவங்களைத் தவிர வேறெவரும் இல்லை. அவர்களெல்லாரும் மிக மெல்ல ஒரு பிலாக்கணப் பாடலைக் கோஷ்டியாகப் பாடிக்கொண்டு வந்தார்கள். சிலர் கீச்சுக் குரலில் சீட்டியடித்தார்கள். மற்றவரின் ஜேபியிலே கையை வைத்துக் கொண்டு உரக்கத் தொண்டை கிழியக் கத்தினார்கள். பித்துப் பிடித்தது போல் அவர்களுடைய கண்கள் ஒளி விட்டன.

“பிறப்பால் நான் ஒரு பாட்டாளி; கந்தல் உடுத்த சகல ஏழைகளும் என் சகோதரர்கள். உலகம் எவ்வளவு விகாரமா யிருக்கிறது! மக்களெல்லாம் எவ்வளவு துர்ப்பாக்கியசாலிகளா யிருக்கிறார்கள்!

ஓ! அதோ அங்கே மேலே இருப்பவர்களே, நீங்கள்..''

வணங்கா முடியனுய், முஷ்டியை நீட்டிக்கொண்டு, இப்படித் தொடங்கினுன் வாலிபன்.

''உனக்கு அதோ அங்கே மேலே இருப்பவர்களைக் கண்டாலே வெறுப்பா யிருக்கிறது; இல்லையா?'' என்று வாலிபனை நோக்கிக் குனிந்து, குறும்புத்தனமாய்க் கேட்டான் சைத்தான்.

''ஓ! அதோ மேலே இருக்கிருர்களே, அந்த ராஜாக்கள், சக்கரவர்த்திகள் மீதெல்லாம் நான் வஞ்சம் தீர்த்துக்கொள்ளப் போகிறேன்; இதோ இருக்கும் என் சகோதரர்களுக்காக மிகக் குரூரமாய் அவர்களை நான் பழிவாங்கப் போகிறேன். இதோ இந்தச் சகோதரர்களின் முகந்தான் எப்படி அரக்கைப்போல் மஞ்சளா யிருக்கிறது! இவர்கள் புலம்பி அழும் அழுகையோ டிசம்பர் மாசத்துச் சூருவளி போல் பயங்கரமா யிருக்கிறது. அம்மணமாய் ரத்தம் சிந்திக்கொண் டிருக்கும் இவர்களுடைய உடலைப் பார்! இவர்கள் புலம்பியழும் விம்மலைப் பார்! இவர்களுக்காக நான் பழி வாங்கப்போகிறேன்! என்னை விடு!''

சைத்தான் புன்சிரிப்புப் பூத்தான்; ''மேலே உள்ள அவர்களை நான் பாதுகாக்கிறேன். ஏதாவது லஞ்சம் பெருமல் அவர்களைக் காட்டிக் கொடுக்க மாட்டேன்'' என்ருன்.

''என்னிடம் பொன்னும் மணியும் இல்லை; உனக்கு லஞ்சம் கொடுக்க ஒன்றும் இல்லை.. நான் ஏழை; கந்தல் உடுத்த வாலிபன்.. ஆனுல், என் தலையைக் கொடுக்கத் தயாரா யிருக்கிறேன்!''

சைத்தான் மறுபடியும் புன்சிரிப்புச் சிரித்தான்: ''அடேடே! அவ்வளவு பெரிசாக ஒன்றும் நான் கேட்கவில்லை. நீ எனக்கு உன் காதைக் கொடுத்தால் போதும்'' என்ருன்.

''காதுதானே வேண்டும்! சந்தோஷமாய்க் கொடுக்கிறேன்.. ஆனுல், அப்போது ஒன்றும் என் காதிலே விழாதே..''

ஆறுதலான குரலில், ''விழும், விழும்'' என்று சொல்லிய சைத்தான் நகர்ந்து, வாலிபனுக்குக் கொஞ்சம் வழிவிட்டு, ''ஏறு'' என்ருன்.

வாலிபன் முன்னே பாய்ந்தான். ஒரே எட்டில் மூன்று படி தாண்டினுன். மயிரடர்ந்த சைத்தானின் கை வாலிபனைப் பிடித்திழுத்து நிறுத்தியது. ''போதும்! நில் கீழே. உன் சகோதரர்கள் எப்படிப் புலம்புகிருர்கள், கேள்'' என்ருன் சைத்தான்.

வாலிபன் சற்று நின்று உற்றுக் கேட்டான்: ''என்ன ஆச்சரியம்! இவர்களெல்லாம் திடீரென்று ஆனந்தமாய்ப் பாடுகிருர்களே! ஒரு கவலையுமற்றுச் சிரிக்கிருர்களே!..'' என்ருன். திரும்பவும் முன்னுல் பாய்ந்தான்.

மறுபடியும் வாலிபனைச் சைத்தான் தடுத்து நிறுத்தினுன்; ''அடுத்த மூன்று படியிலும் எனக்கு உன் கண்களைத் தர வேண்டும். இதுவே நான் கேட்பது'' என்ருன்.

வாலிபன் ஏக்கத்தோடு ஏதோ ஜாடை செய்து, ''ஆனுல், அப்போது என் சகோதரர்களையோ,

நான் பழி வாங்க விரும்புகிறவர்களையோ காண முடியாதே!' என்றான்.

''காணலாம்; காணலாம்.... உனக்கு வேறு கண் கொடுக்கிறேன்; மிக நேர்த்தியான கண்'' என்றான் சைத்தான்.

வாலிபன் மீண்டும் மூன்றடி மேலே ஏறினான். பிறகு நின்று கீழே பார்த்தான்.

''அம்மணமாய் ரத்தம் சிந்திக்கொண்டிருக்கிறார்கள் என்றாயே, அந்த இவர்களுடைய உடம்பைப் பார்'' என்று சைத்தான் சொன்னான்.

''அட ஆண்டவனே! என்ன ஆச்சரியம்! இவ்வளவு அழகாய் எப்போது இவர்கள் ஆடை அணிந்தார்கள்! இவர்கள் ரத்தம் சிந்தவில்லை; அதற்குப் பதில் சிவப்பு ரோஜா மலர்களைக்கொண்டு அல்லவா அற்புதமாய் அலங்காரம் செய்துகொண்டிருக்கிறார்கள்!..''

ஒவ்வொரு மூன்று படிக்கும் இப்படிச் சைத்தான் தனக்குச் சிறிது சிறிது லஞ்சம் வாங்கிக்கொண்டான். வாலிபனும் சிகரத்தை அடைவதற்காகவும் ராஜாக்கள் மீதும் சக்கரவர்த்திகள்மீதும் பழி வாங்குவதற்காகவும் சைத்தான் கேட்டதையெல்லாம் மனம் வந்து கொடுத்தான்.

ஆனால், என்ன அதிசயம்! இன்னும் ஒரே ஒரு படிதான் பாக்கி. அதைக் கடந்தால் சிகரத்தை அடைந்துவிடலாம்! அவனுடைய சகோதரர்களுக்காக வஞ்சமும் தீர்த்துக்கொண்டு விடலாம்!

''பிறப்பால் நான் ஒரு பாட்டாளி; கந்தல் உடுத்த சகல ஏழைகளும்..''

''வாலிபனே, இன்னும் ஒரே ஒரு படிதான் பாக்கி; ஒரே ஒரு படி. அப்புறம் நீ வஞ்சம் தீர்த்துக் கொண்டு விடலாம். ஆனால், இந்த ஒரு படிக்கு மட்டும் நான் இரட்டை லஞ்சம் வாங்குவது வழக்கம்; உன் இருதயம், உன் பழைய நினைவு இரண்டையும் எனக்குக் கொடுக்க வேண்டும்'' என்றான் சைத்தான்.

வாலிபன் கையைத் தூக்கினான்: ''என் இருதயத்தையா! ஐயோ! மாட்டேன். இது ரொம்பக் குரூரம்!''

சைத்தான் கலகல என்று சிரித்தான். அதிகாரக் குரலில் சொன்னான்: ''நான் ஒன்றும் அப்படிக் குரூரமானவன் அல்ல. நீ கொடுப்பவற்றுக்குப் பதிலாக, உனக்குத் தங்க இருதயம் கொடுப்பேன்; புதிய நினைவு கொடுப்பேன். இதற்கு நீ சம்மதிக்காவிட்டால், இந்தப் படியை நீ கடக்கவே முடியாது; உன் சகோதரர்களுக்காக வஞ்சம் தீர்க்கவும் முடியாது. உன் சகோதரர்களின் முகந்தான் எப்படிப் புழுதிமாதிரி இருக்கிறது! டிசம்பர் மாசத்துச் சூறாவளிபோல் எப்படித்தான் பயங்கரமாய் அவர்கள் அழுகிறார்கள்!''

சைத்தானின் கேலி நிறைந்த பச்சைக் கண்களை வாலிபன் உற்றுப் பார்த்தான்: ''ஆனால், நான் எல்லாவற்றையும்விடப் பெருந் துர்ப்பாக்கியசாலியாய்ப் போய் விடுவேனே. என்னிடம் உள்ள மனிதப் பண்புகளையெல்லாம் நீ பிடுங்கிக்கொண்டு விடுகிறாயே!''

''அதுதான் இல்லை. அதற்குப் பதிலாக நீதான் சகலமான ஜனங்களையும்விடப் பெரும் பாக்கியசாலியாக இருக்கப்போகிறாய்!..எல்லாம் சரி. உனக்குச் சம்மதமா, இல்லையா? சொல்லிவிடு. உன் இருதயம், உன் நினைவு இரண்டையும் தரவேண்டும் - இவ்வளவுதான்.''

வாலிபன் சிந்தனையில் ஆழ்ந்தான். கரிய நிழல் ஒன்று அவன் முகத்திலே ஆடியது. சுருக்கம் விழுந்த அவன் நெற்றியில் வேர்வை துளித்தது. ஆத்திரத்தோடு முஷ்டியை நீட்டினான்; முணுமுணுத்தான்; பல்லைக் கடித்தான். ''சரி; அப்படியே தருகிறேன்; எடுத்துக்கொள்'' என்றான்.

பெருங்கோபமும் துயரமும் நிறைந்தவனாக, கரிய கேசம் பின்னே அலைவீச, கோடைக் காலத்துப் புயல்போல் அந்தக் கடைசிப் படியை வாலிபன் தாண்டினான். அவன் சிகரத்தை அடைந்துவிட்டான். திடீரென்று அவன் முகத்தில் ஒரு புன்சிரிப்பு ஒளி செய்தது; கண்களில் சாந்தியும் களிப்பும் சுடர் விட்டன; முஷ்டி தளர்ந்தது. விருந்தும் கோலாகலமுமாய் இருக்கும் ராஜாக்களைப் பார்த்தான். பிறகு, கீழே கந்தலுடுத்து ஆத்திரம் கொண்டு கதறித் திட்டும் கும்பலைப் பார்த்தான். பார்க்கத்தான் பார்த்தான்; ஆயினும், அவனுடைய நெற்றி நரம்பு ஒன்று கூடச் சுளிக்கவில்லை. வாலிபனின் முகத்திலே தேஜஸும் களிப்பும் நிறைந்திருந்தன. அவனுக்குப் பரமதிருப்தி ஏற்பட்டுவிட்டது. கீழே நெளியும் மக்களெல்லாம் உல்லாச உடை உடுத்திருப்பதாகவே தோன்றினார்கள்; அவர்களுடைய புலம்பலெல்லாம் இன்ப கீதமாக அவனுக்கு ஒலித்தன.

''நீ யார்?'' என்று குறும்புத்தனமாய்க் கேட்டான் சைத்தான். தொண்டையிலிருந்து வந்தது அந்தக் கேள்வி.

''பிறப்பால் நான் ஒரு ராஜா; தேவர்களெல்லாம் என் சகோதரர்கள். அடடா! உலகந்தான் எவ்வளவு அழகா யிருக்கிறது; மக்கள் எவ்வளவு பாக்கியசாலிகளா யிருக்கிறார்கள்!''

சாஸ்திரியின் பரீட்சை

மூன்று வயசுச் சிறுமிக்கு அவ்வளவாக அவதான சக்தி வளரவில்லையோ என்ற சந்தேகம் பெற்றோருக்கு ஏற்பட்டது. ஒரு மனத்தத்துவ சாஸ்திரியைக் கலந்தார்கள்.

சிறுமியைச் சாஸ்திரி பரீட்சை செய்யத் தொடங்கினார்.

''கண்ணு, பூனைக்கு எத்தனை காது? எங்கே, சொல்லு பார்க்கலாம்.''

''இரண்டு.''

''பேஷ்! கால் எத்தனை?''

''நாலு.''

''பலே பேஷ்! வால் எத்தனை?''

சிறுமிக்கு எரிச்சலாய்ப் போய்விட்டது. ''அட ஒண்ணுமே தெரியாதா உங்களுக்கு! நீங்கள் பூனை பார்த்ததே இல்லையா!'' என்று கேட்டாள்.

—'கோட் கெயிட்டீஸ்'

புஸ்தகச் சுருக்கம்:

குருட்டுப்பெண் கதை

மூலம்: **ஹெலன் கெல்லர்**

தமிழ்: **க. நா. சுப்ரமண்யம்**

இந்த ஆச்சரியமான சுய வாழ்க்கை வரலாறு 'என் கதை' என்ற தலைப்புடன் ஆசிரியை எழுதியது. அரிய மொழிபெயர்ப்புக்களையும் அசல் நூல்களையும் வெளியிடுவதில் பேரார்வம் கொண்ட 'ஜோதி நிலைய' உரிமையாளர் ஸ்ரீ அ. கி. ஜயராமன் இதை வெளியிட நமக்கு அநுமதி தந்திருக்கிறார். ஆங்கிலத்திலும் தமிழிலும் நேர்த்தியாய் எழுதவல்ல நண்பர் ஸ்ரீ க. நா. சுப்ரமண்யம் மொழிபெயர்த்துள்ள இது, அசல் தமிழ் நூல் போலவே ஓட்டம் உள்ளதாக, நயமான நடையில் அமைந்திருக்கிறது.

காப்பிரைட்: என் கதை (தமிழ் மொழிபெயர்ப்பு நூல்);
வெளியிட்டோர்: ஜோதி நிலையம், திருவல்லிக்கேணி,
சென்னை-5. விலை ரூ. 1-75.

குருட்டுப் பெண் கதை

வட அலபாமா மாகாணத்தைச் சேர்ந்த டஸ்கும்பியா என்ற சிறிய நகரில் 1880 ஜூன் 27-இல் நான் பிறந்தேன். என் தகப்பனாரின் மூதாதையான காஸ்பார் கெல்லர் என்பவர் ஸ்விட்ஜர்லாந்திலிருந்து வந்து அமெரிக்காவில் மேரிலாந்து பகுதியில் குடியேறியவர்.

என் தகப்பனாரின் பெயர் ஆர்த்தர் எச். கெல்லர். அவர் ஐக்கிய சேனையில் ஒரு தளபதி. என் தாய் கேட் ஆடம்ஸ், அவருடைய இரண்டாவது மனைவி. வயசில் அவருக்கு மிகவும் இளையவள்.

என் கண்ணையும் காதையும் ஒருங்கே பறித்த வியாதி என்னைப் பீடிக்கும் வரை, நாங்கள் ஒரு சிறிய வீட்டில் வசித்து வந்தோம். அதில் ஒரு பெரிய கூடம் இருந்தது. ஒரு சிறிய அறையும் இருந்தது. இந்தச் சிறிய அறையில்தான் வேலைக்காரர்கள் படுத்து உறங்கினார்கள். தெற்கு மாகாணங்களில் சமயத்துக்கு உபயோகப்படட்டும் என்று வீட்டுக்கருகிலே ஒரு சிறிய வீடும் அமைத்துக்கொள்வது வழக்கம். உள்நாட்டு யுத்தம் முடிந்ததும், என் தகப்பனார் எங்கள் பண்ணையிலே இந்த மாதிரி சிறிய வீடு ஒன்று கட்டினார். கல்யாணம் செய்துகொண்டதும் என் தாயும் அவரும் இந்தச் சிறிய வீட்டிலே வந்து வசிக்கத் தொடங்கினார்கள். இந்த வீட்டிலே திராட்சைக் கொடிகளும், கொடி ரோஜாக்களும், காலை மந்தாரைக் கொடிகளும் படர்ந்து அடர்ந்திருந்தன. தோட்டத்திலிருந்து பார்த்தால், லதாக்ருஹம் மாதிரியே இருக்கும். வாசல் வழியை மஞ்சள் ரோஜாக் கொடியும், தெற்குப் பிரதேசங்களுக்கே உரிய ஸ்மிலாக்ஸ் கொடியும் படுதாப் போட்டு மறைத்தன. பாடும் பறவைகளும் தேனீக்களும் அங்கே இஷ்டப்படி பறந்து திரிந்தன.

முழுக்குடும்பமும் வசித்துவந்த கெல்லர் வீடு எங்கள் லதாக்ருஹத்திலிருந்து அதிக தூரம் இல்லை. வீட்டுக்கே 'ஐவி பச்சை' என்று பெயர். ஏனென்றால் வீடு, மரம், வேலி எல்லாவற்றிலுமே பச்சைப் பசேல் என்று ஐவி என்ற பசுங்கொடி படர்ந்திருந்தது. விஸ்தாரமான தோட்டந்தான் என் இளமைப் பருவத்தின் ஸ்வர்க்க பூமி.

என் கையால் தொட்டும் மூக்கால் மோந்தும் ஊதாப் பூக்களையும் லில்லிகளையும் 'கண்டு' கொள்வேன். கோபம் வந்தால் ஆறுவதற்கு முகத்தைக் குளுமையான அந்த வேலிகளிலும் புல் பூண்டுகளிலும் புதைத்துக்கொண்டு எத்தனையோ நாள் படுத்துக் கிடந்திருப்பேன். பூக்கள் நிறைந்த அந்தத் தோட்டத்தில் இடம் தெரியாமல் உலாத்துவதிலேதான், அடடா! என்ன இன்பம்! கண் தெரியாது; எங்கிருக்கிறோம் என்று தெரியாது. ஆனால் திராட்சைக் கொடியையும் ரோஜாக் கொடியையும் தொட்டுப் பார்த்தே, நான் 'கண்டு' கொள்வேன்; இவை தோட்டத்தின் மூலையில் இடிந்து விழுந்துகொண்டிருக்கும் கோடைக் குடிசையின்மேல் படர்ந்துள்ள கொடிகள் என்று அறிந்துகொள்வேன். பக்கத்தில் ஓடும் கிளீமாடிஸ் கொடி! தவழும் மல்லிகை! பட்டுப்பூச்சி அல்லிகள்! ஆனால் எல்லாவற்றையும்விட அழகானவை அந்த ரோஜாக்கள்தான். தென் பிராந்தியத்தில் அந்த வீட்டில் இருந்த அந்த ரோஜாக்களைப் போல வேறு ரோஜாக்களை நான் வடக்கே எங்கேயும் கண்டதில்லை. தோரணம் தோரணமாகக் கொடிகள் தொங்கிக்கொண்டிருக்கும். காற்றிலே அவற்றின்

ஹெலன் கெல்லர்

இந்தச் சுய சரித்திரத்தை எழுதும் இவள் உலகப் பிரசித்தி பெற்ற ஓர் ஆச்சரியமான பெண். 1902-ஆம் ஆண்டுடன் இந்தச் சரித்திரம் முடிகிறது. அதன் பிறகு 1904-இல் கல்லூரிப் படிப்பில் சிறப்புடன் தேறிப் பட்டம் பெற்ருள்; உலகத்துப் பெரியோர்களை யெல்லாம் சந்தித்தாள். உலகெங்கும் சுற்றி, எத்தனையோ நாடுகளில் குருடர், செவிடர், ஊமைகளுக்குப் பெரும் பணி புரிந்தாள். இன்னமும் பணி புரிந்து வருகிருள். பிறந்த சில மாதங்களிலே, கண் பார்வை, காது கேட்பது, வாய் பேசுவது மூன்று ஆற்றல்களையும் இழந்த இவளுடைய வாழ்க்கை, உலகத்துக்கே ஒரு பெரிய அதிசயம்.

நறுமணம் கலந்து நிறைந்து வீசும். அந்த மணம் மண் கலக்காத மணம்! காலை வேளையிலே, பனியிலே முழுகி எழுந்த அந்த மலர்கள் என் கைக்கு எவ்வளவு மிருதுவாகவும் எவ்வளவு பரிசுத்தமாகவும் இருந்தன!

என் வாழ்க்கையின் ஆரம்பம் எளியதாகத்தான் இருந்தது. எனக்கு என்ன பெயர் வைப்பது என்பதுபற்றி விவாதம் நடந்தது. மில்டிரெட் காம்பெல் என்கிற பெயரைச் சொன்ஞர் அப்பா. அது என் முன்ஞேர்களில் மதிப்புக்குரிய ஒருவரின் பெயராம். என் தாய்க்குத் தன் தாயின் பெயரையே எனக்குச் சூட்டவேண்டும் என்று ஆசை. பாட்டியின் பெயர் ஹெலன் எவரெட். ஆனல் ஆலயத்துக்கு என்னை எடுத்துப்போன உற்சாகத்தில், எனக்குத் தாம் தீர்மானித்த பெயரைத் தகப்பஞர் மறந்துவிட்டார். பெயர் கேட்டபோது, ஹெலன் ஆடம்ஸ் என்று சொல்லிவிட்டார்!

ஆதி நாளிலிருந்தே நான் அழுத்தமும் பிடிவாதமும் குறுகுறுப்பும் உள்ளவளாக இருந்தேனும். யார் எது செய்தாலும் அதைப்போலவே நானும் செய்வேனும்! ஒரு நாள் ''டீ! டீ! டீ!'' என்று தெளிவாகக் கூச்சல் போட்டு எல்லார் கவனத்தையும் கவர்ந்துவிட்டேனும். எனக்கு வியாதி வந்த பிறகுங்கூடப் பழைய வார்த்தைகளில் ஒன்று எனக்கு நன்ருக ஞாபகம் இருந்தது. 'தண்ணீர்' (வாட்டர்) என்ற வார்த்தை. ஒரு வயசு பூர்த்தியானபோது நான் நடக்கத் தொடங்கிவிட்டேனும். குளிப்பாட்டிவிட்டு என்னைத் தன் மடியில் என் தாய் வைத்துக்கொண் டிருந்தாளாம். தரையிலே சூரிய ஒளியில் குறுக்கிட்ட இலைகள் நாட்டியம் ஆடிக்கொண் டிருந்ததைக் கண்டு, அவற்றைக் கையில் பிடிக்க ஆரவாரம் செய்துகொண்டே நான் அம்மாவின் மடியைவிட்டு எழுந்து ஓடினேனும்.

இன்பமயமான அந்தப் பருவம் நீடிக்கவில்லை. அடுத்த பிப்ரவரி மாதத்தில் எனக்கு நோய் கண்டது. படுத்து விட்டேன். என் கண்களை மூடிக் காதுகளையும் அடைத்து விட்ட நோய் அது. அந்த நோயின்போது எனக்குப் பிரக்ஞையே அற்று விட்டது. வயிற்றிலும் மூளையிலும் அடைப்பு

ஏற்பட்டு விட்டது. நான் பிழைக்கவே மாட்டேன் என்று தான் டாக்டர் நினைத்தாராம். வந்த மாதிரியே ஒரு நாள் அதி காலையில், ஜுரம் திடீரென்று நின்றுவிட்டது. அன்று என் குடும் பத்தார் சந்தோஷப்பட்டார்கள். ஆனால் அவர்களில் யாரும் - ஏன், அந்த டாக்டருமேகூட - எனக்கு இனிக் கண் திறக்காது என்றோ, காது கேளாது என்றோ நினைக்கவேயில்லை. அந்த ஜுரத் தையும் நோயையும்பற்றிய என் நினைவுகள் குழப்பமாகவே இருக் கின்றன. என் தாயின் பரிவு மட்டும் எனக்கு ஞாபகம் இருக் கிறது. என் முக்கலுக்கும், முன கலுக்கும், வலிக்கும், ஜுரத்துக்கும் ஆறுதல் அளிக்கிற வகையிலே கண்காணித்துக் காத்தவள் என் அம்மா. சிறிது சிறி தாகப் பார்வை மங்கியது நினை வுக்கு வருகிறது. ஏதோ உருத் தெரியாத பயங்கரமான சொப் பனம்போலத் தோன்றுகிறதே தவிர, இனம் தெரிந்துகொள்ளும் படியாக நினைவு எதுவும் இல்லை. அந்த மௌனமும் இருட்டும் நாளடைவில் எனக்குப் பழகி விட்டன.

நான் நோய்வாய்ப்பட்டு எழுந்த பிறகு, சில காலம் நடந்தது என்ன என்பது எதுவும் எனக்கு ஞாபகம் இல்லை. அம்மா வின் மடியிலேயே உட்கார்ந்திருப் பேனும். அவளுடைய ஆடையின் தலைப்பைப் பிடித்துக்கொண்டு, அவள் வேலை செய்யும்போதெல் லாம் அவளுடன் நடமாடுவேன். எதிர்ப்பட்டதை எல்லாம் கையால் தடவித் தடவிப் பார்ப்பேன்; அசைவது எல்லாவற்றையும் கவ னிப்பேன். இப்படியே பல விஷயங் களைப் 'பார்க்க' அறிந்துகொண் டேன். பிறகுக்கு எதையாவது தெரிவிக்கச் சைகை காட்டத் தொடங்கினேன். தலையை ஆட்டி னால் 'இல்லை' என்றும், மேலும் கீழும் ஆட்டினால் 'ஆமாம்' என்றும், தொட்டிழுத்தால் 'வா' என்றும், பிடித்துத் தள்ளினால் 'போ' என்றும் அர்த்தம். எனக்கு ரொட்டி வேண்டியிருந் தால், ரொட்டியைத் துண்டு போட்டு வெண்ணெய் தடவுவது போல் அபிநயித்துக் காட்டுவேன். ஐஸ் க்ரீம் வேண்டுமென்றால், ஐஸ் க்ரீம் செய்யக் கடைவதுபோல் கைகளால் கடைந்து குளிரால் நடுக்குவதுபோல் நடுக் கிக் காட்டுவேன். தவிரவும் பல விஷயங்களை என் தாய் எனக்குப் புரியும்படியாக அறிவுறுத்தினாள். அம்மாவுக்கு எது வேண்டும் என்று கேட்டாலும் அதைப் புரிந்து கொண்டு, கொண்டுவந்து தரு வேன். அவள் எங்கே போக வேண்டும் என்று சொல்கிறாள் என்று புரிந்துகொண்டு போவேன்.

சுற்றிலும் நிகழ்ந்த பல விஷயங் கள் எனக்குத் தெரிந்தன. ஐந்து வயசாகும்போது, சலவை செய்து வந்த துணிகளை எடுத்து மடித்து வைக்கக் கற்றுக்கொண்டேன். அம்மாவோ அத்தையோ அணிந்து கொண் டிருக்கும் ஆடைகளி லிருந்தே அவர்களில் யார் வெளியே போகிறார்கள் என்று அறிந்துகொண்டு விடுவேன். அவர்க ளுடன் நானும் வெளியே கிளம்பத் தயாராவேன். யாராவது விருந்தாளி வந்தால், என் பெற் றோர் என்னைக் கூப்பிடாமல் இருக்கமாட்டார்கள். விருந்தாளி போகும்போது கைகளை ஆட்டி விடை கொடுத்து அனுப்புவேன். ஒரு நாள் என் தாயைப் பார்க்கச் சில கனவான்கள் வந்தார்கள்; வெளிக் கதவு திறந்து மூடும் சப்தம் கேட்டதும், எனக்குத் திடீ ரென்று ஒரு யோசனை தோன் றியது. யாரும் என்னைத் தடுத்து நிறுத்துமுன், மாடியில் உள்ள என் அறைக்கு ஓடினேன். ஜோராக ஆடை உடுத்துகிற உத்தேசத் துடன், நான் மற்றவர்கள் நிற்பது போல நிலைக்கண்ணாடி முன் நின்று, தலையில் எண்ணெய் தடவி வாரிக் கொண்டேன். முகத்தில் பவுடரை எடுத்துப் பூசிக்கொண்டேன். தலைக்கு ஒரு போர்வையை எடுத் துப் போர்த்துக்கொண்டேன். அந்த போர்வையின் மடிப்புகள் தோள்பட்டையில் வந்து விழுந் தன. இடுப்பிலே பெரிய பாவாடை

யைப் புரளப் புரளக் கட்டிக் கொண்டேன்; கீழே விருந்தாளிகளைச் சந்திக்க இறங்கினேன்.

சில சமயம் யாராவது இரண்டு பேர் பேசிக்கொண்டிருக்கும் போது, அவர்களுடைய உதடுகளில் கை வைத்துக் கவனிப்பேன். எனக்குப் புரியாது; கோபம் வரும். நான் என் உதடுகளை அசைப்பேன்; கைகால்களை ஆட்டுவேன். பலன் இராது. சில சமயம் கையையும் காலையும் உதைத்துக் கொண்டு ஆத்திரத்தோடு விழுந்து புரளுவேன். சலிக்கும் வரையில் ஆர்ப்பாட்டம் செய்வேன்.

இப்படிச் சில சமயம் பிடிவாதமாகவும், அசட்டுத்தனமாகவும் நான் நடந்துகொண்டது என் தாதி எல்லாவுக்கு மிகவும் வருத்தத்தைத் தந்தது. நீக்ரோ சமையல்காரிக்கு ஒரு பெண் இருந்தாள். அவள் பெயர் மார்த்தா வாஷிங்டன். அவளும் பெல் என்ற ஒரு கிழட்டு நாயுந்தான் அந்த நாளில் எனக்கு நண்பர்கள். என் சைகைகளை மார்த்தா நன்றாய்ப் புரிந்து கொள்வாள்; என் இஷ்டப்படியெல்லாம் அவளை ஆட்டிவைப்பதில் எனக்குப் பரம திருப்தி. சொன்னபடி கேட்டுவிட்டால், நான் அவளைக் கடித்துத் தொந்தரவு செய்யமாட்டேன் என்பது அவளுக்குத் தெரியும். நான் பலசாலி; எப்போதும் சுறுசுறுப்பாக இருப்பேன்; எது செய்தாலும் அதன் பலாபலன்களைப் பற்றி எனக்குக் கவலையே கிடையாது. பல்லாலும் நகத்தாலும் கடித்துக்கீறி என் இஷ்டப்படி நடக்கப் பிறரை வற்புறுத்தி விடுவேன். நானும் மார்த்தாவும் சமையல் அறையில் பெரும்பாலும் இருப்போம். அங்கே நடக்கும் காரியங்களில் பங்கு எடுத்துக்கொள்வோம். மாவு உருண்டைகள் உருட்டுவோம்; ஐஸ்க்ரீம் செய்ய உதவுவோம்; காபிக்கொட்டை அரைத்துக் கொடுப்போம்; கோழிகளுக்கும் வான்கோழிகளுக்கும் உணவளிப்போம்.

தானியம் சேகரித்து வைத்திருக்கும் கொட்டகைகள், குதிரைகள் கட்டியிருக்கும் லாயம், காலையிலும் மாலையிலும் பால் கறக்கப் பசுக்கள் கட்டும் முற்றம், இங்கெல்லாம் நின்று பொழுது போக்குவது மார்த்தாவுக்கும் எனக்கும் அலுக்கவே அலுக்காது. பால் கறப்பவர்கள் பசுக்களின் மேல் என் கைகளை வைத்துக் கொள்ள அநுமதி தருவார்கள். சில சமயம் மாடு என்னை உதைக்கும்; வாலால் விசிறும். கிறிஸ்துமஸ் பண்டிகைக்குப் பலகாரம் தயார் செய்கிற நாட்கள் எனக்கு எப்போதுமே இன்பம் தரும். அதெல்லாம் என்ன, எதற்காக என்றுகூட எனக்குச் சரிவரத் தெரியாது. ஆனால் வீட்டிலே மனத்தை மயக்கும் வாசனைகள் பரிமளிக்கும். தின்பதற்குச் சிற்றுண்டி ஏதாவது கிடைத்துக்கொண்டேயிருக்கும். தின்பதற்கு எதுவும் தராவிட்டால், நானும் மார்த்தாவும் அமர்க்களம் செய்து விட மாட்டோமா? எல்லாருடைய வழிகளிலும் விழுந்து அவர்களுடைய கால்களை நாங்கள் தடுக்கிவிடுவோம். சில சமயம் பெரியவர்களுக்கு உதவியும் செய்வோம். மசாலா அரைத்துத் தருவோம்; திராட்சைகள் பொறுக்கித் தருவோம். சில சமயம் தின்பண்டங்களைக் கிளற உபயோகித்த ஸ்பூன்களை எங்களிடம் தருவார்கள். நக்கி நக்கி அவற்றைச் சுத்தம் செய்து இன்புறுவோம்.

ஒரு நாள் என் மேலாடையின் மேல் தண்ணீர் சிந்திவிட்டது. முன்னறையில் எரிந்துகொண்டிருந்த கணப்பண்டையில் உட்கார்ந்து, ஈரத்தை உலர்த்த என் மேலாடையை விரித்தேன். என் அவசரத்துக்கு மேலாடை காயவில்லை. ஆகவே, கணப்பை நெருங்கி அதன் மேலேயே மேலாடையைப் போட்டுவிட்டேன். நெருப்புப் பற்றிக்கொண்டு விட்டது. என்னைச் சுற்றிலும் தீ. என் ஆடை முழுவதும் தீப் பற்றிக்கொண்டது. பீதி நிறைந்த என் கூக்குரல் என்னுடைய கிழட்டுத் தாதி வினி என்பவள் காதில் விழுந்தது. அவள் வந்து என் மேல் ஒரு கம்பளிப் போர்வையைப் போர்த்துத் தீயை அணைத்தாள்.

என் தலை மயிர் தீய்ந்தது. கையில் சில இடங்களில் தீப்புண் பட்டது. வேறு அதிகக் காயம் ஏற்படவில்லை.

சற்றேறக்குறைய இதே சமயத்தில் சாவி பூட்டு இவற்றின் உபயோகத்தை அறிந்துகொண்டேன். ஒரு நாள் என் அம்மாவை உக்கிராண அறையில் விட்டுப் பூட்டிவிட்டேன். அங்கே அவள் மூன்று மணி நேரம் அடைபட்டுக் கிடந்தாள். கதவை அவள் எவ்வளவு தட்டியும் திறப்பதற்கு ஆளில்லை. வேலைக்காரர்கள் எல்லாரும் வீட்டின் வேறு பகுதியில் இருந்தார்கள். அம்மா தட்டிக்கொண்டிருந்த கதவில் சாய்ந்துகொண்டே நான் ஆனந்தமாகச் சிரித்துக்கொண் டிருந்தேன். என்னுடைய இந்தக் குறும்புத்தனத்தால்தான் என் பெற்றோருக்கு ஒன்று தெரிந்தது; எனக்குக் கல்வி கற்றுத் தர ஏதாவது ஏற்பாடு செய்யாவிட்டால் என்னவாவது அனர்த்தம் விளையும் என்று உணர்ந்தார்கள். (பின்னால் என் ஆசிரியை மிஸ் ஸல்லிவன் வந்ததும், அவளையும் ஒரு தரம் அவள் அறையில் போட்டுப் பூட்டிவிட்டேன்! சாவி எங்கிருக்கிறது என்று யாரிடமும் சொல்ல மறுத்துவிட்டேன். என் தகப்பனார் ஓர் ஏணியைக் கொண்டு வந்து வைத்து, ஜன்னல் வழியாக மிஸ் ஸல்லிவனைத் தூக்கி வந்தார். அதுபற்றி என் ஆனந்தத்தைச் சொல்லி மாளாது. பல மாதங்களுக்குப் பிறகுதான் நான் சாவியை எடுத்துக் கொடுத்தேன்.)

எனக்கு ஐந்தாவது வயசு நடந்துகொண் டிருக்கும்போது, நாங்கள் அந்தச் சிறிய கொடி வீட்டை விட்டு வேறு ஒரு பெரிய வீட்டுக்குக் குடிபோனோம். என் குடும்பத்தில் என் தந்தையும் தாயும் தவிர, இரண்டு மூத்த சகோதரர்களும், ஒரு சிறிய தங்கையும் - அவள் பெயர் மில்டிரேட் - இருந்தார்கள். என் தகப்பனாரைப்பற்றி எனக்கு இருக்கிற முதல் ஞாபகம் இதுதான்; மலைபோல இரண்டு பக்கமும் அடுக்கி இருக்கிற பத்திரிகைகளுக்கு மத்தியில் கையில் ஒரு பத்திரிகையைப் பிரித்து வைத்துக்கொண்டு அவர் பார்த்துக்கொண் டிருப்பார். அந்தப் பத்திரிகையை முகத்துக்கு எதிரில் பிரித்துக்கொண்டு அவர் என்ன செய்கிறார் என்றுதான் எனக்குத் தெரியவில்லை. அவர் செய்கிற மாதிரியே நானும் செய்தேன். அவருடைய மூக்குக் கண்ணாடியைக்கூட நான் அணிந்துகொண்டு பார்த்தேன். அப்படியும் புதிர் விடுபடவில்லை. படிப்பது என்றாலே என்ன என்பது பல வருஷ காலம் எனக்குத் தெரியாமல் இருந்தது. பின்னால்தான் பத்திரிகைகள் என்றால் என்ன என்பது எனக்குத் தெரிந்தது; என் தகப்பனார் இந்த மாதிரி பத்திரிகைகளில் ஒன்றின் ஆசிரியர் என்பதும் தெரிந்தது.

என் தகப்பனார் அன்பும் பிரியமும் உள்ளவர். யாரையும் கடிந்து கொள்ள மாட்டார். அவருக்குத் தம் குடும்பத்தினிடம் ஈடுபாடு அதிகம். வேட்டையாடுகிற சமயம் தவிர, வேறு எந்தச் சமயத்திலும் தம் குடும்பத்தைவிட்டுப் போக மாட்டார். அவர் பெரிய வேட்டைக்காரர் என்றும், குறி பார்த்துச் சுடுவதில் நிபுணர் என்றும் நான் கேள்விப்பட் டிருக்கிறேன்.

அவர் கதை சொன்னால் பிரமாதமாக இருக்கும். எனக்குப் பாஷை கைவந்த பிறகு, அவருடைய கதைகளில் சுவாரஸ்யமான பலவற்றை என் கையில் எழுத்துக் கூட்டி எழுதுவார் அவர். சமயம் வாய்க்கும்போது என்னை அந்தக் கதைகளைத் திருப்பிச் சொல்லச் சொல்லிக் கேட்டு ஆனந்திப்பார்.

1896 கோடைக் காலத்து இன்பமான நாட்களை வட மாகாணங்களில் நான் ஆனந்தமாகக் கழித்துக்கொண் டிருந்தபோது, என் அப்பா இறந்துவிட்ட செய்தி எனக்குக் கிடைத்தது. சில நாள் நோய்வாய்ப்பட் டிருந்து, மிகவும் அதிகமாகக் கஷ்டப்பட்டுவிட்டு, திடீரென்று ஒரு நாள் இறந்துபோனார். இதுதான் என்னுடைய முதல் துக்கம்.

என் தாயைப்பற்றி எப்படி எழுதுவது நான்? எனக்கும் அவளுக்கும் இடையே இருந்த நெருக்கம் அப்படிப்பட்டது; அவளைப் பற்றி எழுதுவது என்பதே சரியல்ல

என்று சொல்லக்கூடிய அளவுக்கு எங்கள் நெருக்கம் இருந்தது.

இடையில் என் மனத்தில் எழுந்த உணர்ச்சிகளை வெளியே சொல்ல வேண்டும் என்ற அவா எனக்குள் வளர்ந்தது. நான் செய்யக்கூடிய சைகைகள் என் எண்ணங்களை வெளிப்படுத்தப் போதவில்லை. ஏதாவது சொல்ல நினைத்துச் சொல்ல முடியாமல் அவஸ்தைப் படும்போதெல்லாம், என் ஆங்காரம் அதிகரித்தது. என் கண்ணுக்கு அகப்படாத ஏதோ ஒரு கை என்னைக் கட்டிப் பிடித்துச் சிறைப் பிடித்து நிறுத்தி வைத்திருப்பது போல் ஓர் உணர்ச்சி ஏற்பட்டது. அந்தச் சிறையிலிருந்து என்னை விடுவித்துக்கொள்ள நான் வெகுவாகப் பாடுபட்டேன். நான் போராடினேன் என்றால், அது மிகையே ஆகாது. உடல் சோர அழத் தொடங்கிவிடுவேன். அருகில் அம்மா இருந்தால், அவள் மடியில் அடைக்கலம் புகுவேன். மனத்தில் உள்ளதை வெளிப்படுத்த அறியாமல் தவித்துத் தடுமாறி அழத் தொடங்கிவிடுவது தினம் சகஜமாகிக்கொண்டிருந்தது.

என் பெற்றோர்களுக்கும் துயரம் தந்தன என் போராட்டங்கள். ஆனால் என்ன செய்வது என்று தான் அவர்களுக்குத் தெரியவில்லை. குருடு செவிடுகளுக்குப் பள்ளிக்கூடம் எதுவும் சமீபத்தில் இல்லை. டஸ்கும்பியா என்ற அந்தச் சிறிய முடுக்குப் பிரதேசத்து ஊரில், காதும் கண்ணும் அற்ற ஒரு குழந்தைக்குப் பாடம் சொல்லித் தர யார் வருவார்கள்? எங்கள் நண்பர்களும் உறவினர்களும் இந்தக் குருட்டுச் செவிடிக்கு யார் கல்வி புகட்ட முடியும் என்றுதான் எண்ணினார்கள். என் தாய்க்கு மட்டும் சொல்ப நம்பிக்கை இருந்தது. அவள் டிக்கன்ஸ் எழுதிய 'அமெரிக்கக் குறிப்புக்கள்' என்ற புஸ்தகத்தில் ''லாரா ப்ரிட்ஜ்மன் என்பவள் குருடியாகவும் செவிடியாகவும் இருந்தவள்; என்றாலும் அவளுக்குக் கல்வி புகட்டிவிட்டார்கள்'' என்று படித்திருந்தாள். ஆனால், குருடர் செவிடர்களுக்குக் கல்வி புகட்ட ஒரு வழி கண்டு பிடித்த டாக்டர் ஹௌவ் என்பவர் இறந்துவிட்டார். அவர் இறந்து பல வருஷங்கள் ஆகிவிட்டன.

குணமாகும் என்ற நம்பிக்கைக்கு இடமில்லாத பலருடைய கண்களைப் பரிசோதித்துத் திறந்துவிட்ட ஒரு டாக்டர், பால்டிமோர் நகரிலிருப்பதாக என் ஆறுவது வயதில் என் தகப்பனார் கேள்விப்பட்டார். என் கண்கள் திறக்க வழியுண்டா என்று பார்க்க அந்த டாக்டரிடம் என்னை அழைத்துப்போவது என்று என் பெற்றோர் தீர்மானித்தார்கள்.

எனக்கு அந்தப் பிரயாணம் நன்றாக ஞாபகம் இருக்கிறது. உல்லாசமான பிரயாணம். பால்டிமோர் நகரத்தை அடைந்ததும், டாக்டர் சிஷோல்ம் எங்களைப் பிரியத்துடன் வரவேற்றார். ஆனால் தாம் செய்யக்கூடியது எதுவும் இல்லை என்றார். என்றாலும் எனக்குக் கல்வி புகட்ட முடியும் என்றும் அதற்கு டாக்டர் அலெக்ஸாண்டர் கிரஹாம் பெல் என்பவர் உதவுவார் என்றும் தெரிவித்தார். அந்த டாக்டர், வாஷிங்டன் நகரிலிருந்தார். செவிடு அல்லது குருடான குழந்தைகளுக்குரிய பள்ளிக்கூடங்களைப்பற்றி அவருக்குச் சகல விவரங்களும் தெரியும். பால்டிமோர் டாக்டர் சொன்னபடி, நாங்கள் வாஷிங்டன் நகருக்குப் போனோம். என் அப்பாவுக்கு நம்பிக்கை இல்லை; அவர் மனத்திலே அதைரியமும் துக்கமும் நிறைந்திருந்தன. குழந்தைதான் என்றாலும், டாக்டர் பெல்லின் கரை கடந்த அன்பு, இரக்கம், பரிவு என்ற குணங்கள் எனக்கு உடனேயே தெரிந்தன. இந்தக் குணங்கள் அவரைப் பல்லாயிரக் கணக்கான மக்களுக்கு நண்பராக்கியிருக்கின்றன. அவருடைய அரும் பெருஞ் சாதனைகள் லட்சக் கணக்கான மக்களின் மனத்தைக் கவர்ந்திருக்கின்றன. (டெலிபோன் கண்டு பிடித்த கிராஹாம் பெல் இவரே.) அவர் மடியில் உட்கார்ந்துகொண்டு நான் அவருடைய கடிகாரத்தைத் தொட்டுப் பார்த்தேன். அவர் அதை எனக்காக மணி அடிக்க

வைத்துக் காட்டினார். என் சைகைகள் அவருக்குப் புரிந்தன. அது எனக்குத் தெரிந்ததும் எனக்கு அவரிடம் சுயமாகவே அன்பு ஏற்பட்டது. இருட்டான உலகிலிருந்து ஒளியுலகுக்கு எனக்கு வழி காட்ட இருந்தது அந்தச் சம்பாஷணை தான் என்பது எனக்கு, அப்போது தெரியாது. தனிமை நீங்கி, மனுஷர்களிடையே ஒரு மனுஷியாக நடமாட எனக்கு வழி வகுத்துத் தந்தவர் அவர். கல்வி என்னும் கடலில் நீந்த எனக்குத் துணை செய்தவர் அவர்.

பாஸ்டன் நகரில் இருந்த பெர்க்கின்ஸ் ஸ்தாபனம் குருடர்களுக்கு உதவுவதற்காக ஏற்பட்டது. அங்கேதான் டாக்டர் ஹௌ என்பவரும் உழைத்தார். அந்த ஸ்தாபனத்தின் தலைவர் பெயர் மிஸ்டர் அனக்னஸ். எனக்குக் கல்வி புகட்ட ஓர் ஆசிரியர் அகப்படுவாரா என்று மிஸ்டர் அனக்னஸுக்கு எழுதிக் கேட்கச் சொன்னார் டாக்டர் பெல். உடனேயே என் தகப்பனாரும் எழுதினார். சில வாரங்களுக்குள்ளாகவே திருப்திகரமான பதிலும் வந்துவிட்டது. எனக்குக் கல்வி புகட்ட ஓர் ஆசிரியை கிடைத்துவிட்டதாக மிஸ்டர் அனக்னஸ் எழுதினார். இது நடந்தது 1886 கோடையில்.

என் வாழ்நாளிலேயே முக்கியமான நாள் அது. அன்று என் ஆசிரியை ஆன் மான்ஸ்பீல்டு ஸல்லிவன் என்னை வந்து அடைந்தாள். முற்றும் புதுமையான வாழ்வு தொடங்கிற்று. அது 1887-மார்ச் மாதம் 3-ஆம் தேதி. எனக்கு ஏழு வயசாக இன்னும் மூன்று மாதங்கள் இருந்தன.

அந்த முக்கியமான தினத்தன்று மாலை, நான் வெளிவாசலில் நின்றேன்; ஊமையாக, இன்னது என்று விவரிக்க முடியாத ஒரு பரபரப்புடன் நின்றேன். என்ன எதிர்பார்ப்பது என்று எனக்கு நிச்சயமாகத் தெரியாது. ஆனால் என் தாயாரின் பெருமூச்சும், அவள் குறுக்கும் நெடுக்கும் நடந்து செய்துகொண் டிருந்த ஏற்பாடுகளும் அமர்க்களங்களும் எனக்குத் தெளிவாகவே ஒரு விஷயத்தை அறிவுறுத்தின. 'ஏதோ அசாதாரணமான ஒரு விஷயம் நிகழப் போகிறது' என்று ஊகித்தேன். ஆகவே, நான் வெளியே வாசலில் போய் நின்றுகொண்டு, வருவதை வரவேற்கத் தயாரானேன்.

என்னை யாரோ அணுகி வருகிற காலடிச் சப்தம் கேட்டது. என் தாய்தான் வருகிறாளாக்கும் என்று எண்ணி என் கைகளை நீட்டினேன். எவளோ என் கையைப் பிடித்துக்கொண்டாள்; என்னைக் கட்டி அணைத்து இறுகத் தழுவிக் கொண்டாள். உலகில் உள்ளதையெல்லாம் எனக்குச் சொல்லித் தர ஒருத்தி வந்துவிட்டாள்; தன்மீது என் உள்ளத்தைக் கவர்ந்து அடிமை கொள்ள வந்துவிட்டாள்.

என் ஆசிரியை வந்ததற்கு மறுநாள் காலையில், அவள் என்னைத் தன் அறைக்குள் அழைத்துச் சென்றாள். என்னிடம் ஒரு பொம்மையைக் கொடுத்தாள். பெர்க்கின்ஸ் ஸ்தாபனத்திலுள்ள கண்ணில்லாத குழந்தைகள் எனக்கு வெகுமதியாக அனுப்பிய பொம்மை அது. லாரா ப்ரிட்ஜ்மனே அதற்கு ஆடைகள் தைத்து அணிவித்திருந்தாள். பொம்மையை வைத்துக்கொண்டு சிறிது நேரம் விளையாடினேன். பிறகு மிஸ் ஸல்லிவன் மெதுவாக என் கையைப் பிடித்து உள்ளங்கையில் 'டால்' (d-o-l-l=பொம்மை) என்று எழுத்துக் கூட்டி எழுதினாள். இந்த விளையாட்டு எனக்கு ஆரம்பத்திலேயே பிடித்துவிட்டது. அவள் விரலால் எழுதிய மாதிரியே நானும் அவள் கையில் எழுதினேன். 'டால்' என்று சரியாக எழுத அறிந்துகொண்டதும், எனக்கே தோன்றிய ஆனந்தத்தையும் பெருமையையும் சொல்லி மாளாது. அது குழந்தைத்தனமான பெருமைதான்; குழந்தைத்தனமான ஆனந்தந்தான். அதனாலென்ன? உடனேயே கீழே ஓடிப் போய், என் அம்மாவின் கையைப் பிடித்து அவளுடைய உள்ளங்கையில் 'டால்' என்று எழுதினேன். வார்த்தை அல்லது எழுத்து

என்ற எதுவுமே எனக்கு அப்போது தெரியாது. மிஸ் ஸல்லிவன் செய்தமாதிரியே நானும் செய்தேன்; அவ்வளவுதான். அவ்வளவாக எனக்கு அர்த்தம் புரியாத பல வார்த்தைகளை இதே மாதிரி பின்னும் பல நாள் எழுத்துக்கூட்டி விரலால் எழுதக் கற்றுக்கொண்டேன்; குண்டுசி, தொப்பி, கோப்பை, நில், நட, உட்கார் என்பவை போன்ற பல வார்த்தைகளைக் கற்றுக்கொண்டேன். ஆசிரியை வந்த பல வாரங்களுக்குப் பிறகுதான், எனக்கு ஒன்று தெரிந்தது: 'உலகில் உள்ள ஒவ்வொன்றுக்கும் தனித் தனியே பெயர் உண்டு' என்ற விஷயம்.

ஒரு நாள் காலையில் 'செம்பு', 'தண்ணீர்' என்ற வார்த்தைகள் பற்றி எனக்கும் மிஸ் ஸல்லிவனுக்கும் ஒரு போராட்டம் நடந்தது. செம்பு என்றால் செம்புதான் என்றும், தண்ணீர் என்றால் தண்ணீர்தான் என்றும் எனக்குத் தெரிவிக்க மிஸ் ஸல்லிவன் வெகுவாகப் பாடுபட்டாள். ஆனால் எனக்குப் பிடிபடவில்லை. செம்பைத் தண்ணீர் என்றும், தண்ணீரைச் செம்பு என்றும் நான் எழுதினேன். அதிகமாகத் தொந்தரவு செய்யாமல் அந்த விஷயத்தை அப்போது அவள் விட்டுவிட்டாள். ஆனால் கூடிய சீக்கிரமே மறுபடியும் சந்தர்ப்பம் கிடைத்தவுடன் 'செம்பு', 'தண்ணீர்' என்று மிஸ் ஸல்லிவன் ஆரம்பித்தாள். எனக்கு ஒரே ஆத்திரமாக வந்தது. புதுப் பொம்மையை எடுத்துத் தரையில் ஓங்கி அடித்தேன். அது தூள் தூளாக உடைந்து தெறித்தது. நான் இழந்துவிட்ட பொம்மையைப்பற்றி எனக்கு எந்தவித வருத்தமும் தோன்றவில்லை. அப்படி அந்தப் பொம்மையிடம் எனக்கு ஒன்றும் பிரியமோ பிடித்தமோ ஏற்பட்டுவிடவில்லை. நான் குடியிருந்த அந்த இருள் உலகில், அன்பு என்ற தளைகள் இன்னும் ஏற்படவில்லை. விருப்பு வெறுப்பு என்ற உணர்ச்சிகள் அப்படி ஒன்றும் என் வாழ்வில் ஆட்சி செலுத்தவில்லை. உடைந்த பொம்மையைக் கூட்டி ஓர் ஓரமாக என் ஆசிரியை ஒதுக்குவதை நான் உணர்ந்தேன். என் தொப்பியை எடுத்து வந்தாள் மிஸ் ஸல்லிவன். வெளியே வெப்பமான சூரிய ஒளியில் போகப்போகிறோம் என்று ஊகித்துக் கொண்டேன். இந்த எண்ணம் என்னை ஆனந்தக் கூத்தாடச் செய்தது. குதித்துக் கொண்டே கிளம்பினேன்.

தோட்டத்திலே இருந்த கிணற்றை நோக்கி நடந்தோம். வழி நெடுகக் காலை மந்தாரையின் நறுமணம் நிறைந்திருந்தது. கிணற்றுப் படியில் மேலும் மந்தாரைக் கொடி அடர்த்தியாகப் படர்ந்து ஏராளமாகப் பூத்திருந்தது. யாரோ கிணற்றிலிருந்து ஜலம் இழுத்து ஊற்றிக்கொண்டிருந்தார்கள். ஜலம் ஓடிய தாரையில் கைவைக்கச் சொன்னாள் மிஸ் ஸல்லிவன். ஒரு கையில் குளுகுளுவென்று கிணற்று ஜலம் ஓட, இன்னொரு கையில் 'வாட்டர்' (w-a-t-e-r தண்ணீர்) என்று முதலில் வேகமாகவும் பிறகு மெதுவாகவும் எழுதிக் காட்டினாள். நான் அசையாமல் நின்றேன்; கையிலிருந்து என் மனத்துக்குள் பாய்ந்த அறிவை வாங்கிக்கொண்டு நின்றேன். ஏதோ மறந்துவிட்ட ஒரு விஷயம் தெளிவாக அழுத்தமாக எனக்குத் திடுதிப்பென்று ஞாபகம் வந்தது போல இருந்தது. என் மனத்தில் சிந்தனைகள் உருவெடுக்கத் தொடங்கிவிட்டன. பாஷையின் ரகசியம் என் உள்ளத்தில் உருவாகிவிட்டது. 'தண்ணீர் என்றால் இதுதான்' என்பது எனக்கு நிதரிசனமாகத் தெரிந்துவிட்டது. என்ன அதிசயமான குளுமை! என்ன அதிசயமான ஓட்டம்! உயிருள்ள அந்த வார்த்தை என் உள்ளத்தைக் கவ்வியது! இருளில் பிரகாசமான ஒளி ஏற்படுத்தித் தந்தது!

கிணற்றடியிலிருந்து நான் கிளம்பும்போது, கற்றுக்கொள்ளக் கூடியதையெல்லாம் கற்றுக்கொண்டுவிடுவது என்ற துடிப்புடன் கிளம்பினேன். வீடு திரும்பும் வழியில்

நான் தொட்ட ஒவ்வொரு பொருளும் உயிர் பெற்றுத் துடிப்பது போல இருந்தது. மூடிய கண்களைக் கொண்டு உலகில் எல்லாவற்றையும் நான் புதுப்பார்வை பார்த்தேன். வீட்டுக்குள் வரும்போது, என் பொம்மையின் ஞாபகம் வந்தது. மூலையில் கிடந்த துணுக்குகளைத் தடவித் தேடி எடுத்தேன். அவற்றைச் சேர்த்து மீண்டும் பொம்மையாக்க முயன்றேன். என் கண்களில் நீர் நிறைந்துவிட்டது. நான் செய்துவிட்ட காரியத்தின் முழு அர்த்தமும் எனக்கு அப்போதுதான் புரிந்தது. தவறு செய்துவிட்ட உணர்ச்சியும், மன்னிப்புக் கேட்கிற பாவமும், வருத்தமும் என் மனத்திலே தோன்றின.

அன்று புது வார்த்தைகள் பல வற்றைக் கற்றுக் கொண்டேன்.

என் மனமும் ஆத்மாவும் விழித்தெழுந்த அந்த வருஷம் (1887) கோடையில் நடந்த பல விஷயங்கள் எனக்கு நன்ருக ஞாபகம் இருக்கின்றன. கையால் தொட்ட எல்லாவற்றின் பெயர்களையும் துடியாக விசாரித்து அறிந்துகொண்டேன். உலகத்துடன் என்னைப் பிணைத்த பிணைப்புகள் இறுகிக்கொண்டிருந்தன. எனக்குத் தன்னம்பிக்கையும் ஆனந்தமும் நாளுக்கு நாள் அதிகரித்து வளர்ந்தன.

பல வண்ணப் பூக்கள் மலர்கிற காலத்தில் மிஸ் ஸல்லிவன் என்னைக் கையைப் பிடித்து அழைத்துக்கொண்டு வயல்வெளிகளில் சுற்றி வருவாள். குடியானவர்கள் பூமியை உழுது விதை விதைக்கப் பண்படுத்திக்கொண்டிருந்தார்கள். டென்னஸ்ஸி ஆற்று ஓரத்தில் மணிக்கணக்காக உட்கார்ந்து கொண்டு கையால் பேசுவோம். மனிதனுக்கு இயற்கை அளிக்கும் உதவிகளையும் பயன்களையும் நான் தெளிவாக அறிந்துகொண்டேன். மழை பெய்கிறது; வெயில் காய்கிறது. இரண்டுமாகச் சேர்ந்து பூமியிலிருந்து பல விதைகளை முளைக்க வைக்கின்றன. பார்க்க அழகாக உள்ள மரங்கள், தின்னப் பழம் தரும் மரங்கள் எல்லாம் மனிதகுலத்துக்கு இயற்கையின் பிரசாதங்கள். பறவைகள் எப்படித் தங்கள் கூடுகளைக் கட்டுகின்றன என்று அறிந்துகொண்டேன்; ஊர் ஊராய் அவை எந்தக் காலத்தில் பறந்து திரிந்து வாழ்கின்றன, என்ன என்ன உணவைத் தின்று காலங் கழிக்கின்றன என்று அறிந்துகொண்டேன்; அணிலும் சிங்கமும் பறவைகளும் ஊர்வனவும் மற்றும் பல பிராணிகளும் எப்படி வாழ்கின்றன என்று கேட்டுத் தெரிந்துகொண்டேன். என் அறிவு வளர வளர இந்த உலகத்திலுள்ள வாழ்க்கையில் எனக்கிருந்த ஈடுபாடும் ஆனந்தமும் அதிகரித்தன. கணக்கும் பூகோளமும் கற்றுக் கொடுத்தாள் மிஸ் ஸல்லிவன். ஒவ்வொரு புல்லையும் பூண்டையும் தடவிப் பார்த்து அதில் அழகை உணரக் கற்றுக்கொண்டேன். என் சின்னத் தங்கையின் கன்னச் சுழிப்பிலேயும் அவள் முகத்திலேயும் அழகைக் கண்டேன். ''பறவைகளும், பூக்களும், மனித இனமும் ஒரே குலம்'' என்ற எண்ணம் ஏற்பட்டு என்னுள் வலுத்தது.

பாஷை என்ற திறவுகோல் இப்போது எனக்குக் கிடைத்துவிட்டது. காதால் வார்த்தைகளைக் கேட்டுக் குழந்தைகள் அதிகமாகச் சிரமப்படாமல் பாஷையைக் கற்றுக்கொண்டு விடுகின்றன. பிறர் வாயிலிருந்து வருகிற வார்த்தைகளைப் பறக்கும் பட்சிகளைப் பிடிப்பது போல அவை ஆனந்தமாகப் படித்துவிடுகின்றன. காதில்லாத குழந்தையின் விஷயம் இப்படியல்ல; மெதுவாகச் சிரமப்பட்டுத்தான் வார்த்தைகளை அது கற்றுக் கொள்ள முடியும்.

'அன்பு' என்ற வார்த்தையின் அர்த்தத்தைப் பற்றி நான் முதல் முதலாகக் கேட்டறிந்து கொண்ட ஒரு நாள் காலைப் பொழுது எனக்கு ஞாபகம் வருகிறது. உரிய காலத்துக்கு முன் எங்கள் தோட்டத்தில் பூத்திருந்த 'வயலெட்' புஷ்பங்களைக் கொண்டுவந்து என் ஆசிரியையிடம் தந்தேன். அவள் எனக்கு

ஒரு முத்தம் தர முயன்றாள். ஆனால் அப்போது எனக்கு என் தாயைத் தவிர வேறு யார் முத்த மிட்டாலும் பிடிக்காது. என்னைக் கட்டி அணைத்துக்கொண்டு 'நான் ஹெலனிடம் அன்பா யிருக் கிறேன்' என்று மிஸ் ஸல்லிவன் என் கையில் எழுதினாள்.

''அன்பு என்றால் என்ன?'' என்று நான் கேட்டேன்.

என்னை இன்னும் இறுக அணைத் துக்கொண்டாள். ''அன்பு என் பது இங்கே இருக்கிறது'' என்று என் இதயத்தைத் தொட்டுக் காட்டினாள். என் இதயம் 'பட் பட்' என்று அடித்துத் துடித்துக் கொண் டிருந்தது எனக்கு அப் போது தான் தெரியவந்தது. ஆனால் அவளுடைய வார்த்தைகள் எனக்குச் சட்டென்று புரியவில்லை; என் கையால் தொட்டறிய முடி யாத எதையும் புரிந்துகொள்ள எனக்கு அப்போது சக்தியில்லை.

என் ஆசிரியையின் கையி லிருந்த வயலெட் பூக்களை மோந்த படியே பாதி சைகையாகவும் பாதி வார்த்தையாகவும் கேட்டேன்: ''மலரின் மணந்தான் அன்பா?''

''இல்லை.''

சிறிது நேரம் யோசித்தேன். சூரிய உஷ்ணம் கதகதப்பாக இருந் தது. அந்தக் கதகதப்பு வந்த திசையைக் காட்டி, ''இதுதானே அன்பு?'' என்று கேட்டேன்.

''இல்லை.''

எனக்கு ஏமாற்றமாக இருந் தது; திகைப்பாகவும் இருந்தது. அன்பு என்றால் என்ன?

இதற்கு இரண்டொரு நாளைக் குப் பிறகு, ரகவாரியான பலவித மணிகளை நான் கோத்துக்கொண் டிருந்தேன். இரண்டு பெரிய மணி கள், பிறகு மூன்று ஒரே மாதிரி யான சிறு மணிகள் இவற்றை ஒரு வரிசையில் இணைத்துக்கொண் டிருந்தேன். நான் செய்த தவறு தலைச் சுட்டிக்காட்டித் திருத்தி னாள் மிஸ் ஸல்லிவன். அந்தச் சமயம் அவள் என் நெற்றியைத் தொட்டாள். என் கையில் 'யோசி' என்று எழுதிக் காட்டினாள்.

எனக்குப் புரிந்துவிட்டது: நான் நிதானித்துச் செய்யும் காரியத் துக்கு 'யோசனை செய்வது' என்று புரிந்துகொண்டேன். கையால் தொட முடியாத அருவமான ஒரு விஷயத்தை நான் அறிந்துகொள் ளத் தொடங்கியது அன்றுதான்.

இதற்குப் பிறகு வெகு நேரம் நான் அசைவற்று இருந்தேன்; யோசனையில் ஆழ்ந்தேன். யோசித்து அன்பு என்றால் என்ன என்று கண்டுகொள்வது என்று முயன்றேன். அன்று வானத்திலே மேகங்கள் அலைந்தன. முன் பகல் முழுவதும் சூரியனே வெளி வரவில்லை; சிறு தூற்றல்கூடத் தூறி யது. ஆனால் நடுப் பகலில் சூரியன் மேக படலத்திலிருந்து வெளிப் பட்டுப் பிரகாசித்தது, ''இது தானே அன்பு?'' என்று என் ஆசிரியையை மீண்டும் கேட்டேன்.

''சூரியன் தோன்றுவதற்குமுன் வானத்தில் உலாவிய மேகங்களைப் போன்றது அன்பு. மேகங்களைக் கையால் தொடமுடியாது; இல் லையா? ஆனால் மழையை உணர முடிகிறது. மழை பெய்தால் மலர் கள் சந்தோஷம் அடைகின்றன. உஷ்ணத்தில் தாகமுற்ற பூமி மழையை ஆனந்தமாகக் குடிக் கிறது. அன்பு என்பதையும் கையால் தொடமுடியாது. ஆனால் அதனால் ஏற்படுகிற இன்பத்தை- ஆனந்தத்தை-உணர முடிகிறது. அன்பு இல்லாவிட்டால் சந் தோஷம் என்பதே இராது. உனக்கு விளையாட வேண்டும் என்றுகூடத் தோன்றாது.''

பின்புதான் அந்த அழகான உண்மை என் மனத்துக்குத் தெளி வாயிற்று. கண்ணுக்குத் தெரி யாத பிணை என் உள்ளத்தையும் மற்றவர்களுடைய உள்ளங்களையும் இணைத்திருந்தது. அந்தப் பிணை தான் அன்பு என்று அறிந்து கொண்டேன்.

எனக்குக் கல்வி புகட்டத் தொடங்கிய நாளிலிருந்தே மிஸ் ஸல்லிவன் ஒரு பழக்கம் செய் தாள். காது கேட்கிற குழந்தைக் குச் சொல்லித் தருகிறமாதிரியே தான் எனக்கும் சொல்லித் தந்தாள். இதில் ஒரே ஒரு வித்தி யாசம்: வாக்கியங்களை நாவால் உச்சரிப்பதற்குப் பதில் என்

உள்ளங்கையில் எழுத்து எழுத்தாக எழுதுவாள். கேள்வியையும் பதிலையும் அவளே சொல்லுவாள். சம்பாஷணையில் என் பங்கையும் அவளே ஆரம்ப காலத்தில் பூர்த்தி செய்து வந்தாள். பல வருஷங்கள் இப்படிச் சொல்லித் தந்தாள்.

என் கல்வியில் மிகவும் முக்கியமான கட்டம் நான் படிக்கக் கற்றுக்கொண்டதுதான்.

சில வார்த்தைகளை எழுத்துக் கூட்ட நான் அறிந்துகொண்டதுமே என் ஆசிரியை எனக்குச் சில அட்டைகளைத் தந்தாள். அந்த அட்டைகளில் கைவிரலால் தடவி உணரும்படி எழுத்துக்கள் எழுதியிருந்தன. அச்சிட்ட ஒவ்வொரு வார்த்தையும் ஒரு வஸ்து, ஒரு காரியம், ஒரு குணம் இவற்றில் ஒன்றின் பெயர் என்பதை நான் அதி சீக்கிரமே உணர்ந்துகொண்டேன்.

சிறு சிறு வாக்கியங்கள் அமைக்கும்படியாக என்னிடம் ஒரு சட்டம் இருந்தது. ஆனால் அதில் வாக்கியங்கள் எழுதக் கற்றுக் கொள்ளுமுன் வார்த்தை அட்டைகளைக் கொண்டே வாக்கியங்களை அமைப்பேன். 'பொம்மை-படுக்கையில் - இருக்கிறது' என்ற மூன்று வார்த்தைகளுக்குரிய அட்டைகளையும் எடுத்துச் சேர்த்து வைப்பேன். அதே சமயம் என் பொம்மையையும் எடுத்துப் படுக்கையில் போடுவேன். 'பெண்' என்ற வார்த்தை அட்டையை என் சட்டையில் குத்திக்கொண்டு நிற்பேன். எனக்குப் பக்கத்தில் 'இங்கே-நிற்கிறாள்' என்ற வார்த்தைகளையும் எடுத்து வைத்துக்கொள்வேன்.

எழுத்து அட்டையிலிருந்து புஸ்தகங்களுக்கு நகர அதிக நாள் ஆகவில்லை. ஆரம்ப வாசகத்தில் கையால் தடவி எனக்குத் தெரிந்த பழக்கமான வார்த்தைகளை எல்லாம் தேடி எடுத்துவிடுவேன். ஒளிந்து பிடித்து விளையாடுவது போன்றது இந்த விளையாட்டு. இப்படியே நான் வாசிக்கவும் ஆரம்பித்துவிட்டேன்.

நான் படித்தது பெரும்பாலும் வீட்டுக்கு வெளியேதான். காட்டுலிப் மரம் ஒன்றின் நிறைந்த நிழலில் உட்கார்ந்தபடியே, உலகில் உள்ள ஒவ்வொரு விஷயமுமே ஒரு பாடம், ஒவ்வொரு விநாடியுமே ஒரு சிந்தனை என்று எண்ணி இன்புற்றேன். ரீங்காரமிடுவதும், விஸ்ஸென்று பறப்பதும், பாடுவதும், மலர்வதும் எல்லாம் எனக்குப் பாடம் கற்பித்தன. பெருந் தொண்டை படைத்த தவளைகள், வெட்டுக்கிளிகள் எல்லாம் என் கையில் அமர்ந்து தங்களுக்கு உரிய குரல் கொடுக்கும். முட்டை வெடித்து வெளிவந்த பட்டுப் போன்ற கோழிக் குஞ்சுகள் என் நண்பர்கள். காய்த்துப் பழுக்கும் கனி வகைகளும் எனக்கு மிகவும் நெருக்கமாக அறிமுகமானவை தான். பருத்திக்காய் வெடிக்கு முன் அதைப் பிடித்து உணர்வேன். அதன் மிருதுவான நார் பிடித்த தசைகளைக் கையால் தொட்டு அறிந்துகொண்டேன். பயிர் பச்சைகளில் அலை அலையாக மோதி முணுமுணுத்த காற்றை உணர்ந்தேன். நீண்ட அலைகள் சலசலப்பது தெரியும் எனக்கு. கடிவாளமும் சேணமும் ஏற்க மறுக்கும் என் குதிரைக் குட்டியின் கோபக் குரல், அடைத்த என் காதுகளிலும் விழும். அதன் மூக்கு வாசனை எனக்கு நன்றாக ஞாபகம் இருக்கிறது.

கெல்லர் துறை என்ற ஒரு பழைய துறைக்கு நாங்கள் அடிக்கடி நடப்போம். அந்தத் துறையில் மரப் படிக்கட்டு இருந்தது. உள்நாட்டு யுத்தத்தில் டென்னஸ்ஸி ஆற்றைக் கடக்கச் சிப்பாய்கள் அந்தத் துறையை உபயோகித்தார்கள். அங்கே அந்தத் துறையில், பல மணி நேரம் பூகோள பாடம் கற்றுக்கொண்டு, ஆனந்தமாகக் கழித்தேன். கூழாங் கல்லால் பாலங்கள் கட்டினேன். தீவுகளும் ஏரிகளும் நிர்மாணித்தேன். கால்வாய்கள் வெட்டினேன். எரிமலைகளைப் பற்றி மிஸ் ஸல்லிவன் சொல்லுவாள். புதைந்துபோன பல நகரங்களைப் பற்றிச் சொல்லுவாள். ஓடும் ஐஸ் ஆறுகளைப்பற்றிச் சொல்லுவாள்;

பரந்த உலகில் உள்ள பல அதிசயங்களைப்பற்றி விவரமாகச் சொன்னாள். களிமண் வரப்பு எடுத்து, மேடு பள்ளமாக, கையால் தொட்டு உணர்ந்துகொள்ளக் கூடிய வகையில் மிஸ் ஸல்லிவன் படங்கள் வரைந்தாள். அவற்றைத் தொட்டுப் பார்த்து, மலைகளையும் பள்ளத்தாக்குகளையும், ஆறுகள் செல்லும் பாதைகளையும் அறிந்து கொண்டேன். துருவங்கள், சீதோஷ்ண மண்டலங்கள் இவை பற்றிய செய்திகள்மட்டும் எனக்குப் பல நாள் பிடிபடவில்லை.

கணக்கு ஒன்றுதான் எனக்கு அவ்வளவாகப் பிடிக்காத பாடம். கயிற்றில் குண்டுகளைக் கட்டி எனக்கு எண்ணச் சொல்லித் தந்தாள் மிஸ் ஸல்லிவன். கூட்டலும் கழித்தலும் நாளடைவில் கற்றுக்கொண்டேன்.

இதுமாதிரியே மெதுவாக, மிருக சாஸ்திரம், தாவர சாஸ்திரம் இரண்டையும் கற்றுக்கொண்டேன்.

ஒரு சமயம் யாரோ ஒரு கனவான், கற்காலத்துச் சாமான்கள் சிலவற்றை எனக்கு வெகுமதியாக வழங்கினார்; சில சங்குகள், கிளிஞ்சில்கள், ஒரு பறவையின் கால் போன்ற கோடுகள் உள்ள கற்கள், நீள இலையுடைய ஒரு செடி இவை தான் அவை. மிஸ் ஸல்லிவன் எனக்கு அந்தப் பழங்கால மிருகங்களின் பெயர்களையும் பழக்க வழக்கங்களையும்பற்றிச் சொன்னாள். விசித்திரமான உருவமும், வாயில் நுழையாத பெயரும் படைத்தவை அவை; மரக்கிளைகளை முறித்து உணவாக அருந்தியவை. வெகு காலத்துக்குமுன் சதுப்பு நிலங்களில் சிக்கி அவை அழிந்துவிட்டன. ஆனால் அவற்றைப்பற்றி மிஸ் ஸல்லிவன் சொல்லும்போது எனக்குக் கையெல்லாம் நடுங்கும். கனவில் விசித்திரமான ஜந்துக்கள் பல தோன்றி என்னைப் பயமுறுத்தின. பயங்கரமான அந்தப் பழங் காலத்தின் நினைவால், இந்தக் காலம் ஆனந்தமாக எனக்குத் தோன்றியது.

இன்னொரு தடவை எனக்கு வெகுமதியாக வேறு ஒருவர் ஒரு சங்கைத் தந்தார். தனக்கென்று ஒரு புழு நிர்மாணித்துக்கொண்டிருந்த மாளிகை அது. காற்றே இல்லாத இரவுகளில் அந்தப் புழு கடலில் தன் முத்துக் கப்பலில் மிதந்து செல்கிறது. கடலின் சிசுவான அந்தப் புழுவின் வாழ்க்கையைப்பற்றி நான் பல விஷயங்களை அறிந்துகொண்டேன். பஸிபிக் சமுத்திரத்திலுள்ள பவளத்துக்கெல்லாம் அந்தப் புழுவே காரணமாம். இந்து மகா சமுத்திரத்திலுள்ள முத்துக்களுக்கெல்லாங்கூட இதுவேதான் காரணமாம். பல நாடுகளில் சாக்-கட்டி மலைகள் இருப்பதற்கும் அதே புழுத்தான் காரணமாம்.

மீண்டும் ஒரு தரம் ஒரு சிறு செடியின் வளர்ச்சிதான் பாடத்தின் கருப்பொருளாயிற்று. ஒரு லில்லிச் செடியை வாங்கிச் சூரிய ஒளி படுகிற ஜன்னலில் வைத்தோம். மூடியிருந்த பச்சை மொட்டுக்கள் சீக்கிரமே விரியத் தொடங்கின. எல்லா மொட்டுக்களும் விரிந்து பூத்த பிறகு அந்தச் செடிக்கு அழகு கூடியது; வாசனை பல மடங்காயிற்று.

ஒரு தரம் ஒரு கண்ணாடி ஜாடியில் ஜலத்தில் பதினொரு தவளைக் குஞ்சுகள் இருந்தன. எவ்வளவு ஆவலுடன் அவற்றைப் பற்றி அறிந்துகொண்டேன்! என் கையை ஜலத்தில் விட்டு அந்தத் தவளைக் குஞ்சுகள் குதித்து விளையாடுவதைப் பார்ப்பேன். அவை என் விரல்களின் இடுக்கில் புகுந்து புறப்படும். ஒரு நாள் ஒரு தவளைக் குஞ்சு அந்தக் கண்ணாடி ஜாடி விளிம்புக்கு அப்பால் எட்டிக் குதித்து விட்டது. தரையில் அது செத்து விட்டமாதிரி கிடந்தது. அதன் வால் மட்டும் ஆடியதிலிருந்து அதற்கு உயிர் இருப்பது தெரிந்தது. நான் அதைத் திரும்பவும் தண்ணீரில் எடுத்துப் போட்டேன். ஆனந்தத்துடன் அந்தத் தவளைக் குஞ்சு தண்ணீரில் சுற்றிச் சுற்றி நீந்தி வந்தது. எழும்பிக் குதித்துப் பரந்த உலகத்தைப் பார்த்துவிட்டு வந்த தவளை அது. பெரிய தவளையாகும் வரையில் அந்தக் கண்ணாடி ஜாடிக்குள்ளேயே அடைபட்டுக்

கிடக்க இனி அது தயாராக இருந்தது. தவளையானதும் தோட்டத்தின் கோடியில் இருந்த நிழலடர்ந்த தடாகத்தில் குடியேறிக் கோடை இரவுகளில் தன் காதல் கீதத்தை இசைத்தது.

இப்படியாக நான் வாழ்க்கையிலிருந்தே பல விஷயங்களை நேரடியாகக் கற்றுக்கொண்டேன்.

என் வாழ்க்கையில் அடுத்தபடி நான் சொல்ல வேண்டிய முக்கியமான சம்பவம் மே 1888-இல் நான் பாஸ்டன் நகரம் போனதுதான்.

அந்த நகரில் குருடர்களுக்கான பெர்க்கின்ஸ் ஸ்தாபனத்தை அடைந்ததும் அங்கிருந்த குருட்டுச் சிறுவர் சிறுமியரை நான் சிநேகம் பிடித்துக்கொண்டேன். அவர்கள் எல்லாருக்கும் விரலால் கையில் எழுதும் எழுத்து வித்தை தெரியும் என்பதை அறிந்துகொண்டு, சொல்லவொண்ணாத ஆச்சரியத்தில் ஆழ்ந்தேன். என் சொந்தப் பாஷையிலே மற்றக் குழந்தைகளுடன் பேசுவது என்றால் அது ஆனந்தம் இல்லையா?

பாஸ்டன் நகரில் இருந்தபோது சரித்திரத்தில் என் முதல் பாடம் நடந்தது. பங்கர் குன்றுக்குப் போனோம். அந்த இடத்தில் வீராவேசத்துடன் போர் புரிந்த வீரர்களைப்பற்றி மிஸ் ஸல்லிவன் சொன்னாள். அங்கே எழுப்பியிருக்கும் நினைவுச் சின்னத்தின் படிகளில் ஏறினேன்; படிகளை எண்ணினேன். மேலே போகப் போக எனக்கு ஒரு கற்பனை தோன்றியது: இந்த உயரமான பிரதேசத்திலிருந்துதான் வீரர்கள் தங்கள் விரோதிகளைச் சுட்டார்களோ!

மறு நாள் நீராவிக் கப்பலில் ப்ளிமவுத் துறைமுகம் சென்றோம். கடலில் என் முதல் பிரயாணம் அதுதான். கப்பலில் நான் போனதும் இதுதான் முதல் தடவை. கப்பல் எஞ்சின் வேலை செய்தபோது இடி உறுமுவதுபோல இருந்தது. எனக்கு அழுகையே வந்துவிட்டது. மழையும் வந்துவிடப் போகிறது என்ற பயம் எனக்கு. மழை வந்துவிட்டால் உல்லாசமாகப் பொழுது போக்க முடியாதே என்று கவலை; ப்ளிமவுத்தில் என் மனசைக் கவர்ந்தது பிரயாணிகளாக வந்த நம் முன்னோர்கள் இறங்கிய கல்பாறைதான். அந்தப் பெரிய கல்லை நான் தொட்டுப் பார்க்க முடிந்தது. ப்ளிமவுத் கல்லின் சிறு மாடல் ஒன்றை எனக்கு ஒருவர் தந்தார். அதில் பொருத்தியிருந்த 1620 என்ற வருஷத்தைத் தடவிப் பார்ப்பேன்; அமெரிக்காவில் முதல் முதலாக வந்து தங்கிய மதப் பிடிவாதமுள்ள முன்னோர்களைப் பற்றி எனக்குத் தெரிந்ததை எல்லாம் ஞாபகப்படுத்திப் பார்த்துக்கொள்வேன்.

நான் 1890-வஸந்த காலத்தில் பேசக் கற்றுக்கொண்டேன். அர்த்தமற்ற சப்தங்கள் பல செய்வேன்; ஒரு கையால் தொண்டையைப் பிடித்துக்கொண்டு இன்னொரு கை விரல்களால் என் உதடுகளைத் தடவிப் பார்ப்பேன். சப்தம் செய்கிற எதுவுமே எனக்குத் திருப்தி அளித்தது. பூனை 'பர்' என்பதையும், நாய் குரைப்பதையும் உணர்ந்து ரஸிப்பேன். யாராவது பாடிக்கொண்டிருந்தால், அவர்களுடைய தொண்டையில் கையை வைத்துப் பார்ப்பேன்; யாராவது பியானோ வாசித்தால் பியானோவின் மேல் கையை வைத்துப் பார்ப்பேன். எனக்குக் காதும் கண்ணும் போவதற்கு முன்பு நான் பேசக் கற்றுக்கொள்ளத் தொடங்கியிருந்தேன். ஆனால், எனக்கு நோய் கண்டு காது போன பிறகு, என்னால் பேச முடியாமல் போய்விட்டது. என் காதில் ஏதாவது வார்த்தை விழுந்தால் தானே நானும் அதைப் பின்பற்றி ஏதாவது சொல்ல முடியும்? நாள் முழுவதும் என் தாயின் மடியிலே உட்கார்ந்திருப்பேன். அவள் பேசும்போதெல்லாம் அவளுடைய உதடுகளில் கை வைத்து அவை அசைவதை உணர்ந்து ஆனந்திப்பேன். எனக்கு அது வேடிக்கையாக இருந்தது; விளையாட்டாக இருந்தது.

லாரா பிரிட்ஜ்மனின் ஆசிரியைகளில் ஒருத்திக்குப் பெயர்

மிஸிஸ் லாம்ஸன்: இந்த லாம்ஸன் 1890-இல் நார்வே, ஸ்வீடன் முதலிய பிரதேசங்களிலெல்லாம் சுற்றுப் பிரயாணம் செய்துவிட்டு என்னைப் பார்க்க வந்தாள். ராகன் ஹில்டு காடா என்ற பெண்ணைப் பற்றி அவள் சொன்னாள். அந்தப் பெண் நார்வே தேசத்தைச் சேர்ந்தவள்; குருடி; செவிடி. ஆனால் அவளுக்குப் பேசக் கற்றுக் கொடுத்துவிட்டார்கள். அந்தப் பெண்ணைப்பற்றி மிஸிஸ் லாம்ஸன் பேசி முடிக்கு முன்பே நான் ஒரு தீர்மானத்துக்கு வந்துவிட்டேன். நானும் பேசக் கற்றுக் கொண்டுவிடுவது என்று தீர்மானித்தேன். மிஸ் ஸல்லிவன் என்னை மிஸ் ஸாரா புல்லர் என்ற ஹாரஸ் மான் பள்ளித் தலைமை ஆசிரியையிடம் அழைத்துப் போனாள். தானே எனக்குப் பேசச் சொல்லிக் கொடுப்பதாக அந்த அழகி ஏற்றுக்கொண்டாள். 1890-இல் மார்ச்சு மாதம் ஆறுந் தேதியன்று என் பாடங்கள் தொடங்கின.

மிஸ் புல்லரின் வழி இதுதான்: என் கைகளால் அவளுடைய முகத்தையும் உதடுகளையும் தடவிப் பார்க்கச் சொன்னாள். உதடுகள், நாக்கு இவற்றை எப்படி வைத்துக்கொண்டு அவள் ஒலியை எழுப்பினாள் என்று என் விரல்களால் தடவிப் பார்த்தேன். அவள் செய்த மாதிரியே நானும் செய்தேன்; ஒரு மணி நேரத்துக்குள் 'ம், ப், அ, ஸ், ட், இ' என்ற (M. P. A. S. T. I.) ஆறு ஒலிகளும் எனக்கு வந்துவிட்டன. மிஸ் புல்லர் பதினொரு பாடங்கள்தான் சொல்லித் தந்தாள். அதற்குள் எனக்குப் பேச வந்துவிட்டது. "இப்போது உஷ்ணமாக இருக்கிறது" என்று முதல் முதலில் நான் சொன்ன வாக்கியம் என் உள்ளத்தை ஆனந்தத்தாலும் ஆச்சரியத்தாலும் நிரப்பியது. புதுப் பலம் பெற்றேன்; என் ஆத்மாவைப் பிணைத்திருந்த தளைகள் எல்லாம் இற்று விழுந்துவிட்டன என்று தோன்றியது எனக்கு.

என்னால் பேச முடியும் என்று ஏற்பட்ட பிறகு, எனக்கு வீட்டுக்குப் போக அவசரம் தாங்கவில்லை. மிஸ் ஸல்லிவனுடன் சளசளவென்று வழி நெடுகப் பேசிக்கொண்டே வீடு திரும்பினேன். ரெயில் டஸ்கும்பியா ஸ்டேஷனில் நின்றது. பிளாட்பாரத்தில் என் குடும்பத்தினர் அனைவரும் வந்து என்னை வரவேற்கக் காத்திருந்தார்கள். இப்போது ஞாபகப்படுத்திப் பார்த்துக்கொண்டாலுங்கூட, எனக்குக் கண்ணில் நீர் நிறைகிறது. என் அம்மா ஒரு வார்த்தை கூடப் பேசாமல் மௌனமாக என் வார்த்தைகளை எல்லாம் காதில் வாங்கிக்கொண்டு என்னைக் கட்டித் தழுவிக்கொண்டாள். அம்மாவின் உடல் ஆனந்தத்தால் நடுங்கியது. என் தங்கை மில்டிரெட் என் கையை முத்தமிட்டாள்; அதைப் பிடித்துக்கொண்டு நாட்டியமாடினாள். தனக்குள் ஏற்பட்ட பூரிப்பும் பெருமையும் வெளியே வழிந்தோட என் அப்பாவும் மௌனமாக இருந்தார்.

நான் 1893 அக்டோபர் மாதம் வரையில் என் மனம் போனபடி பல பாடங்களைப் படித்து வந்தேன். கிரீஸ், ரோம், அமெரிக்கா முதலிய தேசங்களின் சரித்திரத்தைப் படித்துப் பார்த்தேன். குருடர்கள் விரலில் தொட்டுப் படிக்கக் கூடிய எழுத்தில் என்னிடம் பிரெஞ்சு ஆரம்ப இலக்கணப் புஸ்தகம் ஒன்று இருந்தது. ஏற்கனவேயே எனக்குக் கொஞ்சம் பிரெஞ்சு பாஷை தெரியும். அந்தப் பாஷையில் சில வியாசங்களை என் மனசுக்குள்ளாகவே சொல்லிப் பார்த்துக் கொண்டேன். புதுப் புது வார்த்தைகள் என் கவனத்துக்கு வரவர அவற்றை எல்லாம் உபயோகித்துப் பார்க்க முயன்றேன். உதவி எதுவும் இல்லாமலே பிரெஞ்சு உச்சரிப்பையுங்கூடக் கற்றுக்கொண்டு விட முயன்றேன். வெளியே போக முடியாமல் மழை பெய்துகொண்டிருந்த நாட்களில் எல்லாம் நான் விடாமுயற்சியுடன் பிரெஞ்சு பாஷையைக் கற்றுக் கொண்டேன். லா மாண்டேன் கதைகளையும், மோலியேரின் 'மனசில்லாத டாக்டரை'யும், 'அதாலி'

முதலிய நூல்களில் சில பகுதிகளையும் படிக்கக் கூடிய அளவுக்குத் தேர்ச்சி பெற்றுவிட்டேன்.

முதலில் எனக்கு லத்தீன் இலக்கணம் படிக்கப் பிடிக்கத்தான் இல்லை. எதிர்ப்பட்ட ஒவ்வொரு வார்த்தையையும் இப்படி அப்படி என்று நோட்டம் பார்ப்பது அவ்வளவாக உபயோகமான காரியமாக எனக்குத் தோன்றவில்லை; 'பெயர்ச்சொல், உரிச்சொல், பால், தொகுதி, ஒருமை, பன்மை என்ற பாகுபாடுகள் எல்லாம் அவசியமே யில்லை;' வார்த்தைக்குச் சரியான அர்த்தம் மட்டும் தெரிந்தால் போதும்' என்று எண்ணினேன்.

நாளடைவில் லத்தீன் பாஷையின் அழகு எனக்குத் தெளிவாகத் தெரிய ஆரம்பித்தது. உற்சாகம் பிறந்தது. அடிக்கடி நானாகவே பல லத்தீன் பாடங்களைப் படித்து, எனக்குப் பரிசயமான வார்த்தைகளைப் பொறுக்கி அர்த்தப்படுத்திப் பார்ப்பேன். இப்போதுங்கூட இந்தக் காரியத்தை நான் அடிக்கடி செய்கிறேன்.

நியூ யார்க் நகரில் இருந்த டைட் ஹ்யுமாஸன் செவிடர் பள்ளிக்கூடத்துக்கு நான் போவது என்று தீர்மானமாயிற்று. மிஸ் ஸல்லிவனுடன் 1894 அக்டோபரில் அங்கே போனேன். அந்தப் பள்ளியில் நான் வாசித்த இரண்டு வருஷங்களிலும் கணக்கு, பூகோளம் முதலிய பாடங்களையும், பிரெஞ்சு, ஜெர்மன் போன்ற பாஷைகளையும் கற்றுக்கொண்டேன்.

எனக்கு ஜெர்மன் பாஷை சொல்லித் தந்த மிஸ் ரீமிக்கு என்னுடன் விரலால் எழுத்துக் கூட்டிப் பேசத் தெரிந்திருந்தது. ஆகவே, ஜெர்மன் பாஷையில் சில வார்த்தைகள் எனக்கு வந்ததும், நானும் அவளும் சமயம் அகப்பட்டபோதெல்லாம் ஜெர்மன் பாஷையில் சம்பாஷணை செய்வோம். சில மாதங்களுக்குள்ளாகவே அவள் சொல்வதை யெல்லாம் புரிந்துகொள்ளுகிற அளவுக்கு எனக்கு ஜெர்மன் பாஷை வந்துவிட்டது. உண்மையில் ஜெர்மன் பாஷையைக் கற்றுக்கொண்ட வேகத்தில் நான் வேறு எந்தப் பாடத்தையும் கற்றுக்கொள்ளவில்லை. பிரெஞ்சு பாஷை கற்பது சற்றுக் கடினமாகவே இருந்தது.

1896 அக்டோபரில் கேம்ப்ரிட்ஜ் யுவதிகள் பள்ளியில் சேர்ந்தேன். அங்கிருந்து தயார் செய்துகொண்டு ராட்க்ளிஃப் காலேஜ் போவதாக எனக்கு உத்தேசம்.

கேம்ப்ரிட்ஜ் பள்ளியில் மிஸ் ஸல்லிவனும் என்னுடன் வகுப்புகளுக்கு வருவது, வகுப்புக்களில் நடக்கிற பாடங்களை அவள் எனக்குச் சொல்வது என்று திட்டமிட்டிருந்தார்கள்.

கேம்ப்ரிட்ஜ் ஆசிரியர்களுக்குச் சாதாரண மாணவிகளுக்கு மட்டுமே பாடம் சொல்லித் தரத் தெரியும். அவர்களுடன் நான் பேச வேண்டுமானால், அவர்களுடைய உதட்டைத் தொட்டுத்தான் அறிந்துகொள்ள முடியும். முதல் வருஷத்தில் நான் இங்கிலாந்து தேச சரித்திரம், ஆங்கில இலக்கியம், கணக்கு, ஜெர்மன், லத்தீன், லத்தீன் வியாசம், வேறு சில சில்லறைப் பாடங்கள் இவற்றைப் படித்தேன்.

தினம் பொறுமையாக மிஸ் ஸல்லிவன் என்னுடன் எல்லா வகுப்புக்களுக்கும் வந்தாள். ஆசிரியர்கள் சொன்னதை யெல்லாம் எல்லையற்ற பொறுமையுடன் என் கையில் எழுத்துக் கூட்டி எழுதினாள். வாசிக்கவேண்டிய நேரத்தில் எனக்குப் புது வார்த்தைகள் கற்றுக்கொள்ளவும் வாசிக்கவும் குறிப்புக்கள் எழுதவும், 'ப்ரெயில் எழுத்தில் அகப்படாத பாட புஸ்தகங்களை எனக்கு வாசித்துக் காட்டவும் உதவினாள். ஜெர்மன் சொல்லித் தந்த ப்ரௌ ரோட், தலைமை ஆசிரியர் கில்மன் இருவரும் எனக்குப் பாடம் சொல்லித் தருவதற்காகவே, என் எழுத்துக் கூட்டுப் பாஷையைக் கற்றுக்கொண்டார்கள். மிஸ் ஸல்லிவனுக்குக் கொஞ்சம் ஓய்வு வேண்டுமே என்பதற்காக அவர்கள் வாரத்தில் சில நாட்கள் என் கையில் எழுத்துக் கூட்டித் தம் பாடங்களைச் சொல்லித் தந்தார்கள்.

1899 ஜூன் 29, 30 தேதிகளில், ராட்க்ளிஃப் காலேஜில் சேர்வதற்கான முடிவான பரீட்சைகள் எழுதினேன். முதல் நாள் கிரேக்க, லத்தீன் பாஷைப் பரீட்சைகள் நடந்தன. இரண்டாவது நாள் ஜ்யாமெட்ரி, அல்ஜீப்ரா, கடினமான கிரேக்க பாஷை மூன்றிலும் பரீட்சைகள் நடந்தன.

கேள்வித் தாள்களை மிஸ் ஸல்லிவன் எனக்குப் படித்துக் காட்டக் கூடாது என்று கலாசாலை அதிகாரிகள் சொல்லிவிட்டார்கள். பெர்க்கின்ஸ் ஸ்தாபனத்தைச் சேர்ந்த மிஸ்டர் யூஜின் ஸீ. வைனிங் என்பவர் வந்தார். அவர் கேள்வித் தாள்களை அமெரிக்க ப்ரெய்ல் எழுத்தில் எழுதித் தந்தார். மிஸ்டர் வைனிங் எனக்கு முன் பின் அறிமுகம் ஆகாதவர். என்னுடன் ப்ரெய்ல் எழுத்து எழுதித்தான் அவர் பேசமுடியும். புரோக்டராக வந்தவரும் எனக்குப் புதிசுதான். என்னுடன் பேசவே அவர் முயலவில்லை. ஆயினும் எப்படியோ சிரமப்பட்டுப் பரீட்சையில் தேறிவிட்டேன்.

காலேஜுக்குப் போவது என்று நான் கண்டுகொண்டிருந்த கனவு *1900*-ஆம் வருஷத்தில் நனவாக மாறியது.

ராட்க்ளிஃப் காலேஜில் சேர்ந்த முதல் நாள் எனக்கு நன்றாக ஞாபகம் இருக்கிறது. என் நண்பர்களின் புத்திமதிகளையும் மீறிக் காலேஜ் செல்ல வேண்டும் என்ற ஓர் ஆசை என்னுள்ளேயிருந்து என்னை உந்தித் தள்ளிக் கொண்டு வந்து சேர்ந்துவிட்டது. கண்ணும் காதும் உள்ளவர்களுடன் போட்டியிட்டு வெற்றி பெற என்னாலும் முடியும் என்று இப்போது திடமாக நிரூபித்து விட்டேன்.

ஆர்வத்துடன் என் பாடங்களைத் தொடங்கினேன்.

முதல் வருஷத்தில் பிரெஞ்சு, ஜெர்மன், சரித்திரம், ஆங்கில வியாசங்கள், ஆங்கில இலக்கியம் முதலிய பாடங்கள் படித்தேன். பிரெஞ்சு பாஷையில் கார்ணீல், மோலியர், ரஸீன், ஆல்ஃப்ரட் டி முஸே, ஸாந்த்பூவ் முதலியவர்களின் நூல்களில் சிலவற்றைப் படித்தேன். ஜெர்மனில் கதேயும் ஷில்லரும் படித்தேன். ரோம் சாம்ராஜ்யத்தின் அழிவு முதல் பதினெட்டாம் நூற்றாண்டு வரையில் உள்ள சரித்திர வரலாறுகளைப் படித்தேன். ஆங்கில இலக்கியத்தில் மில்டனுடைய கவிதையையும் அவனுடைய 'அரியோபஜடிகா' என்ற நூலையும் இலக்கிய விமரிசன நோக்குடன் படித்தேன்.

காலேஜில் நான் படிப்பதற்குச் செய்துகொண்ட பிரத்தியேக ஏற்பாடுகளைப்பற்றி என்னைப் பலரும் அடிக்கடி கேட்கிறார்கள். வகுப்பில் பலருக்கு மத்தியில் இருந்தாலுங்கூட, நான் தனியாக இருப்பது மாதிரிதான். பேராசிரியர் பேசுவது ஏதோ தூரத்திலிருந்து டெலிபோனில் பேசுகிறது மாதிரிதான் இருந்தது. வேகமாகப் பேராசிரியர் சொன்னவற்றை என் கையில் மிஸ் ஸல்லிவன் எழுதிக் காட்டுவாள். முயலைத் துரத்துகிற வேட்டை நாய்கள் போல என் கையில் எழுத்துக்கள் ஓடும்; பல சந்தர்ப்பங்களில் முயல் தப்பி விடும்! என்னால் குறிப்புக்கள் எடுக்க முடியாது. என் கைகள் மூலமாகத்தானே பாடத்தையே நான் கேட்டாக வேண்டும்! வீடு திரும்பிய பின்தான், கேட்ட பாடங்களில் ஞாபகம் இருப்பதைக் குறித்து வைத்துக் கொள்வேன். வகுப்புப் பாடங்கள், தினசரிக் கேள்விகளுக்கு விடைகள், பரீட்சை வினாக்கள், விமரிசனங்கள் எல்லாவற்றையும் நான் என் டைப்ரைட்டரில் எழுதி என் ஆசிரியர்களிடம் தருவேன்.

நான் உபயோகிப்பது ஹாமாண்டு டைப்ரைட்டர்; மற்ற டைப்ரைட்டர்களைவிட இது என் காரியங்களுக்கு அதிகமாக உபயோகப்படுகிறது. இதன் எழுத்துக்களை, கிரேக்க பாஷை, பிரெஞ்சு பாஷை, கணக்குக் குறிகள் முதலியவற்றுக்குத் தேவைப்படுகிறபடி மாற்றிக் கொள்ளலாம். இந்த டைப்ரைட்டர் இல்லாவிட்டால் என்னால் காலேஜில் சேர்ந்து படிப்பதென்

பதே சாத்தியமாகி யிருக்குமா என்பது சந்தேகந்தான்.

காலேஜ் வாழ்வு என்ருல் பரீட்சைகள்தானே முக்கியம்? முழுக்க முழுக்க என்னைப் பயமுறுத்தும் கனவுகள் அவைதான்; எத்தனையோ பரீட்சைகள் எழுதிவிட்டேன்; ஒன்றிலாவது தோல்வியுருமல் வெற்றியும் கண்டுவிட்டேன். என்ருலும் பரீட்சை என்ருலே இன்னமும் பயமாகத்தான் இருக்கிறது.

தயாராக இருப்பதாக நம்பிக்கையிருந்தால், நீ அதிருஷ்டசாலிதான். எப்படியோ சரியான விஷயங்களை ஞாபகத்தில் வைத்திருந்து எழுதிவிட்டால் சரிதான். தேவை ஏற்படுகிறபோது ஞாபகம் என்ற சக்தியும், அறிவு என்ற சாதனமும், ஏன் உயரப் பறந்து ஓடிவிடுகின்றன? எத்தனையோ சிரமப்பட்டுத் தேடி உருப் போட்ட விஷயங்கள் எல்லாம் எங்கே போய் ஒளிந்துகொண்டன?

இதோ மணி யாகிவிட்டது, பரீட்சை விடைத்தாள்களை அதிகாரி உன் கையிலிருந்து பிடுங்கிப் போய்விடுகிருர்! எவ்வளவு ஆத்திரமும் கோபமும் கசப்பும் வருகின்றன உனக்கு! ஏதாவது புரட்சி செய்து இந்தப் பரீட்சை முறையை ஒழித்துவிடத்தான் வேண்டும் என்று திட்டங்கள் போட்டுக்கொண்டு, நீ வீடு திரும்ப வேண்டியதுதான்!

ராட்ளிக்ஃப் காலேஜ் போவது என்ற லட்சியம் எதிர்காலத்தில் இருந்தபோது அதில் எல்லையற்ற கவர்ச்சி இருந்தது. இப்போது காலேஜில் சேர்ந்து படிக்கும் போதோ அந்தக் கவர்ச்சி அடியோடு மறைந்துவிட்டது. ஆனுல் இந்த முயற்சியை நான் செய்திராவிட்டால் இப்போது நான் அறிந்துகொண்டிருக்கிற பல விஷயங்களை அறிந்தே யிருக்க முடியாது.

என் வாழ்க்கையின் வெளிப்படையான சம்பவங்களை இவ்வளவு தூரம் சொல்லி விட்டேன். ஆனுல் என் வாழ்க்கையில் புஸ்தகங்களுக்குள்ள இடத்தை இன்னும் சொல்லவில்லை. புஸ்தகங்கள் எனக்கு ஞானத்தை மட்டும் தரவில்லை; கண்ணும் காதும் உள்ளவர்களுக்கு அந்தப் பொறிகள் எப்படி உதவுகின்றனவோ அப்படித்தான், எனக்கு - அந்தப் பொறிகளுக்குப் பதில் - புஸ்தகங்கள் உதவுகின்றன.

1837 - மே மாதத்தில் நான் முதல் முதலாக ஒரு கதையை முழுவதும் தொடர்ந்து படித்தேன். எனக்கு அப்போது வயசு ஏழு. எழுத்துப் பசியுடன் உள்ள என் விரல்களுக்கு எட்டியதையெல்லாம் அன்று முதல் இன்று வரைக்கும் நான் படித்திருக்கிறேன்.

கையால் தொட்டுப் பார்த்து அறிந்து கொள்ளக்கூடிய புஸ்தகங்கள் வெகு சிலவே எனக்கு முதலில் கிடைத்தன; முக்கியமாக ஆரம்ப வாசக நூல்கள், குழந்தைகளுக்கான ஒரு கதைத் தொகுதி, 'நம் உலகம்' என்ற தலைப்புடன் பூமியைப்பற்றி ஒரு புஸ்தகம் இவை கிடைத்தன. இவ்வளவுதான். ஆனுல் இவற்றை நான் திரும்பத் திரும்பப் படித்தேன்; என் கைவிரல் பட்டுப் பட்டு எழுத்துக்கள் தேயும் அளவுக்குப் படித்தேன். சில சமயம் மிஸ் ஸல்லிவன் எனக்குப் படித்துக் காட்டுவாள்; எனக்குப் புரியக்கூடிய கதைகளையும் கவிதைகளையும் என் கையில் எழுத்துக் கூட்டுவாள்.

நான் புரிந்துகொண்ட முதல் புஸ்தகம் என்று சொல்லக்கூடியது 'சின்னப் பிரபு பாண்டில்ராய்' தான்.

அதுமுதல் புஸ்தகங்களில் எனக்குள்ள உற்சாகம் சொல்லி முடியாது. அடுத்த இரண்டு வருஷங்களில் நான் பல நூல்களைப் படித்தேன். சிலவற்றின் பெயர்கள் ஞாபகம் இருக்கின்றன: 'கிரேக்க வீரர்கள்', லா பாண்டேனின் கதைகள், ஹாதார்ணின் அதிசயக் கதைகள், பைபிள் கதைகள், லாம்பின் ஷேக்ஸ்பியர் கதைகள், டிக்கன்ஸின் குழந்தைகளுக்கான இங்கிலாந்து தேச சரித்திரம், அரபிக் கதைகள், 'ராபின்ஸனின் ஸ்விஸ் குடும்பம்', 'ரட்சண்ய யாத்திரை', 'ராபின்ஸன் க்ரூஸோ', 'சின்ன மாதர்கள்',

'ஹெய்தி' முதலியவை ஞாபகம் இருக்கின்றன. விளையாட்டு நேரத்துக்கும் பாடம் படிக்கும் நேரத்துக்கும் இடையிலுள்ள நேரங்களிலெல்லாம் நான் இந்த மாதிரி நூல்களைப் படித்தேன்.

'ஜங்கிள் புக்'கும், 'நான் அறிந்த காட்டு மிருகங்கள்' என்ற நூலும் எனக்குப் பிடித்தன. மிருகங்களின் காதல்கள் சண்டைகள், அவற்றின் வேடிக்கை விளையாட்டுக்கள், அவற்றின் சோக நாடகங்கள் எல்லாம் என் மனசுக்குத் திருப்தி அளித்தன.

இயற்கையாகவே எனக்குப் பழமை என்பதில் ஈடுபாடு இருந்தது. புராதன கிரேக்க சரித்திரம் என் மனசை வெகுவாகக் கவர்ந்தது.

'இலியத்' காவியந்தான் எனக்குக் கிரேக்க நாட்டை ஸ்வர்க்கபூமி யாக்கியது. மூலத்தில் அதைப் படிக்குமுன்பே டிராய் நகரப் போரின் கதை எனக்குத் தெரியும். இலக்கணம் சிறிது கற்றுக்கொண்ட பின் ஹோமரை அர்த்தப்படுத்திக் கொள்வது எனக்குச் சிரமமாக இல்லை.

'ஈனியத்' பற்றி எனக்கு இவ்வளவு மதிப்புக் கிடையாது. ஆனால் அதையும் நான் அநுபவிக்கத்தான் அநுபவித்தேன். அகராதியையோ, குறிப்புக்களையோ புரட்டாமல் அதைப் படித்தேன்.

எனக்குப் புரியத் தொடங்குவதற்கு முன்பே நான் பைபிளையும் வாசிக்கத் தொடங்கிவிட்டேன். ஆனந்தமும் அநுபவமும் பொங்க நான் பல வருஷங்களாகப் பைபிளைப் படித்து வந்திருக்கிறேன். மற்ற எல்லா நூல்களையும்விட இந்த நூலில் என் ஈடுபாடு நாளுக்கு நாள் அதிகரித்து வந்திருக்கிறது என்று சொல்லத்தான் வேண்டும். ஆனாலும் சுபாவத்திலேயே எனக்குப் பிடிக்காத பல விஷயங்கள் பைபிளில் இருக்கின்றன. அதில் சொல்லியிருக்கிற பல விஷயங்களை என் பொறிகள் ஏற்க மறுக்கின்றன.

பைபிளில் எஸ்தர் பகுதி எளிமையாகவும் பயங்கரமாகவும் இருக்கிறது. அந்தக் கதை சொல்லும் நேர்மை பீதி தருகிறது. தன்னுடைய தீய பிரபுவின்முன் எஸ்தர் நிற்கும் காட்சியைப் போன்ற காட்சி இலக்கியத்தில் வேறு எந்த நூலிலும் இல்லை என்று சொல்லலாம்.

ரூத்தின் கதைகூடக் கிழக்கு நாடுகளின் பாணியில்தான் இருக்கிறது. பாரசீகத்தின் தலைநகர வாழ்க்கைக்கும், ரூத்தின் கதை சொல்கிற குடியானவர்களின் வாழ்க்கைக்கும் எவ்வளவு வித்தியாசம்! ரூத் பக்தியுள்ளவள்; இளகிய மனசுள்ளவள். அவளிடம் அன்பு பாராட்டாமல் இருக்க முடியாது. அரிவாள்களுடன் அறுவடை செய்துகொண்டு நிற்கும் ஆண்களுக்கு மத்தியில் நிற்கும் அவள் அழியாத சித்திரம்!

எனக்குத் தெரிந்து ஷேக்ஸ்பியரை எனக்குப் பிடிக்காத நாளே இல்லை. என் மனத்தில் வெகுவாகப் பதிந்தது 'மாக்பெத்' கதைதான். அந்தக் கதையில் வருகிற சூனியக்காரிகளும் பிசாசுகளும் என்னைக் கனவுலகத்திலும் துரத்தி வந்தார்கள்; அரசனைக் கொலை செய்த குத்திட்டியை என்னால் காண முடிந்தது. மாக்பெத் சீமாட்டியின் மெல்லிய வெண்மையான கையும் எனக்குத் தெரிந்தது. கையிலிருந்த ரத்தக் கறை எனக்கும் உண்மையாக இருந்தது.

பிறகு நான் 'ராஜா லியர்' கதையைப் படித்தேன். க்ளஸ்டர் கோமகனின் கண்களை அவிக்கும் கட்டம் எனக்கு மிகவும் பயங்கரமாக இருந்தது. என்ன கொடுமை! என்ன கொடூரம்! கோபம் என்னைப் பற்றிக்கொண்டது. மேலே கதையைப் படிக்க என்னால் கைவிரல்களை நகர்த்த முடியவில்லை. ஒரு விநாடி நான் அசையாமல் ஸ்தம்பித்து உட்கார்ந்திருந்தேன்.

சற்றேறக் குறைய ஒரே சமயத்தில்தான் எனக்கு ஷைலக்கும் சாத்தானும் அறிமுகமாகியிருக்க வேண்டும். இந்த இரண்டு உருவங்களும் ஒன்றோடொன்று உறவு கொண்டே என் மனத்தில் தோன்றுகின்றன.

ஷேக்ஸ்பியரின் நாடகங்களை நான் பல தடவை படித்திருக்கிறேன். பல பகுதிகள் எனக்குப் பாராமலே தெரியும். ஆனால் எந்த நாடகம் எனக்கு மிகவும் பிடித்திருக்கிறது என்று என்னால் நிச்சயமாகச் சொல்ல முடியவில்லை. என் மன நிலைகளுக்கேற்ற மாதிரி அவற்றில் என் ஈடுபாடு மாறுகிறது.

கவிதைக்கு அடுத்தபடியாக எனக்குச் சரித்திரத்தில் கவர்ச்சி உண்டு. சரித்திரப் புஸ்தகம் என்று கையில் அகப்பட்டதை எல்லாம் படித்திருக்கிறேன். சுவாரஸ்யமே இல்லாத பாட புஸ்தகம் முதல் க்ரீன் எழுதிய பட்சபாதம் அற்ற வர்ணனை மிகுந்த 'ஆங்கிலேயர்களின் சரித்திரம்' வரையில் படித்திருக்கிறேன். என்னுடைய பதின்மூன்ருவது பிறந்த தினத்தன்று எனக்குப் பரிசு கிடைத்த ஸ்வின்டனின் 'உலக சரித்திரம்' என்ற புஸ்தகந்தான் என்னைச் சரித்திரத்தில் ஆவலுடன் ஈடுபடச் செய்தது. அந்த நூல் சரியல்ல என்று இப்போது சொல்கிருர்கள்.

காலேஜ் படிப்பில் எனக்கு ஜெர்மன், பிரெஞ்சு இலக்கியங்கள் சுமாராகப் பரிசயமாயின.

பிரெஞ்சு ஆசிரியர்களில் எனக்கு மிகவும் பிடித்தவர்கள் மோலியர், ரஸீன் இருவருந்தான். பால்ஸாக் எழுத்தில் நேர்த்தியான விஷயங்கள் இருக்கின்றன. கடற் காற்றுப் போலச் சுள்ளென்று மேலே அடிக்கின்றன மெரிமியின் சில வாக்கியங்கள். விக்டர் ஹ்யூகோவையும் எனக்குப் பிடிக்கும். ஹ்யூகோ, ஷில்லர், கதே போன்ற பெரிய கவிகள் மனித வாழ்க்கையில் நித்தியமான - அழிவில்லாத - அம்சத்தை எடுத்துக் கையாளுபவர்கள்.

பலம் பொருந்திய கார்லைலுக்கு வேஷம் எதுவும் பிடிக்காது என்பதால், எனக்கு அவரைப் பிடித்திருக்கிறது. இயற்கையோடு ஒட்டி வாழ்பவனே மனிதன் என்று சொல்கிற வேர்ட்ஸ்வொர்த்தை எனக்குப் பிடித்திருக்கிறது. ஹுட்டின் வேடிக்கையான கோமாளித்தனங்கள் எனக்குப் பிடித்திருக்கின்றன. ஹெர்ரிக்கின் கவிதைகளில் ரோஜாவும் அல்லியும் மணக்கின்றன என்பதால், அவை எனக்குப் பிடித்திருக்கின்றன. விட்டியரின் உற்சாகமும் அவருடைய நேர்மையான குணங்களும் எனக்குப் பிடித்திருக்கின்றன. மார்க் ட்வயினையும் எனக்குப் பிடிக்கும்; யாருக்குப் பிடிக்காது மார்க் ட்வயினை? புதுமையும் வேகமும் வெளிப்படையான நாணயமும் உள்ளவர் ஸ்காட் என்பதற்காக எனக்கு அவரையும் பிடிக்கும். நம்பிக்கை என்ற குமிழி விடுகிற எல்லா ஆசிரியர்களையுமே எனக்குப் பிடிக்கும்.

புஸ்தகங்கள் மட்டுந்தான் என் நண்பர்கள் என்ருே, எனக்கு ஆனந்தம் அளித்துப் பொழுதுபோக்குச் சாதனமாக உபயோகப்படுவது வேறு எதுவுமே இல்லையென்ருே வாசகர்கள் முடிவு கட்டிவிடக் கூடாது. வேறு பலவற்றிலும் எனக்கு ஈடுபாடு உண்டு.

சிறுமியாக இருக்கும்போதே, படகு தள்ளவும் நீந்தவும் கற்றுக்கொண்டு விட்டேன். கோடை நாட்களில் ரெந்தாம் (மஸாசுஸெட்ஸ்) நகரில் இருக்கும்போது, நான் அநேகமாக என் படகிலேயே வசிப்பது வழக்கம். படகில் என் நண்பர்களைத் தள்ளிச் செல்வது எனக்கு இன்பம் தரும் பொழுது போக்குகளில் ஒன்று. என்னால் தனியாகப் படகை நேர் வழியில் செலுத்த முடியாது; யாராவது முன்னால் உட்கார்ந்து எனக்குக் கண்ணாக உதவவேண்டும்.

கானே செலுத்துவதிலும் எனக்கு ஆர்வமுண்டு. நிலவு காய்கிற காலத்திலே எனக்குக் கானே செலுத்துவது மிகவும் பிரியமான காரியம். நிலவு பைன் மரங்களில் ஏறி வானத்தின் உச்சிக்கு வருவதை நான் காணமுடியாது என்பது உண்மையே. அது நீர்ப் பரப்பில் பட்டுப் பிரதிபலிப்பதும் என் கண்ணில் படாதுதான். ஆனால் நிறைமதி வானிலே இருப்பது எனக்குத் தெரியும். தலையணைகளில் சாய்ந்துகொண்டு ஜலத்தில் கையைவிட்டுத் துழாவுவேன்; நிலவின் அழகான ஆடைகளைத்

தொடுவது போல எனக்குத் தோன்றும். சில சமயம் தைரியமுள்ள ஒரு மீன் என் கைவிரல்களுக்கிடையில் புகுந்து நீந்தும்; சில சமயம் ஓர் அல்லி மொட்டு என் கையை முத்தமிடும்.

பாய்கள் விரித்துக் கடலில் மிதப்பதும் எனக்குப் பிடித்தமான பொழுதுபோக்குத்தான்.

பரீட்சை முடிந்ததும் ரெந்தாமின் பிரசித்திபெற்ற மூன்று ஏரிகளில் ஒன்றின் கரையில் இருந்த எங்கள் குடிசைக்கு விரைந்தோம். சப்தம் நிறைந்த நகரையும் பரீட்சைகளையும் பாடங்களையும் மறந்து, களிப்புடன் காலங் கழித்தேன்.

கண்ணோ காதோ அற்ற நான், நகரத்துத் தெருக்களுக்கும் நாட்டுப்புறத்துப் பாதைகளுக்கும் இடையில் உள்ள வித்தியாசத்தை எப்படி அறிய முடியும் என்று ஜனங்கள் ஆச்சரியப்படுகிறார்கள். ஆனால் என் சுற்றுப்புறத்தை என் உடல் முழுவதுமே அறிகிறது என்பதை அவர்கள் மறந்துவிடுகிறார்கள். என் முகத்திலுள்ள நரம்புகளைப் பாதிக்கின்றன நகரத்தின் சப்தமும் கூட்டமும். நகர மக்களின் அவசர நடையும் ஓட்டமும் எனக்குத் தெளிவாகவே தெரிகின்றன; அவர்கள் எழுப்பும் அர்த்தமற்ற அவசரக் குரல்கள் என் உள்ளத்தை அலட்டுகின்றன. பாரவண்டிகள் நகரில் ஓடுவது எனக்குத் தெரிகிறது. நகரத்திலுள்ள யந்திரங்களின் ஓயாத வேலை வேகம் என் ஆத்மாவை வெகுவாகப் பாதிக்கிறது.

நாட்டுப்புறத்திலோ இயற்கை என்பதைத் தவிர வேறு எதுவும் கிடையாது. அன்றாட வாழ்க்கை வாழ்வதற்காக மனிதன் சகோதர மனிதனுடன் நகரில் நடத்தும் போராட்டம் நாட்டுப்புறம்வரை எட்டுவதில்லை. நகரில் ஏழைகள் வசிக்கும் பகுதிகளில் நான் நடமாடியிருக்கிறேன். இப்படி அவலமான நிலையில் தங்கள் சகோதரர்களை வாழவிடுகிற பணக்கார மனிதர்களை மனிதர்கள் என்று சொல்வதே தகாது என்று எனக்குத் தோன்றும். வெளிச்சமோ காற்றோ இல்லாத வீடுகளில் அழகில்லாத சுற்றுப்புறத்தில் வாழ்ந்து மனிதத் தன்மைக்கே ஆதாரமான அழகுணர்ச்சியை இழந்துவிடும் ஏழைகளை எண்ணும்போது எனக்கு ஆத்திரம் பற்றிக்கொள்ளும். அரை நிர்வாணமாக அரைப்பட்டினி கிடந்துகொண்டு, இந்தப் பகுதிகளில் உள்ள குழந்தைகள், 'கையை நீட்டினால் அடிதான் கிடைக்கும்' என்று எதிர்பார்ப்பதுபோலப் பயந்து ஒதுங்குகிறார்கள், பாவம்! வாழ்க்கை என்கிற அவர்களுடைய போராட்டம் முடிவற்றது; நிரந்தரமானது. போராட அவர்களுக்குத் தெம்பு ஏது? ஏதாவது செய்ய வேண்டுமே என்று செய்கிற - நம்பிக்கையற்ற - ஒரு காரியம் அது. பலம் இல்லாதவன் மெலிந்த கையையும் காலையும் ஆட்டினால் அதைச் சண்டை என்று சொல்ல முடியுமா? காற்றும் ஒளியும் எல்லாருக்கும் கடவுள் தந்திருக்கும் பொதுச் சொத்து என்று நாம் சொல்கிறோமே, அது நிஜந்தானா? பணக்காரனுக்குக் கிடைக்கிற காற்றும் ஒளியும் ஏழைக்குக் கிடைக்கின்றனவா? நகரில் ஏழைகள் வசிக்கும் பகுதிகளில் சூரியன் பிரகாசிப்பதில்லை; காற்றும் அடிப்பதில்லை.

மனிதன் நகரத்தின் ஆர்ப்பாட்டத்தையும் அதன் குழப்பத்தையும் அதன் பொன்னையும் திரஸ்கரித்துவிட்டு, வயலுக்கும் வனத்துக்கும் எளிய தூய்மையான வாழ்க்கைக்கும் திரும்பிவிட்டானால் அவனுக்கு நல்லது. மனிதக் குழந்தைகள் எல்லாம் நிமிர்ந்து நேர்த்தியான தருக்கள்போல் வளரும்; அவற்றின் சிந்தனைகளும் பேச்சும் பாதை ஓரத்திலேயுள்ள காட்டு மலர்கள்போல இனிமையும் அழகும் பெறும்.

நடப்பேன். நடைக்கு அடுத்தபடியாக எனக்கு இன்பம் தந்தது என் சைகிளில் சவாரி செய்வது. இரும்புக் குதிரை (சைகிள்) ஏறி, காற்று என் முகத்திலே வீச,

சவாரி செய்வது மிகவும் ஆனந்த மான ஓர் அநுபவம்.

படகில் போனாலும் நடந்து போனாலும் ரெயிலில் போனாலும் என் நாயும் என்னுடன் வருகிறது. எனக்குப் பிடித்த நாய்கள் பல உண்டு. பெரிய நாய்கள், வேட்டை நாய்கள், நரி போன்ற நாய்கள், சிறிய நாய்கள் இப்படி எத்தனையோ!

மழை நாட்களில் நான் மற்றப் பெண்களைப்போல வீட்டுக்குள் உட்கார்ந்து நூல் தைப்பேன்; பூநூல் வேலை செய்வேன். சில சமயம் ஏதாவதொரு புஸ்த கத்தை எடுத்து வாசிப்பேன். அதை வைத்துவிட்டு வேறு ஒரு புஸ்தகத்தை எடுத்துப் புரட்டு வேன்; சில சமயம் செக்கர்ஸோ சதுரங்கமோ ஆடுவேன். எனக்காகச் சதுரங்கப் பலகை ஒன்று பிரத்தியேகமாகச் செய்யச் சொன்னேன். பலகையில் சதுரங் கள் பள்ளமாக இருக்கின்றன. அவற்றில் காய்கள் பொருந்தி நிமிர்ந்து நிற்கும். கறுப்புச் செக் கர்ஸ் காய்கள் தட்டையாகவும், வெள்ளைக் காய்கள் மேலே வளைந்தும் இருக்கும்; அவற்றை நான் அறிந்துகொள்ள முடியும். சதுரங்கக் காய்களும் எனக்காகப் பிரத்தியேகமாகச் செய்தவை தான்.

தனியாக இருந்தால் சீட்டுக் கட்டை எடுத்து 'ஸொலிடேர்' ஆடுவேன். ப்ரெய்ல் எழுத்துக் கள் எழுதிய சீட்டுக்களை நான் உபயோகித்தேன்,

குழந்தை எதுவாவது உடன் இருந்தால் அதனுடன் சரிசமான மாக விளையாடிக் களிப்பதுதான் எனக்கு மிகவும் பிடித்தமான பொழுதுபோக்கு. மிகச் சின்னக் குழந்தையாக இருந்தாலும் எனக் குப் போதும். குழந்தைகளும் என் னிடம் சுலபமாக ஒட்டிக்கொண்டு விடுகின்றன.

பொருட்காட்சிச் சாலைகள், கலைக்கூடங்கள் இவற்றிற்கும் நான் போவதுண்டு. குளிர்ந்த சலவைக் கல்லில் கண் பார்க்காமல் கையால் மட்டும் அசைவு, அழகு, அர்த்தம் எல்லாவற்றையும் என்னால் கண்டு கொண்டுவிட முடியும். கலைப் பொருள்களையும் பெரிய சித்திரங் களையும் சிற்பங்களையும் என் கைகளால் தொட்டே சரிவர அறிந்துகொண்டு விடுவேன். நேர்க் கோட்டையும் கோணலையும் வளைவையும் கைவிரல்களால் தடவி, கலைஞனின் சிந்தனையையும் உணர்ச்சியையும் தெள்ளென அறிந்துகொண்டு விடுவேன். தெய் வங்கள், வீரர்கள் இவர்களுடைய சிலைகளின் முகங்களைத் தொட்டுப் பார்த்துச் சுலபமாகவே முகபாவங் களை அறிந்து கொள்வேன். கலை ஞன் சிருஷ்டிக்க முயன்றிருப்பது கோபத்தையா, வெறுப்பையா, தனிமையையா, தைரியத்தையா என்று அறிந்துகொள்வேன். உயி ருள்ளவர்களின் முகங்களைத் தொட்டுப் பார்த்துத் தெரிந்து கொள்கிற மாதிரியேதான் இது வும்.

ஹோமரின் உருவ மெடல் ஒன்று என் அறையில் என் கைக்கு எட்டும்படியான உயரத்தில் தொங்குகிறது. அழகும் அமைதி யும் துயரமும் நிறைந்த, கண் குரு டான அந்த முகத்தைப் பணிவுட னும் பரிவுடனும் நான் அடிக்கடி தொட்டுப் பார்ப்பதுண்டு.

நாடகசாலைக்குப் போய் நாட கம் பார்ப்பதும் எனக்கு ஆனந்தம் அளித்தது. ஆனால் இது அடிக்கடி நிகழாத அநுபவம். நாடகங் களைப் படிப்பதைவிட, நடிக்கும் போது மேடையில் என்ன நடக் கிறது என்று உடனிருப்பவர் சொல்லி வரும்போது, எனக்கு ரசம் அதிகப்படுகிறது. அற்புதமான சம்பவங்களின் மத்தியில் அகப்பட் டுக் கொண்டவள்போல நான் இன் புறுகிறேன். சில பெரிய நேர்த்தி யான நடிகர்களையும் நேருக்கு நேர் சந்திக்கும் பாக்கியம் எனக் குக் கிடைத்தது. மிஸ் எல்லன் டெர்ரியின் முகத்தையும் ஆடை யையும் நான் தொட்டுப் பார்த் திருக்கிறேன். அவள் பக்கத்தில், அரசனுக்குரிய சின்னங்களை அணிந்துகொண்டு ஸர் ஹென்றி இர்விங் நின்றார். அறிவின் எல்லை களை எட்டிய ஒரு கம்பீரம் இருந் தது அவருடைய ஒவ்வோர்

அசைவிலும், ஒவ்வொரு வார்த்தையிலுமே.

மிஸ்டர் ஜெஃப்பர்ஸனையும் எனக்குத் தெரியும். என் நண்பர்களில் ஒருவர் அவர்.

என் ஆனந்தத்துக்கு உதவியிருப்பவர்கள் எல்லாருடைய பெயர்களையும் இந்த வரலாற்றில் சேர்த்துவிட வேண்டும் என்று எனக்கு ஆசையாகத்தான் இருக்கிறது. அந்தப் பெயர்களில் சில நமது இலக்கியத்திலே அழியாத இடம் பெற்றுவிட்ட பெயர்கள்.

நான் சந்திக்கிற மனிதர்களின் கைகள் என்னிடம் மௌனமாகப் பேசி அவர்களைப்பற்றிய உண்மைகளைச் சொல்லிவிடுகின்றன. சில பேருடைய கையைத் தொட்டாலே 'சீ!' என்றிருக்கும். சிலருடைய கைகள் விஷமம் நிறைந்தவையாக இருக்கும். மனத்திலே சந்தோஷமோ அன்போ அமைதியோ அற்றவர்களின் கைகளைத் தொட்டுப் பார்த்திருக்கிறேன். அவர்களுடைய கைவிரல்கள் பனிக்கட்டி போல் ஜில்லிட்டு மரத்திருக்கும். வேறு சிலருடைய கைகளிலே சூரியன் குடி புகுந்திருப்பது போல இருக்கும். அப்படிப்பட்டவர்களுடைய கைகளைக் குலுக்குவதால் உள்ளத்திலே ஓர் உவகை துள்ளி வரும்.

நான் நேரில் சந்தித்திராத பல நண்பர்கள் எனக்கு உலகெங்கும் இருக்கிறார்கள். அவர்களின் எண்ணிக்கை மிக அதிகம்; அவர்கள் எழுதுகிற கடிதங்கள் பலவற்றிற்குப் பதில் எழுதவே எனக்கு அவகாசம் கிடைப்பதில்லை. நான் பதில் எழுதுகிறேனோ இல்லையோ; அது வேறு விஷயம். ஆனால் அந்தக் கடிதங்கள் கிடைத்தபோது என் உள்ளம் இறும்பூ தெய்தியது.

பல மேதைகளை நான் நேருக்கு நேர் சந்தித்து அளவளாவியிருக்கிறேன். பிஷப் ப்ரூக்ஸ் என்பவரின் நட்பைப் பெறும் பாக்கியம் பெற்றவர்களுக்குத்தான் அது எப்படிப்பட்ட அதிருஷ்டம் என்பது தெரியும். குழந்தையாக அவர் மடியில் உட்கார்ந்துகொண்டு அவருடைய பெரிய கையில் என் சிறிய கையைக் கொடுத்துவிட்டுக் கடவுளையும் ஆத்மிக வாழ்வையும் பற்றி அவர் சொல்கிற வார்த்தைகளை அர்த்தப்படுத்திக் கொள்ளும் அற்புத வாய்ப்பு எனக்கு இருந்தது.

டாக்டர் ஆலிவர் வெண்டல் ஹோம்ஸை நான் சந்தித்த சந்தர்ப்பமும் எனக்கு நன்றாக ஞாபகம் இருக்கிறது. ஹோம்ஸ் என்னை அருகில் உட்கார வைத்துக் கொண்டு, சுவாரசியமான பல சாமான்களை என் கையில் தந்தார். அவரே எழுதிய கவிதை ஒன்றை ஒப்பித்தேன்.

பின்பு ஒரு நாள், நானும் மிஸ் ஸல்லிவனும் போய், மெர்ரிமாக் ஆற்றங் கரையில் இருந்த அழகான அமைதியான வீட்டில், விட்டியரைப் பார்த்தோம். அவருடைய மிருதுவான சுபாவமும் விநோதமான பேச்சும் என் உள்ளத்தைக் கவர்ந்தன.

டாக்டர் எட்வர்டு எவெரெட் ஹேல் என்னுடைய ஆதிநாள் நண்பர்களில் ஒருவர். என் எட்டாவது வயசு முதல் எனக்கு அவரைத் தெரியும். எனக்கு வயசு ஆக ஆக அவரிடம் அன்பு அதிகரித்தது.

நான் முதல் முதலில் டாக்டர் அலெக்ஸாண்டர் கிரஹம் பெல்லைச் சந்தித்ததுபற்றி ஏற்கனவே எழுதிவிட்டேன். அவரை அதற்குப் பிறகு பல தடவை சந்தித்து அளவளாவியிருக்கிறேன். வாஷிங்டன் நகரிலும் அவருடைய அழகான நாட்டுப்புற வீட்டிலும் பல தடவை சந்தித்திருக்கிறேன்.

ஆகாயக் கப்பல் கட்டுவதற்கான விதிகளையும் வழிகளையும் கண்டுபிடிப்பதற்காக அவர் பட்டங்கள் பறக்க விட்டுக்கொண் டிருப்பார்; பட்டங்கள் பறக்க விடுவதில் அவருக்கு நான் உதவுவேன். டாக்டர் பெல்லுக்கு விஞ்ஞானத் துறையில் பல விஷயங்களில் பரிசயமுண்டு. அவருடைய பிரதான ஈடுபாடு குழந்தைகளிடந்தான். மடியில் செவிட்டுக் குழந்தை ஒன்றை வைத்துக்கொண்டு அவர் விளையாடும்போது, அவருக்குப் பரம ஆனந்தமாக இருக்கும். செவிட்டுக் குழந்தைகளுக்காக அவர் செய்

திருக்கிற நன்மைகள், வருகிற தலை முறைகளில் பல்லாயிரக் கணக்கான செவிட்டுக் குழந்தைகளின் வாழ்வைச் சுலபமாக்கும்.

நியூ யார்க் நகரில் தங்கிய இரண்டு வருஷங்களில் நான் எதிர்பார்க்காமலே, தேடிப் போகாமலே, பல பிரபலஸ்தர்களைச் சந்தித்தேன். அருமை நண்பர் மிஸ்டர் லாரன்ஸ் ஹட்டன் வீட்டில் அவர்களில் பலரை நான் முதல்முதல் சந்தித்தேன். நாட்டில் பெரியவர்கள், மேதைகள் என்று சொல்லத் தக்கவர்கள் எல்லாரும் அவருடைய நண்பர்கள்.

தம்முடைய இலக்கிய நண்பர்கள் பலருக்கு மிஸ்டர் ஹட்டன் என்னை அறிமுகம் செய்து வைத்தார். மிஸ்டர் வில்லியம் டீன் ஹவல்ஸ், மார்க் ட்வயின், மிஸ்டர் ரிச்சர்ட் வாட்ஸன் கில்டர், மிஸ்டர் எட்மண்டு கிளாரன்சு ஸ்டெட்மன் இவர்களை நான் சந்தித்தேன். மிஸ்டர் சார்லஸ் டட்லி வார்னரை அறிந்துகொண்டேன். இவர் வெகு அழகாகக் கதை சொல்வார்; என் நண்பர்களில் மிகவும் முக்கியமானவர்களில் ஒருவர். காடுகளைப் பற்றிப் பாடும் கவி மிஸ்டர் ஜான் பர்ரோஸை இவர் ஒரு தடவை என்னைப் பார்க்க அழைத்து வந்தார். அவர்கள் எல்லாரும் என்னிடம் அநுதாபம் காட்டினார்கள்; அன்பு பாராட்டினார்கள்.

இன்னும் எத்தனையோ சுவாரசியமான மனிதர்களை நான் நியூ யார்க் நகரில் சந்தித்தேன். 'ஸெயிண்ட் நிக்கோலஸ்' பத்திரிகையின் ஆசிரியை மிஸஸ் மேரி பேட்ஸ் டாட்ஜ், 'பாட்ஸி' என்ற நாவலை எழுதிய மிஸஸ் ரிக்ஸ் (கேட் டக்ளஸ் விக்கின்) இவர்களையும் எனக்கு ஞாபகம் வருகிறது. இவர்களிடமிருந்து எனக்கு அன்பளிப்புகள் கிடைத்தன. என் நண்பர்கள் எல்லாரையும்பற்றிச் சொல்ல இங்கே எனக்கு இடம் போதாது. அச்செழுத்து என்னும் உயிரற்ற சாதனத்தால் அளவிட்டு அறிய முடியாத பல விஷயங்களைச் சொல்லவே எனக்கு மனம் வரவில்லை. பல நண்பர்களைப்பற்றிப் பேசுவதே தவறு என்று எனக்குத் தோன்றுகிறது. மிஸஸ் லாரன்ஸ் ஹட்டனைப் பற்றிக்கூட நான் தயக்கத்துடன்தான் இங்கே எழுதியிருக்கிறேன்.

இன்னும் இரண்டு நண்பர்களைப் பற்றி மட்டும் குறிப்பிட விரும்புகிறேன். பிட்ஸ்பரோவைச் சேர்ந்த மிஸிஸ் வில்லியம் தா என்பவள் இவர்களில் ஒருத்தி. எனக்கும் என் ஆசிரியைக்கும் என்ன உதவி வேண்டுமானாலும் இவள் செய்யத் தயங்கியதே கிடையாது.

இரண்டாவது நண்பருக்கும் நான் மிகவும் கடமைப்பட்டிருக்கிறேன். பெரிய பெரிய ஸ்தாபனங்களை யெல்லாம் மிகவும் அநாயாசமாக நடத்தி வெற்றி கண்டவர் அவர். மௌனமாக, பிறர் கண்ணில் படாமல், உலகில் உள்ள எல்லாருக்கும் உபயோகப்பட வேண்டும் என்று, அவர் தம் வழிகளில் உதவி செய்து செல்கிறார். அவர் பெயரை வெளியிடுவதற்கில்லை. ஆனால் அவருடைய உதார குணத்துக்கு வணக்கம் செலுத்தாமல் என் கதையை முடிக்க எனக்கு மனம் வரவில்லை. என் காலேஜ் வாழ்க்கை சாத்தியமானது அவரால்தான்.

என் கதையைப் பூர்ண மாக்கியவர்கள் என் நண்பர்கள்தான் என்று கருதுகிறேன். ஆயிரக் கணக்கான வழிகளில் என் குறைபாடுகளையும் கண்ணில்லாமையையுங்கூடப் பயன்படுமாறு செய்து, என் வாழ்வுக்கு அர்த்தம் தருபவர்கள் என் நண்பர்கள். வேறு புலன்கள் இரண்டு இல்லாத குறையையும் மறந்து சந்தோஷமாக நான் வாழ்க்கை நடத்தச் சாத்தியமாயிருப்பது இந்த நண்பர்களின் உதவியால்தான்!

EDITED, PRINTED AND PUBLISHED BY N. RAMARATNAM,
FOR MANJARI AT THE M. L. J. PRESS PRIVATE LTD., MADRAS-4.
MANAGING EDITOR: T. J. RANGANATHAN.

நமது பொதுமொழி

நம்முடைய மதம் எப்படிப் பொது மதமோ அது போலவே ஸம்ஸ்க்ருதமும் பொதுமொழி. தெலுங்கு, தமிழ், இந்துஸ்தானி முதலியவற்றுக்குத் தேசம் உண்டு. ஸம்ஸ்க்ருதத்துக்குத் தேசமே இல்லை. இந்த ஸம்ஸ்க்ருதத்தைச் செத்துப்போன மொழியென்று சிலர் சொல்லுகிறார்கள்.

எங்கள் அம்மாவுக்கு எனக்கு முன் ஒரு குழந்தை இருந்தது. அவள் ஒரு ஞானி. அந்தக் குழந்தை செத்துப்போய் விட்டது. அதற்காக அவள் அழவில்லை. அம்மாவுக்கு என்னிடம் மிகுந்த பிரியம். ஒரு நாள் நான் அவளைப் பார்த்து, ''அம்மா, பெரியவன் செத்துப்போனதற்கு நீ அழவில்லையே; நான் செத்துப்போனால் அழுவாயோ, மாட்டாயோ?'' என்று கேட்டேன். ''நீயும் அவனைப் போலப் பிள்ளைதானே. அவன் உடம்பில் செத்துப்போனான்; நீ மனசில் செத்துப் போ'' என்றாள். செத்துப்போன மனசை உடையவனாக வேண்டும் என்பது அவள் எண்ணம். அந்த மாதிரிதான் ஸம்ஸ்க்ருதம் செத்துப் போயிற்று.

தனக்கு என்று ஓர் இடம் இருந்தால் பயம் இருக்கும். எல்லாம் தன்னுடைய இடமாக இருப்பது ஸம்ஸ்க்ருதம். இப்போது உலகத்திலுள்ள மொழிகள் எல்லாவற்றிலும் ஸம்ஸ்க்ருதம் கலந்திருக்கிறது.

சாவு என்பது என்ன? எதற்குச் சாவு உண்டு? உடம்பு தானே சாகிறது? அது உயிரோடு இருக்கிறது. பின்பு சாகிறது. உயிர் இல்லாதபோது அது செத்துப் போகிறது. உயிருக்கு மற்றோர் உயிர் ஏது? அது எப்போதும் செத்ததுதான். ஸம்ஸ்க்ருதம் எல்லா மொழிகளுக்கும் உயிராக இருக்கிறது.

—ஸ்ரீ ஜகத்குரு காஞ்சி காமகோடி பீடாதிபதிகள்

Manjari - Oct. '57 **Regd. No. M. 4975**
(Regd. as a Newspaper in Ceylon)

மஞ்சரி

பொருளடக்கம்

ஹேவிளம்பி - ஐப்பசி **அக்டோபர் 1957**

ஊரும் உலகமும் ..	.. ..	1
உணவுக் கலப்படம் ..	ஹெரால்ட் அவ் ஹெல்த்	3
சுதந்தர பல்கேரியா ..	.. ..	6
ஒட்டகப் பட்சி ..	.. சௌபாக்கியம்	9
புராதன இந்திய விமானம் ..	.. பிரஜாமத	13
பேரூர்க் கோயில் ..	.. மாத்ருபூமி	16
தற்செயல் விபத்து ..	.. மெட்கெம்	19
கதவைத் திறந்தால்? ..	.. முஸ்லிம் முரசு	22
முன்னேற ஒரே வழி ..	.. ஸ்வராஜ்யா	23
இன்ப மடம்	ரா. ஸ்ரீ. தேசிகன்	25
என்னைக் கேளுங்கள்	காப்டன் என். சேஷாத்திரிநாதன்	28
ஆப்பிரிக்கர் வழிபாடு ..	ராமகிருஷ்ண புல்லட்டின்	32
பாஞ்சாலி திருமணம் ..	.. ..	36
இரண்டு வீரப் பெண்கள் ..	.. ஜனப்ரகதி	41
மாறிவரும் ஏனுதியர் ..	சுதேசமித்திரன்	44
கேசரிப் பருப்பு அபாயம் ..	.. மேழிச்செல்வம்	51
விலங்கின் குடும்ப வாழ்க்கை ..	இந்தியன் நேஷன்	54
விவாக மோதிரம் ..	.. ..	57
கப்பல் வெடித்தது ..	.. ..	58
படிக்கட்டு (பல்கேரியக் கதை)	ஹ்ரிஸ்டோ ஸ்மிர்னென்ஸ்கி	61
குருட்டுப் பெண் கதை (புஸ்தகச் சுருக்கம்)	கெல்லர்-க. நா. சு.	65
நமது பொது மொழி: காஞ்சி காமகோடி பீடாதிபதிகள்		3-ஆம் அட்டை